TNA

JL
Y15m211 M87
MA
M87.27
161186
161186

# மாதர் மித்திரி.

புத். உஎ. 27 ௧௯௧௩ ஞு - ஜூலை மீ. 1913 இல. க.

## REMEMBRANCE OF HIS REDEMPTION.

MADRAS.

70

இராகம், இந்துஸ்தானி.

### பல்லவி.

வாரீரோ? வினை தீரீரோ? எனைக்
காரீரோ? ஜீவன் தாரீரோ, யேசு.

### அநுபல்லவி.

வாரேனென்றீர், வரந் தாரேனென்றீர், சுவாமி;
பாரினிலே யெனக்கு யாருமில்லை துணைக்கு.— வா.

### சரணங்கள்.

1. நேசனே, பரிமளனே, தேடி மறுகுங் கோனே,
சேனைகளின் சீமானே, சிந்தை கலங்கி நானே
கானகமே மேவும் மானது போலானேன்;
வானகம் போன தேவா, ஏனோ வரத் தாமதம்?— வா.
2. அட்ட திக்கெங்கு மென்னைத் துட்டப் பசாசுக் கூட்டம்
இட்டப் படுத்தலல்லோ கிட்ட வளையுது, பார்!
அடுத்தாலோ, அம்பைத் தொடுத்தாலோ என்ன!
அடைப்படையாக நின்று தடு படை செய்வீர், யேசு.— வா.
3. கோழி தன் குஞ்சுதன்னைக் கூவியழைக்கு நேராய்
சூரி எனை யிறுஞ்சி அழியிலாக்கிடாமல்
கூப்பிட்டீரே, எனக்கு மாப்பிட்டீரே, ஒதுங்க
தாப்பிட்டீரே, வர வாக்கிட்டீரே! பின்னை— வா.
4. காணாத ஆட்டைத் தேடிக் காடெங்குஞ் சென்ற கோன் நீர்
கண்டு பிடித்த ஆட்டைக் கொண்டு தொழுவஞ் சேர்க்கக்
கருத்துடனே மிக உரித்துடனே இரு
கரத்திலேந்தி வலப் புறத்தில் வைப்பீர் திண்ணம்.— வா.
5. வீடு எனக்கு செய்ய மேலோகம் போன தேவா,
கூட இருத்தி வைக்கக் கூப்பிட வாரேனென்றீர்:
கொண்டு வருவீர் முடி, நின்று வருவீர் கொடி;
கண்டு மகிழ்வேன், கூடி நின்று புகழ்வேன் கோடி.— வா.

161186

A FAMOUS RUBY.

## ஓர் விசேஷித்த இரத்தினக் கல்.

இரத்தினக் கற்களில் ஏதோ ஒன்றிருக்கிறதினால் அவைகள் மனிதரால் அபிமானிக்கப்படுகின்றன. [illegible]வைகளின் அலங்காரம் சிலரைக் கவர்ச்சிக்கின்றன; அவைகளின் விலை மற்றுள்ளோரை இழுக்கின்றது. இன்னும் சிலவற்றைச் சுற்றியுள்ள இரகசியமானது சில மனிதருக்கு ஆச்சரியத்தையும், அவர் புத்திக்கு அபிமானத்தையும் பிறப்பிக்கிறது. இங்கிலாந்து தேசத்தின் மகுடாபரணங்களில் ஓர் இரத்தினம் அமைந்துள்ளது. அது நமது இந்துதேச சரித்திரத்தில், ஓர் காலத்தில் பிரக்யாதைப் பெற்றது. இப்போது அதற்கு தைமூர் மாணிக்கம் என்று பெயர். அக்கல்லைக்குறித்தோர் ஆச்சர்ய சரிதையுண்டு. அவ்வகுப்புக் கற்களில் இதுவே மிகப் பெரிது. அதின் நிறை 352 காரட்டுகளுக்குமேல் (Carats) அது ஒருபோதும் செதுக்கப்படவில்லை. ஆனால் அது துலக்கப்பட்டிருக்கிறது. பாடக்ஷான் என்னும் இடத்திலுள்ள பழைய இரத்னக் கேணிகள் ஒன்றில் அது கண்டுபிடிக்கப்பட்டது,

சிறிது காலத்துக்கு முன்னர் இந்துதேசத்தை நமது சக்ரவர்த்தி சந்தித்த சமயம் அக்கல்லினுடைய சரித்திரமும் ஆராய்ச்சி செய்யப்பட்டது. முற்காலத்திய சரித்திரங்களில், தைமூர் அரசன் டெல்லி நகரத்தை சூறையாடினபோது, அவன் கொள்ளைப் பொருட்களில் இதுவும் ஒன்றாயிருந்ததாகச் சொல்லியிருக்கிறது. ஐரோப்பிய சரித்திரக்காரர் தைமூரை தாமர்லேன் என அழைக்கின்றனர். இத்தைமூர் என்னும் தார்த்தரி தேசத்து ஜெயவீரன் ஒரு வருஷத்திற்கு சற்று மேலாக இந்தியாவில் தங்கி, சகர்க்கண்டு என்னுமிடத்திற்கு தன் கொள்ளைப் பொருட்களோடு திரும்பினான். அவன் கையினின்று இம்மாணிக்கம் அவன் மகனுக்கு வந்தது. அப்படியே சந்ததி முறையாக இம்மாணிக்கம் அவ்வரசர்களிடமிருந்தது. கடைசியாக தார்த்தாரிகளு[illegible]சீகர்களுக்கும் உண்டான யுத்தங்கள் ஒன்றில் பாரசீ அரசர்களில் பேர் பெற்றவனான ஷா அப்பா என்பவன் கையில் இம்மாணிக்கம் அகப்பட்டது. பின்னர் அத்தேச ராஜாக்களில் ஒருவன் மொஹலாய சக்ரவர்த்தியாகிய ஜஹான்கீர் தன் சிநேகிதனும் சம்பந்தனுமாயிருந்தபடியால் 1812-ல் இம்மாணிக்கத்தை அவனுக்குப் பரிசளித்தான். அச்சமயம் அக்கல்லில் அதை வைத்திருந்த மூன்று பேருடைய நாமங்கள் பதிக்கப்பட்டிருந்தன. அம்மேலெழுத்துக்கள் இப்போதில்லை. அதிக காலமாகிவிட்டதால் ஒருவேளை மாய்ந்துபோயிருக்கலாம். அல்லது ஜஹாங்கீர் அம்மேலெழுத்துக்களைத் தேய்த்திருக்கலாம். எப்படியாகிலும் சரி, சக்ரவர்த்தி உடனே தனது பெயரையும், தனது தகப்பனாகிய அக்பர் பெயரையும் அதில் பதித்துக்கொண்டான்.

ஜஹாங்கீர் மனைவி நூர்ஜஹான் “அந்த இரத்தினத்தை ஏன் அவ்வித அட்சரங்களால் கெடுத்தீர்?” என்று எச்சரிக்க, அதற்கு அவன் “இக்கல் எனது பெயரை பின் சந்ததிக்கெல்லாம் அறிவிக்கும்; சரித்திரங்கள் கூட அவ்விதம் செய்யா. தைமூருடைய வீடு விழுந்துபோம், ஆனால் ஒரு ராஜா இருக்குமளவும் இவ்வாபரணம் அவனுடையதாக இருக்கும்” என மறுமொழி பகர்ந்தான். அவ்வார்த்தைகளின் தாற்பரியம் யாதெனில், யார் இந்துஸ்தானத்தை அரசாளுவாரோ அவர் கையில் இக்கல் இருக்கும் என்பதே. அவ்வண்ணமே சரித்திரத்தைப் பார்க்குங்கால், இந்திய அரசர்கள் கையிலேயே இக்கல் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். பின்னர் அக்கல் ஷாஜஹான் சக்ரவர்த்தியிடம் வந்தது. அவனும் தன் பெயரை அதில் பதித்து கடைசியாக பெயர்பெற்ற மயிலாசனத்தில் அதைப் பதித்தனன். அவ்விதமாக பெயர் பதித்த கடைசி டெல்லி சக்ரவர்த்தி பருக்ஷாயர். அவனுக்குப் பின்வந்த அரசன் காலத்தில் நாதர்ஷா என்பவன் இந்தியாவின் மேல் படையெடுத்து 1739-ம் வருஷம் டெல்லியை நிர்த்தூளியாக்கினான். அப்போ தலைநகரியாயிருந்த இஸ்பஹான் பட்டணத்திற்கு சூறையாக கொண்டுபோனான். அச்சூறைப் பொருட்களுள் தைமூர் இரத்னக்கல்லும் ஒன்றாயிருந்ததாக அதின் மேலெழுத்துக்களால் தெரியவந்தது. கடைசியாக அதில் வரைந்த மேலெழுத்து அமத்ஷா என்பவனது. அவனை அப்தலி அல்லது துரானி என வழைப்பது சகஜம். 1747-ம் வருஷம் நாதர்ஷா கொலையுண்ணப்பட்டபோது அவனுடைய சேனையில் இவன் முக்கிய சேனாபதியாயிருந்தான். நாதர்ஷா கொலையுண்ணப்பட்டதை இவன் கேட்டதும், சிம்மாசனம் ஏற பிரயத்தனித்தான், ஆனால் அது சித்தியாகவில்லை. கொள்ளைப் பொருட்களில் மாத்திரம் பெரும்பாகம் இவன் கையிலகப்பட, அவற்றை தன் சேனையோடுகூட தெற்கே கொண்டுபோய் அப்கானிஸ்தானம் என்னும் ராஜ்யத்தை ஸ்தாபித்தான். 1772-ல் அமத்ஷா மாணமடைய, அவன் புத்ரனான தைமூர்ஷா பட்டத்துக்கு வந்தான். அதன் பின் அவனுடைய கடைசி மகன் ஷாகுஜா கையில் இந்த இரத்னக்கல் வந்தது. டாஸ்ற் மகம்மது என்னுமரசன் இவனைத் துரத்தினபோது, இவன் பஞ்சாபுக்கு ஓடிப்போய் அடைக்கலம்புக, அவ்வூராசனான ரஞ்சிற்சிங் மஹாராஜா அந்த ஷாகுஜாவிடமிருந்து தைமூர் இரத்னக்கல்லையும் கோஹினூர் என்னும் இரத்னக்கல்லையும் பலாத்காரமாய் பெற்றுக்கொண்டான்.

1849-ல் பஞ்சாப், பிரிட்டிஷ் அரசாட்சிக்கு உள்ளானபோது, ராஜ்ய பரிபாலன சங்கத்தவர், ராஜாவின் ஆபரணங்களையெல்லாம் தங்களிடம் எடுத்தனர். கோஹினூர் என்னும் இரத்தினம் ஓர் உத்தியோகஸ்தன் மூலமாய் இங்கிலாந்துக்கு அனுப்பப்பட்டு, காலஞ்சென்ற விக்ரோரியா இராக்கினி கையில் உடனே ஒப்படைக்கப்பட்டது. ரோஷாக்கானா என்னும் பொக்கிஷ சாலையிலிருந்த இன்னும் சில விலையுயர்ந்த இரத்னக்கற்களும் ஆபரணங்களும், தைமூர் இரத்னக்கல்லோடு லண்டன் பட்டணத்துக்கு தபால் மார்க்கமாய் அனுப்பப்பட்டது. இவைகளெல்லாம் 1851-ம் வருஷம் நடந்த பல பொருட் காட்சியில் எல்லோருக்கும் காண்பிக்கப்பட்டன. பின்பு ஈஸ்ட் இந்தியா கம்பெனி டைரக்றர்மாரால் அக்கல் விக்ரோரியா ராஜாத்திக்கு பரிசாக அளிக்கப்பட்டது.

---

CONSUMPTION IN INDIA.

## இந்தியாவில் க்ஷயரோகம்.

1883-ம் வருஷம் ஒரு ஜர்மனிய சாஸ்திரி க்ஷயரோகம் ஒரு பூச்சியினால் உண்டாகிறதென்றும், அது தொற்று வியாதியாய்ப் பரம்பிவிடுகிறதென்றும் கண்டுபிடித்தார். இவ்வியாதி பாரம்பரையாய் தொற்றுமென்று சாதாரணமாக நினைக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்போதோ அது அங்கனமன்று. சில குடும்பங்கள்



715 m211, M87MA
M87.27

மற்றைய குடும்பங்களைவிட இவ்வியாதியினால் லேசாக பிடிக்கப்படுகின்றன. ஆனபோதிலும் எல்லா ஜனங்களும் அவர்கள் எவ்விடம் வசித்தாலும் இவ்விஷவியாதியின் தொற்றுக்கு ஏதுவாயிருக்கிறார்கள். இந்நோயை உண்டாக்கும் பூச்சியைப்போல் வேறெந்த பூச்சியும் அத்தனை விசாலமாய்ப் பரம்பியிருப்பதில்லை. இப்பூச்சி எல்லாத் தேசங்களிலும், எல்லா ஜாதியாருக்குள்ளும் காணப்படுகிறது. யூதர் மற்ற ஜாதியாரைவிட குறைவாய் இந்த நோயால் பிடிக்கப்படுகின்றனராம். ஏனெனில் அவர்கள் தங்கள் தங்கள் இல்லிடங்களை மிகவும் சுத்தமாய் வைத்திருப்பதனால்தான்.

நோயை உண்டாக்கும் பூச்சி இருவகைப்படும். ஒன்று தேகத்திற்கு புறம்பே உண்டாகிப் பெருகும்; மற்றொன்று தேகத்திற்கு உள்ளே உண்டாகிப் பெருகும். க்ஷயநோயை உண்டாக்கும் பூச்சி பின்தின வகுப்பைச் சேர்ந்தது. அது உயிருள்ள நிலத்தில் மாத்திரம் வளருகிற ஓர் விதை போன்றது. ஆனால் நெடுங்காலம் தன் சக்தியை வைத்துக்கொள்ளக்கூடிய வல்லமை அதற்கு உண்டு. வெயிலில் வைத்தால் இப்பூச்சிகள் மாண்டுபோம். ஆனால் எச்சிலிலும் இருமலிலும், இருட்டில் காய்ந்துபோகும்படி விடப்பட்டால் இவை தூசியோடு கலந்து காற்றால் அங்கும் இங்கும் கொண்டுபோகப்படும். ஆகையால் இவ்வித பூச்சிகள் தீங்கு செய்யக்கூடிய இடங்களில் பரம்பாதபடிக்கு அதிக ஜாக்ரதையாயிருக்கவேண்டும்.

இவ்வியாதி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் குறைவுபட்டு வருகிறது; என்றாலும் இந்தியாவிலோ அதிகரித்து வருகிறது. இந்நோயைக் குறித்து வைத்தியர்கள் நன்றாய் ஆராய்ந்த பின்னர், இந்தியாவில் சில இடங்களில் விஷபேதி, ஜுரம், இரத்தக்கழிச்சல் முதலிய நோய்களைவிட க்ஷயரோகமே அதிக மோசத்தை உண்டுபண்ணுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். இங்கிலாந்து இந்தியாவைவிட அதிக குளிரும் ஈரமுமான பூமியாயிருக்கிறதனாலும், சில இந்திய மாகாணங்களில் இங்கிலாந்தைவிட இரண்டு மடங்கு ஜனங்கள் இவ்வியாதியினால் மாண்டு போகின்றனர்.

விஷபேதியை இருவகையாய் எதிர்க்கலாம், ஒன்று வாராமல் தடுத்தல்; மற்றொன்று வந்தபின் சுகப்படுத்தல். இவற்றில் முந்தினதுதான் உத்தமமும் சுலபமுமானது. நோயைத் தடுப்பதற்கேற்ற சாதனம் யாதெனில், சுத்த ஆகாயம் ஒன்றேதான். இதுவே முக்கியமும் முதன்மையுமானது. க்ஷயரோகத்தைத் தடுப்பதற்கும், சுகப்படுத்துவதற்கும் ஏற்ற சாதனம் சுத்த ஆகாயந்தான் என்று கண்டுபிடித்தது உலகத்தில் கண்டுபிடித்த பெரிய விஷயங்களில் ஒன்று. இம்மருந்து எவ்விடத்திலுமுண்டு. இதை மிகவும் லேசாய்ப் பெறலாம். இது ஒரு தீமையுஞ் செய்யாது. இது எப்போதும் நன்மையே செய்யும் மருந்து வகுப்பைச் சேர்ந்தது. எடின்பரோ நகரில் க்ஷய ரோகிகளின் ஆஸ்பத்திரிக்கு தலைமையாயிருந்த பிலிப்பு வைத்தியர், அவ்விடமிருந்த நோயாளிகளெல்லாம் சேதப்பட்ட சுவாசயத்தை உடையவராயினும், குளிர்ந்த காலங்களில் அவர்களும் ஆஸ்பத்திரி அதிகாரிகளும் வெளியே சுத்த ஆகாயத்தை சுவாசிக்கிற சிகிச்சையை செய்ததினால், ஒருவராவது இருமல் (Bronchitis), நியுமோனியா (Pneumonia) புளூரசி (Pleurisy) முதலிய நோய்களினால் பிடிக்கப்படவில்லை



யென்று தன்னுடைய 15 வருஷத்து அனுபவத்தைக்கொண்டு சொல்லுகிறார்.

தேகத்தைச் சரியாய்ப் பாதுகாத்துக்கொண்டால் குளிர்ந்த ஆகாயத்தினால் ஒரு மோசமும் வராது. அசுத்த ஆகாயந்தான் தீமையை உண்டுபண்ணும். இவ்விஷயத்தை எழுதினவருடைய ஆஸ்பத்திரிக்கு ஒரு வாலிப இந்துப்பெண் க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டவளாய் கொண்டுவரப்பட்டனள். வயோதிபனான அவள் தகப்பன் ஆஸ்பத்திரி கட்டடத்துக்குள் வசிக்க இஷ்டமில்லாததினால் வெளியே தாங்களிருவரும் தங்குகிறதற்கு ஒரு மரத்தினடியில் ஒரு குடிசை கட்டி அங்கே தங்கி வந்தான். எல்லாரும் அதிசயிக்கத்தக்கதாய் அந்தப் பெண் சுகப்பட்டது. வெளியிலே சுத்த ஆகாயத்தினால் வியாதிகளை சுகப்படுத்துவது எத்தேசத்திலும் நடத்தக்கூடிய ஒரு சாதனமாயிருக்கிறது. ஆனால் விசேஷமாய் இந்துதேசத்தின் சீதோஷ்ண நிலைமை வருஷத்தின் மிக்க பாகத்திலும் க்ஷயரோகிகளுக்கு சுகத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. நமது பட்டணவாசிகளுங்கூட தங்கள் வீட்டு மெத்தைகளில் நின்று எவ்வளவோ சுத்த ஆகாயத்தை உட்கொள்ளலாமென்பதை சரியாக அறியாதிருக்கிறார்கள்.

பாலும் ஜலமும் சுத்தமாயிருக்க வேண்டும்.

பால், கிருமிகள் சாக காய்ச்சப்பட வேண்டும். ஆகாரத்தில் புஷ்டிப்பதார்த்தமும் தித்திப்பும் தக்கபடி கலந்திருத்தல் வேண்டும். அவை நன்றாய் சமைக்கப்பட்டதாயும், போஷணை உண்டாக்கக் கூடியதாயுமிருத்தல் அவசியம்.

தேகாப்பியாசம் சுகத்திற்கு அவசியமான இன்னொன்றாம். அதினால் உண்டாகும் பலன் யாதெனில்—நாம் போதுமானபடியும் அடிக்கடியும் சுவாசம் விட்டு, சுவாசம் வாங்குவோம். அப்போது அதிகமான ஆகாயம் சுவாசயத்திற்குள் செல்லும். அதிகப் பிராணவாயு இரத்தத்திற்குக் கொண்டு போகப்படும். இப்படிச் செய்வதினால் உண்டாகும் நல்ல இரத்தமானது நமது சரீரத்தை பலப்படுத்துவதோடு அதிலுள்ள விஷப்பூச்சிகளையெல்லாம் கொன்றுபோடக்கூடிய சக்தியுள்ளதாயுமிருக்கிறது.

க்ஷயரோகம் சுகமாகக் கூடிய ஓர் வியாதி. இந்நோயை ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து சுகப்படுத்தாவிட்டால், முற்றினபின் எவ்வித சிகிற்சையினாலும் அதை சுகப்படுத்த முடியாது. எந்த வியாதியும் தன் பருவத்தைக் கடந்தால் சுகமாகாது.

மீன் எண்ணெய் சுவாசயத்து நோய்களை தீர்க்கக்கூடிய ஔஷதங்களில் ஒன்று. அதை மருந்தாக மாத்திரமன்று ஆகாரமாகவும் உட்கொள்ள வேண்டும். சாப்பிட்டபின் ஒரு தேக்கரண்டி மீன் எண்ணெயில் கிறியசோற் (Creasote) என்னும் மருந்தில் ஒரு துளி கலந்து நாள்தோறும் மூன்று வேளை அருந்த வேண்டும்.

ஆனால் மருந்துகளைக் காட்டிலும் சுத்த ஆகாயம், நல்ல உணவு, தேகாப்பியாசம் முதலிய இவைகளே, இவ்வியாதி சுகப்பட அவசியமானவைகளென்று ஒத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. கடைசியாக வற்புறுத்திச் சொல்லவேண்டிய சத்தியம் யாதெனில் இவ்வியாதியை சுகப்படுத்துவதற்கும், தடுப்பதற்கும் சுத்த ஆகாயமே முக்கிய சாதனம். எவ்வளவு சுத்த ஆகாயத்தை உட்கொள்ளக் கூடுமோ அவ்வளவையும் உட்கொள்ள வேண்டும். சரீரத்தை எப்போதும் அன

லாய் வைத்துக்கொண்டு, சுவாசயங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகாயத்தை அவைகளுக்குள் செல்ல விடு.

---

PEARL FISHERIES IN CEYLON.

## இலங்கையின் முத்து ஸலாபங்கள்.

---

இவைகள் உலகத்திலுள்ள முத்து ஸலாபங்களில் அதிகப் பழமையானவைகள். இவைகளைக் குறித்து ஐரோப்பிய பண்டைய ஆசிரியர்கள் அடிக்கடி தங்கள் நூல்களில் எழுதியிருக்கின்றனர். அவர்களில் ஒருவர் தமது காலத்தில் இவைகளே அதிக விளைச்சலை உடையனவெனக் கூறுகிறார். சிங்களவருடைய நூல்கள் இச்சலாபங்கள் மேற்சொன்ன காலத்துக்கும் அதிகம் முந்தினவைகளெனக் கூறுகின்றன. கி. மு. 540-இல் இலங்கை விஜயராஜன் தன் மாமனாருக்கனுப்பிய பரிசுகளில் முத்தும் ஒன்றாயிருந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. கி. மு. 306-ல் இத்தீவினரசன் இந்தியாவுக்கு ஸ்தானாபதிகள் வசம் முத்துக்களையு மனுப்பினான். இலங்கையில் பாழடைந்த ஆலயங்களின் சாந்துகளில் முத்துச்சிப்பியின் தோட்டின் அடையாளங்கள் காணப்படுகின்றன. எட்டாவது, பதினோராவது நூற்றாண்டுகளில் உள்ள பாரசீக அராபிச் சாதனங்களில் இச்சலாபங்களைப்பற்றிய குறிப்புகளைக் காணலாம். பிரசித்திபெற்ற மார்க்கப்போலோ என்னும் பிரயாணி கி. பி. 1291-ம் வருஷம் இலங்கை முத்துகளைக்குறித்து எழுதியிருக்கிறார். ஏறக்குறைய 8000 படவுகள் முத்து ஸலாபங்களில் வேலை செய்துகொண்டிருந்தன என்று வேறொருவர் 1330-ம் வருஷத்தில் எழுதுகிறார். ஏழு வருஷங்களுக்கு முன்வரையிலும், ஏறக்குறைய 2000-ம் வருஷங்களாக முத்துக் குளிப்பதற்குள்ள ஏற்பாடுகள் ஒரே சீராக இருந்தது கவனிக்கத்தக்க விஷயமாம். இலங்கையின் முத்து ஸலாபங்கள், அத்தீவின் மேல்கரையோரத்திற்கே உரியது இப்பாகத்திலுள்ள ஓர் பீடபூமியில் முத்துக்கரைகளநேகம் உண்டு. கொழும்புக்கு சமீபத்தில் வேளாவேளைகளில் முத்துச்சிப்பிகள் கிடைக்கும். முத்து ஸலாபங்களின் வடபாகத்தில் 250-மைல் சுற்றளவுள்ள இடம் குத்தகையாக விடப்பட்டிருக்கிறது. ஆனால் சிப்பிகள், பீடபூமியின் பாறையுள்ள இடத்தில்தான் பொதுவாக அகப்படுகின்றன. அப்பாகமுழுவதிலும் 150-மைல் விஸ்தீரணமுள்ள இடத்தில்தான் முத்துச்சிப்பிகள் எடுக்கலாம். அக்டோபர் மாதம் தொடங்கி மே மாதம் வரையில் அத்தொழில் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதங்களில் ஏறக்குறைய 40,000 ஜனங்கள் இக்கரையில் வந்து வசிக்கிறார்கள். இவர்களில் அநேகர் தென்னிந்தியாவிலும், இந்தியாவின் மற்றப் பாகங்களிலுமிருந்து வரும் பெரிய வர்த்தகர்கள்.

சிப்பிகளின்மேல் விழும் பனித்துளிகள் முத்துக்களாகின்றன என சாதாரண ஜனங்கள் அபிப்பிராயப்படுகின்றார். மின்னலினால் அவை உண்டாகின்றனவென வேறு சிலர் நம்பி வருகின்றார். ஆனால் தற்கால ஆராய்ச்சியினால் நாம் அறிவதுயாதெனில், சிப்பியில் வசிக்கும் சில கிருமிகளினாலாவது தசையில் அல்லது தசையின் மேற்பாகத்தில் தோன்றும் நீர் உரையினாலாவது முத்துக்கள் உண்டாகும் என்பதே. எப்படி அவைகள் உண்டானாலுஞ்சரி, முத்துக்கள், ரத்தனங்களுக்குள்ளே அதிக அழகு பொருந்தின வகுப்பைச் சார்ந்தவை.



LINKS IN THE CHAIN.

## சங்கிலியிலுள்ள தொடர்கள்.

---

ஒவ்வொருவனும் ஒன்றோடொன்று சேர்த்திணைக்கப்பட்டு பூரணம் பெற்றிருக்கிற ஒன்றின் பாகமாயிருக்கிறான் என்பது யாவருமறிந்த சத்தியமே. மனுஷனுடைய ஜீவியம் கடற்கரையிலுள்ள ஒரு மணற்பொடியைப் போன்றதன்று. அவனுக்கு முன் ஜீவித்திருந்தவர் அநேகர். அவன் காலத்திலும் அவன் ஜீவியத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர் பலர். இவனுடைய நடத்தையும், குணமும்,—இவன் விஷயத்திலே கரிசனையுள்ளவர்களும் இவனை நேசிக்கிறவர்களும், இவன் சிநேகிதர்களுமாகிய ஏனையோர் ஒவ்வொருவரிலும் கிரியை செய்கின்றன.

இவ்வண்ணமாக மனுஷ ஜீவியம் நடந்துவருகிறது. மணற்பொடிகளைப்போல அல்ல, மெல்லிய துணியிலுள்ள கண்களைப்போல் அதிருக்கிறது. அத்துணியின் கண்கள் ஒவ்வொன்றும் வேறு நாலைந்தோடு சேர்ந்து அவற்றைப் பிடித்துக்கொண்டும், கீழ்க்கூறிய இக்கண்களொவ்வொன்றும் அவ்வாறே வேறு நாலைந்தோடு இணைக்கப்பட்டுமிருக்கின்றன. ஆனபடியால் இவ்வுலக ஜீவியத்தில் ஒரு மார்க்கவசத்தை நாம் உற்று நோக்கினால் அதில் நாம் ஒவ்வொருவரும் ஒரு கண் அல்லது தொடராயிருக்கிறோம் என்பதாக்க் காணும். ஆகவே அதில் ஒரு கண் அல்லது தொடர் அறுந்துவிடுமானால், அக்கண் தன்னோடு சேர்ந்த நாலு அல்லது ஐந்து கண்களை அல்லது தொடர்களை அவிழ்த்துவிடுகிறது. இந்த நாலு, ஐந்து தொடர்களும் அப்பக்கத்திலே தங்களுக்கிருக்கவேண்டிய ஆதாரவை இழந்து எவைகளின்மேல் சார்ந்திருக்கின்றனவோ அவைகளின்மேல் தாங்கக்கூடாத பாரத்தைச் சுமத்துகின்றன. அதன் பின்னர் அவ்விடத்திலே அதிக அழுத்தமுண்டாகும் அல்லது கவசமுழுவதும் நீண்டுவிடும். ஒரு தொடர் விழுந்துபோகும்போது மற்றவைகள் அதிகமான பாரத்தைத் தாங்கமாட்டா. இப்பேர்ப்பட்ட போர்க்கவசத்தை ஒருவன் தரித்துக்கொண்டு யுத்தத்திற்கு போவானாகில், இப்பிழைப்பினால் அவன் சரீரத்தில் காயமும், கவசத்திற்கு அதிகக் கிழிவும் உண்டாகும்.

தேவன் நம் ஒவ்வொருவரையும் ஒரு விசேஷித்த வேலையைச் செய்வதற்கென்று அழைக்கிறார் என்று நினைத்துக்கொள்; இச்சீவியத்தில் வேறொருவரும் செய்யக்கூடாத கடமையை அல்லது வேலையைச் செய்ய அழைக்கிறார். ஏனென்றால் நம்மைத் தவிர வேறொருவரும், தேவன் நமக்காக ஏற்படுத்தின வேலையைச்செய்ய நியமிக்கப்படவில்லை. இவ்வேலையை நாம் உண்மையாகச் செய்யாவிட்டால் அது ஒருபோதும் செய்யப்படாமலேயிருக்கும். அப்படியானால் நமக்கு கொடுக்கப்பட்ட வேலையைச் செய்கிறதற்கு போதுமான திறமை நமக்கில்லையென்று அடிக்கடி முறையிடுதலுக்கு இடமில்லையென்பதை நினைத்துக்கொள்.

தேவன் இடத்தையும் வேலையையும் கொடுத்தபோது, அதை நிறைவேற்ற வேண்டிய திறமையையும் கணக்கிட்டிருக்கிறார். இதை நாம் கிரஹிப்போமானால் நம்மிடத்தில் தேவன் எதிர்பார்க்கிறவைகளை செய்வதற்கு நாம் சக்தியுடையவர்களாயிருக்கிறோமெனக் கண்டுகொள்வோம். அப்பொழுது வீண்பொழுதுபோக்கவாவது, அதிருப்தியாயிருப்

பதற்காவது நமக்குச் சமையம் கிடைப்பதரிது.

A MAN'S FAITH.

## ஒரு மனிதனுடைய விசுவாசம்.

அநேக வருஷங்களுக்கு முன்னே, ஒரு வைத்தியர் இங்கிலாந்திலுள்ள தன் வீட்டை விட்டு, வட அமெரிக்கா கண்டத்தின் வடபாகத்தில் கடலை யடுத்ததாயிருக்கிற லாபடார் என்னும் இடத்திற்குப்போய் வேலை செய்வதைத் தெரிந்துகொண்டார். அந்த இடத்திலே குடியிருப்பது மகா கஷ்டம். அது மிகவும் குளிராயிருக்கும். அவ்விடத்து ஜனங்கள் சிதறுண்டவர்களாயும் ஏழைகளாயுமிருந்தார்கள். அப்படியிருக்க, அவ்வைத்தியர் இத்தூரதேசத்துக் கஷ்டங்களைத் தெரிந்துகொண்டது, என்னத்தினாலெனில் தான் ஐசுவரியவானாக வேண்டுமென்கிற நோக்கத்தோடு அல்ல, ஏழை ஜனங்களுக்குத் தம்மாலியன்ற உதவி செய்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்கிற ஆசையினால்தான். ஒவ்வொருவனும் முன் இருந்ததைவிட நல்ல ஸ்திதியிலிருக்கவும் யோக்கியமான ஜீவியம் செய்யவும் ஒவ்வொருவனும் செய்ய வேண்டியது என்ன என்று கற்பிக்கவும் ஆசைகொண்டார். அவ்வாசைப்படியே அவ்விடத்திலே அநேக நன்மைகளைச் செய்தார். அவரை, அவருடைய சொந்த ஜனத்தார் சிநேகிக்கிறார்கள். அவருடைய கீர்த்தி லோகமுழுவதும் பிரசித்தமாயிருக்கிறது. ஆனால் அவரோ அவ்வித கீர்த்தியை ஒருபோதும் நாடினவரல்ல. அவர் தமது விசுவாசத்தைக் குறித்து எழுதுகிறதாவது:—

"என்னுடைய விசுவாசத்தை ஒருவனும் என்னிடத்திலிருந்து பறித்துக்கொள்ளாதபடி, தேவனுடைய சகாயத்தைக்கொண்டு காப்பாற்ற தீர்மானித்திருக்கிறேன். நான் ஒருபோதும் அதை மறைத்து வைக்கமாட்டேன். என்னால் கூடுமானால் அதை என் காவலாளனாக என்னைச் சுற்றிலும் வைத்துக்கொள்வேன். அவ்விசுவாசத்தைச் சும்மா வைத்திராமல் அதற்கு வேலை கொடுப்பேன். அது வரவர குறைந்து போகாதபடி அதை அதிகப்படுத்திக்கொள்ள என்னால் செய்யக்கூடியதையெல்லாம் செய்வேன். நான் அதைக் கறைப்படுத்தாமலும், கேவலப்படுத்தாமலும் இருக்க, தகுந்த பிரயத்தனங்களைக் கையாடுவேன். இவ்விசுவாசம் நம்பாத ஒன்றையும் நான் சொல்லேன், அபாயம் வரும்போது கூடுமானால் என்னைவிட பலசாலியான ஒருவரிடம் போய், என் விசுவாசத்தை பத்திரம்பண்ண அவருடைய உதவியைப் பெறுவேன். அப்படியே அவ்வித அபாயம் வந்தால் யாருடைய உதவியை எதிர்நோக்குவேன் என்று நினைக்கிறீர்கள்? நிச்சயமாகவே எனக்கு அவ்விசுவாசத்தை கொடுத்தவராகிய தேவனிடமே. சத்தியவேதம் சொல்லுகிறபடி "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன். நான் அவரிடத்தில் ஒப்புவித்ததை அவர் அந்நாள்வரையிலும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என்பதே.

HOW TO CLEAN SILVERWARE.

## வெள்ளிப் பொருட்களை சுத்திசெய்தல்.

எல்லாரிடத்திலும் வெள்ளியினால் செய்த பாத்திரங்களும் ஆபரணங்களும் இருப்பதில்லை. அதிஷ்டமுள்ளவர்களிடத்தில் மாத்திரம் உண்டு. அங்கனமுடையோர் அப்பொருட்கள் எப்போதும் பிரகாசமுள்ளனவாயும், கரைபிடிக்காமலுமிருக்கவும் என்ன செய்யவேண்டுமென்றறிய ஆசிப்பார். ஏனெனில் நாம் வசிக்கிற இத்தேசத்தில் உலோகமும் சீக்கிரத்தில் கரைபிடித்து விடுகிறது.

அங்கனம் கரைபிடியாதிருக்க செய்யும் உபாயம் யாதெனில் :—

மட்பொடி கலவாத உயர்தர(Whiting) உவைற்றிங் பொடி கொஞ்சம் வாங்கி, நன்றாய்த் தூளாக்கி நவச்சாரம் (Ammonia) அதோடு சேர்த்து குழம்பாக்கவேண்டும். நவச்சாரம்மாத்திரமே சுத்திபண்ணும் சக்தியுடையது. ஆனால் உவைற்றிங்கோடு சேர்த்துப் பிரயோகித்தால், புது வஸ்துக்களுக்குரிய மினுக்கமும் பிரகாசமும் உண்டாகும். 880 சக்தியுள்ள நவசாரத்தைப் பிரயோகிக்கவேண்டும்; ஆனால் காய்ந்த உவைற்றிங் பொடியை பிசின்போல் குழம்பாக்கத் தக்க அளவு நவச்சாரத்தை மாத்திரம் சேர்க்கவேண்டும். அக்குழம்பை நாம் சுத்திபண்ணவேண்டிய வஸ்துவின்மேல் பூசி, பின் ஒரு உலர்ந்த துணியினால் நன்றாய்த் தேய்க்கவேண்டும். நவச்சாரம் அதிசீக்கிரம் ஆவியாகிப்போவதினால் எப்போ வெள்ளி வஸ்துக்களை சுத்திசெய்ய அவசியமோ, அப்போ மாத்திரம் சிறு துளி நவசாரம் சேர்ப்பதே மிகவும் நல்லது. உவைற்றிங் பொடியில் மண் தூசி முதலியவை கலவாதபடி பத்திரப்படுத்தவேண்டும். முன்சொன்ன சக்தியுள்ள சுத்தமான நவச்சாரமே எப்போதும் உபயோகிக்கவேண்டும். இந்தப் பொடியின் மேன்மை என்னவெனில், எவ்விதமாக இதைப் பிரயோகித்தாலும், பாத்திரங்களின்மேல் பூசிய வெள்ளி ஒருபோதும் தேய்ந்து போவதில்லை.



சிறிய வெள்ளி வஸ்துக்களை சுத்திசெய்ய இன்னொரு நல்ல வகை உண்டு. யாதெனில், வெண்காரம் (Borax) கலந்த தண்ணீரில் இரண்டொரு நாள் அவ்வஸ்துக்களைப் போட்டு பிற்பாடு மெல்லிய துணியினால் நன்றாய் அழுந்தத் துடைக்கவேண்டும்.

THE CHILDREN OF CHINA.

## பிள்ளைகளின் பக்கம்.

CHINESE CHILDREN.

### சீனப்பிள்ளைகள்.

இந்து தேசத்துச் சிறுவர், இதரதேசத்துப் பிள்ளைகளைக் குறித்துச் செய்திகள் அறிய எப்போதும் பிரியமுடையவர். சீனதேசத்தின் பற்பல யிடங்களைப் பார்த்திருக்கும் ஒரு அமெரிக்க துரைசானி சொல்லிய ஒரு கதையுண்டு. அதைச் சற்றுக் கேளுங்கள்.

"சீனபாஷையை நான் நன்றாய்ப்பேச முடியாது. பெரியவர்கள் முன்னால் இப்பாஷையைப் பேச எனக்கு அச்சமுண்டு. குழந்தைகள் பேசும் வார்த்தைகளை நான் நன்றாய் அறிந்துகொள்ளுவேன். அவர்களும் என் வார்த்தைகளைக் கிரஹித்துக்கொள்வார்கள். அமெரிக்கக் குழந்தைகளைப்போல் இவர்கள் அழுவதையும், நகைப்பதையும், கூச்சலிடுவதையும் பார்ப்பது மிகவும் சந்தோஷமாயிருக்கும். சீனப்பிள்ளைகள் மாத்திரமல்ல, எல்லாப் பிள்ளைகளும் அவர்கள் எவ்வளவு அழுக்காயிருந்தாலும், அவர்கள் யாவரும் விரும்பப்படக்கூடியவர்கள். ஒருபோதும் ஸ்நானஞ்செய்யப்படாத அநேக சீனப்பிள்ளைகள் உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் அவைகளில் ஒன்றைப் பார்த்தால், நான் சொல்லுகிறது உண்மையென்று ஒத்துக்கொள்வீர்கள்.

அநேக சீனத்தாய்மார் சவுக்காரத்தையும் (Soap) தண்ணீரையும் உபயோகிக்க மலைக்கிறார்கள். குளிர்காலத்தில், பெரியவர்களைப்போல் சிறுவரும் பருத்திப் பஞ்சு பொதிந்த சட்டைகளைப் போட்டுக் கொள்வார்கள். அவைகள் கனதியாயும் சூடாயுமிருக்கும். அடிக்கடி இவைகள் கந்தலாயும், பீற்றலாயுமிருக்கும் அவ்வித உடையை ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் தரித்துக்கொள்ளும்போது வெகு வேடிக்கையாய் காணப்படுவார்கள். அப்பிள்ளைகளுடைய கைகள் சாதாரணமாய் தொங்குகிறதற்குப் பதிலாய், விபரீதமாய்த் தூக்கிக்கொண்டு நிற்கும் நிலக்கரியடங்கிய ஒரு மூங்கில் கூடையை தங்கள் சரீரத்தின்மேல் வைத்து அனல் உண்டாக்கிக்கொள்ளும்பொருட்டு சட்டையின் நீண்ட தொங்கலிலிருந்து, தங்களுடைய கரங்களை அடிக்கடி வெளியே கொண்டு வருவார்கள். அக்கைத் தொங்கல்கள் கழற்றப்பட்டிருக்கும்போதும், நிமிர்ந்துகொண்டே நிற்கும்.

படம் பிடிக்கிற கருவிக்குப் பதிலாக என் கண்களையே உபயோகித்து இக்காட்சிகளை என் மனதில் பதித்துக்கொள்ளலாமென்று அநேகந்தரம் விரும்பினேன். அப்படிக் கூடுமானால், அநேக நேர்த்தியான படங்களை யெடுத்திருக்கக் கூடும். ஆனால் எவ்வளவு துரிதமாயும் ஜாக்ரதையாயும் பிள்ளைகளைப் படம் பிடிக்கப் பிரயாசப்பட்டாலும், அது அசாத்தியமாய்ப் போயிற்று. ஏனெனில் வெருண்ட மானைப்போல் நாலுதிக்கிலும் ஓடிப் போனார்கள்.

அவர்களை நான் படம்பிடிக்கும் கருவியினால் சுட்டுப்போடுவேன் அல்லது அந்தக் கருப்புப் பெட்டியில் அவர்களைப் பிடித்து அடைத்துக்கொள்வேன் என்று நினைத்தார்கள் போலும்.

நாட்டுப்புறத்துப் பிள்ளைகளிலநேகர் புறத்தேசத்தாரைப் பார்த்துப் பயப்படுகிறார்கள்; ஏனென்றால் அவர்களைச் சாதாரணமாய்ப் பார்க்கிறதில்லை. அவர்களோடு நாங்கள் சற்று விளையாடினபோது அவர்களுடைய அச்சம் நீங்கிப்போயிற்று. சீனருடைய புதுவருஷதினத்தில் ஆயிரக்கணக்கான பொய் முகங்கள் விற்கப்படுகின்றன. அவைகளில் சிறியவைகள் சிறுபிள்ளைகளின் முகத்தைப்போல் அழகாயிருக்கும். ஒரு தடவை ஒரு சிறுவன் சிறிய பொய் முகமொன்றை வைத்து விளையாடிக் கொண்டிருந்தான். அவனை நான் கவனமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். அவன் இதையறிந்து தன் கையிலிருந்த பெரிய முகத்தை தரித்துக் கொள்ளும் விதத்தை நான் பார்க்கும்பொருட்டு, அதைத் தரித்துக் கொண்டான். சில நிமிஷங்களின் பின்னர் அதையெடுத்து விட்டு என்னைப் பார்த்து புன்னகை செய்தான். “நீ பார்த்தவைகளிலெல்லாம் இது மிக நேர்த்தியானதல்லவா?” என்று என்னைக் கேட்டான் போலிருந்தது. அதற்குப்பின் சைகையின் மூலமாய் ஐந்து நிமிஷம்போல் நாங்களிருவரும் அதிக இன்பமான சம்பாஷணை செய்து கொண்டிருந்தோம். நாங்களிருவரும் ஒரு வார்த்தையும் பேசினதில்லை. ஆனாலும் நாங்களிருவரும் நல்ல சிநேகிதர்களானோம்.

சீனப்பிள்ளைகள் சுறுசுறுப்புடையவர்கள், தங்களுடைய பெற்றோர் செய்கிற வேலையை தாங்களும் சிறிது செய்வார்கள். பருத்திப்பஞ்சைப் பிரித்து, அதை நூலாகத்திரித்து பின்பு துணியாக நெய்வார்கள். சட்டைகள், சப்பாத்துக்கள், தொப்பிகள் முதலியவைகளைச் செய்வதில் உதவி புரிவார்கள். காலையில் தங்க



ளுடைய பெரிய எருதுகளை வயல்களுக்கு ஓட்டிக்கொண்டு போய் சாயந்திரத்தில் வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். சாதாரணமாய் அவைகளின்மேல் சவாரி செய்துவருவது வழக்கம். தங்களுடைய தம்பி தங்கைகளை தங்கள் தோள்மேல் சுமந்து திரிவார்கள். அவர்கள் பட்சமுள்ள தாதிமார்களுக்குச் சமானமாயிருக்கிறார்கள். தங்கள் இளைஞர்களை அவர்கள் நிந்திக்கிறதை நான் ஒருபோதும் பார்த்ததில்லை, ஆனால் சீனப்பிள்ளைகள் அதிகக் கோபப்படுகிறதை நான் பார்த்திருக்கிறேன். அச்சமயம் அவர்கள் பிள்ளைகளைப்போலல்ல, காட்டு மிருகங்களைப் போலிருக்கிறார்கள். தங்களுடைய கோபத்தையடக்க அவர்கள் ஒருபோதும் கற்பிக்கப்படுகிறதில்லை. ஏனெனில் அவர்கள் பெற்றோரே தங்கள் கோபத்தை அடக்காததினால்தான்.

---

AN AMERICAN INDIAN BOY

## அமெரிக்கா தேசத்து இந்திய சிறுவன்

சில காலத்துக்கு முன்னே ஸ்வீடன் (Sweden) தேசத்தில் அநேக பந்தயங்கள் நடந்தன. இவைகளின் முடிவை ஐரோப்பியர் யாவரும் அதிக நுட்பமாய்க் கவனித்து வந்தார்கள். ஐரோப்பா தேசங்கள் எல்லாவற்றிலுமிருந்து வந்திருந்த சில வாலிபர்கள் பந்தயப் பொருளுக்காக கச்சை கட்டி நின்றார்கள். பந்தயங்கள் பற்பல வகையாயிருந்தன. ஓடுகிற பந்தயம், குதிக்கிற பந்தயம், குஸ்தி பந்தயம், குண்டெறியும் பந்தயம், நீந்தல் பந்தயம், நடக்கிற பந்தயம், தண்டு வலிக்கிற பந்தயம் முதலியவைகளும் இன்னும் மற்றவைகளுமிருந்தன. அங்கு கூடியிருந்த பயில்வான்களிலெல்லாம் அதிக வலிமை பொருந்தியவனும் திறமையுடையவனுமாயிருந்தவன் யார்? அவன் அமெரிக்கா கண்டத்திலிருந்து வந்த ஒரு வாலிபன். அவன் அக்கண்டத்தில் குடியேறியிருக்கும் ஐரோப்பிய ஜாதியைச் சேர்ந்தவனல்ல. இவன் அத்தேசத்தை வெள்ளையர்கள் கண்டுபிடிக்கு முன் அங்கு குடியாயிருந்த இந்தியரின் வம்சத்தான். இவன் அமெரிக்க தேசத்து இந்தியன். உலகத்திலுள்ள பயில்வான்களிலெல்லாம் இவன் முதன்மையாய் விளங்கினது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் இவனுடைய ஜாதியார் அறிவீனரும் விர்த்தியற்றவர்களுமாயிருக்கிறார்கள். இந்தியர்களில் வெகு சொற்ப பேர்தான் இச்சீவியத்தின் பற்பல முயற்சிகளில் பிரக்யாதை பெற்றிருக்கிறார்கள். ஆகையால் இப்பேர்க்கொத்த நிலைமையிலிருக்கும் ஜாதியாரிலொருவன் உலகப்பிரசித்தி பெறுவது, அவர்களின் வாழ்வைக் கருதும் சிநேகிதர்களுக்கு அதிக சந்தோஷத்தைப் பிறப்பிக்கும் காரியமாயிருக்கிறது.

---

BILL.

## பில் என்னும் நாய்.

பில் என்பது ஒரு பெரிய நாய். ஸெண்ற் பர்னாட் மலைநாட்டு ஜாதியைச் சார்ந்த மயிர் அடர்ந்த நாய். சிறிது காலத்துக்கு முன்னே ஓரிரவு ஒரு பட்டணத்தில் டிராம் வண்டியில் பிரயாணம் பண்ணினவர்கள் இந்த நாயோடு பழக்கமானார்கள். அது மாத்திரமன்று, உண்மையைக் குறித்தும் அதினிடமிருந்து ஓர் பாடத்தைக் கற்றுக்கொண்டனர்.

அவ்வண்டி துரிதமாய் சென்றுகொண்டிருக்கையில், ஏதோ கறுப்பானதொன்று பாதையில் கிடக்கிறதை ஓட்டுபவன் கண்டான். உடனே அவன் வண்டியை நிறுத்தினான். நிறுத்தவே, அவ்விடத்திலிருந்து இந்த நாய் குதித்தெழும்பி, குலைத்துக்கொண்டே அருகாமையிலிருந்த ஒற்றடிப்பாதைக்கு ஓடிற்று. எல்லாரும் இதைக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். இது ஒரு மனிதனுடைய கையை, தன் வாயினால் கௌவி வண்டிக்கு பிடித்து இழுத்துக்கொண்டுவந்தது. அந்த மனிதனும் நாயும் வண்டியின் சமீபத்தில் வந்தபோது அதின் வெளிச்சத்தினால் அம்மனிதன் ஓர் கபோதி எனத் தெரியவந்தது. பில் என்னும் நாய் தனது எஜமானை திறக்கப்பட்ட அந்த வண்டிக்கு கவனமாய்க் கொண்டுவந்தது. அவன் வண்டியிலேறி சௌக்யமாய் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து தன்னுடைய சந்தோஷத்திற்கு அறிகுறியாய் குலைத்தது. வண்டி மறுபடியும் புறப்பட்டுப் போகையில், பில் தனது எஜமான் உட்கார்ந்திருந்த இடத்திற்கு சரிநேராக தொடர்ந்து ஓடினது. வண்டியின் பக்கமாய் அது ஒரு மானைப்போல் ஓடிற்று. தன்னுடைய வேலையை தான் சரியாய்ச் செய்வதை தன் எஜமான் அறியும்பொருட்டு குலைத்துக்கொண்டே சென்றது. சரியான தெரு வந்ததும் வண்டி நின்றது. தன் எஜமான் வண்டியை விட்டிறங்குகையில் சேவகனைப்போல் ஆஜராய் நின்றது. வண்டியிலிருந்தவர்கள் கடைசியாய் அந்த நாய் தன்னுடைய எஜமானை அவ்விருட்டில் வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போவதையும், எஜமான் தன் கையை அந்த நாயின் தலைமேல் வைத்துக்கொண்டு நடப்பதையும் பார்த்தார்கள்.

CARE OF THE EYES.

## கண்களைப் பத்திரம் பண்ணுதல்.

சில காலத்துக்கு முன்னே எங்களுக்கருகேயுள்ள ஒரு வீட்டில் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் சுகமுள்ள பிள்ளைகளாய் பிறந்ததினாலே நல்ல பெலனுள்ள பிள்ளைகளாய் வளருவார்கள் என்று நினைத்தோம்.

சிறிது காலஞ் சென்றதின் பின்னர் அவர்களில் ஒன்று குருடாய்ப் போயிற்று எனக் கேள்விப்பட்டேன். கண்களிலே உண்டான சிறு கட்டியினாலே நீர் வடிந்துகொண்டிருந்தது. உடனே வைத்தியரை அழைத்து கண்களைக் காண்பிக்கவும், அவைகளைச் சுகப்படுத்த எந்தப் பிரயத்தனமும் செய்ய முடியாமற் போயிற்று; ஏனென்றால் வியாதி முற்றி விட்டது. கடைசியில் அந்தப் பிள்ளை கண்களின் ஒளியை இழந்துபோனது.

இதின் காரணம் என்ன? காரணம் இன்னவென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. குழந்தை பிறந்த சமயத்திலே ஒரு வேளை சரியாகப் பிள்ளையைக் கவனியாதது ஒரு காரணமாயிருக்கலாம். பிரசவகாலத்தில் உதவி செய்யும் ஸ்திரீகள் பிறந்த குழந்தையின் கண்களைச் சரியாய்க் கழுவாததினால் இவ்வியாதி உற்பவிக்கும். கட்டி உண்டாகும்போது சரியாய்க் கவனிக்க வேண்டும். தாமதப்படக் கூடாது. இவ்விஷயத்தைக் குறித்து ஆங்கிலேய வைத்தியருக்கு ஒரு இந்திய பெருமான் பின்வருமாறு எழுதுகிறார்: “நாட்டுப்புற வாசிகளான எங்களில் யாருக்காவது கண்களில் கட்டி உண்டாகுமேயானால் முதல் ஐந்தாறு நாட்களில் அதற்கெந்தவிதமான மருந்துகளும் பிரயோகியாமல், பின்பு அதற்கு சிகிற்சை செய்துகொள்வது வழக்கம்.” அதைக் குறித்து அந்த வைத்தியர் என்ன எழுதுகிறாரென்றால்: “இந்த ஐந்தாறு தினங்களில்தான் வியாதி அதிகரித்து கண்கள் முழு குருடாகிப்போய் விடுகிறது. கவலைத் தாழ்ச்சியினால் இவ்வியாதி சுகப்படாமல் போய்விடுகிறது.” ஆகையால் உடனே இவ்வியாதிக்கு சிகிற்சை செய்ய வேண்டும். கண்களுக்கு சரியான சிகிற்சை செய்துகொள்ளவேண்டியது அத்தியாவசியம். நமது சரீரத்தில் கண்ணானது மிகவும் ஆச்சரியமானதும் மெல்லியதுமான ஒரு அவயவம். இதை இழந்தால் அதை மறுபடி பெற்றுக்கொள்வதரிது. அதைப் பாதுகாப்பதில் அஜாக்ரதையாயிருத்தலும், அதற்கு நோய் வரும்போது அதற்கேற்ற சிகிற்சை செய்யாதிருப்பதும் ஒருபோதும் சரியன்று. அதன் கூறுபாடுகளை உணர்ந்தவர் மாத்திரம் அதற்கு சிகிற்சை செய்யலாமேயன்றி மற்றுள்ளோர் செய்யத் துணியலாகாது.

மேற்கூறிய வைத்தியர் சொல்லுகிறபிரகாரம் கண் சுகமாயிருப்பதற்கு அத்தியாவசியமானது சுத்தமே. கண்களிலிருந்து வெளிப்படும் ஒருவகை அழுக்குகளே அக்கண்களுக்கு பிரதிகூலத்தை உண்டாக்குகிறது. வேறு வகையாய் சுகப்படுத்தக்கூடாமற் போனாலும் சுடு தண்ணீரினால் மெதுவாய்க் கழுவி அவ்வழுக்குகளை அப்புறப்படுத்தலாம். கண் வீக்கத்தை ஆரம்பத்திலேயே இவ்விதமாய் சிகிற்சை செய்தால் அதற்குப் பிற்பாடு ஒரு மோசமும் உண்டாவதில்லை. கண்களுக்கு ஒருபோதும் போல்ற்றீஸ்கள் (Poultices) வைத்துக் கட்டக் கூடாது. துர்வாடையான அழுக்குகள் கண்களினின்று வந்தால் அக்கண்களுக்கு கட்டுப்போடக்கூடாது. கண்ணோவுக்கு வெள்ளித்துத்த (Silver Nitrate) துளிகள் நல்ல ஔஷதம். ஆனால் இம்மருந்து கண்ணுக்கு எரிவை உண்டாக்குவதால் இதைக் குறைந்த சக்தியாய்ப் பிரயோகிக்கவேண்டும். நானூறு மடங்கு ஜலமும் ஒரு மடங்கு இவ்வவிழ்தத்தையும் சேர்க்கவேண்டும். இவ்வித குறைந்த சக்தியுள்ள மருந்தை ஒரு நாளில் இரண்டு தடவை பயமில்லாமல் கண்ணுக்குள் விடலாம். அம்மருந்து துவக்கத்தில் ஒரு வகையான குத்துவலியைக் கொடுக்கும், ஆனால் சீக்கிரத்தில் சுகம் தோன்றும். இப்படிக் கலந்த மருந்தை அதிக காலம் வைத்திருக்கக்கூடாது. ஏனெனில் அதின் சக்தி குறைந்துபோகும்.

ஒருவனுக்கு கண் பார்வையும் கண்ணுக்குச் சுகமும் வேண்டியதானால் சுத்த ஆகாயமும், போதுமான வெளிச்சமும் முக்கியமானவைகள்.

A TINY WATCH.

## மிகவும் சிறிய கைக்கடிகாரம்

கீழே சொல்லப்படுகிற கைக்கடிகாரம் உலகத்திலுள்ள எல்லா கைக்கடிகாரங்களிலும் மிகவும் சிறியதும், விலையுயர்ந்ததும், அதிக அதிசயமுடையதுமாயிருக்கிறது. இச்சிறிய கைக்கடிகாரம் கீழ்தேசத்திலுள்ள முத்து ஒன்றால் செய்யப்பட்டது. சுவிட்ஸர்லாந்து தேசத்தில் கடிகார வேலையில் மிகவும் தேர்ச்சியடைந்த மூன்று வேலைக்காரர் அந்த கடிகாரத்தைச் செய்தார்கள். அந்த முத்து அதிக சிறியதும், மகா நுட்பமானதாயு

யிருந்தபடியால் அந்த வஸ்துவுக்கு எந்த விதத்திலும் பழுதுவராமல் அதை குடைந்து அதற்குள் சாமானங்களை ஏற்றி கட்டி, அதன் முழு வேலையையும் முடித்துத்தீர 15 மாதங்கள் ஆனது. அந்த முத்து உருண்டையாயும், ஒரு அங்குல சுற்றளவு உள்ளதாயுமிருந்தது. கை விரலில் போட்டுக்கொள்ளும்படி ஒரு மோதிரத்தைப்போல் வெகு நேர்த்தியாய் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கைக்கடிகாரம் சரியான நேரத்தை காட்டக்கூடியதென்று உத்தரவாத முடையதாயிருந்தது. இந்த கடிகாரம் செய்யப்பட்ட வியாபாரசாலையின் அதிகாரியிடம் அப்படிப்பட்ட இன்னொரு கைக்கடிகாரம் செய்து கொடுக்கக்கூடுமா என்று கேட்ட போது, வியாபாரசாலையின் தலைவன், இரண்டு வருஷத்திலிருந்து இருபது வருஷம் வரையிலும் காலங்கொடுக்கக்கூடுமானால் அவ்வித கடிகாரத்தை செய்யக் கூடும் என்று மறு உத்தரவுகொடுத்தான். முதல் தரம் செய்யப்பட்ட கடிகாரம் பதினைந்து மாதத்தில் முடித்தபடியால், இவ்வித மறுமொழி அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. அப்போது அக்கடிகார தலைவன் விவரித்து சொன்னதாவது: "கடிகாரம் செய்ய பதினைந்து மாதம் பிடித்த போதிலும், அதற்கு தக்க முத்து தெரிந்தெடுப்பதற்கு வெகு காலம் செல்லும், முத்தைதெரிந்தெடுக்கும்போது, அதன் அளவு, நிறம், பிரகாசம் எல்லாம் ஒன்றாய் அமைந்திருக்கவேண்டும் என்று சொன்னேனும். அந்த கடிகாரக்கடையில் அதிக விலையுள்ள முத்துகளிருந்தாலும், ஒன்றாகிலும் அவ்வேலைக்கு பிரயோசனப்படாமலிருக்கிறது. அதினாலே அவர்கள் இன்னொரு கடிகாரம் செய்ய மனமற்றவர்களாயிருக்கிறார்கள்.

THE ROUGH PLACES—A HELP.

## கரடுமுரடான வழிகள்—ஒரு உதவி.

---

ஒரு சிறு பெண் தன் சகோதரனோடு ஒரு மலைமேல் ஏறிப்போகவேண்டுமென்று அநேக காலமாய் விருப்பங்கொண்டிருந்தாள். கடைசியாக அப்படி போக அவளுக்கு உத்தரவு அளிக்கப்பட்டது. அவள் மலையடிவாரத் தண்டை போய், கரடும் செங்குத்துமான மலைச் சார்புகளைப் பார்த்தவுடனே, பின்தாங்கிப்போய், ஏன் ஏறிப்போக சமமான பாதை இல்லை, எல்லாம் கரடும் கல்லுமாய் இருக்கிறதே என்று சொன்னாள். அதற்கு அவள் சகோதரன், இப்பேர்ப்பட்ட பாதை இல்லாமல் நீ எப்படி மலை உச்சிக்குப்போக முடியும் என்று சொன்னான்.

நமது ஜீவியங்களில் கஷ்டகாரியங்கள் தான் விர்த்திக்கு உதவி செய்கிறது. ஒவ்வொரு நாளும் காரியங்கள் சுலபமாயும் கஷ்டமில்லாததுமாய் சம்பவித்துக் கொண்டிருந்தால் நாம் ஒரு வழியிலேயாவது விர்த்தியடைய முடியாது. பள்ளிக்கூடத்தில் கஷ்டமான வேலை செய்யும்படி நியமிக்கப்படாத ஒரு பிள்ளை ஒரு போதும் கஷ்டமான காரியங்களை செய்துமுடிக்க திராணியற்றுபோகும். இதே மாதிரி ஜீவிய ஓட்டங்களிலும் சம்பவிக்கிறது. கஷ்டங்கள் நமக்கு ஒத்தாசையாய் இருக்கிறது, அவைகளை சரியாக உபயோகித்தால் உதவியாகவே இருக்கும்.

# மாதர் மித்திரி.

புக். உஎ. ௧௯௧௩ ௵ - ஆகஸ்டு ௴. இல. உ.

PLEA FOR MERCY.

இராகம், தூசாவந்தி. ஆதிதாளம்.

பல்லவி.

அப்பனே, நீர் எனக்கு எப்படியும் இரங்கி
அருளிச் செய்ய வேணும் நல் வகையை.

அநுபல்லவி.

தப்பிக் கெட்ட எனக்காய் ஒப்புடன் ரத்தம் சிந்திச்
செப்பமுடன் எனை மீட்ட நன்மெய்ப் பரனே, கிறிஸ்தரசே,— அப்

சரணங்கள்.

1. வஞ்ச வினைக்குட்பட்டேன்; நெஞ்சம் உருகிப் புண்ணாய்
வாடி உலைந்து, பவமதினாலே—தினம்
சஞ்சலப் பட்டுழன்று, நஞ்சுண்ட கெண்டையைப்போல்
தயங்கி மயங்கி மிகத் தியங்குவனோ?—ஏழை
தஞ்சம் எனக்கு நீர் என் கெஞ்சுதலுக்கு இரங்கிப்
பஞ்ச பவங்களைத் தீர்த்தருள்; மிஞ்சும் கிருபை விழிபாரும்; மெய்—அப்

2. நாடிப் பவத்தில் விரைந் தோடி விழுந்து கெட்டு.
நைந்து கரைந்து மனம் மெலிவேனோ?—மிக
வாடித் தவித்த என்னைத் தேடி ரட்சிக்க நீர்தாம்
வலிய வந் துதிரத்தைச் சொரிந்தீரே;—இப்போ
பாடிக் கெஞ்சும் எனக்குச் சூடிக் கிருபை அருள்;
நீடி தயையினைப் புரியும்; கொண்டாடி உமக்கூழியம் செய்ய மெய்—அப்

3. முன்னாள் நீர் ஈந்ததெல்லாம் என்னாலே நான் அழித்து
முழுவதையும் இழந்துபோனேனே;—பாவி
தன்னாலே கெட்டவன் நான் பின் ஆரிடம் போவேன் நீர்
தாமே எனக்குப் பிணைப்பட்டீர், ஐயா,—தேவ
மன்னா, மெய் மன்னா, ஓசன்னா! கிருபை செய்யும்;
இந்நாள் முதல் நான் மகிழ்ந்தினி எந்நாளும் உமக்கூழியம் செய்ய
மெய்.— அப்

## THE EXPLOSION OF WORLDS.

## பூமியின் வெடிப்புகள்.

---

சூரியனைச் சுற்றிவரும் பூமியோடு சேர்ந்த கிரகங்கள் அடங்கிய சூரியமண்டலத்தில் இன்னும் அநேக சிறிய கிரகங்களும் உண்டு. ஆனால் அவைகளை தூரதிருஷ்டிக் கண்ணாடியில்லாமல் காணக்கூடாது. அநேக ஜனங்கள் இச்சிறிய கிரகங்கள் எப்படி உற்பத்தியானது என்று அதிசயிக்கிறார்கள். சிலர் பெரிய கிரகம் ஒன்று எவ்விதமாயோ உடைந்துபோய் அத்துண்டுகள் இப்படி காணப்படுகிறது என்று நினைக்கிறார்கள். காரியம் இப்படியானால், பூலோகத்தைப் போன்ற பெரிய கிரகம் எப்படி சிறு துண்டுகளாக உடைக்கப்படும் என்று பார்க்கவேண்டும். இங்கேயுங்கூட ஒப்பந்தமில்லாமை அதிகமாய் இருக்கிறது. எப்படியிருந்தாலும் உண்மையாக ஒன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் ஒரு கோட்பாடு என்னவெனில், நாமிருக்கும் பூமியானது வரவர அதிக பழைய நிலைமைக்குட்பட்டவுடன் அதற்குள் வாய்வுகள் உற்பத்தியாகி அவைகள் வெளியேற வகையில்லாமல் விசாலமாகி, ஒரு பிரமாண்டமான வெடிகுண்டு உடையுமாப்போல் பூமியை அதிர்ச்சிக்கும்.

ஒரு நூலாசிரியர் தற்கால பத்திரிகையில் இப்படி சம்பவிப்பது அசாத்தியம் என்று ரூபிக்கிறார். இப்படி சம்பவிப்பது சாத்தியமான காரியமாயிருந்தாலும் தற்காலம் பூலோகத்தில் இருக்கிற ஒரு ஜீவாத்துமாக்கூட இப்படிப்பாகப் போகிறதே என்று ஆபாசப்படவேண்டியதில்லை. ஏனென்றால், இது சம்பவிக்கிறதற்குமுன் அநேக ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கடரவேண்டும். ஏன் பூமி இப்படி வெடிக்கப்படும் என்பதைக் காட்ட இந்நூலாசிரியர் கிராக்கற்றோவா என்னும் எரிமலையின் சரித்திரத்தைச் சொல்லுகிறார். இந்த எரிமலை ஜாவா, சுமத்திரா என்னும் தீவுகளின் மத்தியில் இருக்கும் சண்டா ஜலசந்தியில் இருந்தது. 1883-ம் வருஷத்தில் இந்த எரிமலை இருந்தது. அதற்கு முன்னேயே எவ்வளவு காலமாய் இருந்ததோ யாருக்கும் தெரியாது. அது கிரியை செய்துகொண்டிருந்ததைப் பற்றியும் ஒருவருக்கும் ஒருபோதும் தெரியவில்லை. இப்போது அம்மலை அவ்விடத்திலில்லை. முன்னே அறியப்படாததும் இதுவரையிலும் சம்பவிக்காததுமான விதமாய் இயற்கையின் ஒரு வலிப்பினால் ஆகாயத்தினுள் வெடித்து ஊதப்பட்டு இவ்விதமாய் நடந்தேறினது. இந்த எரிமலையினால் கொஞ்சக்காலமாய் அதிக கலக்கம் உண்டானது. கடலின் தரையில் பெரிய வெடிப்புகள் அதாவது பாளங்கள் ஏற்பட்டன. ஏராளமான ஜலம் அதனுள் ஓடினது. பிற்பாடு அந்தபாளங்கள் மூடிக்கொண்டன. பூமிக்குள் ஜலம் அடைபட்டது. பூமியின் சுரங்கத்து ஆழங்கள் அதிக சூடாய் இருப்பதினால் தண்ணீர் உடனே நீராவியாக்கப்பட்டது. ஏதாவது ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து அனல் போட்டவுடன் அத்தண்ணீர் கொதித்து நீராவியாகிறது என்கிற சங்கதி உங்களெல்லாருக்கும் தெரிந்தது. இப்படி உண்டாகும் நீராவி வெளியேற யாதொரு ஏற்பாடும் செய்யாவிட்டால் அது அப்பாத்திரத்தை உடைத்துப்போடும். இந்த மாதிரியாகவே பூமியின் ஆழங்களில் அடைபட்டிருந்த பிரவாகமான அத்தண்ணீருக்கு நேரிட்டது. ஏராளமான நீராவியின் பெருக்குக்கு வெளியேறும் வழி ஒன்றிருக்கவேண்டும். ஒரு பெரிய புகைக்



கூண்டு குப்பையினால் அடைபட்டிருப்பதுபோல அந்த எரிமலைக்கு சரியான வழியில்லாமல் இருந்தது. இந்த நீராவியானது முதலில் குப்பையினூடே வெளியேற வழி தேடியும் முடியாமற்போயிற்று. இப்படி அதிகநேரம் உள்ளே அடைபட்டு இருக்க இருக்க இறுக்கம் ஜாஸ்தியாயிற்று. பிற்பாடு திடீரென்று ஒரு வெடிப்பு உண்டாகி பூமியையே அதிரச்செய்தது. இதன்முன் ஒருபோதும் சரித்திர சம்பந்தமான காலங்களிலுங்கூட இப்படிப்பட்ட அதிர்ச்சி உண்டாகவில்லை. பழைய மலைச்சிகரம் முழுவதும் ஆகாயமார்க்கமாய் ஊதப்பட்டுப் போயிற்று. அதின் அதைப்பு உலக முழுவதிலும் அறியப்பட்டது.

கிராக்கற்றோவாவிலிருந்து ஒரு பிரமாண்ட சமுத்திர அலை ஆஸ்திரேலியா கண்டத்தின்மேல் சுழன்று சுற்றிக்கொண்டு, பசிப்பிக் சமுத்திரத்தை ஊடறுவி, ஹார்ன் முனையைச் சுற்றிப்போய் எதிர்மார்க்கமாய் பூமியைச் சுற்றின வேறொரு அலையையும் சந்தித்தது. இவைகளின் வலிமை ஜாஸ்தியாகி சேர்ந்து, அத்திலாந்திக் சமுத்திரத்தில் மோதி பிரான்ஸ் பிரிட்டிஷ் தீவுகளின் கரைகளிலும் எட்டினது. இதுதான் ஒருநாளும் கேள்விப்பட்டிராத சுற்று அலை. அதே சமயத்தில் ஒரு பிரமாண்ட ஆகாய அலையும் கிரியைசெய்தது. அது ஒரு மணி நேரத்திற்கு 756-மைல் வீதமாய் பிரயாணம் செய்து பூமியை 3 தரம் சுற்றி வட்டம்போட்டதாக தெரியவந்தது.

ஐக்கிய மாகாணங்களின் மத்தியில் ஓடும் மிசிசிப்பி (Mississippi) என்னும் நதி, இந்தியாவிலுள்ள நதிகள் எப்படி வருஷா வருஷம், சேறும் மணலும் அளவில்லாமல் சமுத்திரத்திற்கு கொண்டுபோடுகிறதோ அப்படியே ஏராளமான மண்ணைக் கொண்டுபோய் கடலில் சாத்துகிறது. மிசிசிப்பி எவ்வளவு மண்ணை 250-வருஷத்துக்குள் கடலுக்கு கொண்டுபோகிறதோ அவ்வளவும் இந்த வெடிப்புண்டான காலத்தில் கிராக்கற்றோவா என்னும் எரிமலை கடலில் தள்ளினது. இது எல்லா யோசனைக்கும் எட்டாததாயிருக்கிறது. அதெல்லாம் கடலுக்குள் போகவில்லை, ஏனெனில் இன்னும் மெல்லிய எரிமலை தூசிகள் ஆகாயத்திலே இருந்தது. உலக முழுவதிலும் பூராக இரண்டு வருஷங்களாக சூரிய அஸ்தமனத்திற்கு ஒரு விநோதமான சிகப்பு மேனியைக் கொடுத்தது. நான் இது சம்பவித்த இடத்துக்கு நேர் எதிரான பாகத்தில் இருந்தபோதிலும் அந்த பிரகாசமான சூரிய அஸ்தமனங்களைக் கண்ணால் கண்டது ஞாபகத்தில் இருக்கிறது. அவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டும் எப்படி உண்டாயிருக்கலாம் என்று யோசிக்கவும் செய்தோம். சத்துவங்கள் இணைக்கப்பட்டு ஒருகாலத்தில் பூமியைக்கூட அதிர்ச்சிக்கக்கூடும் என்பதைக் காட்டுவதற்காக இப்பெரிய சம்பவம் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் மேற்கண்ட நூலாசிரியர் உலகம் இப்படி அசைக்கப்படுவது அசாத்தியம் என்பதை ரூபித்து வருகிறார். கிச்சிலிப் பழத்திற்கு எப்படி தோலிருக்கிறதோ அப்படியே பூமிக்கும் திண்ணமான மூடி இருக்கிறது என்று நமக்கு சாஸ்திரம் அறிவிக்கிறது. அதாவது கிச்சிலியின் தோலை உள்ளிருக்கும் பழத்துக்கு எப்படி ஒப்பிட முடியாதோ அப்படி பூமியை சுற்றின ஜவ்வு 50-மைல் திண்ணமாயிருந்தாலும் பூமியின் திண்ணத்திற்கு அது ஒப்பாகாது. அதனுள் ஒருவிதமான உருகின வஸ்து இருப்பதாக நினைக்கிறார்கள். எவ்வளவு அடைப்பு அதன்மேல்

பட்டாலும் தாக்கக்கூடிய சக்தியுள்ளதாய், கெட்டியான பாறையினால் பலமாயும் திண்ணமாயும் அந்த மூடி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது சொல்லப்பட்ட நூலாசிரியர், எவ்விதமான வல்லமை நிறைந்த வெடிகளும் பூமியைச் சுற்றியிருக்கும் மூடியின் சக்திக்கு நிகர் ஆகாது என்று உரைக்கிறார். அதாவது உதாரணமாக பின் வருவதைப் பார்க்கலாம். ஒரு கதவின் வெளியே ஒரு மனிதன் நின்றுகொண்டு உள்ளேபோக கதவைத் தள்ளுகிறான், இன்னொருவன் அதேமாதிரி உள்ளே நின்றுகொண்டு அவன் உள்ளே வராதபடி கதவை அவனுக்கு எதிரே தள்ளுகிறான். ஒவ்வொருவனுடைய வலிமையிலும், சத்துவத்திலும் யார் இணங்குவார்கள் என்று அறியலாம். உள்ளே இருக்கிறவன் வெளியிலிருப்பவனைப் பார்க்கிலும் பலசாலியாய் இருந்தால் உள்ளே வரவிடாமல் தடுப்பான். அப்படியே உள்ளிருந்துவரும் இறுக்கத்தைவிட பூமியின் மூடி பாரமாய் அல்லது அதிக இறுக்கமாய் இருந்தால், உள்ளேயிருந்து எவ்வளவு அடைப்பு வந்தாலும் பூமியின் மூடி உடையாது. ஆகையால் இந்நூலாசிரியர் சொல்லுகிறபிரகாரம் உள்ளேயிருந்து வரும் எந்த அசைவினாலும் பூமி அதிர்ச்சிக்கப்படாது. ஆனால் வேறு அநேக விதமாய் பூமியை நாசமாக்கலாம். தேவனுடைய வார்த்தையானது இது ஒருநாள் சம்பவிக்கும் என்று நமக்கு கற்பிக்கிறது. அது பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்துருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்." (2 பேதுரு 3: 10).

THE MEDICAL ASPECT OF WATER.

## தண்ணீரில் இருக்கவேண்டிய வைத்திய குணங்கள்.

---

1. கரைக்கக்கூடிய சக்தியுள்ளவைகளில் தண்ணீருக்குத்தான் அதிக சக்தியுண்டு. ஆகையால் தண்ணீரானது உணவுகளைக் கரைத்து, உடலின் கடைசிக்குக் கொண்டுபோய் திரும்பவும் அங்குள்ள அழுக்குகளைக் கொண்டுவருவதற்கு ஏற்றதாய் இருக்கிறது.

2. சரீரத்தின் எட்டு பாகத்தில் ஏழு படங்குத் தண்ணீர் இருக்கிறது.

3. சரீரத்தில் நடக்கவேண்டிய வேலைகளெல்லாம் தண்ணீரால் மாத்திரம் கூடும்.

4. உலகத்தில் அதிக வல்லமையோடு சுகங்கொடுக்கக்கூடிய காரியகர்த்தா தண்ணீர். அதைப் பற்பல சீதோஷ்ண நிலைமையில் தேர்ந்த கைகளினால் உபயோகிக்கப்படவேண்டும்.

5. உபயோகத்திலிருப்பதெல்லாவற்றிலும் பலமுள்ள பலவிர்த்தி ஔஷதம் தண்ணீர். உடம்புக்கு உள்ளேயும் வெளியேயும் இவ்வகை உபயோகமானது.

6. உயிர்ப்பிராணிகளையும் தாபரவர்க்கங்களையும் உயிர்ப்பிக்கிற தண்ணீரானது இவ்வுலகத்திற்கு இயற்கையால் கொடுக்கப்பட்ட ஒரே பானம்.

7. இப்பானத்தை கொஞ்சக்காலத்திற்கு நிறுத்தினாலுங்கூட உயிர்ப்பிராணிகளும் தாபரவர்க்கங்களும் மடியவேண்டும்.

8. சாதாரணமும் லேசாகவும் எண்ணப்படுகிறது. இந்தத் தண்ணீரானது ஏராளமாயும் செலவில்லாமலும் அகப்படும்.



9. மதுபானத்தைப் பார்க்கிலும் தண்ணீர் ஒருவனுடைய ஆயுசை நீடிக்கச் செய்கிறது. ஜீவிய உத்தரவாத கம்பெனிகளில் (Life Insurance Companies) தண்ணீர் சாப்பிடுகிறவர்களுக்குத்தான் நல்ல ஆதாயம் உண்டு. இதினால் மேற்கண்ட குறிப்பு உண்மை என்று ரூபிக்கப்படுகிறது.

---

SAMY MORRIS—THE AFRICAN BOY.

## சாமி மாரிஸ்—ஆப்பிரிக்கா பையன்.

---

இளம்பிராய வாலிபர்கள் ஒரு மிஷனெரி சங்கங்கூடி உடுப்புகள், பணம், இன்னும் தேவையான மற்றவைகளையும் சேகரித்து, இவ்வேலைக்கு தயார்செய்து கொள்ளும்படியாக ஏற்பட்டுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு சாமியை அனுப்பினார்கள்.

போக காத்துக்கொண்டிருந்த நாட்கள் அதிக அதிசயமான நாட்களாய் இருந்தன. ஸ்டீவன் மெரித் சொல்லுகிறதாவது: "நான் ஒரு சாவுக்குப் போக வேண்டியிருந்ததினால் துள்ளி விளையாடுகிற குதிரைவண்டியில் அவனையும் அழைத்துக்கொண்டு போனேன். சாமி, எங்களுடைய ஊரையும் பெரிய நந்தவனத்தையும் உனக்குக்காட்ட விரும்புகிறேன் என்று சொன்னேன்; அவன் இதுவரையிலும் குதிரை வண்டியில் ஏறினதும் இல்லை, குதிரை பின்னே இருந்ததுமில்லை; அதினால் நடந்தது எல்லாம் எனக்கு சிரிப்பாய் இருந்தது. நான் கூட்டங்களைக் காண்பிக்கும்போது அவன்: ஸ்டீவன் மெரித்! நீ எப்போதாவது குதிரை வண்டிக்குள் ஜெபித்திருக்கிறாயா என்று கேட்டான். எத்தனையோதரம் சவாரிசெய்யும்போது ஸ்தோத்திரம் செய்திருக்கிறேன் என்று மறுமொழி கொடுத்தேன். அவன் தன் பெரிய கறுப்புக்கையை என்மேல் வைத்து திருப்பி முழங்கால்படியிடச்செய்து நாம் ஜெபிக்கலாம் என்று சொன்னான். முதல்தரமாக நான் வண்டியில் ஜெபம்செய்ய முழங்கால் படியிட்டேன். அவன் ஆப்பிரிக்கா தேசத்திலிருந்து எனக்கு கடவுளைப்பற்றி அறிவிக்க வந்திருப்பதாய் பரிசுத்தாவியானவரிடத்தில் ஜெபித்தான். நானோ மற்றக்காரியங்களைப்பற்றி அவனிடம் பேசி பட்டணத்தையும் அந்த ஜனங்களையும் காண்பிக்க விரும்பினேன். ஆனால் அவனோ அவரைப்பற்றி அறியவும் கேட்கவும் ஆவலுள்ளவனாய், என்னுடைய இருதயத்தில் இருந்த இப்பேர்ப்பட்ட எண்ணங்களை நீக்கி அவரைப்பற்றிய எண்ணங்களினால் நிரப்பி அவரைத் தவிர வேறொரு காரியத்தை எழுதவாவது பேசவாவது பிரசங்கிக்கவாவது கூடாது என்று அவரிடம் கெஞ்சினான். அந்த நாளில் நாங்கள் மூவராய் அந்த வண்டியில் இருந்தோம். அந்தமாதிரி நாளை நான் ஒருபோதும் கண்டதில்லை, நாங்கள் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டோம். அந்த நாளுக்குப்பின் நான் ஒருபோதும் பரிசுத்தாவியைக் குறித்தேயல்லாமல் மனசாட்சியோடு வேறு ஒரு வரியும் எழுதினதில்லை, வார்த்தையும்பேசவில்லை, பிரசங்கிக்கவுமில்லை." இவன் போனவுடன் பள்ளிக்கூடத்தலைவர் சொன்னதாவது: 'சாமி மாரிஸ் என்பவன் டிசம்பர் மாதம் வந்திறங்கினான். உபாத்திமாருக்கும் மாணாக்கருக்கும் விநோதமான கருவியானான். அவன் அசல் ஆப்பிரிக்க இரத்தமுடையவன் என்பதற்கு சந்தேகமில்லை. அவனைப் பார்க்கிலும் கறுப்பான காகம் ஒன்றுமில்லை. அவனுடைய உதடு தடிப்பாயும் மூக்கு

சப்பையும் அகலமுமாயிருந்தது. நாம் சந்தித்த எந்த அந்நியனுக்கும், அமெரிக்க நீகிரோவனுக்கும் எதிரிடையாய் அவனுடைய உச்சரிப்பும் சப்தமும் எங்களுக்கு புதிதாய் இருந்தது. அவனுடைய முன் சரித்திரத்தையும், கடவுள் அவனைக் கடல்தாண்டி அக்கரை சேருவதற்கு அதிசயமாய் நடத்தினதையும் அறிந்துகொண்டோம். ஆனால் கறுப்பாயிருந்த தேவதூதனையும் நடுவிலிருந்தவர் தெரிந்துகொள்ளப்பட்டவர் என்பதைப் பற்றி ஒன்றும் தெரியாது. எங்களுக்கு எப்படி அது விநோதமாயிருந்ததோ அதே அளவாய் எல்லாம் அவனுக்குப் புதிதாய் இருந்ததினால் விநோதமாய் இருந்தது. அவனுக்கு உடுத்துவதெப்படி, சாப்பாட்டு வகைகளெத்தனை, எப்படி அமெரிக்கா தேசத்தார் சாப்பிடுவது என்பவைகளைக் காட்டிக்கொடுக்க வேண்டி இருந்தது.'

முதல் நாள் படுக்கையிலிருந்தெழுந்து பனிக்கட்டியினால் பூமி மூடப்பட்டிருப்பதை அவன் கண்டு அதிசயித்ததை என்னால் எப்போதும் மறக்கமுடியாது. அதென்னவென்று ஆச்சர்ய குரலிட்டான். அவன் கொஞ்சம் பனிக்கட்டியைத் தன் கையில் எடுத்துவைத்து அது தண்ணீராய் உருகிப்போவதை கவனித்தான். ஒரு துளி தண்ணீர் மாத்திரம் இருக்கக் கண்டு, என் கையில் ஒரு துளித் தண்ணீரை மாத்திரம் விட்டுப்போட்டு பனிக்கட்டி எங்கே போய்விட்டது என்று கேட்டான். நான் பள்ளிகூடத்துச் சாலையில் உலாவும்போது அடிக்கடி அறைக்குள் போய் தன் தகப்பனிடம் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். என்னிடம் பேசுவதைப்போல அமைதியாகவே இருப்பான். ஆனால் அவன் கடவுளிடம் பேசிக் கொண்டிருந்தான். அதிகாலையில் மற்ற மாணாக்கர் எழும்புமுன் அவன் ஜெபிக்கிறதை நான் கேட்டிருக்கிறேன். இரவில் அதிக நேரமான பின் மற்றெல்லாரும் நித்திரை போனபின்னும் இவன் ஜெபத்தைக் கேட்டிருக்கிறேன். நான் கதவை விரிவாகத் திறந்து வைத்து அவன் வானத்துக்கு நேராக தன் முகத்தை ஏறெடுத்து, ஊக்கத்தோடு ஜெபிக்கிறதை கண்டிருக்கிறேன். ஆனால் இதினால் அவன் கலைக்கப்படவில்லை. அவன் தேவனோடு சம்பாஷிப்பதில் இழுக்கப்பட்டிருந்ததினால் என்னுடைய பிரசன்னத்தை அறியாதிருந்தான். அவனுடைய வல்லமை பள்ளிக்கூடத்தில் விளங்கினது, நாங்களெல்லோரும் அதை உணர்ந்தோம், நல்லவர்களாக்கப்பட்டோம். அவனுடைய உடன்மாணாக்கன் ஒருவன் அவன் அறையில் சத்தம் போட்டு ஜெபிக்கிறதைப்போய் அடிக்கடி பார்த்திருக்கிறதாய்ச் சொன்னான், அவன் யார் கதவைத்தட்டினாலும் உத்தரவு கொடுக்காமல் தன் ஆத்துமா திருப்தியடைகிறவரையில் தேவனோடு பேசிக்கொண்டே இருப்பான். பிற்பாடு கதவண்டைவந்து, எப்படி வந்தீர்கள், இந்நேரம் கடவுளிடம் பேசிக் கொண்டிருந்தோம் என்பான். சாமி வேதபுஸ்தகத்தை மிகவும் நேசித்தான். தான்மாத்திரம் மெதுவாய் வாசிக்கிறதில்லை, நன்றாகவும் வாசித்தான். யாரார் இவனோடு சிறிதுநேரம் கழிக்கவேண்டுமென்று வருவார்களோ அவர்களெல்லாம் தனக்கு ஒரு அதிகாரத்தை வாசிக்கும்படி வருந்திக் கேட்பான். ஒருநாள் கிறிஸ்தவனல்லாத ஒரு வாலிபன் வந்தான். அவனை ஒரு அதிகாரம் வாசிக்கும்படி கேட்டதற்கு முடியாது என்று விடைபகர்ந்து, நான் வேதாகமத்தை நம்புகிறதில்லை என்றான். சாமி சொன்னதாவது: "என்ன! நீ அப்புஸ்தகத்தை நம்ப



வில்லையா? உன் தகப்பன் பேசினால் அவரை நம்புகிறதில்லையா? உன் சகோதரன் பேசினால் அதை நம்புகிறதில்லையா? சூரியன் பிரகாசித்தால் அதை நம்புகிறதில்லையா? தேவன் உன் தகப்பன், கிறிஸ்து உன் சகோதரன், பரிசுத்தாவி உனக்கு சூரியன், நான் உனக்காக ஜெபம் செய்கிறேன்." அப்படியே அவன் ஜெபம்செய்தான், அந்த வாலிபனும் இரட்சிக்கப் பட்டான். வாரத்தில் ஒருநாள் சாமி உபவாசித்தான். அவன் வியாழக்கிழமை சாயந்திரம் துவங்கி சனிக்கிழமை காலைவரையில் ஒரு துளி தண்ணீராவது ஒரு துண்டுஆகாரமாவது அருந்துகிறதில்லை. ஆனால் தன்னுடைய வேலை எப்போதும்போல நடந்து கொண்டிருந்தது, அவன் எப்போதும் முகமலர்ச்சியும் சந்தோஷமுமுள்ளவனாய்க் காணப்பட்டான். சாப்பாட்டு அறையில் அவனைக் காணாதவர்கள் தவிர மற்றவர்களுக்கு அவன் உபவாசிப்பது தெரியாது. அவனுக்கு அந்த தேசத்தைப்பற்றி ரொம்ப சந்தோஷம். கிறிஸ்தவ நாகரீகத்தையும் கவனிப்பாய் ஏற்றுக்கொண்டான். அவனுடைய தேசத்திற்கும் எங்களுடைய தேசத்திற்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துகாட்டுவான். ஆனால் இத்தேசத்தை எவ்வளவு விரும்பினாலும் தன் படிப்பைமுடித்து எப்போது தன் ஊருக்குப்போய் தன் தேசத்தாருக்கு பிரசங்கம் செய்யலாம் என்று ஆவலாய் எதிர்பார்த்தான். தான் ஊருக்கு திரும்பினவுடனே தன் ஜாதியாருக்காக தன் முழுநேரத்தை செலவிட விருப்பங்கொண்டவனாய் இருந்தான். அவர்களை மணலின்மேல் சுற்றி வட்டமாக உட்காரவைத்து இயேசுவைக் குறித்து அறிவிப்பேன் என்று சொன்னான். "என்னை தகப்பனே என்று கூப்பிடுவார்கள் ஆனால் நான் அதற்கு கவலைப்படவில்லை, நான் கிறிஸ்துவைப்பற்றி சொல்லும்போதே அநேகர் புதருக்குள் ஓடிப்போவார்கள். அதன் அர்த்தமும் எனக்குத் தெரியும். ஆனால் திரும்பி வந்தால் சந்தோஷப்படுவார்கள்" என்று சொல்லும்போது கண்கள் பிரகாசித்தது. ஒரு ராத்திரி பேசிக்கொண்டிருக்கையில் "கல் ஒரு வஸ்து, ரொட்டி இன்னொன்று. ஒரு நாள் தங்கம் சேர்ந்திருந்த ஒரு கல்லைப் பார்த்தேன், அது ஒரு மரக்கால் மாவைக் காட்டிலும் விலையுயர்ந்தது என்று சொன்னார்கள். ஆனால் நான் பசியாய் இருக்கும்போது கல்லைத் தின்னமுடியாது, ரொட்டி அவசியம் வேண்டும்; அதுபோல் என் ஆத்துமா இயேசுவைத்தவிர வேறொன்றாலும் திருப்தியாகாது, அவர் ஜீவஅப்பம்" என்று சொன்னான். இன்னொரு தடவை "கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிப்பது ஆகாரம் உட்கொள்ளுவதுபோல் இருக்கும். 'சிலவகையான உணவுகள் உனக்கு இஷ்டம், சிலது பிரியமில்லை. ஆனால் உன்னை பலமும் சுகமும் கொடுக்க பலவகையான உணவுகளை எல்லாம் உட்கொள்ளவேண்டும். அதுபோல மார்க்கத்திலும் இன்பமும் துன்பமும் இருக்கிறது, நீங்கள் இன்பத்தை விரும்பி துன்பத்துக்கு பின்வாங்குகிறீர்கள். ஆனால் இரண்டையும் அனுபவித்தால்தான் பலமுள்ள சுகமான கிறிஸ்தவனாக விளங்கலாம்" என்று சொன்னான்.

அதிக கஷ்டமான கணக்குகளைச் செய்யும்போது மெதுவான குரலோடு "ஆண்டவரே 'எனக்கு உதவிசெய்யும்" என்று அடிக்கடி ஜெபித்திருக்கிறான். அநேகர் அவனுடைய படத்தைக் கேட்டார்கள். அவனை அதிக கஷ்டத்தோடு சம்மதிக்கச் செய்து படத்தைப் பிடித்தோம். "என்னுடைய படம் அதிக அவ

லட்சணமாய் இருக்கும்" என்று சொன்னான். "ஓ! நான் கிறிஸ்துவினுடைய படத்தை உங்களுக்குகொடுக்கக்கூடுமானால் எவ்வளவு நலம்" என்று ஒருதரம் உரைத்தான்.. உயிருள்ள ஒருவர் சொன்னதைப் போல "என தகப்பன் இதைச் செய்யச் சொன்னார் அதைச் செய்யச் சொன்னார்" என்று எப்போதும் சொல்லுவான். ஆனால் வாஸ்தவத்தில் ஒரு ஆளும் அப்படிச் சொல்லிக் கொடுக்கவில்லை.

(இன்னும் வரும்.)

---

## CORRECT BREATHING AND HEALTH.

## சுகமும் சரியான சுவாசமிடுதலும்.

சிருஷ்டிகர் ஒவ்வொரு மனிதனிலும் சுவாசாசயங்களை அமைத்திருக்கிறார். வீட்டுக்கு வெளியிலுள்ள இடமெல்லாம் சுத்த ஜீவன் கொடுக்கும் ஆகாயத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறது. இதினால் ஒவ்வொருவரும் தங்கள் சுகத்தைப் பேணிக் கொள்ள முக்கியமான வழி இருக்கிறது. அசௌக்கியம் நேரிட்டாலும் திரும்ப சுகமடைய ஏதுவுண்டு. அநேக விஷயங்களில் மருந்து அருந்துவதிலும் சுத்த ஆகாயத்தை சரியானபடி ஆழமாய் உட்கொள்ளுதல் மிகவும் நல்லது என்கிற காரியம் வரவர எல்லாராலும் உணரப்பட்டு வருகிறது. இந்த சத்தியத்தை வாசிக்கிறவர்கள் உணர்ந்தறியும்படி சில உதாரணங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. வாசிக்கிறவர்களும் தாராளமாய் மூச்சு எடுக்கப் பழகுவார்கள் என்று நம்புகிறோம். ஒரு சிறுபையனுக்கு க்ஷயரோகம் என்னும் பயங்கரமான வியாதி வருகிறாப்போல் எச்சரித்தது. கடைசியில் அவன் உயிருக்கே முடிவு வரும் என்று நம்பினார்கள். என்றபோதிலும் அவன் பின்வருகிற சுலபமான அப்பியாசத்தை செய்துவரும்படி யோசனை சொல்லப்பட்டான். ஒவ்வொருநாள் காலையிலும் படுக்கையிலிருந்து எழுந்தவுடனே திறந்த ஜன்னலண்டையிலாவது தாராளமாய் சுத்த ஆகாயம் உட்கொள்ளக்கூடிய இடத்திலாவது இருந்துக்கொண்டு பத்து நீண்ட, ஆழமான சுவாசங்கள் எடுத்தான்: இன்னும் ஜாஸ்தி எடுத்திருந்தாலும் நலமாய் இருக்கும். என்றாலும் மருந்துண்ணாமலே சொஸ்தமடைந்தான்.

இங்கிலாந்து தேசத்தில் ஒரு குருவானவர் இதைப்பற்றி முக்கியமாய்ப் படித்தார். முதுகெலும்பு வளைந்து சுவாசம் எடுக்க அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த பத்து பிராயமுள்ள பையனுடைய தாய் தந்தையர் இவனைப்பற்றி வியாகுலப்பட்டுக்கொண்டிருப்பதை தன் சபையில் கண்டார். இந்தத் துரை அப்பிள்ளையாண்டானை தினசரி ஒரு மணி நேரத்துக்கு வெளியே கூட்டிக்கொண்டு போய் சுவாசிக்கிற அப்பியாசங்கள் கற்றுக் கொடுத்தார். ஒரு மாதக்கடைசிக்குள் குணமாகிறதற்கேற்ற வித்தியாசங்களைக் கவனித்தார்கள். மூன்று நாலும்மாதங்களுக்குள் பூரண சுகம் உண்டாயிற்று. வலது சுவாசாசயங்களை உபயோகிக்கக் கூடாத அதிக கேவல ஸ்திதியிலிருந்த இன்னொரு வாலிபனையும் இவர் சிகிச்சை செய்தார். இம்மாதிரி சிகிச்சை இரண்டு வாரம்மாத்திரம் செய்யக்கூடியதாய் இருந்தது. இதன் முடிவில் அவன் நெஞ்சின் சுற்றளவு இரண்டரை அங்குலங்கள் ஜாஸ்தியாய் இருந்தது. இதனால் அவனுடைய சுவாசிக்கிற சக்தி அதிக விர்த்தியடைந்தது. விதிப்படியானதற்கு மேலாக சுவாசிக்கும் சக்தியும் கிடைத்தது. இதினால் அவனுடைய வலது சுவாசாசயங்கள் சரியான நிலைமைக்கு வந்துவிட்டது என்று தெரிகிறது. ஏன் இப்படி சரியான சுவாசமிடுதல் மாயம்போல சுகத்தை உண்டாக்குகிறது? சரீரம் கணக்கில்லா சிற்றறைகளினால் (Cells) உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வியாதியும் சரீரத்தில் அவஸ்தைப்படும் அந்த ஸ்தானத்திலுள்ள சிற்றறைகளின் வியாதி என்று சொல்லலாம். இரத்தம் சுத்தமாயிருந்தால் இச்சிற்றறைகளும் சுகமாய் இருக்கும். மூக்கினால் சுவாசாசயங்கள் சுவாசிக்கிற ஆகாயத்திலிருந்து சரியான அளவு பிராணவாயு (Oxygen) எவ்வளவு உட்கொள்ளப்படுகிறதோ அவ்வளவு தான் இரத்தம் சுத்தியாகும். ஓர் பேர் போன வைத்தியர் சொல்லுகிறதாவது: "சுவாசிக்கிற,தின் கருத்து என்னவெனில் பிராணவாயு ரத்தத்திலுட்செல்லுகிறது; அதில்லாவிட்டால் நாம் சாகவேண்டும். கரிமலவாயுவை வெளியே கொண்டுவருகிறது. கரிமலவாயு உட்தங்கினால் விஷஞ்செய்யும். இதன் விசேஷத்தை நாம் அற்பமாய்எண்ணக்கூடாது; ஏனென்றால், சாவும் ஜீவனும் இதில்தானிருக்கிறது. பின்னை ஏன் ஜனங்கள் இந்த ராஜ சிகிச்சையை அனுசரிக்கிறதில்லை? ஏன் வைத்தியருக்கு பணங்கொடுத்து தங்களுக்கு மருந்தைக் கொடுக்கச் சொல்லுகிறார்கள்? அநேகந்தரம் மருந்துகள் குணம் தரவில்லை. முதலாவது, அநேகர் இதைப்பற்றி அறியாமலிருக்கிறார்கள். தெரிந்தாலும் அரைமனமாய் நம்புகிறார்கள். அதை கொஞ்சமாவது பரிசோதித்து பார்ப்பதுமில்லை. பிற்பாடு, தங்கள் உடம்பை வளைத்து சில அப்பியாசங்கள் செய்வதைக் காட்டிலும் ஒருவேளை மருந்து சாப்பிடுவது அவர்களுக்கு லேசாய் தோன்றுகிறது. இப்பேர்ப்பட்ட லேசானவகைகள் அதிக பிரயோஜனமுள்ளது என்பதை நம்புவதும் அவர்களுக்கு கூடாத காரியமாய் இருக்கிறது. இன்னும் சிலருக்கு இந்த அப்பியாசங்கள் எப்படி செய்வதென்று தெரியாது. அப்படிச் செய்ய விரும்புகிறவர்கள் வெளியே சுத்த ஆகாயமுள்ள இடத்தில்நின்றுக் கொண்டு அல்லது நடந்தாவது உடம்பை நிமிர்த்தி, தோள்களை பின்னாகப்போட்டுக்கொண்டு சுவாசாசயங்களை மூக்கினால் சுத்த ஆகாயத்தை இழுத்து, நிரப்பி, பிற்பாடு விசையாய் பூராக அச்சுவாச முழுவதையும் சுவாசாசயங்களிலிருந்து வெளியிடவேண்டும். இப்படி அடிக்கடி திருப்பி திருப்பி செயயவேண்டும். எத்தனைதரம் திருப்பி செய்கிறோமோ அவ்வளவுக்கும் நன்மை அதிகம். ஒரு நாளைக்கு இப்படி அநேக தடவை செய்தல் நன்மை விளைக்கும். ஆனால் இப்படி உட்கொண்டது, இரவில் சுத்த ஆகாயம் உள்ளே வரவிடாமல் அறையை சாத்திக் கொண்டு படுத்தால் அவ்வளவும் பிரயோஜனமற்றுப்போம். அப்படிச் செய்தால் மெய்யாகவே கொஞ்சங்கூட தன் ரத்தத்தை சுத்திசெய்யக்கூடாத காற்றை உட்கொள்ளுவான். அநேகர் ரத்தத்தையும் விஷப்படுத்திக்கொள்ளுவார்கள். இரவும்பகலும் சுத்த ஆகாயத்தை சுவாசியுங்கள்.



---

## YOUR CHILD IS WATCHING YOU.

## உன் பிள்ளை உன்னை கவனிக்கிறது.

பிள்ளை எப்படிப் படிக்கிறது? உத்தரவு சொல்வதற்கு கஷ்டமான கேள்வி அல்ல. தாயின் கண்களில் பிரகாசிக்கிற குணத்தினால் இந்த உணர்ச்சி உண்டாகிறது. முகச்சுருக்கில்லாமல் இருந்தால் தெரிகி

றது. வாயினின்று கடுப்பான வார்த்தைகள் வாராமல் சாதுவான வார்த்தைகள் புறப்பட்டால் இக்குணம் தோன்றுகிறது. அவளுடைய குணம் மற்றவர்களிடமிருந்து படித்து, தன் பிள்ளைக்குக் காட்டும் அறிவில் விளங்குகிறது. அவள் மனம் எப்படிச் செல்லுகிறதோ அப்படித்தான் மற்றவர்களுடைய செயல்களை அன்போடு கவனிப்பதிலும், தன்னோடு பழகுகிறவர்களுக்கு காருண்யம் காட்டுவதிலும் இவள் குணம் விளங்கும். பிள்ளை கவனித்துக்கொண்டிருக்கிறது. பயப்படாதே. அற்பமும், இழிவுமானவைகளுக்கு விலகி நேரான உத்தமமான எண்ணமும் நடத்தையும் உள்ள பிள்ளையாக நடக்கும்படி தாய் தன் ஜீவியத்தை நடத்தவேண்டும். இதுதான் குழந்தைக்கேற்ற சரியான சுதந்தரம்.

---

TURKEY AND THE BALKAN STATES.

## துர்க்கியும் பால்க்கன் மாகாணங்களும்.

---

இன்றைக்கு வாசிக்கப்படும் எந்த சமாச்சார பத்திரிகையிலும் துர்க்கிக்கும், பால்க்கன் மாகாணங்களுக்கும் உள்ள துன்பங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கும். ஒவ்வொரு நாளும் தந்திகள் வந்துகொண்டிருக்கிறது. முதலாவது மும்முரமான சண்டைகளைப் பற்றி, இப்போது சமாதானம் செய்ய முயற்சிக்கிறதைப்பற்றி. யுத்தம் நடந்தது கொஞ்சக் காலமாயிருந்தாலும் அதிக பயங்கரமானதாய் இருந்தது. சமாதான உடன்படிக்கை சங்கத்தாருடைய ஜெயத்தில் இருக்கிறது. சண்டை திரும்புகிறதும் அமருகிறதும் சங்கதிகளை வாசிக்கும் அநேகருக்கு இதைப்பற்றி குறைவான எண்ணம்படும். அதினால் அந்நாட்டைப் பற்றிய சரித்திரம் கொஞ்சம் தெரிந்தால் இச்சங்கதி அறிய இலேசாய் இருக்கும். ஒரு பிரதான பட்டணத்தைப் பற்றி தர்க்கமுண்டாகி இருக்கிறது. அதன்பேர் கான்ஸ்டாற்றிநோப்பில் (Constantinople). இது அநேக நூற்றாண்டுகளுக்கு முன் கிரேக்கரால் ஸ்தாபிக்கப்பட்டு அவர்கள் பாஷைப் பெயரினால் அழைக்கப்பட்டது. ஆனால் பிற்பாடு ரோமரால் பிடிக்கப்பட்டபோது அவர்களுடைய கிறிஸ்துமத சக்கிரவர்த்தி கான்ஸ்டன்றயின் (Constantine) என்பவரின்பெயர் அதற்கு கொடுக்கப்பட்டது. கடைசியாக மகமதியர் நாலரை நூற்றாண்டுகளுக்கு முன் இதை கைப்பற்றிக்கொண்டார்கள். ஐரோப்பாவையும் ஆசியாவையும் பிரிக்கிற ஐரோப்பாவைச்சேர்ந்த பாஸ்பரஸ் (Bosporus) ஜலசந்தியருகே உள்ள இந்த பட்டணத்தை எடுத்துக்கொண்டது மல்லாமல், ஐரோப்பாவினுள் ஊடுருவித்து அநேக ஜனங்களை தன் பிரஜைகளாக்கிக் கொண்டார்கள். அவர்களில் கொஞ்சம் பேர் மகம்மதியாகிவிட்டார்கள். பெரும்பான்மையோர் கிறிஸ்தவர்களாகவே இருந்தார்கள். இத்தேசங்களில் துர்க்கிக்கு விரோதமான சண்டையில் மான்றிநீகிரோ (Montenegro), பல்கேரியா (Bulgaria), செர்வியா (Servia), கிரீஸ் (Greece) ஒன்றுகூடி சேர்ந்துகொண்டன. முதல் தேசமானது ஒரு மலங்காடு, ஒருபோதும் பிரஜைகளடங்கிய மாகாணமல்ல. மற்றவைகள் ஒன்றின்பின் ஒன்றாக சுவாதீன நிலைக்குள்ளானது என்றபோதிலும் துர்க்கியரால் அதிகக் கஷ்டப்பட்டார்கள். அவர்களை ஐரோப்பாவினின்று அவர்கள் விட்டுவந்த ஆசியாவுக்கே துரத்திவிடும்படி விரும்புகிறார்கள். துர்க்கியர் நீதியோடும் இரக்கத்தோடும்



ஆளுகை செய்திருந்தால் ஐரோப்பாவில் தங்களுடைய பாகங்களை எல்லாம் வைத்துக்கொண்டு இருந்திருக்கலாம். ஏனென்றால் யுத்தம் நடந்த காலம் வரையில் தங்களுக்கு பாகம் ஒன்று இருந்தது. ஆனால் அவர்கள் கொடுமையான குரூர குணமுள்ள எஜமான்களாய் நடந்து காட்டினார்கள். அவர்கள் அதிகாரத்துக்குட்பட்ட கிறிஸ்தவர்கள் சொல்லிமுடியாத பயங்கரங்களை அனுபவித்தார்கள். இதினால் அவர்களுக்கு ஆழ்ந்த வெறுப்பான எண்ணம் உண்டாகி இந்த சண்டை துவங்க காரணமானது.

ஐக்கியப்பட்ட சேனைகள் பிரதான பட்டணமாகிய கான்ஸ்டாற்றிநோப்பிலுக்குள் போகவில்லை. உட்பிரவேசித்தால் ஏதோ செய்வதாக துர்க்கியர் இவர்களைப் பயமுறுத்தினதினாலோ அல்லது இவர்களால் உட்புக முடியாமற் போனதினாலோ இவர்கள் பட்டணத்துக்குள் போகவில்லை. என்னமாய் இருந்தாலும் இவர்கள் வெளியேதானிருக்கிறார்கள். கிறிஸ்தவ சேனைகள் பட்டணத்துள் பிரவேசித்தால் டன் கணக்கான வெடிகளை பரிசுத்த சோப்பியா (St. Sophia) என்னப்பட்ட பூர்வீககோவிலுக்குள்வைத்து அதை நாசம் செய்வதாக பயமுறுத்தினார்கள். கிரேக்க கத்தோலிக் கிறிஸ்தவர்களுக்கு இந்தக்கோவில் அதிக அருமையாய் இருந்தது. இக்கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய ரோமான் கத்தோலிக்கரைப் போலொத்தவர்கள். புரோடெஸ்டாண்டு கிறிஸ்தவர்களுக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசம் உண்டு. 1600-வருஷங்களுக்கு முன்னே கான்ஸ்டன்றயின் சக்கிரவர்த்தியினால் இந்தக் கோவில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த கட்டடம் நெருப்பில் வெந்து திரும்பவும் இன்னொன்று கட்டப்பட்டது. இதுவும் அழிக்கப்பட்டு இப்போது இருக்கிற அழகிய கோவில் அங்கேயே கட்டப்பட்டது. அச்சமயத்தில் எல்லா கிறிஸ்தவ ஆலயங்களிலும் இதுதான் அதிக அலங்காரமானதாய் இருந்தது. துர்க்கியர் கான்ஸ்டாற்றிநோப்பிலைப் பிடித்த பிற்பாடு இக்கோவிலை மகமதிய கோரியாக்கி விட்டாலும் அதின் கட்டடத்தை வேறுபடுத்தவில்லை. இப்போதுஇருக்கிற விசேஷித்த கட்டடங்களில் இது ஒன்று. ஒவ்வொரு நூற்றாண்டிலும் இதைப் பற்றி தர்க்கம் உண்டானது. கிறிஸ்தவர்கள் கைக்கு சொந்தமாகிறதைவிட துர்க்கியரால் அழிக்கப்பட்டுப் போனால் அது ஒரு பெருந்துக்கமாய் இருக்கும். முற்றிகை போடுகிறவர்களால் அப்படி எண்ணப்படும்.

துர்க்கியர் இப்பட்டணத்தையும் அதிலுள்ள இந்த அதிசயமான கோவிலையும் பிடித்தபோது கிறிஸ்தவ சின்னங்களையெல்லாம் மையினால் மூடிவிட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் ஒன்றைமாத்திரம் அவர்கள் தொடவில்லை. இப்படி அது விடப்பட்டது வெகு ஆச்சரியமாய் இருக்கிறது. ஏனென்றால் அதின் கருத்தை அறிந்தவர்களாய் இருந்தால் துர்க்கியர் அதைச் சேதப்படுத்த விரும்பியிருப்பார்கள். அது ஒரு வெண்கல சித்திரப்பீடம். பிரதான வாசலுக்கு மேலாக தொங்கவிட்டிருந்தது. அதன் வழியாய் அதிகாரி உட்பிரவேசிப்பார். "நானே ஆடுகளுக்கு வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான்" என்று கிறிஸ்துவானவர் சொன்ன வார்த்தைகள் அதில் வெட்டப்பட்டிருந்தது. இத்தனை நூற்றாண்டு

களாய் அதைத் தொடாமல் விடப்பட்டிருப்பது என்ன காரணம் என்று தெரியவில்லை. அது பூர்வீகமாயுள்ளதினாலும் சிற்பவேலையில் நேர்த்தியான மாதிரியாயிருந்ததினாலும் எங்குமுள்ள கிறிஸ்தவர்கள் அதைப்பற்றி சந்தோஷித்தாலும் மற்றவர்களைப்போல புரோட்டெஸ்டான்டு கிறிஸ்தவர்கள் அதற்கு ஒரு விசேஷமும் ஏற்படுத்தவில்லை. அவர்களுக்கு இதைவிட அதிக விசேஷமான இன்னொரு இடம் அங்குண்டு. பாஸ்பாஸ்க்கு ஊமீட இன்னொன்றும் அப்பட்டணத்தில் இருக்கிறது. அதாவது அமெரிக்க வித்தியாசாலைகள். ஆண்களும் பெண்களுமான வாலிபர்கள் அத்தேசத்து வாலிபர்களுக்கு கல்வி கற்றுக்கொடுத்து தன்தேசத்து அயலானுக்கு கற்றுக்கொடுக்கும்படி அனுப்புகிறார்கள். இவ்வித்தியா சாலைகளின் மூலமாயும் மற்ற கிறிஸ்தவ கல்விச்சாலைகளின் மூலமாயும் சண்டையைவிட மேலானதை மேற்கொள்ளும் வேலையை நடத்திவருகிறார்கள். இப்பள்ளிக்கூடங்கள் தரும் படிப்பினால் சண்டை உண்டுபண்ணும் பொய்யான கல்விகளை எல்லாம் நல்ல படிப்பினையினால் புதைத்துப்போடுகிறார்கள். சமாதானப் பிரபுவின் ஆளுகைக்குள் ஜனங்களைக் கொண்டுவரும்படி அதிகமாய் உழைக்கிறார்கள். நானே ஆடுகளுக்கு வாசல் என்று அவர் உரைத்தது இந்நாள்வரையிலும் பரிசுத்த சோப்பியா வாசலின்மேல் எழுதப்பட்டிருக்கிறது.

## SELF RELIANCE.

## சுவாதந்திரியம்

ஒவ்வொரு பையனுக்கும் பெண்ணுக்கும் தன் தன் பலகைகளில் இருப்பதை சரி என்றெண்ணாமல் மற்றவர்களுடையதைப் பார்க்கும் திருட்டுத்தனம் உண்டு என்பது எல்லா பள்ளிக்கூடத்து உபாத்திமாருக்கும் தெரியும். உபாத்திமார் இதை சீக்கிரம் கண்டுபிடிக்கக்கூடும். ஏனென்றால் கடைசி விடையில் மாத்திரம் தப்பாகிறதில்லை. ஒவ்வொருவரும் தனித்தனியே எழுதியிருந்தால் அதே தப்பிதத்தைச் செய்திருக்கமுடியாது. மெய்யாகவே ஒரு பிள்ளை இன்னொருவரைப் பார்த்தெழுதுவது தன்னையே வஞ்சிக்கிறதுபோல இருக்கிறது. எழுதுகிற விடை சரியாயிருந்தாலும், தப்பிதமாயிருந்தாலும் ஒன்றுதான். படிப்பில் ஒரு கஷ்ட கணிதத்து வெறும் உத்தரவுமாத்திரம் எழுதுவது ஒரு பிரயோஜனமுமில்லை. அன்றியும் நல்லவேலையைச் செய்தோம் என்று திருப்தியடையும் சலாக்கியமும் இல்லாமற்போம். பின்வரும் கதையானது, ஒருவன் தன்னுடைய வேலையைச் செய்யாமல் இன்னொருவனை நம்பினதினால் என்ன அனுபவித்தான் என்பதைக் காட்டுகிறது.

ஒரு பிரபலமான போர்ச்சேவகர் தான் சிறுவனாக இருக்கும்போது நடந்த சமாச்சாரம் ஒன்றைச் சொல்லுகிறார்.

"ஒருகாலத்தில் நான் சிறுவனாய்ப் பள்ளிக்கூடத்தில் இருக்கும்போது உபாத்தியாயர் ஒரு வகுப்பின் முதலிலிருந்து கடைசி இருப்பவன் வரைக்கும் மனக்கணக்கு கேள்விகள் போட்டார். நான் நடுவிலிருந்தேன். எனக்குப் பக்கத்திலுள்ளவன் எனக்கு மூன்று வயதுக்கு மேற்பட்டவனும் மற்றப் பாடங்களில் எனக்கும் மேலாக இருந்தான்.



உபாத்தியாயர் "13, 9, 8 கூட்டினால் எவ்வளவு" என்று கேட்டார். ஒருவர்பின் ஒருவர் ஆணும் பெண்ணும் நினைத்தும் தவறிப்போனார்கள். அதற்குள்ளாய் நானும் மனதில் நினைத்தேன். என் முறை வரும் சமயத்தில் எனக்கடுத்த பெரியவன் தனக்குள்ளே சொல்லிக்கொள்ளுவதுபோல, 29, 29, 29 என்று குசுகுசுவென்று உச்சரிப்பதைக் கேட்டேன்.

"நல்லது உல்லி, உனக்குத் தெரியுமா பார்ப்போம்; சுருக்காய்ச் சொல்லு" என்று என்னிடம் உபாத்தியாயர் சொன்னார்.

நான் ஒருபக்கமாய் தலையைத் தூக்கிக்கொண்டு புகழ்ச்சியோடு 29 என்று சொன்னேன். அடுத்தவன் "13, 9, 8 கூட்டினால் எவ்வளவு" என்று உபாத்தியாயர் கேட்டார். எனக்கடுத்த அந்தப் பெரிய ஆள் "30" என்று சொன்னான். இதுதான் நானும் என்மனதில் முதல் கூட்டின லக்கம். அதிலிருந்து அவ்விடந்திலேயே இனி எப்போதும் நம்மனதில் படும் நியாயத்தையே பின்வருங்காலத்திலும் செய்யவேண்டும் என்று நிர்ணயம் செய்துகொண்டேன். அப்போதிலிருந்து என்ன காரியம் செய்ய நேரிட்டாலும் என் மனதில் தோன்றினபிரகாரம் எது சரியானது என்று காணப்பட்டதோ அப்படியே செய்தேன். என்னை எப்படி மற்றவர்கள் பார்த்து பகடிபண்ணினாலும், வழிவிலகிப்போக யத்தனம்செய்தாலும் அந்த பெரிய பையன் என்னை மூடனாக்கிவிட்டானே என்கிற எண்ணம் என் மனதில் வரும்."

## NEW MAMMOTH CAVES

## புது மாமத்து குகைகள்

அமெரிக்கா ஐக்கியமாகாணங்களின் ஒருபாகத்தில் கீழ்ப்பூமியில், மாமத்து குகைகள் என்று சொல்லப்பட்ட கெபிகளைப்பற்றி உங்களில் சிலர் கேள்விப்பட்டிருக்கலாம். இதைவிட அதிசயமான இன்னொன்றையும் அத்தேசத்திலே கொஞ்சக்காலத்திற்குமுன் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது உலகத்திலுள்ள மற்றெல்லாவற்றிலும் மகா அதிசயமானது என்று நம்புகிறார்கள். இரண்டு மூன்று உழவுக்காரர் இச்சுரங்கத்தின் ஆழத்தைக் கண்டு பிடிக்க முயன்றார்கள். ஆனால் ஒருவரும் அதன் கடைசிக்குப் போகமுடியவில்லை. அங்கே பிரமாண்ட அறைகளும் கூடங்களும், இன்னும் கணக்கற்ற அழகிய பளிங்கு கட்டடங்களும் கச்சேரிகளும் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒருஅறையின் தளமானது சமானமும், மிருதுவானதுமாயிருக்கிறது. இன்னும் சிலவற்றில் ஆழங்கணிக்கப்படாத குழிகள் இருக்கிறதாம். இக்கெபியை அநேகர் சந்தித்திருப்பதற்கு அநேக மனுஷ அடையாளங்கள் இருக்கின்றன. சமையல்பாத்திரங்களும், கோப்பைத்துண்டுகளும், மற்ற சாமான்களும் அங்கே சிதறுண்டு கிடக்கிறது. சரித்திரத்தில் சொல்லப்படாத பிரமாண்ட குகையாயிருக்கும் என்பதை பூராக பரிசோதித்தறியும்படி எல்லாவித ஏற்பாடும் பிரயத்தனங்களும் உண்டாகிறது.

CHILDREN'S PAGE.

## சிறுவர் பக்கம்.

---

### CHEERFUL HEART.

### மகிழ்ச்சியான இருதயம்.

சுபாலா ஒரு துஷ்டப்பெண்ணாய் இருந்தாள். தன் தயாருக்காக ஒரு வேலைக்கும் போகமாட்டாள். திரும்பிவந்தாலும் குழந்தையாகிய தம்பியை கவனிக்கவும் மனமற்றிருந்தாள். கொஞ்சக்காலம் பொறுத்து அவர்கள் தனியாய் இருக்கையில் மகிழ்ச்சியான இருதயத்தைப்பற்றி சுபாலாவிற்கு அவள் சிற்றப்பன் ஒரு கதையைச் சொன்னார்.

இங்கிருந்து வெகு தூரத்திற்கப்பால் உள்ள ஒரு இந்திய அமெரிக்க பள்ளிக்கூடத்தில் வீட்டின் அருமையே தெரியாத ஒரு அநாதப்பையனை கொண்டு வந்து விட்டிருந்தார்கள். அவனுக்கு அனுவசியமாயிருந்தவைகள் ஒன்றும் அவனுக்கு இல்லை. மற்ற அநேக பையன்களுக்கு பெற்றோர் வீடுவாசல் இருந்தது, இவனுக்கோ ஒன்றுமில்லை. ஆனாலும் அந்தப் பள்ளிக்கூடத்தில் மகிழ்ச்சியான இருதயத்தைப்போல ஒருவனும் அவ்வளவு நேசிக்கப்படவில்லை. "அது ஒரு பையனுக்கு வேடிக்கையான பேர்" என்று சுபாலா சொன்னாள். "அப்படித்தான் இருக்கிறது. அவனுக்கு வேறொரு பேர் உண்டு. ஆனால் அவன் எப்போதும் சந்தோஷமாயும், பட்சமாயும், பணிவிடை செய்கிறவனாயுமிருந்ததினால் அப்பெயரால் அவனை அழைக்கும்படி நேரிட்டது. அவன் எப்போதும் சிரித்த முகமாய்ப் பேசுவான். யாருக்காவது ஒரு வேலைசெய்ய நேரிட்டால் அதை ஒரு பெரிய சந்தோஷமாக பாவிப்பான்." "ஒருவேளை அவனுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லைபோல தோன்றுகிறது. அதினால் எல்லாம் சுலபமாய் இருந்திருக்கும்" என்று சுபாலா சொன்னாள். "பிரியமுள்ள பிள்ளையே அவனுக்கு அநேக சந்தர்ப்பங்களை தவிர மற்றொன்றும் இல்லை. நாள்முழுவதும் உபாத்திமாரும், தலைவியும் "மகிழ்ச்சியான இருதயமே இங்கே வா, அங்கேபோ" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். "அவன் நிஜமாகவே இப்படிச் செய்ய விரும்பினானா" என்று சுபாலா கேட்டாள். யாருக்கும் ஒரு வேலைசெய்ய மனமில்லாத ஒரு ஆளைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள். "நீ அவனுடைய முகமலர்ச்சியைக் கண்டு நிதானித்தால் அவனுக்குத் தெரியும். அவன் ஏழை என்று அறி, போக ஒரு வீடும் அவனுக்கு இல்லை, நேசிக்க ஒரு பெற்றோரும் இல்லை, செல்லங் கொஞ்ச ஒரு குழந்தை சகோதரனும் அவனுக்கு இருந்ததில்லை."

நான் கண்டவர்களிலெல்லாம் இவன்தான் அதிகம் தன்னயமற்றவன். அவன் உபாத்தியாயர் என்னிடம் சொன்னதாவது: "நம்முடைய உதவி அப்பையனுக்கு தேவையாய் இருந்ததினால் அவனைச் சேர்த்துக்கொண்டோம். ஆனால் அதைத் திருப்பிவிட்டான். ஏனென்றால் நம்மெல்லாருக்கும் அவனிருப்பது அதிக அவசியமாய் இருக்கிறது." நம்மையும்பற்றி அதேமாதிரியாய் மற்றவர்கள் நினைத்தால் எவ்வளவு நலமாயிருக்கும். சுபாலா அப்படியிருக்கமாட்டதா? அச்சிறுபெண் தலையை ஆட்டினாள். அச்சமயத்தில் பேச இஷ்டமில்லாதிருந்தாள். சிறிய தகப்பன் இன்னொன்றும் சொல்ல இருந்தார். "சுபாலா! மகிழ்ச்சியான இருதயத்திற்கு ஒன்றுமில்லாதிருந்தாலும் மற்றவர்களுக்கு எல்லா உதவியும் செய்யத்தயாராய் இருந்தானே. அப்படியிருக்க நல்ல வீடு, அநேக சந்தோஷங்களுள்ள பிள்ளைகள் நன்றாக நடக்காததினால் "சுளித்த மூஞ்சி" என்று ஜனங்கள் கூப்பிடும்படி இடம் வைத்துக்கொள்ளுகிறார்களே அதைப்பற்றி என்ன நினைக்கிறாய்" என்று சொன்னார். "அவர்கள் வெட்கிப் போகவேண்டும், சிறிய தகப்பனே நானும் மகிழ்ச்சியான இருதயத்தைப் போல நடக்கப் பிரயாசப்படுவேன்" என்று சொன்னாள்.

Vol. XXVII Registered No. M. 209 No. 3

SEPTEMBER, 1913

# மாதர் மித்திரி.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 2-OCT 191 MADRAS

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. A. E. OGG, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 35 |
| தாய்மார் சிந்திக்கவேண்டிய விஷயங்கள் | 36 |
| கிழக்கிலுள்ள ஸ்திரீகளைக் குறித்து | 38 |
| காளி சாரன் பானர்ஜி | 40 |
| நாணய நோட்டுகளை சுத்திசெய்தல் | 42 |
| தபாலாபீசுகளின் ஆரம்பம் | 43 |
| ஒழுக்கப் பிரமாணம் | 44 |
| கண்களைப் பத்திரம் பண்ணுதல் | 45 |
| அசைவாடுகிற படங்கள் | 46 |
| வர்த்தமான குறிப்புகள் | 47 |



# மாதர் மித்திரி.

புத். ௨௭. ௧௯௧௩ ௵ - செப்டெம்பர் ௴. இல. ௩.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2 - OCT 1913
MADRAS.


### CONFESSION OF SIN.

இராகம், நீலாம்புரி. ஆதிதாளம்.

**தீபதை—கண்ணிகள்.**

1. ஐயா, நான் ஒரு பாவ ஜென்மி ஆனேனே !
ஆண்டு ரட்சித்தருளாய்,—பரப்பொருளே ?
உய்யும்படி, தெய்வமே, உன்னை அல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ வேறே,—பரப்பொருளே ?

2. நல் வரமாய்ப் பெற்ற நீதி, சுசி, பாக்கியம்,
ஞானம், எலாம் இழந்து,—பரப்பொருளே,
சொல்ல வெட்கம் அநீதி, சுசிகேடு, நிர்ப்பாக்கியம்,
துர்ப்புத்தியும் அடைந்தேன்,—பரப்பொருளே.

3. மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு காடாக்கினேனே,—பரப்பொருளே;
ஆட்சி கொளும் உன் சுத்த ஆலயமாம் என் நெஞ்சை
அலகைக் கிடம் ஆக்கினேன்,—பரப்பொருளே.

4. உன்னை முழுப் பலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரம் கொண்ட பாவி ஆனேன்,—பரப்பொருளே;
என்னை நிகராக என் பிறனை நேசியாமல் நான்
இகலுற் றிருந்தேனே,—பரப்பொருளே.

5. துப்பரவாம் சுத்தக் கண்ணனே, உன் முன் இன்னும்
துணிகரமாய் நடந்து,—பரப்பொருளே,
இப்படி ஜென்ம கன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய்,—பரப்பொருளே.

THOUGHTS FOR MOTHERS

## தாய்மார் சிந்திக்கவேண்டிய விஷயங்கள்

பின்வருபவைகள் இங்கிலாந்திலுள்ள தாய்மாருக்கு எழுதப்பட்டதாலும் இந்தியாவிலுள்ளவர்களுக்கும் அதேவிதமான பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. நாம் ஒரு பிள்ளையை எந்த இடத்தில் வைத்திருந்தாலும் அது ஒரு பிள்ளையே. எத்தேசத்திலும் பிள்ளைகளை சரியாய் வளர்க்க பெற்றோர் கடமைப்பட்டிருக்கின்றார்.

ஒரு பிள்ளையை அதின் மாதா எவ்விதமாய் ஆரம்பத்தில் வளர்த்துவருகிறாளோ அவ்விதமாகவே கடைசிவரையிலும் இருக்கும். ஒரு உபாத்தியாயர் அதை வளர்க்கிறவர் அல்ல, அதைப் படிப்பிக்கிறவர் மாத்திரம். வீட்டிலே சரியான பிரகாரம் வளர்க்கப்படாத பிள்ளை, பள்ளிக்கூடத்திலும் சரியாய்த் தேறமாட்டாது. அப்பள்ளிக்கூடம் அப்பையனுக்கோ, பெண்பிள்ளைக்கோ பிற்காலத்துக்கு உதவியாகச் செய்யக்கூடிய நன்மை வெகு சொற்பமே. இப்படி நான் சொல்வதின் கருத்தைப் பின்வருவதில் விளக்கிக் காண்பிக்கிறேன். தாமி ஜோன்ஸ், மேரி றௌன் என்று இரண்டு பிள்ளைகள் புதிதாய்ப் பள்ளிக்கூடம் வந்தார்கள்.

இதில் தாமியினுடைய தாயார் தன் மகனைக்குறித்து பெரிய எண்ணங்களெல்லாம் எண்ணி, எப்போதும் மிக ஜாக்ரதையாய் அவனுக்கு அவசியமானவைகளையெல்லாம் சவதரித்து அவன் எப்போதும் சந்தோஷமாயிருக்கும்படி செய்வாள். அத்தாயார் அவனைத் தானாகவே உடுத்தி, எப்போதும் சாப்பாடு தயார்பண்ணிக்கொடுத்து, தனியே ஒரு இடமும் அவனைப் போகவிடாதபடி பார்த்து வந்ததன்றி, தான் எவ்வளவு ஆயாசமாயிருந்தபோதிலும், அவனைக் கண்டவுடன் தூக்கியெடுத்து, அவனுடைய விளையாட்டுகளையும், பாத்திரங்களையும் சுத்திசெய்து, அவன் ஒரு விஷயத்திற்காகவாவது அழாதபடி பார்த்துக்கொள்வாள். இப்படிச் செய்ததினால் அந்தப் பையன் இளக்காரமாக வளர்ந்து, தனக்கு அவசியமானவற்றிற்காகவாவது ஒரு சிறு வேலையும் செய்யத் தெரியாதவனாகத் தன் சிறு பிராய ஜீவியத்தை கழித்தான்.

ஆனால் மேரியின் தாயார் அப்பெண்ணை வளர்த்த விதம் சுத்த வித்தியாசமாயிருந்தது. அத்தாயாரும் மேரியை அதிகமாய் சிநேகித்தாள். அவளுக்கு ஏழு பிள்ளைகள். எப்போதும் வேலையிருக்கும். புத்தியுள்ள பெண்பிள்ளை. மேரி குழந்தையாயிருந்தபோது அமைதலாய்ப் படுத்திருக்க கற்பிக்கப்பட்டாள். அப்படியே அவள் வளர வளர தன்னைப் பார்த்துக்கொண்டது மாத்திரமன்று, சிலவேளைகளில் தன்னிலுஞ் சிறிய குழந்தைகளையும் பார்த்துக்கொள்வாள். தன் உடுப்புகளை தானே போட்டுக்கொண்டு வீட்டிலே தான் செய்யக்கூடிய சின்ன வேலைகளையும் தாயாருக்கு செய்துகொடுப்பாள். அவள் தாயாருக்கு ஒரு விஷயத்தை இரண்டாந்தடவை சொல்ல நேரமுமில்லை, இஷ்டமுமில்லை. சோம்பேறித்தனம் தனக்கு வெறுப்பைக் கொடுக்கும். மேரியிடத்தில் "அம்மா! நான் குழந்தையைத் தூங்கப்பண்ணும் வரையில் அமைதலாயிரு. நான் மெத்தையிலிருக்கும்போது நீ வெளியே தெருவுக்கு போய்விடாதே" என்று சொன்னால், அவ்விதம் அவள் நடந்துகொள்ளாவிடில்



தனக்குச் சரியான தண்டனை கிடைக்குமென்பது மேரிக்கு நன்றாய்த் தெரியும். மேரியின் தாய் கண்டிப்புள்ள தாயார்; ஆனால் ஒருபோதும் கோபமானமுகமுள்ளவளல்ல. நல்லது, மேரியும் தாமியும் பள்ளிக்கூடம்போய்ச் சேருகிறார்கள். தாமி தன்னுடைய சொக்காவையும் தொப்பியையும் யாராவது ஒருவர் கழற்றிமாட்டுகிறதற்காக காத்துக்கொண்டிருக்கிறான். மேரியோ தன் மேலுடையைக் கழற்றி தொங்கவைத்து, பின்பு என்ன சம்பவிக்கும் என்று பார்த்துக்கொண்டிருக்கிறாள். தாங்கள் போயிருக்கவேண்டிய அறையிலுங்கூட இவ்விதமே நடக்கிறது. மேரி தன் வீட்டிலேயே தன் காரியம் பார்க்க அறிந்திருப்பதால், வகுப்பில் போய் உட்கார்ந்து தன் எழுத்துப் பலகையையும் புஸ்தகத்தையும் கையில் எடுத்து மற்றப் பிள்ளைகள் செய்கிறது போல தானும் செய்து, உபாத்தியாயர் தன் வேலையை ஆரம்பிக்கிறதை கவனமாய்ப் பார்த்து கொண்டிருக்கிறாள். தாமி விளையாட ஆசித்து, சில விளையாட்டுப் பொருட்களை தூரத்தில் கண்டு, அவைகளை எடுக்க வகுப்புக்குள் பிரவேசித்து ஓடிப்போகிறான். அவனைப் பிடித்துக் கொண்டுவந்து உட்காரவைத்தால் மற்றப் பிள்ளைகள் பின்னால் உட்கார்ந்துகொண்டு தன் விளையாட்டுக் கருவிகள் மேலேயே எண்ணமாயிருக்கிறான். அவனுக்குக் கீழ்ப்படிதல் என்றால் என்ன என்றுகூட தெரியாது; அதுமாத்திரமல்ல, தான் செய்யும் எந்த காரியத்தையும் கண்ணும் கருத்துமாய் செய்யவேண்டுமென்றும் அவன் ஒருபோதும் படிப்பிக்கப்படவில்லை. ஆகையால் சீக்கிரம் அவனுக்கும் அவன் உபாத்தியாயருக்கும் மனவருத்தம் உண்டாயிற்று. சில நாட்களுக்குள் அவர் அவனை முதலாவதாகத் தண்டிக்கவே, அவன் அழுதுகொண்டு தன் தாயாரிடஞ் சென்றான். அந்தப் புத்தியீனமுள்ள தாயார் மேரியின் தாயாரைப் போல தன் பிள்ளையை நீ ஏன் உபாத்தியாயரிடம் சரியாய் நடந்துகொள்ளவில்லை என்று கண்டிப்பதற்கு பதிலாக, தன் மகனுக்காக பரிதபித்து, உபாத்தியாயரைக் குற்றப்படுத்தினாள். என்றாலும் அதற்கு பிற்பாடு தாமி வீட்டிலே நல்ல பிள்ளையாய் நடக்காவிட்டாலும், பள்ளிக்கூடத்தில் நல்ல பிள்ளையாய் நடக்க ஜாக்கிரதையாயிருக்கிறான். தன் தாயார் தன்னை எங்கேயாவது செய்தி சொல்லியனுப்பினால் அங்கே போக அவனுக்கு இஷ்டமில்லை. தன் தாயாருக்கு ஒரு உதவியும் செய்ய அவனுக்கு விருப்பமில்லை.

ஆனால் மேரியோ பள்ளிக்கூடத்தில் ஒரு தொந்தரவிலும் அகப்படவில்லை. தன் படிப்பிலே வெகு ஜாக்கிரதையாயிருந்தாள். இதினிமித்தம் உபாத்தியாயர் அவளை வகுப்பில் மெச்சிப்பேசினார். வீட்டிலும் அவள் வளர வளர தன் தாயாருக்கு தன்னாலியன்ற உதவியைச் செய்து, தன் நடக்கையினால் அவள் இருதயத்தை மனமகிழப்பண்ணினாள்.

வருஷங்கள் செல்லவே, தாமி ஒரு வாலிபனானான். ஆனால் வரவர தன்னிஷ்டமுள்ளவனாய் நடந்து வீட்டிற்கு வேதனையைக் கொண்டுவந்தான். தன் தாயார் எவ்வளவு ஆயாசமுள்ளவளாயிருந்தாலும், தன்னுடைய உடுப்பும் சாப்பாடும் எப்போதும் தயாராய் வைத்திருக்கவேண்டும். தன் தாயாருக்கு தானாக யாதொரு உதவியும் செய்ய அவனுக்கு விருப்பமேயில்லை. எப்போதாகிலும் தாயார் கேட்டால் உடனே முறுமுறுக்கிறான். இவைகளையெல்லாம் நினைத்து தாயார் சிலவேளை பெருமூச்சுவிடுகிறாள்,

முன் ஒரு காலத்தில் தான்விரும்பிய பிரகாரமுள்ள ஒரு மகன் தனக்கில்லையே என்று நினைக்கிறாள். ஆனால் அவளுடைய மனதுக்கு தான் தன் மகனை சிறுவனாயிருக்கையில் கண்டித்து வளர்க்காததே இதற்கெல்லாம் காரணம் என்று நன்றாய்த் தெரியும். இப்போ கண்டித்தால் தாமி வீட்டை விட்டு ஓடிப்போய்விடுவானென்றும், கெட்ட தோழரோடு சேர்ந்து கேவலமான நிலைமையிலாவானென்றும் பயப்படுகிறாள்.

---

CONCERNING THE WOMEN OF THE ORIENT.

## கிழக்கிலுள்ள ஸ்திரீகளைக் குறித்து.

---

கிழக்கிலுள்ள ஸ்திரீகள் முன்னுக்கு வந்திருப்பது உண்மையாய் இருக்கிறது. அவர்களைக் குறித்தமட்டிலும் உலகத்திலுள்ள சரித்திரத்தில் புதிய காரியமாய் இருக்கிறது. அமெரிக்காவில் புதிதாய் அச்சிட்ட தலைமையான பத்திரிகையில் ஜப்பானிய புருஷன் எழுதிய ஒரு விஷயமும், இந்திய ஸ்திரீ எழுதிய ஒரு விஷயமும் பிரசுரப்படுத்தி இருக்கிறது. அவர்கள் அவ்விரண்டு தேசத்து ஸ்திரீகளின் விர்த்தியையும், நிலைநிற்கையையும் குறித்து சொல்லுகிறார்கள். ஜப்பானிய சீன ஸ்திரீகளின் நிலைமையையும் காட்டுகிறார். இத்தேசங்களில் அநேக ஸ்திரீகள் தங்கள் தாய்மார், பாட்டிமார், எத்தனையோ தலைமுறையாய் எழுத வாசிக்கத் தெரியாமல் இருந்தது போல் இன்னும் இருக்கிறார்கள் என்பது வாஸ்தவந்தான். ஆனாலும் இந்தியா ஜப்பான் சீனதேச ஸ்திரீகள் படிக்க முயற்சித்து, சித்திபெறுவதும் வாஸ்தவந்தான் என்று தற்கால சரித்திரங்களில் காண்கிறோம்.

சீன, ஜப்பானிய ஸ்திரீகளை குறித்த விஷயத்தில், மூன்று சீன ஸ்திரீகளின் படங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அவர்களில் இருவர் வைத்தியர். ஒருத்தி ராணுவ கல்லூரியில் வாசிக்கிறவள். ராணுவ கல்லூரியில் ஒரு ஸ்திரீ படிப்பது ஆச்சரியமன்றோ! அவ்வைத்தியர்களில் ஒருத்தி ஒரு பெரிய ஆஸ்பத்திரியையும், பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடத்தையும் (Training School) நடத்துவதோடு போனவருஷம் பதினாறாயிரம் நோயாளிகளையும் சிகிற்சை செய்தனள். அவள் அமெரிக்காவில் கல்வி கற்றாள். அதோடு ஒரு கிறிஸ்தவ மிஷனரியாகவுமிருக்கிறாள். மற்றவள் இருபது வருஷம் வேலை செய்து, சீனாவின் ஆஸ்பத்திரி ஒழுங்குகளை புதுப்பித்துக்கொண்டிருக்கிறாள்.

இப்பத்திரிகையை வாசிப்போர் சிலர் கல்கத்தாவிலும் மற்றுமிடங்களிலும் சீன ஸ்திரீகள் நடக்கிறதைப் பார்த்திருக்கலாம். அவர்களுடைய பாதங்கள் ஒரு பிள்ளையின் பாதங்கள் அளவாயும், குழந்தையாயிருக்கையில் இறுகக் கட்டப் பட்டதினால் அங்கவீனமானவையாயுமிருக்கின்றன. சீனாவின் துர்ப்பழக்கங்களில் அதிக தீமையை உண்டாக்குவதில் இதுவும் ஒன்று. இந்தியாவில் அநேக ஜனங்கள் நடமாடும் தெருக்களில் ஒரு ஸ்திரீ தனிமையாய் போவது எவ்வளவு இழிவானதோ அவ்வண்ணமே சீனாவில் பாதங்கள் சுருங்கக் கட்டப்படாமல் ஒரு ஸ்திரீ வெளியேபோவது அத்தனை இழிவுள்ளது. ஆனால் இப்பொழுது அவைகளெல்லாம் மாற்றப்பட்டும் மாறிக்கொண்டும் வருகின்றன. உயர்குல ஸ்திரீகளும் படித்தவர்களும் தங்கள் பாதங்களை கட்டுகிறதில்லை; தங்கள் பெண் குழந்தைகளின் பாதங்களை கட்டவும் சம்மதிக்கிறதில்லை.



சீனாவிலும் ஜப்பானிலும் ஸ்திரீகள் ஏகதேசம் எல்லா தொழில்களிலும் பிரவேசித்து முகாமையாய் வேலைநடத்தி வருகிறார்கள். சிலர் குமஸ்தாக்களாயும், சிலர் உபாத்திமாராகவும், சிலர் உத்தியோகஸ்தர்களாயும் வேலைபார்க்கிறார்கள். ஆரம்பத்தில் அவர்கள் கையில் ஒன்றுமில்லாதிருந்தும் இப்பொழுது திரண்ட சொத்து சம்பாதித்திருக்கிறார்கள். புருஷர் ஸ்திரீகள் ஆயிரக்கணக்காய் கூடியிருக்கும் இடங்களில் சில ஸ்திரீகள் அவ்வளவு சாதுரியமாய்பேசுகிறார்கள். கேட்போர் அதிசயித்து ஆனந்தித்துப் புகழுகிறார்கள்.

சீனாவிலும் ஜப்பானிலும் போலவே, இந்தியாவிலும் நடக்கின்றன. சாதாரணமாய் அதைரியமுள்ள இந்து ஸ்திரீ, இப்பொழுது பெரிய மேடைகளினின்று உபந்நியாசிக்கிறதைக் காணலாம். அதன்றோ சிலர் மகா வல்லமையோடு பேசுகிறார்கள். மேலேகூறப்பட்டுள்ள விஷயத்தை எழுதினது ஒரு வங்காளப் பெண். அம்மாது சொல்லுகிறதாவது: “தற்காலம் ஆண்கள் நன்றாய் படித்து, ஒரு குடும்பத்தை நடத்த சாமர்த்தியமுடையவராகும் வரையிலும், தங்களுக்குக் கலியாணம் அவசியமல்ல என்கிறார். அதனால் பெண்கள் அதுவரையிலும் காத்திருக்கவேண்டியதாயிருக்கிறது. இப்படிச் செய்வது இந்தியாவின் அபிவிர்த்தியை கெடுக்கும் ஒரு பெரிய தீமையாகிய சிசுவிவாகத்தைத் தடுத்து, சீக்கிரம் அக்கொடிய வழக்கம் நின்றுபோக ஏதுவுண்டாக்குகிறது. அதன்றி, சம்பந்த விஷயமாக உள்ள ஜாதிபேத கட்டுப்பாடுகள் குறைந்து வருகின்றன. அதோடு கூட விதவை விவாகங்களும் அதிகரிக்கின்றன. இவ்விஷயங்களெல்லாம் மத வைராக்கியமுள்ள இந்துக்களுக்கு அதிக அவபிரியத்தையும், அவர் நோக்கங்களுக்கு இடையூறையுமுண்டாக்கும். ஆனால் இந்து தேசத்தை சிநேகித்து அதன் ஸ்திரீகள் முன்னுக்கு வருவதை ஆசிப்பவருக்கோ—இவ்விஷயங்களெல்லாம் சீர்திருத்தமுண்டாக்கும்படியாகவே நடத்தப்படுகின்றன என்று லேசாய் மனதில் படும் என்பதற்கு சந்தேகமில்லை.”

இம்மாது, இந்து ஸ்திரீகள் வித்தியா சம்பந்தமாய் எவ்வித முயற்சி செய்கிறார் என்றும் கூறுகிறாள். “இவர்களால் அநேக பத்திரிகைகள் பிரசுரப்படுத்தப்படுகின்றன. அதில் ஒன்று முழுவதும் ஆங்கிலப் பாஷையில் இந்து ஸ்திரீகள் சபையாகவும் சங்கமாகவும் கூடிச்சேர்ந்து இந்தியாவில் பல சீர்திருத்தங்கள் உண்டுபண்ணப் பிரயத்தனிக்கிறார். சில சங்கங்கள் தங்கள் சொந்த அபிவிர்த்தியையும் நாடினதாயிருக்கிறது. சிலர் சபைகூடி பணப் பிரிவுசெய்து வர்த்தமானப் பத்திரிகைகளையும், நூல்களையும் தருவித்து தங்கள் போஜனாதிகளை முடித்தபின்னர், வாசிக்க அறிந்த ஒருவள் தற்கால சம்பவங்களை வாசிக்கிறாள். பின்னர் எல்லாரும் உலக முழுவதிலும் ராஜ்ய சம்பந்தமாய் என்னென்ன சீர்திருத்தங்கள் நடக்கின்றன என்று ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொள்ளுகிறார்கள். அதோடு இந்து தேச சம்பவங்களைக் குறித்தும் தர்க்க சம்பாஷணை செய்கின்றார்.”

ஆகவே, இதோடுகூட நமது இந்து தேசத்து மாதரைக்குறித்து பாரம்பரையாய் சொல்லும் வண்ணமாய், ஒவ்வொரு இந்து ஸ்திரீயும் ஒழுக்கமும் அடக்கமுமுடையவளாய் நடந்துகொண்டால் இவ்விஷயங்களெல்லாம் இந்தியா சீக்கிரம் நல்ல

நிலைமைக்கு வரும் என்பதை தெளிவாய் முன்னறிவிக்கின்றனவல்லவோ? ஆம் மெய்யாகவே அப்படியே நடக்கும்.

---

## KALI CHARAN BANURJI
## காளி சரன் பானர்ஜி

---

இதை வாசிப்போர் அநேகர் காளி சரன் பானர்ஜி என்பவரைக் குறித்து கேள்விப்பட்டிருக்கலாம். சிலர் அவரை அறிந்துமிருக்கலாம். ஏனெனில் அவர் பங்காளமாகாணத்தவராயிருந்தாலும் இந்து தேசம் முழுவதுக்கும் உரியவர். அவரை இத்தேசத்தின் ஒவ்வொரு ஜாதியாரும் தங்களவர் எனக்கூறுகின்றனர். ஒரு தடவை அவரை இவர் கிறிஸ்துமதத்தைச் சார்ந்தவரென ஒரு பெரிய கூட்டத்தில் பேசினபோது, இந்துமதஸ்தரான தலைவரொருவர் எழுந்து "அது சரியன்று; மிர். பானர்ஜி எல்லா சமுதாயத்தையும் சார்ந்தவர்" என்று சொன்னார்.

இவர் மதவைராக்கியமுள்ள ஒரு இந்து குடும்பத்தில் பிறந்தார். அவ்விதமாக வளர்ந்து வரவே, வாலவயதில் ப்ரி சர்ச்சு காலேஜில் டாக்றர் டப் என்பவரிடம் கல்வி கற்றுவருகையில் கிறிஸ்தவரோடு பழகினர். இவ்விதமாக பழக இவரை ஏவினது எதுவோ அது நமக்குத் தெரியாது. ஒருவேளை அந்தக் காலேஜ் பண்டிதரான டார். டப் என்பவருடைய போதனைகளும் மற்றுள்ள உபாத்திமாருடைய போதனைகளும், தாம் அதிகமாய்ப் பழகியிருந்த ஒரு கிறிஸ்தவ சகபாடியுடைய பழக்கங்களுமாயிருந்திருக்கலாம். அவர் நேசித்த ஒரு உபாத்தியாயர் சொன்ன புத்திமதி ஒன்று "சத்தியம் எதுவோ அதை உன் ஜீவியத்தில் கடைப்பிடி; அவ்விதமாக நடக்கையில், தேவனுடைய உபதேசம் எதுவென்று அதில் தெளிவாய்க் கண்டுகொள்வாய்" என்பதே. இவ்வுபதேசமும் அவருக்கு ஒரு தூண்டுகோலாயிருந்தது. ஆகவே அவர் கிறிஸ்தவர்களின் உபதேசம் தேவனுடையது எனக் கண்டார். ஆனால் இது லேசான காரியமன்று. தாம் சிறு பிராயமுதல் அறிந்து பழகின உபதேசங்களை விட்டு, ஒன்றுமறியாத உபதேசத்தைக் கைக்கொள்ளவும், தமது இனத்தார் சிநேகிதர் எல்லாரும் எதிர்த்து மறுக்கும் மார்க்கத்தை தழுவிக் கொள்வதும் மகா பெரிய போராட்டமாயிருந்தது. ஒருதடவை தாம் கிறிஸ்தவனாகவேண்டுமென்று தீர்மானம் பண்ணி பூணூலை எடுத்தெறிந்துவிட யோசிக்கையில் தன் மாதா இதினிமித்தம் தூக்கிப்பார்களோ என நினைத்து அதை உடனே செய்யவில்லை. ஆறுமாதம் அவர் நிர்பாக்கிய நிலையிலிருந்தார்; அவர் மனச்சாட்சி அவருக்கு நித்திரை வரவொட்டவில்லை. அச்சமயத்திலே 'மாய்மாலம்' என்பதைக்குறித்து எழுதின உபந்நியாசத்திற்காக இவருக்கு நன்கொடை அளிக்கப்பட்டது. அப்போது அவருடைய நண்பர்களிலொருவர் "உனக்கு இவ்வெகுமதி கிடைக்கவேண்டியதுதான். ஏனெனில் கடந்த ஆறுமாதகாலமாய் நீ மாய்மாலம் பண்ணிக் கொண்டு வருகிறதினால் உனக்கு அதைக்குறித்து நன்றாய்த் தெரியும்" என்று பகிடிபண்ண, இவ்வார்த்தைகள் அவர் மனதில் தைக்கவே, தைரியமடைந்து உடனே ஞானஸ்நானம் பெற்றார். அநேக வருஷங்களுக்கு பின் அவருடைய மனைவியும் கிறிஸ்தவளாகி, கடைசியில் இருவரும் மிக நேர்த்தியான ஜீவியஞ் செய்தார்கள்.



மிர். பானர்ஜி அநேக வருஷங்களாய் அக்காலேஜிலேயே உபாத்தியாயர்வேலை செய்தார். அதன்பின்னர் வக்கீல் பரீட்சைக்கென்று தன்னை ஒப்புவித்தார். ஒரு தடவை ஒரு செம்மான் "என்னுடைய சரியானவேலை நன்மைசெய்வது, ஆனால் என்னுடைய சாப்பாட்டுகாக நான் இச்சப்பாத்துக்களை தைக்கிறேன்" என்றானும். அவ்வண்ணமே இவரைக்குறித்தும் சொல்லலாம். அவருடைய வேலை தம்மாலியன்ற அளவு எல்லாருக்கும் நன்மைசெய்வதே. தன்னை ஆதரிக்க இவ்வகேல் வேலையைச் செய்தார். அவருடைய வேலைகள் எப்போதும் நற்கிரியைகள் அமைந்துள்ளன. ஏதாகிலும் ஒரு காரியத்தைச் செய்யும்படி தான் தலையிடவேண்டியதானால், உடனே முழு மனதோடும் பலத்தோடும் உற்சாகமாய் செய்வார். இந்திய நாஷனல் காங்கிரஸ் கூட்டத்திற்கு தம்மாலியன்ற சகாயஞ் செய்தார். தமது மரணத்துக்குசிலவாரங்களுக்கு முன்னர் கல்கத்தாவில் கூடின கூட்டத்திற்கு அவர் போயிருந்தார். பெண்கல்வியைக்குறித்தும், ஊமை செவிடர் இவர்களுக்கு பள்ளிக்கூடங்களுக்காகவும், வாலிப கிறிஸ்தவ ஐக்ய சங்கத்திற்காகவும் அதிகமாய்ப்பேசி, இவைகளுக்காகவும் இன்னுமநேக விஷயங்களுக்காகவும் அதிகமாய் உழைத்துவந்தார்.

தான் முதிர்வயதாகும்போது அவருடைய இருதயத்தில் அதிகமாய் கிரியை செய்த விஷயம் கல்கத்தாவில் பீடன் ஸ்குயர் (Beadon Square) என்னுமிடத்தில் ஞாயிற்றுக்கிழமை சாயரட்சைதோறும் நடந்த ஒரு ஆராதனையே. அங்கே, அறிவாளிகளான இந்தியர்களுக்காக இங்கிலீஷ், பங்காளம், உர்டு பாஷைகளில் பிரசங்கங்கள் செய்யப்படும். மிர். பானர்ஜி எப்போதும் அங்கே போவார். அதிக முயற்சி எடுப்பார். இக்கூட்டங்கள் மிகுந்த நன்மையைக் கொண்டு வந்தன. அவருடைய அந்தியகாலத்தில் சித்திரங்கள் எடுத்து பிள்ளைகளுக்கு காண்பித்து பிரசங்கிப்பார். இப்போது அந்த இடத்தில் அவருக்கு ஒரு ஞாபக சின்னம் நாட்டப்பட்டிருக்கிறது. அப்படி அவருக்கு செய்யவேண்டியது நீதியே. மிர். பானர்ஜி அவ்வளவு நேர்த்தியாய், காதுக்கினிய இங்கிலீஷ் பேசுவார். எல்லா ஜாதியாராலும் வாய்ச்சாலகன் என அழைக்கப்பட்டார். தமது தாய்ப்பாஷையிலும், ஆங்கிலப்பாஷையிலும் அவர் பேசுவதை ஒரு சிறுபிள்ளை முதலாய் அறியத்தக்கவிதமாய் அவ்வளவு தெளிவாய்ப் பேசுவார். அவருடைய வார்த்தைகள் மனதை ஊடுருவகூடியதாயும், சுத்தமாயும், உயர்தரமாயும் இருந்ததால் கேட்பவர் எல்லாரையும் மிகவும் சந்தோஷப்படுத்துவார்.

அவர் தாழ்மையுள்ளவராயும், பாசாங்கில்லாதவராயுமிருந்ததால் எல்லாராலும் சிநேகிக்கப்பட்டார். உலகத்தில் மேன்மக்கள் என்னப்படுபவருக்கிருக்கும் சுகுணங்களெல்லாம் அவரில் அமைந்துள்ளன. தமது இந்து சிநேகிதரைவிட்டுத் தம்மைப் பிரித்துக்கொள்ளாமல் அவர்களுடைய கலியாண முதலிய குடும்பச் செலவுகளில் தமது அனுதாபத்தைக் காண்பித்தார். இந்துக்களில் பிரக்யாதைபெற்றவரான சுரேந்த்ரநாத் பானர்ஜி என்பவர் அவர் இறந்த பிற்பாடு அவரைக்குறித்து "நான் என் ஜீவகால முழுவதிலும் மிர். காளி சரன் பானர்ஜியை விட பெரியவரும், உயர்ந்தவரும், மேன்மையுள்ளவருமான ஒருவரையும் பார்த்ததில்லை. அவரை பார்த்தால் சாந்தமே உருவமெடுத்து வந்தாற்போலிருந்தது. அவர் தாம் சொன்னதே சரியென்று

ஒருபோதும் சொல்லார். மனத்தாழ்மை—கிறிஸ்தவனுக்குரிய சிறுபிள்ளையின் தாழ்மை—உருவமெடுத்து மிர். பானர்ஜியாக அவதாரமானாற்போலிருந்தது. அவரில் ஒரு குற்றமும் காணப்படவில்லை" எனக் கூறினார்.

இந்தியாவின் மகிமை மகுடத்திற்கு இப்பேர்ப்பட்டோர் இரத்தினக்கற்களாயிருக்கின்றனர். இவர் தமது ஜீவியத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பெரியவராயிருந்தார். வெளியிலும், உள்ளேயும், சுத்தமுள்ளவர், சாந்தமுள்ளவர், உண்மையுள்ளவர், ஊக்கமுள்ளவர். தமது கைக்கு நேரிட்ட ஒவ்வொன்றையும் குறைவறச் செய்தார். இவரை நமது ஆண் பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்குங்கூட முன்மாதிரியாகக் கூறத்தக்க தன்மையுடையவர் என்பதற்கு சந்தேகமில்லை. எல்லா ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் அவரைப்போல் பெரியவராகக் கூடாவிட்டாலும், அவரைப்போல் நற்குணமுள்ளவராயிருக்கக் கூடும்.

---

CLEANING CURRENCY NOTES

## நாணய நோட்டுகளை சுத்திசெய்தல்

இத்தேசத்தில் நாம் எவ்வளவோ நோட்டுகளை அதாவது காகிதப் பணங்களை கைபாண்டு வருகிறோம். அடிக்கடி அவைகள் அதிகம் அழுக்காயிருக்கின்றன. சுத்தமானதும், அழுக்கானதும், சுகமுள்ளதும், நோயுள்ளதுமான கைகளின் வழியாய் அவைகள் மாறிமாறி வழங்கி வருகின்றன. ஆகையால் நாம் நோட்டுகளையாவது, துட்டுகளையாவது கைவழங்கினபின், கைகளை கழுவி சுத்தம் பண்ணுவது மிகவும் நல்லது.

இங்கிலாந்தில் இப்படியல்ல. அங்கே பாங்கு நோட்டுகள் அநேக கைகள் கடந்து வரா. அவைகளை அச்சிடப்படும் இங்கிலாந்து பாங்குக்கே மறுபடியும் அவைகள் கொண்டுவரப்படும். அவைகளை உடனே சுட்டெரித்து விடுவார்கள். என்றாலும் அங்கே ஒரு சவரனுக்கு குறைந்த பாங்கு நோட்டுகளில்லாததால் பொதுவான ஜனங்கள் அநேகருடைய கைகளில் அவைகள் கிட்டமாட்டா.

அமெரிக்கா கண்டத்து ஐக்ய மாகாணங்களில், எல்லாவற்றிலும் குறைந்த நோட்டு மூன்று ரூபாய்க்கு சரி. இதற்கு மேலாக எத்தனையோ நோட்டுகள் அச்சிடப்படுவதால், கடுதாசி நோட்டுகள் சாதாரணமாய் உபயோகிக்கப்படும். இந்தியாவில்போலவே இந்த நோட்டுகள் அநேக கைகள் கடந்து வருவதுபற்றி அழுக்காகிப்போகின்றன. அவ்வளவு ஜனநெருக்கமுள்ள அத்தேசத்தில் எல்லாருக்கும் அவசியமானதால்எவ்வளவோ நாணயக் கடுதாசிகள் அச்சிடப்படுகின்றன. அதுவே கவர்மென்றுருக்கு அதிக செலவை கொடுக்கிறது. அப்படியிருக்க அக்கடுதாசிகளை சுட்டெரித்தால் இதினு மதிகமாக செலவாகுமல்லவா?

சிறிதுகாலத்துக்கு முன்னே அழுக்கடைந்த நாணய கடுதாசிகளை சுத்திசெய்யவும், இன்னுமதிகமாக கடுதாசிகள் அச்சிட்டு கொடுக்குஞ் செலவை நிவிர்த்திசெய்யவும், இக்கடுதாசிகளை சுத்திசெய்ய ஒரு வழி கண்டுபிடித்தார்கள். இக்கடுதாசிகள் நல்ல கெட்டியாயிருப்பதால் ஒரு இயந்திரத்தால், துணிகளை கழுவி சுத்திசெய்வதுபோல் இவைகளை சுத்திசெய்வது கூடியகாரியம். பின்பு அவைகளை ஒன்றின்மேலொன்றாய் அடுக்கி தேய்த்து புதிய நோட்டுகளைப்போல் சுத்தமாயும் நேர்த்தியாயும் வைத்துக்கொள்ளுகிறார்கள்.



BEGINNINGS OF THE POST OFFICES

## தபாலாபீசுகளின் ஆரம்பம்

மெய்யாகவே தபாலாபீசு வசதிக்கேதுவான ஒரு நல்ல ஏற்பாடு. நீ ஒரு ஊரிலிருந்து, பட்டணத்திலிருக்கும் உன் மகளுக்காவது, வெளியூரிலிருக்கும் உன் மகனுக்காவது ஒரு கடிதம் அனுப்ப யோசித்தாய் என்று வைத்துக்கொள்வோம். அதன்றி உன்னுடைய சின்ன மகனுடைய பட்த்தை அவனுடைய பாட்டியாருக்கு அனுப்ப யோசித்தால் இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு ஆள்கையில் கொடுத்து அனுப்பினால், அல்லது ஒரே ஆள்மூலமாய் எல்லாருக்கும் செய்தியனுப்பினால், எத்தனை கடுதாசிகள், கட்டுகள் அங்கு மிங்கும் கொண்டு போகப்படக்கூடும்? எவ்வளவோ கஷ்டம். ஆனால் இவ்விதமாகவே முற்காலத்தில் நடத்தப்பட்டது. இந்தியாவுக்கு ஆங்கிலேயர் வருமுன்னர் தபாலாபீசுகள் ஒன்றுமே கிடையாது. அதே சமயத்தில் இப்பொழுதிருக்கிற பிரகாரம் இங்கிலாந்திலுங்கூட இல்லாதிருந்தது. ஆகவே சொற்பகாலத்துக்கு முன்னேதான் இந்தியாவில் தபாலாபீசுகள் ஏற்படுத்தப்பட்டன.

இங்கிலாந்தில் முதல்முதல் தற்கால தபாலாபீசு ஜாடையாக ஏற்படுத்தினது பதினாறும் நூற்றாண்டில். ஆனால் அது சாதாரண ஜனங்களின் உபயோகத்திற்கென்றல்ல, இராஜாவின் தூதுகளை கொண்டுசெல்லும்படியாக மாத்திரம். அவைகளைக் கொண்டுசென்றவர் அஞ்சற்காரர்.

1626-ம் வருஷம் தாமஸ் உவிதறிங் (Thomas Withering) என்பவர் போஸ்ட் மாஸ்ட்டர் ஜெனராலாக நியமிக்கப்பட்டார். அதற்குபின் வேறோர் சதாப்தம் ஆரம்பமாயிற்று. உவிதறிங் தபால் ஆபிசுகள் சுய ஆதரிப்புடையவைகளாயிருக்கவேண்டுமென்னும் வாஞ்சையுடையவராயிருந்தார். அதன் பின் சாதாரண ஜனங்களுக்கும் தபாலாபீசு உபயோகமாக வேண்டுமென்று எண்ணம் கொண்டார். பிரிட்டிஷ் தபாலாபீசு காலக்கிரம சரித்திரங்களில் உவிதறிங் என்பவரை வெகு பிரக்யாதை பெற்றவராக கூறியிருக்கிறது. ஆகையால் நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறதும் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறதுமான இந்த தபாலாபீசுகள் அவராலேயே நமக்கு கிடைத்த சிலாக்கியமென சந்தேகமறச் சொல்லலாம். அவர் சட்டங்களை ஏற்படுத்தினார். அவ்வொழுங்குச் சட்டங்கள் வெகுகாலம் கொண்டுநடத்தப்பட்டன. வெகுசீக்கிரத்தில் தபால் கொண்டுபோகக்கூடிய ஏற்பாடுகளை செய்து, அதிக துட்டு வருமானமுள்ளதாகவும் ஏற்பாடுகள் செய்தார்.

என்றாலும் 1680-ம் வருஷம் வரையிலும் தபாலாபீசுகள் லண்டன் பட்டணத்தின் ஒவ்வொரு பாகங்களிலும் இல்லாதிருந்தன. ஸ்தாபிக்கப் பட்டிருந்த தபால்கள் பட்டணத்துக்கு புறம்பேயுள்ள இடங்களுக்காயிருந்தன. அப்புறம் அதே வருஷம் 'பென்னி போஸ்ட்' ஏற்பாடானது. அதாவது ஒருகடுதாசியை ஒரு பென்னிக்கனுப்பலாம். ஒரு பென்னி ஒரு அணாவுக்கு சரி. கடுதாசியின் அல்லது கட்டின் நிறை ஒரு ராத்தல். பணமும், மற்ற விலையுள்ள ஆபரணாதிகளுமனுப்பலாம். அவைகள் பத்திரமாய் போய்ச்சேர (Insured) உத்தரவாதமாக சற்று ஜாஸ்தி கூலிகொடுக்கவேண்டும். அஞ்சற்காரர் முக்கியமாய் கால்நடையாய்ப் போவார்கள். சிலவேளை குதிரையீதேறி போவதுமுண்டு. இப்பொழுது நமது கடுதா

சிகளில் தபாலடையாளங்களைப் (Post marks) பார்க்கிறோம். அதாவது அக்கடுதாசி எங்கேயிருந்து, எப்போது அனுப்பப்பட்டது யென்றும், எவ்விடத்துக்கு எப்போது வந்துசேர்ந்தது என்றுமறியலாம். (இன்னும் வரும்).

---

## A RULE OF CONDUCT
## ஒழுக்கப் பிரமாணம்

“நன்மை விளைக்காமல் அதிக தீமையுண்டாக்கும் எந்தக்காரியத்தையாவது ஒருவன் செய்தால் சிலர் அதைப் பின்பற்றுவதுபோல முழு உலகமும் அவன் மாதிரியே செய்தாலும் ஒருவனுக்காவது அப்பேர்பட்டதைச் செய்ய சன்மார்க்க நெறி கிடையாது” என்று ஒரு பெரிய நல்லமனிதன் ஒருதரம் உரைத்தார்.

இது ஜீவியத்தில் ஆழ்ந்த கருத்தையும் எண்ணத்தையும் உண்டாக்குகிற பிரமாணமாயிருக்கிறது. இதைவாசிக்கிறவர்கள் இதைப்பற்றி சிந்திக்கும்படி விட்டு விடுகிறோம். “உலகமுழுவதும் என்னைப் பின்பற்றி நன்மையன்றி தீமை விளைக்கும் எந்தக்காரியங்களை நான் தினந்தோறும் செய்கிறேன்?” ஒவ்வொரு மனிதனும் ஜீவனத்திலும் நடக்கையிலும் வித்தியாசப் படுவதினால் இந்தக் கேள்விக்கு ஒவ்வொருவரும் வித்தியாசமான மாறுத்தரம் கொடுப்பார்கள்.

“உலகத்திலுள்ள எல்லா மனிதரும் என்மாதிரியைப் பின்பற்றினால் ஒவ்வொரு மனிதனும், பெண்ணும், குழந்தையும், லாகிரி பானங்களை அருந்துவார்கள்” என்று இதை வாசிக்கிறவர்களில் யாராவது சொல்லக்கூடுமோ என்று அதிசயிக்கிறேன். இப்படி இருக்குமானால், காரியங்கள் எவ்வளவு பயங்கர நிலைமையில் இருக்கும் என்று யோசிக்கிறாயா? கொஞ்சம் குடிக்கிறது மோசமில்லை. ஒருவருக்கு பிரியமிருந்தால், இஷ்டமுண்டானால் ஜாஸ்தியும் குடிக்கலாம் என்று சொல்லி அநேகர் தங்களைத் தேற்றிக் கொள்ளுகிறார்கள். அப்படி குடிக்கிறதினால் உண்டாகும் இன்பத்திற்கு தங்களை ஒப்புக்கொடுக்க பூரண அதிகாரம் உண்டென்று தங்களைத் திருப்தி செய்து கொள்ளுகிறார்கள். ஆனால் மேற்சொல்லிய சட்டத்தை ஒத்துப்பார்த்தால் ஒருவனாவது இவ்வழக்கம் சரியென்று சொல்லமாட்டான். ஒரு மனிதனுடைய முன்மாதிரியை உலகத்திலுள்ள யாவரும் பின்பற்றுவார்கள் என்பது சாத்தியமான காரியம் அல்ல. ஆனால் சிலர் செய்யக் கூடும், பெரும்பான்மையோர்கூட அப்படியே நடப்பது கூடியகாரியம் என்பது நிச்சயம். ஜீவிய ஓட்டத்தில் பிரவேசித்த இளம் வாலிபர்கூட உன் மாதிரியைப் பின்பற்றி கெட்ட வழக்கத்துள் வீழ்ந்து கடைசியில் சொல்லமுடியாத துன்பத்துக்குள்ளாக்கப்படுவார்கள். இம்மாதிரி வழக்கம் துடங்கினால், விலையுயர்ந்த சாமான்களும், பணமும் செலவழியும் என்பது சத்தியம்.

இப்பேர்ப்பட்ட காரியங்களை விளைவிக்கும் வழக்கத்தை மாதிரியாகவைத்துப்போகிறது உன்னால் கூடுமான காரியமா? யோசனையுள்ளவர்கள் இந்நாட்டில் குடிப்பழக்கம் வரவர ஜாஸ்தியாகிறதை நினைக்கும்போதே அதிக விசனப்படுவார்கள். இருமதத்தாருக்குள்ளும் குடிவெறி தள்ளப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தபோதிலும் குடி மெய்யாகவே அதிகரித்திருக்கிறது. எவ்விதமான மதுபானத்திற்கும் நாம் நம்முடைய முகங்களை நெருப்புக் கல்லைப்போல திருப்பிக் காட்டவேண்டும். உன்னுடைய சொந்த பிள்ளைகளே உன் மாதிரியை பின்பற்றும் என்பதை நினை. இப்படிச் செய்ய மனமுண்டா? உன்னுடைய துர் வழக்கங்களை முதலில் அகற்றிவிடு. அப்படிச் செய்ய என்ன செலவானாலும்சரி. உன் வழியில் விழுந்த ஒரு அருமையான பிள்ளையைப் பார்ப்பது அதிக கஷ்டமாயிருக்கும்.

---



## HOW TO PRESERVE THE EYES.
## கண்களைப் பத்திரம்பண்ணுதல்.

சில காலத்துக்கு முன்னே எங்களுக்கருகேயுள்ள ஒரு வீட்டில் இரட்டைப் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் சுகமுள்ள பிள்ளைகளாய் பிறந்ததினாலே நல்ல பெலனுள்ள பிள்ளைகளாய் வளருவார்கள் என்று நினைத்தோம்.

சிறிது காலஞ் சென்றதின் பின்னர் அவர்களில் ஒன்று குருடாய்ப் போயிற்று எனக்கேள்விப்பட்டேன். கண்களிலே உண்டான சிறு கட்டியினாலே நீர் வடிந்து கொண்டிருந்தது. உடனே வைத்தியரை அழைத்து கண்களைக்காண்பிக்கவும், அவைகளைச் சுகப்படுத்த எந்தப் பிரயத்தனமும் செய்ய முடியாமற் போயிற்று; ஏனென்றால் வியாதி முற்றிவிட்டது. கடைசியில் அந்தப்பிள்ளை கண்களின் ஒளியை இழந்து போனது.

இதின் காரணம் என்ன? காரணம் இன்னவென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. குழந்தை பிறந்தசமயத்திலே ஒருவேளை சரியாகப் பிள்ளையைக் கவனியாதது ஒரு காரணமாயிருக்கலாம். பிரசவகாலத்தில் உதவிசெய்யும் ஸ்திரீகள் பிறந்த குழந்தையின் கண்களைச் சரியாய் கழுவாததினால் இவ்வியாதி உற்பவிக்கும். கட்டி உண்டாகும்போது சரியாய்க் கவனிக்கவேண்டும், தாமதப்படக்கூடாது. இவ்விஷயத்தைக் குறித்து ஆங்கிலேய வைத்தியருக்கு ஒரு இந்திய பெருமான் பின்வருமாறு எழுதினாராம். “நாட்டுப்புறவாசிகளான எங்களில் யாருக்காவது கண்களில் கட்டி உண்டாகுமேயானால், முதல் ஐந்தாறு நாட்களில் அதற்கெந்தவிதமான மருந்துகளும் பிரயோகியாமல் பின்பு அதற்கு சிகிற்சை செய்து கொள்வது வழக்கம்.” அதைக்குறித்து அந்த வைத்தியர் என்ன எழுதுகிறாரென்றால்: ‘இந்த ஐந்து ஆறு தினங்களில்தான் வியாதி அதிகரித்து கண்கள் முழு குருடாகிப்போய் விடுகிறது. கவலைத்தாழ்ச்சியினால் இவ்வியாதி சுகப்படாமல் போய் விடுகிறது.” ஆகையால் உடனே இவ்வியாதிக்கு சிகிற்சை செய்யவேண்டும். கண்களுக்கு சரியான சிகிற்சை செய்து கொள்ளவேண்டியது அத்தியாவசியம். நமது சரீரத்தில் கண்ணானது மிகவும் ஆச்சரியமானதும் மெல்லியதுமான ஒரு அவயவம். இதை இழந்தால்' அதை மறுபடி பெற்றுக்கொள்வதரிது. அதைப் பாதுகாப்பதில் அஜாக்கிரதையாயிருந்தாலும்; அதற்கு நோய் வரும்போது அதற்கேற்ற சிகிற்சை செய்யாதிருப்பதும் ஒருபோதும் சரியன்று. அதன் கூறுபாடுகளை உணர்ந்தவர் மாத்திரம் அதற்கு சிகிற்சை செய்யலாமேயன்றி மற்றுள்ளோர் செய்யத்துணியலாகாது.

மேற்கூறிய வைத்தியர் சொல்லுகிற பிரகாரம் கண் சுகமாயிருப்பதற்கு அத்தியாவசியமானது சுத்தமே. கண்களிலிருந்து வெளிப்படும் ஒருவகை அழுக்குகளே அக்கண்களுக்கு பிரதிகூலத்தை உண்டாக்குகிறது. வேறு வகையாய்சுகப்படுத்தக்கூடாமற்போனாலும் சுடுதண்ணீரினால் மெதுவாய்க் கழுவி அவ்வழுக்குகளை அப்புறப்படுத்தலாம். கண் வீக்கத்தை ஆரம்பத்திலேயே இவ்விதமாய் சிகிற்சை செய்தால் அதற்குப் பிற்பாடு ஒரு மோசமும் உண்டாவதில்லை. கண்களுக்கு ஒருபோதும் போல்ற்றீஸ்கள் (Poultices) வைத்துக் கட்டக்கூடாது. துர்வாடையான அழுக்குகள் கண்களினின்று வந்தால் அக்கண்களுக்கு கட்டுப் போடக்கூடாது. கண்நோவுக்கு வெள்ளித்துத்த (Silver nitrate) துளிகள் நல்ல ஔஷதம். ஆனால் இம்மருந்து கண்ணுக்கு எரிவை உண்டாக்குவதால் இதைக் குறைந்த சக்தியாய் பிரயோகிக்க வேண்டும். நானூறு மடங்கு ஜலமும் ஒரு

மடங்கு இவ்வமிழ்தத்தையும் சேர்க்க வேண்டும். இவ்வித குறைந்த சக்தியுள்ள மருந்தை ஒரு நாளில் இரண்டு தடவை பயமில்லாமல் கண்ணுக்குள் விடலாம். அம்மருந்து துவக்கத்தில் ஒருவகையான குத்துவலியைக் கொடுக்கும், ஆனால் சீக்கிரத்தில் சுகம் தோன்றும். இப்படிக் கலந்த மருந்தை அதிககாலம் வைத்திருக்கக்கூடாது. ஏனெனில் அதின் சக்தி குறைந்துபோகும்.

ஒருவனுக்கு கண்பார்வையும் கண்ணுக்குச் சுகமும் வேண்டியதானால் சுத்த ஆகாயமும், போதுமான வெளிச்சமும் முக்கியமானவைகள்.

---

## THE CINEMATOGRAPH

## அசைவாடுகிற படங்கள்

---

படவகைகளில் அதிக வியப்புள்ளதும், கவர்ச்சிக்கப்படத்தக்கதும் அசைவாடுகிற படங்கள்தான்; அதாவது, சினிமெற்றகிராவ் என்னப்படுவது. இதை வாசிக்கிற நம்மில் அநேகர் சந்தேகமில்லாமல் இப்படங்களைப் பார்த்திருக்கலாம். நாட்டுப்புற தேசங்களிலுங்கூட இந்தப் படங்கள் சில சமயங்களில் காண்பிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வித காட்சிகளில் ஒருவன் வெறும் படத்தை அல்ல, ரெயில் மெய்யாகவே முழு வேகத்தோடு ஓடுகிறாப்போலவும், புகைவண்டியிலிருந்து புகை எழும்புவது போலவும், சக்கரங்கள் சுற்றுவதுபோலவும் வாஸ்தவமாய் ரெயில் வண்டியில் காணப்படுவதையெல்லாமல் இதில் காண்கிறான். முதல் அது தூரத்தில் காணப்படுகிறது, சமீபித்து வருகிறது, முன்பாக வந்து மறைந்துபோகிறது. இரைச்சலும் சந்தடியுந் தவிர மற்றெல்லாம் தோன்றுகிறது. இன்னும் சில படங்களில் மனுஷர் உயிரோடிருப்பவர்களைப் போல தோன்றப்படுகிறார்கள், பலவித அப்பியாசங்களைச் செய்கிறார்கள், பின்பு மறைந்து போகிறார்கள். அமைதல் இல்லாதிருந்தால் பார்க்கிற ஜனங்கள் உயிருள்ளவர்கள்தான் இப்படி அப்பியாசங்களை செய்கிறார்களென்று எண்ணுவார்கள். இது எப்படி செய்யப்படுகிறது? ஒரு விகற்பமான உதாரணம் இதை தெளிவாக்கும். காகித அட்டைப் படங்களில் ஒரு பக்கத்தில் ஒரு பட்சி இருக்கிறாப்போலவும், இன்னொரு பக்கத்தில் பட்சியின் கூண்டு இருக்கிறாப்போலவும் உள்ளதை நாம் சிறுவர்களாய் இருக்கும்போது வைத்து விளையாடிக்கொண்டிருந்தோம். ஒவ்வொரு முனையிலும் கயிற்றைக்கட்டி அப்படத்தை விரைவாய் சுழற்றினால் அந்த பட்சி கூண்டுக்குள்ளே உட்கார்ந்திருப்பதுபோல தோன்றும். படங்களும் இவ்விதமாய் ஒரு ஞானமுள்ள சூட்சிய ஒழுங்காய் எடுக்கப்படுகின்றன. ஒரு விநாடிக்குள் ஆயிரத்து முன்னூறு படங்கள் கண்காணக்கூடாத வேகமாய் பிடிக்கப்படுகின்றன. இந்த மெல்லிய நீளமான கண்ணாடிகள் சுயமாக சுற்றப்பட்டு இருக்கிறது. ஆகையால் நெடுங்கண்ணாடிகளில் எந்த நுட்பமான அசைவும் குறிப்பிடப்படும். இப்படி எடுத்த கண்ணாடி காண்பிக்கப்படும்போது, ஒளி சுத்துகிற படங்களில் ஒவ்வொரு கண்ணாடியும் தனித்தனியாக காட்டுவது போலல்லாமல் முழுக் கண்ணாடிகளும் அவிழ்க்கப்பட்டுப்போகும். இவைகள் ஒன்றின்பின் ஒன்றாக வெகு துரிதமாய் காட்டப்படுவதினால் ஒரேமாதிரியாக காணப்படும் அப்பியாசங்கள் எல்லாம் அடிக்கடி அதே படங்களால் காட்டப்படுவதினால் முதல் உண்டான கண்ணாடியிலிருந்து உற்பத்தியாகிறதுபோல தோன்றும். இயற்கையாக தோன்றும்படி படங்களுக்கு சாயம்கொடுத்திருக்கிறார்கள்.

முதல் முதல் இப்படி ஞானமாய் அமைக்கப்பட்ட இக்காரியம் விளையாட்டு சந்தோஷங்களுக்கு பிரயோகிக்கப்பட்டது, இன்னும் அப்படியேதான் நடந்தேறுகிறது. ஆனாலும் இது உபாத்திமாருக்கும், உபந்நியாசிப்பவர்களுக்கும், இன்னும் அநேக வழிகளிலும் அதிக உதவியாக இருக்கிறது. இப்படங்களின் மூலமாய் நாம் எத்தனையோ காட்சிகளையும் அதன் மாறுதல்களையும் தெளிவாகக் காண்கிறோம். இல்லாவிடில் நாம் அதை விஸ்தரிப்பின் மூலமாயாவது அல்லது சாதாரண படங்களிலாவதுதான் பார்க்கக்கூடும். இப்படிப்பட்ட சாதாரண படங்களைக் காணுவதுகூட நமக்கு எவ்வளவோ உதவியாக இருந்தாலும் இதைவிட, இன்னொருவர் விவரிப்பதைக்கேட்கிறதைக் காட்டிலும் நாமே இந்த அசைவுள்ள படங்களைப், பார்ப்பதினால் எத்தனையோ காரியங்கள் தெளிவாகவும் சுலபமாகவும் நமக்கு விளக்கிக்காட்டப்படுகிறது. சாஸ்திர சம்பந்த படிப்புகளில் விசேஷமாய் உதவியாய் இருக்கிறது. இயற்கை சாஸ்திரத்திலும் அமைப்பின் தொடர்ச்சியை நன்றாக கவனிக்கலாம். உதாரணமாக ஒரு செடியின் வளர்ச்சியை எடுத்துப் பார்க்கலாம். முதல் இலைகள் தோன்றுகிறது, பின்னால் பூவெடுக்கிறது, கடைசியில் விதை உண்டாகிறது. இப்படியாக இன்னும் மற்றக்காரியங்களும் நடக்கிறது. ஆனால் வாஸ்தவமாய் இயற்கையில் எப்படி மெதுவாக செடி உற்பத்தியாகி விர்த்தியாகிறதோ அப்படியே படங்களிலும் காட்டப்பட்டால் ஒருவன் அவ்வளவு காலம்வரை உட்கார்ந்திருந்து அதைக் கவனிப்பதுகூடாதகாரியமாகும். ஆனால் காண்பிக்கிறவனுடைய இஷ்டப்பிரகாரம் விரைவாக அல்லது மெதுவாக காணப்படுகிற சக்தி இந்த அசைவுள்ள படங்களுக்கு இருக்கிறது. செடிகள் வளரும் விதத்தை வெகு சீக்கிரமாகவும், வேகமாய் நடக்கிற காரியங்களை மெதுவாகவும் காண்பிக்கிறார்கள். இப்படியாக படங்களில் ஒரு வெடிகுண்டு மெதுவாக போகிறதையும், ஏதாவதொரு வஸ்து வின்பேரில் அடியுண்டவுடன் உடனே நொறுக்கிப்போடாமல் பொதுவாய் துண்டிக்கிறதையும் அதின் செய்கைகள் ஒவ்வொன்றையும் நமது கண்களால் தெளிவாகப் பார்க்கலாம்.

எல்லாம் நிறைவாயிருக்கிற பள்ளிக்கூடங்களில் இன்னும் கொஞ்சகாலத்தில் இம்மாதிரி அசைகிற படங்களுள்ள கருவிகளும் வைத்துக்கொள்ளுவார்களென்று சிலர் நம்புகிறார்கள். இவைகள் மூலமாய் பாடங்களெல்லாம் பிள்ளைகளுக்கு அதிக விவரமாயும் சுலபமாயும் தெரிவிக்கப்படும். இது எப்படியிருந்தபோதிலும் இக்காலங்களில் இவ்விதமான காரியங்களை ஒருபோதும் காணக்கூடாதிருந்தாலும் இவ்வித படங்களினால் எத்தனையோ கருத்துகளை ஜனங்கள் படித்துக்கொள்ளுகிறார்கள்.



---

## NEWS AND NOTES

## வர்த்தமான குறிப்புகள்

---

மிஸ் டாசிபாய் பட்டேல்.—இன்னொரு இந்திய வாலிப மாது இங்கிலாந்தில் கௌரதையான பட்டங்கள் எடுத்துக்கொண்டிருந்தாள். மிஸ் பட்டேல் பம்பாயைச்சேர்ந்த ஒரு பார்சி மாது. இவள் முதலில் பம்பாய் சர்வகலாசாலைச் சங்கத்தில் எல். எம். எஸ். பரீட்சை எடுத்து, பிற்பாடு இங்கிலாந்திற்குப் போய் அதிக பெயரெடுப்புள்ளவளாய் துலங்கினாள். லண்டன் ஐக்கிய போர்டு வைத்தியர் ரணவைத்தியர் இராஜாங்க கல்விச் சாலையில் பட்டம் எடுத்தது இப்பெண்மணிதான். எல்லா ஜாதியாருக்குள்ளும்; இந்தியர்களிலும் முதன்மையானவளாய் இருந்தாள். இன்னும் வேறு இரண்டு பட்டங்களைத் தரித்திருக்கிறாள். அவள் லண்டன் சர்வகலாசாலை எம். டி. பட்டம் எடுத்தமுதல் பார்சி பெண்மணி தன் ஜனன நாட்டில் சுயாதீன வேலை துவங்க உத்தேசித்திருக்கிறாள்.

சீன ராஜாங்கத்து ஆலோசனைக்காரன்.—டாக்டர் மாரிஸன் ஆஸ்திரேலியா தேசத்தான். பேர்போன ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயரின் மகன். சீனாவில் சமாச்சார பத்திரிகைக்கு கடிதம் எழுதுவதிலும், உளவு பார்ப்பதிலும் முக்கிய பேர் எடுத்தவர். அவர் ஆஸ்திரேலியாவிற்கு போகயிருக்கையில் அதைக் கேள்விப்பட்டு சீன ராஜாங்கம், இவரை புதிய பிரஜாதிபத்தியத்தின் பிரதானிக்கு குடிஜனத்துக்குரிய ஆலோசனைக்காரனாய்

இருக்கும்படி அழைத்துக்கொண்டார்கள். அவர் இதை ஏற்றுக்கொண்டார். சீக்கிரத்தில் இதன் புதிய கடமைகளைத் துடங்குவார். டாக்டர் மாரிஸன் பின் சம்பவிக்கும் விஷயங்களை முன்னே அறிந்து சொல்வதினால் அதிக பிரக்கியாதைப் பெற்றார். சீனராஜாங்கத்து வருங் காலத்தைக் குறித்து அதிக நம்பிக்கையோடு இருக்கிறார்.

**ஓர் பூர்வீக அரண்மனை.**—ஒரு விநோதமான காணுகை கொஞ்சகாலத்திற்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது. அமெரிக்க கலாசாலை பிரதிநிதிகளால், வட பலஸ்தீனாவின் பூர்வீக பிரதான பட்டணமாகிய சமாரியாவில் நிலவறைகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. மூவாயிரம் வருஷங்களுக்கு முன்னே உயிரோடிருந்த எபிரேய ராஜரில் ஒருவனாகிய ஆகாப்பின் அரண்மனையின் மிச்சத்தைக் கண்டுபிடித்து வருகிறார்கள். இந்த மாளிகையைப்பற்றி வேத புஸ்தகத்தில் "தந்த அரண்மனை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தற்கால சம பூமிக்கு அநேக அடிகளுக்குக் கீழே இருக்கிறது. தேசத்தைக் கைப்பற்றின பற்பல மனிதரால் வெவ்வேறு காலங்களில் அநேக குறிப்பான கட்டடங்கள் இதற்கு மேலாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

**ஓர் பேர்போன பழைய கப்பல்.**—சாதாரணமாய் கப்பல்கள் அநேக ஆண்டுகளாய் இருக்கிறதில்லை. சில கடலின் ஆழத்தில் அமிழ்ந்துபோகின்றன, சில கடலில் எரிந்துபோகின்றன, சில உடைந்துபோகின்றன, கடைசியாய் அடுப்பிற்கு ஏற்ற விறகாய்ப் போகின்றன. ஆனால் மெய்யாகவே "வெற்றி" என்று பெயர்கொண்ட பலவித அனுபோகங்களையறிந்த ஆங்கிலேய கப்பலைப்போன்ற சிலதுதான் அதிககாலம் ஜீவித்திருக்கின்றன. அது நூற்றிருபத்திரண்டுவருஷங்களுக்கு முன்னே கட்டப்பட்டது. இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவிற்கு கெட்டுப்போன குற்றவாளிகளை குடியேற்றும்படி அனுப்பின அக்காலத்தில் இது ஒரு கைதி கப்பலாய் இருந்தது. அவ்விடத்திற்கு கைதிகளை ஏற்றிக்கொண்டுபோனது. இந்தியாவிலிருந்து இங்கிலாந்திற்கு கொண்டுபோகப்பட்ட தேக்கம்பலகையினால் அக்கப்பல் கட்டப்பட்டது. இன்னும் அது உறுதியாயும் கடலுக்கேற்றதாயும் இருக்கிறது. தற்கால கப்பல் சிற்பாசாரிகளுக்கு விநோதமானதாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சக் காலத்திற்கு முன்னே அத்திலாந்திக்கைத்தாண்டி அமெரிக்காவுக்கு பிரயாணம் செய்தது. நீராவிக்கப்பலுக்கு ஐந்து ஆறு அல்லது குறைந்த நாள் பிடிக்கும் பிரயாணத்தை இக்கப்பல் ஓட எழுபத்திரண்டு நாள் சென்றது.

**தைரிய கப்பல் வேலையாட்கள்.**—அன்கோரா (Anchora) என்னும் கப்பல் இப்போதுதான் கல்கத்தாவிற்கு வந்தது. கப்பல் பிரயாணிகள் நடுவில் கப்பல் வேலையாட்களால் செய்யப்பட்ட ஒரு வீரமான செய்கையைப்பற்றிய சங்கதியையும் இதுகொண்டுவந்தது. பிரயாணம் செய்த ஒரு காலத்தில் கனத்த கொந்தளிப்பும் மோதுகிற அலைகளும் உண்டானது. மேல் தட்டில் வேலை செய்யும்படி நியமிக்கப்பட்ட ஆறு வேலையாட்கள் (லஸ்க்கர்கள்) ஒருபெரிய அலை மோதினதினால் கவிழ்க்கப்பட்டார்கள். ஒருதோணியை தயார் செய்து அதிலுள்ள மேலதிகாரி அதை ஓட்டும்படி மனசார உழைக்கும் சில மனிதரை அழைத்தார். அபாயம் பெரிதாய் இருந்ததினால் உத்தியோகஸ்தர்கள் ஒருவரையும் அனுப்ப மயங்கினார்கள். ஒரு நிமிஷங்கூட பின்தாங்காமல் உடனே மூன்று வீரபுருஷர் துணிந்து காணாமற்போன சிநேகிதர்களைத் தேடும்படி தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். கொந்தளிக்கும் கடலில் தங்களுடைய உயிருக்கே மோசம் என்று தெரிந்தும் இப்படிச்செய்தார்கள். இந்த சிறு தோணியில் அலண்டும் மோதியும் அரைமணி காலமாய் தங்கள் சிநேகிதர்களைத் தேடினார்கள். நாலுபேரை கண்டுபிடித்தார்கள். ஆனால் இன்னும் நீண்ட நேரமாய்த் தேடியும் மீதியானவர்களைக் கண்டு பிடிக்கவில்லை.

49

Vol.XXVII. Registered No. M. 209 No. 7

JANUARY, 1914

# மாதர் மித்திரி.

OFFICE OF THE REGISTRAR
17 FEB 1914
MADRAS.

## Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... .... | 99 |
| சொரிமணலுக்குள் .... .... .... .... | 100 |
| கடியாரத்தை சரிப்படுத்து .... .... .... .... | 102 |
| சீனாவில் கழித்துப்போடும் கடிதங்கள் .... .... .... | 103 |
| சத்துருக்களை சிநேகிதராக மாற்றுதல் .... .... .... | 104 |
| ஓர் வீரச்செய்கை .... .... .... .... .... | 106 |
| நீ அதை அழித்துவிட முடியாது .... .... .... | 108 |
| நீ ஒரு நல்ல அயலானா? .... .... .... .... | 108 |
| இரண்டு சகோதரர்கள் .... .... .... .... | 109 |
| பாரசீக தேசத்து ஸ்திரீகள் .... .... .... .... | 110 |
| பிள்ளைகளின் பக்கம் .... .... .... .... | 112 |



# மாதர் மித்திரி.

புத். ௨௭. ௧௯௱௰௪ ௵ - ஜனுவரி மீ. இல. ௭.


PRAYER FOR THE NEW YEAR.

இராகம், தோடி. ஆதிதாளம்.

**பல்லவி.**

ஞான திரி முதலொரு பொருளே, நரர் சுகமொடு வர அருள்,
ஞான திரி முதலொரு பொருளே.

**அனுபல்லவி.**

வானவர் துதிசெய் அநாதி குருபரனே, ரீ ரீ ரீ ரீ
மானுவேல் எனும் நாம சங்கீதனே,— ஞான

**சரணங்கள்.**

1. மாதுக் குரைத்த ஆதி வார்த்தையின் வித்தே,
மண்ணில் ஈசாயின் வேராய் வழுத்தும் விண் முத்தே,
தேவப்ரமாணம் ஈந்த ஆறு லட்சண சித்தே,
விளங்கும் திருச்சபையில் இலங்கும் அரூப வஸ்தே,— ஞான

2. நித்தம் விக்கினம் வாராமல் ரட்சித்த நன்னேசர்,
நெஞ்சில் கவலை, துயர் நீக்கும் சந்தோஷா,
சத்துருப் பசாசின் முடி தகர்த்த உல்லாசா,
சுந்ததம் இச்சபையை ஆதரிப்பாய், சர்வேசா.— ஞான

3. புவியில் அநேக நரர் போயினர் முன்மாண்டு;
பூர்த்தியாய்க் காப்பாற்றி வைத்தீர் புகுத இவ்வாண்டு,
திவ்ய திருச்சபையோ சிறிய கடுகுப் பூண்டு
திரண்ட மரம்போலாகிச் செழிக்கவும் நீண்டு.— ஞான

4. தின முனதருள் புரி சீயோன் அனுகூலா,
தேசிகர் உளம் களிக்கச் சிறக்கும் நன்னூலா,
மன நலம் தரும் ஒரு பாகுரு பாலா,
வருட முதலில் புது வரமருள், சீலா.— ஞான

IN THE QUICKSANDS.

## சொரிமணலுக்குள்.

இந்தியாவிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில், மேல் வகுப்பிலுள்ள மாணுக்கர் இரண்டு வாரங்களாக நாட்டுப்புறங்களுக்கு வருஷந்தோறும் போவது வழக்கம். அங்கே அவர்கள் சுத்த ஆகாயத்தை உட்கொள்ளவும், இஷ்டம்போல் விளையாடவும், வேலைசெய்யவும் கூடும். அதன்றி "தேவனுடைய அதிசயமான கிரியைகளை" நாளுக்குநாள் பூமியிலும் வானத்திலுமுள்ள அலங்காரங்களைப் பார்ப்பதினுல் கிரகித்துக்கொள்ளக் கூடும். வானத்தில் நட்சத்திரங்கள் எவ்வளவு அலங்காரமாயிருக்கிறதென்றும், இரவின் அந்தகாரத்தை சந்திரனனது எத்தனை நேர்த்தியாய் நீக்கிக்கொண்டே வானத்தின் மேகங்களுடனே பிரயாணம் பண்ணிச் செல்லுகிறது என்றும் தெளிவாய்ப் பார்க்கக்கூடும்.

ஆ! அவ்விதமாய் ஜீவிப்பது எத்தனை இன்பம். ஏனெனில் அங்கே போகும் ஒவ்வொருவரும் சந்தோஷமாயிருப்பார்கள். ஒவ்வொருவரும் சுறுசுறுப்பாயிருப்பார்கள். ஒவ்வொருவரும் அந்த நாளின் வேலையில் பங்கெடுக்கவேண்டும். ஒவ்வொருவரும் படிக்கவேண்டும்.

சில சமயங்களில் அக்கம்பக்கத்திலுள்ள வயல்களையும், தோட்டங்களையும் அவர்கள் சுற்றிப்பார்ப்பார்கள். இவ்விதமாக விடுமுறை நாட்களில் அப்பெண்களோடே சில துரைசானிமாரும் போவார்கள். வெளியே உலாவும்போது அத்துரைசானிகள் அவர்களோடு போவதுண்டு, சில சமயங்களில் ஒண்டியாயும் போவார்கள்.

ஒரு தடவை இவ்விதமான விடுமுறை சந்தோஷ காலத்தில் முதல் நாள், மாணுக்கரோடு சென்ற துரைசானிமார் இருவரும் அதிக களைப்பாயிருந்தமையால், அப்பெண்களை நோக்கி: "நீங்கள் வெளியே சற்றுத்தூரம் சுற்றுலாவி வாருங்கள்" என உத்தரவளிக்கவே அப்பெண்கள் கூடி, குலாவி நகைத்துக்கொண்டே நடந்துபோக, திடீரென சதுப்பு நிலமொன்றைக் கிட்டினார்கள். அது அவ்வளவு மோசமுள்ள இடமாகக் காணப்படவில்லை; என்றாலும் அவர்களில் சிலர் ஓரத்தில் நின்றுவிட்டனர். அவர்களில் சுசிலா என்பவள் "சகோதரிகாள் நாம் இதை சுற்றி வரலாம். உள்ளே இறங்கி நடப்பது நல்லதல்ல. ஒருவேளை நாம் அதைக் கடக்கும்போது சேற்றில் அமிழ்ந்திப்போகலாம்" என்றாள்.

அப்போ ராணு என்பவள் உல்லாசமாய் "சுசிலா, நீ எப்போதும் எதைக் குறித்தாவது பயப்பட்டுக்கொண்டே இருப்பது சகஜம். இங்கே நாம் பயப்படத்தக்க தொன்றுமில்லை. நாம் எல்லாரும் போகலாம் வாரும் பிள்ளைகாள். ஏன் பயப்படுகிறீர்கள்? நான் இதோ போகிறேன்" என்று கூவிக்கொண்டே முதலாவது நடந்தாள். சில நிமிஷங்களாக நன்ருக நடந்து போகவே, மற்றப் பெண்கள் அவளைப் பின்சென்ருர்கள்.

சில அடிகள் செல்லவே, ராணு "ஐயோ பிள்ளைகாள், நான் அமிழப் போகிறேன்" எனக் கூவினுள். அவள் சமீபத்தில் சென்றவர்கள் ஏதோ ஒருவிதமான சேற்றுக்குள்ளே தங்கள் பாதங்கள் அமிழ்ந்து போவதைக் கவனித்து மிகக் கஷ்டத்தோடு, முட்டளவு அமிழ்ந்திப்போன தங்கள் கால்களை வெளியே இழுத்தார்கள். கடைசியாக அவர்கள் வெளியேறி சரியான இடத்துக்கு வந்தார்கள். ஆனுலோ ஏழை ராணு வரவர ஆழத்தில் அமிழ்ந்தினுள். வெளியேற எவ்வளவு பிரயாசப்பட்டாளோ அவ்வளவுக்கு அதிகமாய் ஆழத்தில் அமிழ்ந்தாள். பயத்தினுல் அவள் இட்ட சத்தம் கேட்க மிகப் பரிதாபமாயிருந்தது.



மற்றப் பெண்களுக்கு என்ன செய்யலாமென்று தெரியவில்லை. அந்த இடம் முழுவதும் வெட்ட வெளியாயிருந்தது. பக்கத்தில் மரங்களொன்றுமில்லை, குச்சுகள் ஒன்றுமில்லை. அப்படியிருந்தால் அவள் அவைகளை பிடித்து வெளியேறலாம். தாங்கள் கட்டியிருந்த நீள வெள்ளைத் தாவணிகள் மாத்திரமிருந்தன. ஆனுல் அவைகளைக்கொண்டு அவளை எப்படி ரட்சிக்கலாம்! "யாராகிலும் ஓடிப்போய் துரைசானிமாரைக் கூட்டிக்கொண்டு வாருங்கள்" என்ருள் ஒரு பெண். "அவர்கள் வந்து சேருமுன்னுலே அவள் அமிழ்ந்திபோவாளே" என்ருள் மற்றொருத்தி.

"ஒரு தாவணியை அவளிடம் எறிந்து அவளை வெளியே இழுக்கமுடியுமா பார்ப்போம்" என்ருள் மற்றொருத்தி.

அப்படியே, ஒரு தாவணியின் அற்றத்தை அந்தப் பெண்ணண்டை வீசவே அவள் அதினுல் தன்னை சுற்றிக்கொண்டாள். பின்னர் மற்றப் பெண்கள் எல்லாம் தங்கள் முழுப்பெலனையும் சேர்த்து இழுத்துப் பார்த்தார்கள். வெளியே இழுக்கமுடியவில்லை. அவள் இடுப்பு வரையில் சேறு மூடிக்கொண்டது.

அப்போ அப்பெண்கள் ராணுவின் தங்கையாகிய சுபாலாவைப்பார்த்து "சுபாலா நீ ஓடிப்போய் ப்ரௌன் துரைசானியை அழைத்துவா" என்ருர்கள்.

அவள் தன் கைகளை முறுக்கிக்கொண்டு துக்கத்தோடு "ஐயோ, நான் என் சகோதரியை இப்படி விட்டுப்போகமுடியாது. ஒருவேளை நான் போய் வருகிறதற்குள்ளாக அவள் அமிழ்ந்திப்போவாள்" என்ருள்.

இச்சமயத்தில் அப்பெண்கள் தாங்கள் என்ன செய்யக்கூடுமோ அவற்றையெல்லாம் நினைத்து நினைத்து அவளை வெளியே கொண்டுவரப் பிரயாசப்புட்டார்கள். ஆனுல் அவளோ அவர்களுடைய கண்களுக்கு முன்னுலேயே அமிழ்ந்தினுள். அவள் அவர்களுக்குச் சற்று அடிகளுக்கு முன்னுலே இருந்தபோதிலும் அவர்களால் ஒரு உதவியுஞ் செய்யமுடியவில்லை. இதற்குள்ளாக சேறு அவளுடைய அக்குள்மட்டும் வந்தது. இனி அவளை வெளியே எடுப்பது எவ்வளவு கஷ்டம்! அமைதலாக எத்தனையோ தடவை ஜெபித்தார்கள். தேவன் மெய்யாகவே ஜெபத்தைக் கேட்கிருர்.

அருகே ஒரு செங்கற்குவியல் இருந்தது. அதைப் பார்க்கவே அவர்களில் ஒரு பெண்ணுக்கு திடீரென ஒரு யோசனை தென்பட்டது. "சீக்கிரம் பிள்ளைகாள், அச்செங்கல்களை எடுத்து அவளண்டை ஒவ்வொன்ருகப் போடுவோம்" என அவள் கூறினுள். அவ்விதமாக சேற்றில் போவது சரியன்று என்று புத்திகூறி தடுத்த பெண்ணுகிய சுசிலாதான் இவ்விதமாகச் சொன்னுள். இப்போதும் அவளை இரட்சிக்கவும் அவள்தான் நல்ல வழி கண்டுபிடிக்கிருள். உடனே மற்றப் பெண்கள் "ஆம், ஆம், நாம் எல்லாரும் கூடிச் சீக்கிரம் அச்செங்கல்களைக் கொண்டு ஒருபாலங்கட்டுவோம்" என்று கூறினுர்கள்.

161186
Y15m211, M87MA
M17:27

ஆத்திரமுள்ள அவர்கள் கைகள் தங்கள் சக்திக்கு மிஞ்சி செங்கல்களைத் தூக்கின. இதற்குள்ளாக ஏழை ராஜுவின் கால் கைகள் பயத்தினால் மரத்துப்போய் அப்பெண்கள் எறிந்த துணியை முதலாய் எடுத்து தன்னைச் சுற்றமுடியாத நிலைமையாகிவிட்டது. சேறு அவள் தேகமுழுவதையும் சுற்றிப்பொதிந்து அமுக்கிற விதமாய்க் காணப்பட்டது. அவளுடைய கைகள்தான் அவளை அமிழவிடாமல் பாதுகாத்துக் கொண்டிருந்தன. இல்லாவிட்டால் அவள் உயிரோடே அமிழ்ந்துபோகவேண்டியவள்தான்.

ஆனால் இப்போ அப்பெண்கள் வெகு பத்திரமாய் தங்கள் கால்களை மெள்ள வைத்து அச்செங்கல் பாலம்வழியாய் அவளண்டை சேர்ந்து தங்கள் தாவணிகளை எடுத்து அவளுடைய கைகளையும், சரீரத்தையும், தோள்களையும் சுற்றிக் கட்டி தங்கள் பெலனையெல்லாம் கூட்டி பயத்தோடும் அவநம்பிக்கையோடும் அத்துணிக்கயிற்றைப் பிடித்து இழுக்கிறார்கள். அவர்கள் அவளண்டை நிற்பதால் அவளைக் கெட்டியாய்ப் பிடிக்கக்கூடும். எல்லாரும் சேர்ந்து ஒன்றாய் இழுத்தார்கள். ஆகா, சந்தோஷம்! ஆச்சரியமான விதமாய் சேறு இடங்கொடுத்தது. கொஞ்சம், இன்னும் கொஞ்சம், அப்படியாக இழுத்து கடைசியில் ராஜுவை வெளியே கொண்டுவந்துவிட்டார்கள்! செங்கல்கள்மேல் ராஜு சோர்வடைந்தவளாய், பெலவீனமுள்ளவளாய் நிற்கிறாள். ஆனாலோ ஒரு சேதமுமடையவில்லை.

இதற்குள்ளாக துரைசானிமாருக்கு இச்செய்தி எட்டிற்று. அவர்கள் அவளை இரட்சிக்க ஓடிவந்தார்கள்; ஆனால் அவர்கள் வருமுன்னே ராஜு வெளியேறி நிற்கிறாள்.

அவள் முதலாவதாக சொன்ன வார்த்தை யாதெனில் "இனிமேல் நான் புத்திமதியை அல்லத்தட்டமாட்டேன்" என்பதே. இப்படிச் சொல்லிக்கொண்டே தரையில் விழுந்து கண்ணீர் சொரிந்தாள். இவ்விதமான ஆபத்து ஒரு சிறு பெண்ணுக்கு உண்டாவதும், அதினின்று தப்புவதும் மிகக் கஷ்டமே. ஆகையால் இவ்வாபத்தை அவள் கடக்குமுன்னே, அவள் பெலனற்றுப் போனாள்.

பிற்பாடு ப்ரௌன் துரைசானி அவர்களுக்கு ஒரு பேர்பெற்ற பிரஞ்சு சரித்திரக்காரன் எழுதிய ஒரு சரித்திரத்தை எடுத்து சொன்னார்கள். அச்சரித்திரத்தில் அக்கவி சொரிமணலில் அமிழ்ந்திப்போன ஒருவனைக் குறித்து அத்தனை தெளிவாயும், திட்டமாயும், பயங்கரமான விதமாயும் எழுதியிருப்பதால் அதை ஒருதடவை வாசிப்பவர்கள் அதை மறுபடி மறக்கவே மாட்டார்கள். பின்னர் துரைசானி அவர்களைப் பார்த்து "பிள்ளைகளே இவ்விதமாகத்தான் சோதனைக்குள் விழுகிறவனும் அந்த மனிதனைப் போலவும், ராஜுவைப்போலவும் தங்களை இரட்சிக்க சற்றேனும் சக்தியில்லாமல் போவார்கள் என்று விபரித்து சொல்லி புத்திமதி கூறினார்கள்.

மெய்யாகவே அப்பெண்கள் அந்த நாளில் நடந்த சங்கதியையும், அவர்கள் படித்த புத்திமதியையும் ஒருபோதும் மறக்கமாட்டார்கள்.

---

SET THE CLOCK RIGHT.

## கடியாரத்தை சரிப்படுத்து.

---

ஒரு காப்பிரி, கடியாரஞ் செய்கிறவனிடத்தில் போய், தன் கடியாரத்திலுள்ள இரண்டு முட்களையும் அவனிடத்



தில் கொடுத்து, "இந்த இரண்டு மணி காட்டும் முட்களையும் சரிப்படுத்தித் தாரும், ஆறு மாதங்களுக்கதிகமாய் இவைகள் சரியாய் நேரங் காட்டுகிறதில்லை," என்றான்.

"உன் கடியாரம் எங்கே?" என்று கடியாரக்காரன் அவனைக் கேட்டான்.

"அது வீட்டிலிருக்கிறது" என்று காப்பிரி பதிலளித்தான். "எப்படியும் அந்த கடியாரம் எனக்கு வேண்டும்" என்றான்.

இந்த முட்களைத் தவிர கடியாரத்தில் பழுது ஒன்றும் இல்லை என்று நான் சொல்லவில்லையா? இதோ முட்களைக் கொண்டுவந்திருக்கிறேன். கவலையீனமாய் சரிப்படுத்தி, அதிக பணம் என்னிடத்திலிருந்து வாங்கலாம் என்று என் கடியாரத்தைக் கேட்கிறாய், என் முட்களைத் திரும்பக் கொடுத்துவிடு என்று சொல்லி வேறே ஒரு நல்ல கடியாரக்காரனைத் தேடும்படி போய்விட்டான்.

இவன் புத்தியீனனாயிருந்தாலும், உள்ளத்தில் சரியாயில்லாமல் வெளிக்கு நன்றாய் நடக்கப் பிரயாசப்படுகிறவர்களைப் போலவேயிருக்கிறான், இவர்கள் தப்பிதம் செய்கிறார்கள், ஆனால் இந்தத் தொந்தரவு தங்களால் வந்ததென்று நம்பமறுக்கிறார்கள். பழுது உண்டானது கடியாரத்திலல்ல, முட்களிலேயே இருக்கிறது என்று உறுதியாய் நினைக்கிறார்கள். இந்த நீகிரோவன் தன் கடியாரத்தைப் பற்றி நினைத்தமாதிரியே, தங்கள் ஆவிக்குரிய நிலைமை மாறுதலின் அவசியத்தைப் பற்றியும் நினைக்கிறார்கள்.

இந்த சர்வலோகத்தின் பெரிய கடிகாரத்தோடே தங்கள் கடியாரங்களும் சரியான நேரம் காட்டும்படியாகவும், இந்தப் பூமியின் தப்பிதமான காலத்துக்கு சரியாய் தாங்களே சரியாய் வைத்துக்கொள்ளப் பிரயாசப்படாதபடிக்கும், எல்லா வேலைகளையும் சீர்ப்படுத்துகிற அந்த மகத்துவமான சிற்பாசாரியின் கரங்களிலே தங்களை ஒப்புக்கொடுக்க மனமற்றவர்களாயிருக்கிறார்கள். ஆண்டவருடைய கரத்திலே தங்களை ஒப்புக்கொடாமலிருப்பதற்குக் கொடுத்த காரணம், இந்த நீகிரோவனுடைய காரணத்திற்குச் சரியாயிருக்கிறது. அதிகப் பணம் பிடிக்கும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் சொல்லுகிறார்கள், "எங்களுடைய கெட்ட வழக்கங்களை விட்டுவிட மாத்திரம் விரும்புகிறோம்," ஆனால் அந்த மகத்துவ கடியாரக்காரர் "கடியாரத்தைக் கொடுத்தாலொழிய முட்களைச் சரிப்படுத்த முடியாது, எனக்கு கடியாரம் வேண்டும்" என்று சொல்லுகிறார்.

---

WASTE PAPER IN CHINA.

## சீனாவில் கழித்துப்போடும் கடிதங்கள்.

---

இந்தியாவிலே நீங்கள் எங்குபோனாலும் எழுதப்பட்ட காகிதத் துண்டுகள் காற்றில் பறந்துகொண்டிருப்பதையும், தரையில் கிடப்பதையும் காண்பீர்கள் என்பது நிச்சயம். பாதைகள் ஓரத்திலும், தெருக்களிலும், பள்ளிக்கூடத்து அறைகளிலும், அங்குமிங்கும், எங்கும் அழுக்கு காகிதத் துண்டுகளைக் காணலாம்.

சீனாவிலே அப்படியல்ல, தெருக்கள் எவ்வளவு கேவலமாயிருந்தாலும், பள்ளிக்கூட அறைகள் எவ்வளவு அழுக்காயிருந்தாலும், வீடுகள் எவ்வளவு அசுத்தமாய் வைக்கப்பட்டிருந்தாலும், அச்ச

டிக்கப்பட்ட காகிதத் துண்டுகள் இருக்கவே இருக்காது.

சீனர், சிறியோரும் பெரியோரும், எந்த வகுப்பாரும் ஏதோ ஒரு விகடமான எண்ணத்தோடு, எழுதப்பட்ட காகிதமும், வரையப்பட்ட படமும் தரையிலே கிடக்காதபடியும், மனிதர் மிதியாதபடியும் அல்லது எந்த அசுத்தமான விஷயத்திற்கு உபயோகப்படுத்தாதபடியும் கவனித்துக்கொள்ளுவார்கள். உதாரணமாக ஒருவரும் மேஜையையாவது, வேறெந்த ஆசியையாவது துடைக்க காகிதம் உபயோகிக்கமாட்டார்கள்.

இவ்வித உதவாத காகிதங்களை எறிவதற்கு ஓர்வித சிறு கூடைகளை சாதாரணமாய் எங்கும் காணலாம். இவைகள் எங்கும் வைக்கப்பட்டிருக்கும். கழிந்த காகிதங்களை பொறுக்கி அதில் போடுவது ஓர் சன்மார்க்கத்திற்கடுத்த விஷயமாக எண்ணப்படும். பிறகு யாராவது ஒரு பக்தியுள்ள மனுஷன் அதை எடுத்து பக்திவிநயத்தோடு எறித்து விடுவான். அடிக்கடி ஒரு ஏழை மனிதனாவது, படிப்பில்லாத கூலிக்காரனாவது அப்படிக் கீழ பறந்துபோகும் காகிதங்களை பொறுக்கி சுவரிலிருக்கும் துவாரத்தில் சொருகி வைப்பதைப் பார்க்கலாம்.

இதன் விபரம் என்னவென்றால், சீன குருக்கள் தங்கள் எழுத்துக்களை தேவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்றும், Confucius என்னும் பக்திமான் அதை ஒழுங்குபடுத்தி, பரிசுத்தப்படுத்தினார் என்றும், ஆகையால் அவைகளை கேவலமாய் உபயோகப்படுத்தும் போது அது பாவம் என்றும் எண்ணுகிறார்கள்.

இந்த விநோதக் கொள்கையாவது புறதேச புஸ்தகங்களும் காகிதங்களும், செருப்புக்குப் பாதங்களாக உபயோகப்படுத்தாதபடியும், மற்றும் கேவலமான உபயோகத்திற்கும் அவர்களைத் தடுக்கின்றது. அவைகள் அச்சடிக்கப்பட்ட எழுத்துகளானபடியால், கிறிஸ்துமார்க்கப் புஸ்தகங்களைக்கூட கேவலமாய் உபயோகியாதபடி அவர்களைத் தடுக்கின்றது.

---

## CHANGING ENEMIES INTO FRIENDS.

## சத்துருக்களை சிநேகிதராக மாற்றுதல்.

---

ஏறக்குறைய ஒவ்வொருவருக்கும் சத்துருக்களிருக்கிறார்கள் அல்லது இருப்பதாக எண்ணிக் கொள்ளுகிறார்கள். அச்சத்துருக்கள் எல்லாரும் அருமையான சிநேகிதராக மாற்றப்பட்டால் எவ்வளவு மகத்துவமாயிருக்கும்! அடியில் வருகிறவைகளை எழுதுகிறவருடைய அனுபோகம் எல்லாருக்கும் ஒரு படிப்பினையாயிருக்கும். இது தேவையில்லாதவர்கள் யாராவது இருக்கிறார்களா? எல்லாருக்கும் தேவை.

“எதிரிலிருக்கும் மலையின் சமீபமாயிருக்கும் ஏரியைப் பார்த்துக்கொண்டு என் ஜன்னலிலே உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். கீழே நீர்பட்சிகள் பறந்து சத்தமிட்டுக்கொண்டும், அன்னப் பட்சிகள் ஜலத்தில் நீந்திக்கொண்டுமிருக்கின்றன. நான் நடந்து வந்த நீண்டபாதையையும், வழியில் கற்ற பாடங்களையும் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவைகள் என் ஜீவியத்தின் ஒரு பாகமாயிற்று. கர்த்தருக்குச் சித்தமானால், அவர் அழைத்த அந்த ஊழியத்தில் உண்மையாயிருப்பேனென்று நம்புகிறேன். ஒரு பாடத்தை தடையில்லாமல்



உங்களுக்குக் கற்றுக்கொடுக்க விரும்புகிறேன், உங்களில் அநேகர் அதை அற்பமாக எண்ணுவீர்கள், ஆனாலும் அப்படி அற்பமாய் எண்ணுகிற உங்களுக்கு அதி பெரிய ஆசீர்வாதமாய் விளங்கும். ஒரு நாள் இரவு எனக்குத் தூக்கமேயில்லை, படிக்கவும்கூட மனதில்லை. ஓ. அன்று நல்ல நிலா வெளிச்சம்! வானத்தில் நட்சத்திரங்கள் தெளிவாய் காணப்பட்டன. ஏரியின் தண்ணீர் வெகு அழகாய் இருந்தது. திடீரென்று என் வீட்டை நினைத்துக்கொண்டேன். எனக்குத் தெரியாமலே துக்கத்திலிருக்கும் ஒரு சிநேகிதனுக்காகவும், கஷ்டத்திலிருக்கும் மற்றொருவனுக்காகவும், இன்னும் தனிமையாய் இருக்கும் மற்றொருவனுக்காகவும் ஜெபம் பண்ணினேன். திடீரென்று மற்றும் அநேகம்பெயர்கள் என் மனதில் வந்தது. சுருக்கிச் சொல்லவேண்டுமானால், எங்கள் சபையைச் சேர்ந்த ஒவ்வொரு அவயவத்திற்காகவும், அதோடே சம்பந்தப்பட்டவர்களுக்காகவும் ஜெபிக்கும் வழக்கத்தை அன்று இரவே ஆரம்பித்தேன். ஒவ்வொரு இரவும் ஆறு அல்லது ஏழு பேருக்காக ஜெபம் பண்ணுவேன். பகலிலும் மற்றும் அநேகருடைய ஞாபகமும் எனக்கு வரும். உடனே வெறுமையாயல்ல, உள்ளான அன்போடும் அநுதாபத்தோடும் அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் ஜெபிக்கிறதோடு எங்கு இருந்தாலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் அச்சமயத்தில் அவர்கள்மேல் தங்கவும் எப்பொழுதும் கர்த்தர் அவர்களுக்குச் சமீபமாய் இருக்கிறார் என்பதை அவர்கள் உணரும்படியாகவும் விண்ணப்பமும் பண்ணுவேன். கடந்தகாலத்திற்குள் எவ்வளவு அதிகமாய் உங்களோடு நெருங்கி சாவகாசஞ் செய்கிறேன்! உங்கள் அன்பு என் இருதயத்தில் ஊறி என்னைப்பலப்படுத்தினது என்று வெளியரங்கமாய் தெரிய வந்திருக்கிறது. இதைப்பார்க்கிலும் மனதைக் கவரத்தக்க வேறொரு விஷயம் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒருநாள் நான் ஜெபம் பண்ணும்போது, நான் வெறுத்துத் தள்ளின ஒருமனிதனின் பெயர் திடீரென்று என் மனதிற்கு வந்தது. ஒரு சிநேகிதனுக்கு விரோதமாய் ஒரு குரூரமான தீமை செய்திருந்தான். அதைக்குறித்து அவனிடம் பேசினேன், நல்லது: அதைக் குறித்து இங்கு சொல்ல அவசியமில்லை. ஆனால் அந்த நாளிலிருந்து அவனும் நானும் பெரிய விரோதிகளானோம். இப்போது என் சிநேகிதர்கள் மத்தியில் என் சத்துருவின் ஞாபகமும் வந்தது. கிறிஸ்துதான் அவனை அங்கு கொண்டுவந்து நிறுத்தி, அவனை சுட்டிக்காட்டுகிறார்.

இரண்டொரு நிமிஷங்களுக்கு அவன் பேரில் வெறுப்பிருந்தது. பிறகு என் அருமையான சிநேகிதருக்காக ஜெபித்த மாதிரியே அவனுக்காகவும் ஜெபம்பண்ணினேன். மெய்யான தேவாசீர்வாதம் விசேஷித்தபிரகாரமாக அவன் பேரில் தங்கும்படியாக நான் தேவனைக் கேட்டேன். இதுதான் என் ஜெபத்தினாலுண்டான அற்புதம். எனக்கும் அவனுக்கும் மத்தியிலுள்ள சிநேகத்தைக் கெடுத்த பழைய பொறாமையும், எல்லாக்கோபமும் அகங்காரமும் என் இருதயத்தைவிட்டு விலகி, முற்றிலும் வேரோடு அறுந்துபோயிற்று. திடீரென்று தற்செயலாய் நான் ஒரு பெரிய புது விஷயம் ஒன்று கண்டுபிடித்தேன். அதாவது இயேசுக்கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவைப் பின்செல்லுகிற எல்லாருக்குள்ளும் இருக்கும் சிந்தை எனக்குள்ளிருந்தால், எனக்கும் இப்படிப்பட்ட நிலைமை வந்திராது என்பதே. சத்து

ருக்களை சிநேகிதர்களாக் மாற்றுகிற வகையை நான் கற்றுக்கொண்டேன். இந்த ஒரு விஷயத்திலிருந்து மற்றக் காரியங்களை கவனித்தேன். நான் வெறுத்தவர்களுக்காவும், நான் பயந்தவர்களுக்காகவும், நான் பரிகாசமாய் நினைத்தவர்களுக்காகவும், மற்ற ஜனங்களுக்காகவும் இன்னும் யார் யாரை நினைக்கக் கூடுமோ அவர்கள் எல்லாருக்காகவும் எனக்குத் தீமைசெய்தவர்கள், என்னைப் பரியாசம் செய்தவர்கள் என்னைமதியாதவர்கள், என் பசியை ஆற்றாதவர்களுக்காகவும் ஆண்டவரிடத்தில் ஜெபித்ததுமன்றி, அன்போடு நினைத்தேன். இப்போது என் முழு ஜீவியமும் சுத்திகரிக்கப்பட்டு பலப்படுத்தப்பட்டது. முன் ஒழுங்கீனம் அடிக்கடி இருந்த இடத்தில், இப்போது சங்கீத முழக்கமும் சந்தோஷமும் வந்தது.

பிரிய சகோதரரே, உங்களுக்கு ஒரு சத்துரு இருக்கிறதா? எல்லாப்பொறாமையையும், வெறுப்பையும், இன்று இராதபடி நீக்கி உண்மையோடும் ஊக்கத்தோடும் ஜெபிக்கிறதினால் மேற்கொள்ளுங்கள்.

---

## A DEED OF HEROISM.

## ஓர் வீரச்செய்கை.

---

அமெரிக்காவில் பல இடங்களிலும் கொஞ்சக் காலத்துக்கு முன்னே ஒன்றின்பின்னொன்றாய் அநேக சம்பவங்கள் நேரிட்டன. முதலாவதாக ஒரு வகையான சூறாவளிக்காற்று அத்தேசத்தின் மிக்க பாகங்களையும் நிர்மூலமாக்கிற்று. ஓமேகா என்னும் பட்டணத்தில் அக்காற்றினிமித்தம் அநேக வீடுகள் க்ஷணப்பொழுதில் விழுந்தன. மரங்கள் வேர் பிடுங்கப்பட்டு விழுந்தன. தெருக்களெல்லாம் தூளும் தூசியும் மணலும் வாரியிறைக்கப்பட்டது. அநேகர் இறந்துபோனார்கள், நூற்றுக்கணக்கானவர் வீடற்றவரானார்கள். அதற்கு முந்தின நாள் இரவில் எவ்வளவோ செழிப்புள்ளவராயிருந்தவர் அடுத்த நாள் தரித்திரத்துக்குள் அமிழ்ந்து போனார். அதற்கப்பால் மூன்று நாள் மழை ஓயாமல் பெய்தது. ஆறுகளும் நீர்த்தாரைகளும் தண்ணீரால் நிரம்பி, கரைகள் உடைந்து, தடைகள் கட்டவிழ்ந்து, அவை ஓரத்திலிருந்த பட்டணங்களும் நாடுகளும் ஜலத்தால் மூடப்பட்டன. அப்போ மகாகொடிய காலமாயிருந்தது; சில குடும்பங்களை தண்ணீர் அடித்துக்கொண்டுபோயிற்று. ஒரு குடும்பத்தில் சிலர் காணாதேபோனார்கள், சிலர் ரட்சிக்கப்பட்டார்கள். சிலரை ரட்சிக்கிறதற்கும், உதவி அனுப்புகிறதற்கும் கொஞ்சக்காலம் கூடாதே போயிற்று. ஏனெனில், அந்த நீரோட்டத்தின்மேல் ஒரு வள்ளமும் செலுத்த முடியாமற் போயிற்று. ஏழைகளும், ஐசுவரியவான்களும் ஒன்றுபோலவே பசியையும் தாகத்தையும் சகிக்கவேண்டியதாயிருந்தது. பட்டணத்திலுள்ள விளக்குகள் அணைந்துபோயிற்று. அநேகர் ஆகாரமோ அல்லது வேறெந்த ஆதரவுகளோ தங்களுக்கு வந்தெட்டக்கூடாதவிதமாய் அடைபட்டுப்போனார்கள். சில விடங்களில் நெருப்பு பற்றி எரிந்தது; அதை ஒருவரும் அணைக்கவோ நிறுத்தவோ முடியவில்லை. இதினால் ஜனங்களுடைய மோசமும் நாசமும் பெருகிக்கொண்டே போனது. இப்படிப்பட்ட ஆபத்தான துன்பகாலத்திலே அநேக வீரியமுள்ள சுயவெறுப்பான கிரியைகள் காண்பிக்கப்பட்டன. அடியில் ஒரு கறுப்பு மனிதன் பெண்சாதி பிள்ளை-



யோடு தனக்குள்ள எல்லாவற்றையும் வெள்ளத்தில் இழந்துவிட்டதை சொல்லுகிறோம்.

டேற்றன் (Dayton) பட்டணத்திலுள்ளதை நீரோட்டத்தின் பெருக்கு அடித்துக்கொண்டுபோகையில், ஒருமனிதனும் அவன் மனைவியும் நாலு பிள்ளைகளும் ஒரு பிரயோஜனமற்ற மரக்குவியல்மேல் தொத்திக்கொண்டிருந்தார்கள். அம்மரம் ஒரு பலத்த அலையில் அகப்பட்டுக்கொண்டு ஒரு நிமிஷத்துக்குள் சுக்கலாக்கப்படுகிற நிலைமையிலிருந்தது. கரையருகே நின்ற கும்பலான மனிதர் முகங்கள் திகிலால் வெளிறிப்போய், அலையில் சுழன்று வருபவர்களை கவனித்துக்கொண்டிருந்தார்கள். எல்லாருங் கூட்டங்கூடி, மரக்கட்டையைப்பிடிக்கப் பிரயாசப்படுவது கூடாதகாரியம். இன்னும் அநேக உயிர்களை மாய்ப்பது முட்டாள்தனமான செய்கை. அதைவிட மடிந்துபோக விட்டுவிடுவது நலம் என்று பேசித்தீர்மானித்தார்கள். இந்த கும்பலின் மத்தியில் ஒரு கறுத்தமனிதன் இருந்தான். அவனுடைய மனைவியும் பிள்ளையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுப் போனதால் மனம் உடைந்து மயங்கினவனாய் நின்றான். மரக்கட்டையின்மேல் இருந்த குடும்பத்தாரின் ஸ்திரியைக் கண்டவுடனே, மற்றவர்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று தீர்மானித்தாலும் ஒருவருக்கும் தெரியாமல் நழுவிப்போய், ஒரு படவை ஆயத்தப்படுத்திக்கொண்டு, அலையின் எதிர்முகமாய் படகுவலித்துக்கொண்டு அந்த குடும்பத்தை ரட்சிக்க நீரோட்டத்தை எதிர்த்துக்கொண்டே போனான். வழி தப்பி, அலைமார்க்கமாய் அதிக தூரம் போய் திரும்ப கரைவந்து சேர்ந்தான். கொஞ்சநேரம் சுவாசம் எடுத்துக்கொண்டு திரும்ப மனோதிடமுள்ள தைரியத்தோடுபுறப்பட்டுப்போனான். இத்தடவை மரத்துண்டுக்கு சதுரமாய்ப் போய் ஒரு ஸ்திரீயையும் இரண்டு குழந்தைகளையும் தன் படவுக்குள் எடுத்துக்கொள்ள முயன்றான். அதிக பயங்கரமான கஷ்டத்தோடு கரையடியில் இவர்களைக் கொண்டுவந்து விட்டான். அவன் அதிகம் களைத்து இளைத்துப்போயிருந்தாலும் விடாதைரியத்தோடும், மனுஷபெலத்திற்குமேலான பெலனோடும் திரும்ப அலையின் எதிர்முகமே போய், கூட்டத்தார் கவனித்துக்கொண்டிருக்கையில் தைரியமான சண்டை புரிந்து, மூச்சுங்கூட அடங்கினவனாய் மீதியாயிருந்த தகப்பனையும் இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்றி சுகமாய் கரையில் கொண்டுவந்து விட்டான். வலிக்கிற தண்டுகளை கீழே போட்டுவிட்டு அதிக பெலனற்றவனாய் போகும்படி யத்தனித்தான். ஆனால் ஜனங்களோ ஆச்சரியப்பட்டவர்களாய் சந்தோஷத்தினால் பொங்கி இவனை போகாதபடி தடுத்தார்கள். உடனே ஒரு தொப்பியை நீட்டி இருநூறு ரூபாய் சேகரித்து இவனுக்கு கொடுத்தார்கள். இவனால் மீட்கப்பட்டவன் தாராளமாய்க் கொடுத்தான். இந்தப் பணத்தைக் கொடுக்கவந்த போது கண்ணீர் தாரை தாரையாக ஓட அதை தள்ளிவிட்டு நான் பணத்திற்காக வேலைசெய்யவில்லை என்று சொல்லிவிட்டான். அது ஒன்றுமில்லை என்று எண்ணினான். ஏனென்றால் பங்குபெற அவனுக்கு வீடு, மனைவி பிள்ளையில்லை. அந்நேரமுழுவதும் ஜனங்களெல்லாரும் இப்படி மற்றவர்களுக்காக துணிந்துபோய் வந்த மனிதனைப் பார்க்கவேண்டும் என்று நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். திடீரென்று "தகப்பனே" "தகப்பனே" என்று

ஒரு பரிதாபமான குரல் கேட்டது. கூட்டம் பிரிந்தது. ஒருவிதமான அதிசய வெளிச்சம் இந்த க்றுத்தமனுஷன் முகத்தின் கண்ணீரில் பிரகாசித்தது. ஆனந்த அழுகையோடு தனது மனைவிமக்களை தன் கையில் அணைத்துக்கொண்டான். இவர்களை இன்னொரு வீரியன் வெள்ளத்தினின்று மீட்டு ரட்சித்திருந்தான்.

---

YOU CAN'T RULE IT OUT.

## நீ அதை அழித்துவிட முடியாது.

---

கொஞ்சக் காலத்திற்கு முன்னே நான் வாசித்த ஒரு சிறு சங்கதி மனதிற்கு ஒரு பெரிய சத்தியத்தை அழுத்திக் காட்டுகிறது.

ஒரு பணக்கார இளம் வாலிபன் அதிக விலையுயர்ந்த கண்ணாடிப் பீங்கானால் செய்யப்பட்ட ஜன்னல் முன்னே சோம்பலாய் நின்றுகொண்டு தன் கைவிரலில் போட்டிருந்த வைரக்கல் மோதிரத்தால் கண்ணாடியைக் கீறிக்கொண்டிருந்தான். ஒரு சிறு தெருப்பையன் இவனை சற்று நேரமாய் கோபத்தோடு பார்த்துக்கொண்டிருந்து, கடைசியாய் ஜன்னலைக்கோரப்படுத்தும் பெரியவனைப் பார்த்துச் சொன்னதாவது: "அப்படி இனிமேல் நீ செய்யவேண்டாம், என்னத்திற்காக அப்படிச் செய்கிறாய்?" "நான் செய்ய விரும்பினால் செய்வேன் என்று நினை. ஏன் கூடாது? ஏன் செய்யாமலிருக்கவேண்டும்?" என்று அந்த பெரியவன் சொன்னான். அச்சிறுவன் "ஏனென்றால்," மிகவும் ஆத்திர குரலோடு "ஏனென்றால் நீ அதை திருப்பி அழித்துவிட முடியாமற்போகும்" என்று உத்தரவளித்தான்.

மனுஷ குணமும் அந்த ஜன்னலைப்போல தெளிவாய், பழுதற்றதாய், ஒளியுள்ளதாய், சமமானதாய் இருக்கிறது. இதன்மேல் ஒவ்வொரு நினைவும், வார்த்தையும், செய்கையும் அதனதன் அடிச்சுவடுகளை விட்டுப்போகிறது. முகத்தை சினந்துபோகப்பண்ணும், பிறர் சந்தேகிப்பார்களே என்கிற குற்றமுள்ள எண்ணத்தை உண்டாக்கும் அந்த அசுத்த நினைவு, சுத்தமான பளிங்கை ஊடறுத்துச் சென்று தன் காணாத கீறலை பின் விட்டுப்போகிறது. யாராவது ஒருவருக்கு சொன்ன பட்சமற்ற வார்த்தை சொல்லப்பட்டவருக்கு மாத்திரம் மனவருத்தத்தை உண்டாக்காமல் இதற்குமுன் கறைப்படாத உன்னுடைய குணத்தில் ஒரு மாசு உண்டுபண்ணி விடுகிறது. இதில் மோசமானது என்னவென்றால் இப்படி உண்டான காணப்படாத கீறல்கள் ஒன்றாவது அழித்துவிடப்படாது. நாம் விரும்புவதுபோல பிரயாசப்படலாம். ஆனால் நம்முடைய குணத்தில் அன்றாடக ஜீவியங்கள் உண்டாக்கும் கறைகளை எடுத்துவிட முடியாது.

---

ARE YOU A GOOD NEIGHBOUR?

## நீ ஒரு நல்ல அயலானா?

---

சத்திரத்தில் இராத்தங்கின ஒரு மனிதனைப்பற்றி ஒரு கதை சொல்லப்படுகிறது. இவன் எவ்விடத்திலிருந்து வந்தான் என்றும், இவன் அயலார் எப்படிப்பட்டவர்கள் என்றும் அவ்விடத்து முதலாளி கேட்டான். இரண்டாவது கேள்விக்கு மாறுத்தரமாய் "எனக்கு ஒற்றுமையில்லாத அயலகத்தார் இருக்கிறார்கள், அவர்களோடு பொருந்திப் போக முடியவில்லை என்று சொன்னான்." "இப்போது போகும் இடத்திலும் அப்பேர்ப்பட்ட மனிதர்தான் இருக்கிறார்கள்" என்று சத்திரத்து முதலாளி சொன்னான். அவ்விடத்திற்கு போகவந்த இரண்டாவது மனிதனிடத்தில இதே கேள்வி கேட்கப்பட்டது. "எனக்கு நல்ல அயலகத்தார் உண்டு. அவர்கள் பட்சமாயும் ஒற்றுமையாயும் இருப்பார்கள்" என்று பதில் சொன்னான். அதற்கு சத்திரக்காரன் "நீ போகும் இடத்தில் அப்பேர்ப்பட்டவர்களைக் காண்பாய்" என்றான். முதலாவது வந்த மனிதன் அதெப்படியாகும் என்று கேட்டதற்கு ஒருவனின் அயலான் நல்லவனாய் அல்லது பொல்லாதவனாய் இருப்பதின் இரகசியம் அயலானைவிட இவனில் இருக்கிறது என்று சத்திரக்காரன் சொன்னான்.—இந்திய ஐக்கிய சீர்திருத்தனிலிருந்து.

---

THE TWO BROTHERS.

## இரண்டு சகோதரர்கள்.

---

சகோதரர் இருவர் தங்களுடையபெயர் ஒரு காலமும் மறந்துபோகாதிருக்க வேண்டுமென்றும், தங்களுடைய பெயர் வெகுதூரம் பிரஸ்தாபமாகவேண்டுமென்றும் விரும்பி இதற்காக ஏதாகிலும் ஒரு விசேஷித்த காரியத்தை நடத்தவேண்டுமென்று தீர்மானித்ததாக ஒரு கதை உண்டு. ஒருவன் பெயர் ஓமார், மற்றவன் பெயர் ஆமத். ஓமார் என்பவன் அதிகப் பிரயாசப்பட்டு மிக்க சாமர்த்தியத்தோடும் புத்தியோடும் ஒரு அலங்காரமான ஞாபகஸ்தம்பம்கட்டி அதில் நேர்த்தியான கொத்து வேலைகள் செய்து, அநேக நூதனமான மேலெழுத்துக்கள் நாலு பக்கத்திலும் வரைந்து வைத்தான். வெகுநாட்களாய்ப் பிரயாசப்பட்டபின் அந்த ஸ்தம்பம் கட்டிமுடிக்கப்பட்டு வெப்ப வனாந்தரத்தில் நின்றது.

ஆனால் ஆமத் அதிக வித்தியாசமான ஒரு வேலையைச்செய்ய ஆரம்பித்தான். அவன் மணலான பாழ்நிலத்தில் ஒரு ஆழமான கிணற்றை வெட்டி அதைச் சுற்றிலும் உயரமாய் வளர்ந்த பேரிச்சமரங்களை நாட்டினான். களைப்படைந்த பிரயாணி இம்மரங்களால் குளிர்ந்த நிழலை அடையவும், மரங்களை அசைத்து இனிய பழங்களால் தன் பசியை ஆற்றிக்கொள்ளவும், ஜலத்தை அருந்தவும் இப்படி செய்தான்.

இவ்விரு சகோதரரிலும் தன்னுடைய பேரை ஞாபகப்படுத்தவும், தன்னுடைய கீர்த்தி எங்கும் பிரஸ்தாபமாகவும், சரியான வழியை எவன் தெரிந்துகொண்டானென்று எளிதில் அறிந்துகொள்ளலாம். ஓமாருடைய ஞாபகசின்னத்தைப் பார்த்து ஒருவன் பிரமைகொண்டிருந்தால் நூறு தாகமுள்ள வழிப்போக்கர்கள் ஆமத் வெட்டின கிணற்றுக்காக நன்றியறிதல் செலுத்துவார்கள். அநேக வருஷங்களுக்குப்பின் கல்லால் வெட்டப்பட்ட அந்த ஞாபக சின்னம் கீழே விழுந்து தூள்தூளாய்ப் போனாலும் கிணறோ குளிர்ந்த இனிய ஜலத்தை கொடுத்துக்கொண்டே இருக்கும்.

நாம் ஒவ்வொருவரும் செய்யும் அன்பின் கிரியைகள் வனாந்தரத்திலுள்ள அந்தத் தெளிவான ஆசீர்வதிக்கப்பட்ட தண்ணீரைப்போலிருக்கிறது. இப்படிப்பட்ட செய்கைகளினால்தான் நாம் ஒருவரையொருவர் சந்தோஷப்படுத்துகிறோம். இவைகளினால்தான் நாம் அதிக காலம் நினைவுகூரப்படுவோம்.

## பாரசீக தேசத்து ஸ்திரீகள்.

பாரசீக தேசம் எங்குள்ளது. பம்பாய் பட்டணத்தை அறிந்திருப்பீர்களே. அத்திரு நகர்க்கு வடக்குசென்று பின் மேற்குமுகமாய் பிரயாணம் செய்தால் ஏறக்குறைய 200-மைல் தூரத்தில் பலுஜிஸ்தான் தேசத்து தலைநகராகிய காபூல் பட்டணத்தைக் காணலாம். அங்கிருந்து ஆயிரம் மைல் மேல்நோக்கி சென்றால் டெயிரன் பட்டணம் சேரலாம். அதுவே அப்பாரசீக தேசத்தின் தலைநகராம்.

அத்தேசத்துக் குடிகள் அயர்ந்த நித்திரையிலிருந்து விழித்தார்கள் எனலாம். இதைப்பற்றி ஒருவர் கூறுவதாவது:— பெர்ஷியா தேசம் 1905-ம் வருஷம் வழியருகே தூங்கிக்கொண்டிருந்தது. உறக்கம் அல்ல நித்திரையே. நூற்றாண்டுகளாய் கவலைத்தாழ்ச்சியால் உண்டான அயர்ந்த நித்திரை. தேச ஆசார பழக்க வழக்கங்களே தன் தலையை மூடிக்கொண்டிருந்தது. ஆகையால் தன் சிரசை சுற்றி நாய்கள் சண்டைபோட்டிருந்தும் கழுதைகளும் கோவேறு கழுதைகளும் தன் கால்களை மிதிப்பதுபோல் நடமாடியும் யாதொரு உணர்ச்சியின்றி தூங்கினது பாரசீகம் (என்றார்).

இப்போதோ அத்தேசம் விழித்துக் கொண்டது. அந்த விழிப்பில் நன்றாய் தெளிவடைந்தவர்கள் ஸ்திரீகளே. இதற்கு அத்தாட்சியாக அவர்கள் உடைகளில் காணும் மாறுதல்களே யாவரும் எளிதாய் காணும் காட்சி. சில விஷயங்களில் இம்மாறுதல் மெச்சத்தக்கதெனினும் அதைப்பற்றி குறைவு கூறவும் இடமுண்டு. ஒருதேசம் தான் நீடூழியாய் அனுசரிக்கும் நடை உடையை விட்டு புற உடுப்பை நாடும்போது அது எப்போதும் விசனிக்கத்தக்கதே. அநேக விஷயத்தில் ஒருதேசத்துக்குரிய பழைய நடை உடை பாவனையே அத்தேச ஸ்திரீகளுக்கு லக்ஷணமாயும் ஏற்றதாயுமிருக்கிறது. முழு முகத்தையும் மறைக்கும் முக்காட்டுக்குப் பதிலாக மெல்லிய சல்லாவை உபயோகிப்பது உசிதம். பாதரக்ஷைகள் கால்விரல்களை மாத்திரம் மூடி தரையோடு தேய்ந்தோடும் விதமாயிருப்பதைவிட சற்று வலுவாயும் உயரமாயும் செய்யப்பட்டிருப்பது நலம். சில வருஷங்களுக்கு முன்னே ஒரு ஸ்திரீ தொடும்படியாய் செருப்பு போடுவாளேயாகில் பலர் பழிக்கும் மிரட்டலுக்கும் அஞ்சும்படி நேரிடும். அதே தேசத்தில் அவர்கள் தங்கள் முகங்களையே மூடிச்செல்வது யாருக்கும் கனவீனமில்லையாம். மேலும் இந்த ஸ்திரீகள் ஐரோப்பிய உடுப்பை உடுத்திக்கொள்ளும்போது அவைகள் சரியானவண்ணம் உடுத்தப்படாததினால் தங்களுக்கிருக்கும் இயற்கையான அழகையும் இழந்து விடுகிறார்கள். உதாரணமாக ஒரு வாலிபஸ்திரீ தன் பிரியத்திற்கேற்ற ஒரு புது மாதிரி உடுப்பை உடுத்தி காலில் சடா போடாமல் தன் தேசத்திற்கேற்ற முழு முக்காட்டையும் இட்டுக்கொண்டு வீதி வழியாக நடக்கத் தலைப்பட்டாள். அவ்வித விநோதவிதமாய் பலமுறை நடந்துவந்ததினால் பலர் அவள் மேல் குறைகூற அதினால் அவள் அவ்வுடுப்பை தள்ளிவிட்டாள். அவள் அவ்வுடுப்பில் திரியும்போது அநேகர் அவளை தங்கள் தேசத்தை ஆண்ட சக்கிரவர்த்தி மாறு ரூபங்கொண்டிருக்கிறார் என்று நினைத்தார்களாம். விருந்தினரை உபசரிக்கிற விஷயத்திலும் அந்த ஸ்திரீகளில் அநேக மாறுதல்கள் காணலாம். உணவு உண்டிகளிலே மாறுதல்கள். தங்கள் பூர்வீக பழக்கத்தைபோல கண்ணாடி பாத்திரங்களை விட்டுவிட்டு கோப்பைகளில் பானங்களை பரிமாறுகிறார்கள். மேலும் பரிமாறுகிறவர்கள் முன்காலத்தைப்போல வேலைக்காரர்களில்லாமல் வீட்டு பெண்களே. இவைகளையெல்லாம் காணும் முதிய ஸ்திரீகளும் கிழவிகளும் தங்களுக்குள் பேசிக்கொள்வதாவது "எங்கள் காலத்தில் பெண்களுக்கு கல்விச்சாலைகளேது. ஒரு சலாக்கியமுமில்லை. பத்து பன்னிரண்டு வயதில்



வாழ்க்கைப்பட்டோம் என்று இவ்வாறாக விசனித்து, காலங்கள் இவ்விதம் மாறுகிறதற்காக ஆச்சரியமும் சந்தோஷமுமடைகிறார்கள். தற்காலத்தில் 14, 15-வயது பெண்கள் பள்ளிக்கூடம் செல்வதைக் கண்டு அவர்களின் தாய்மார்கள் பிரீதி கொள்கிறார்கள். ஆண்பிள்ளைகளைப்போல பெண்பிள்ளைகளும் முன்னுக்கு வருவதே அவர்கள் தாய்மார்களின் நோக்கம். ஒரு மிஷனரி அம்மாள் முதல் பேறு பெற்ற ஒரு ஸ்திரீயிடம் சென்று சம்பாஷித்து ஊடே 'அம்மா நீ பெண்பிள்ளை பெற்றதற்காக விசனமடைகிறாய் அல்லவா' என்று வினவ அவள் பெருமாட்டி, என் தேசத்திற்கு பெண்களை பெற்று வளர்த்து கொடுப்பதைவிட வேறு எது உயர்ந்தது. நல்ல தாய்மார்களினால்தான் தேசம் விர்த்தியடையும் என்றுரைத்ததைக் கேட்டு அந்தம்மாள் வியப்படைந்தாள்.

மேலும் கல்விப் பயிர்ச்சியில் ஸ்திரீகள் மிக்க முன்னுக்கு வருகிறார்கள். பத்து வருஷத்திற்கு முன்னே அந்த டெயிரென் என்னும் முக்கிய பட்டணத்திலே ஒரு சுதேச பள்ளிக்கூடமும் கிடையாது. அத்தேசப் பெண்கள் மிஷன் பள்ளிக்கூடத்திற்கும் வந்ததில்லை. இவ்வருஷத்திலே 160 பெண்கள் மிஷன் பள்ளிக்கூடத்திற்கு வருகிறார்கள். அப்பட்டணத்திலே இப்போது 70-பெண் பாடசாலைகள் ஏற்பட்டு 5,000 பெண்கள் படித்து வருகிறார்கள். இப்பள்ளிகளில் அநேகம் எளியவைகள் எனினும் கூடிய சீக்கிரம் விர்த்தியடைய ஏதுவுண்டு. இப்பள்ளிக்கூடங்கள் ஏற்பட்ட துவக்கத்தில் அநேக இடையூறுகள் நேர்ந்தன. ஆனால் பெண்பிள்ளைகள் படிப்பின்பேரில் கொண்ட வாஞ்சையானது சகல எதிர்ப்பையும் அடக்கிக்கொண்டே வருகிறது. பிதாக்களும் சகோதரர்களும் பெண்பிள்ளைகளின் கல்வி விர்த்திக்கு அதிக ஏதுகாரணமாயிருக்கிறார்கள். படித்த பெண்களை மணம்புரிய அநேகருக்கு ஆசை.

மேலும் அத்தேசத்து ஸ்திரீகள் இராஜாங்க விஷயத்திலும் அதிக உதவி புரிகிறார்கள். சற்று ஒரு வருஷத்திற்கு முன்னே ருஷியா தேசத்தால் அபாயம் தோன்றினபோது இந்த ஸ்திரீகள் புருஷர்களை நன்றாய் தேற்றி எதிராளியை தடுக்கச் செய்தார்கள். அந்நாட்களில் அவர்கள் பவுஞ்சு பவுஞ்சாய் மசூதிகளில் சென்று ஜெபித்தார்கள். தங்களுக்கு பிரத்தியேகமாகவுள்ள அறையிலே தேசாபிமானத்தைப்பற்றி உபந்நியாசித்தார்கள். தூரத்திலிருந்து செவியுற்ற புருஷர்கள் அப்பிரசங்கங்களை கேட்டு வாங்கி வந்திருக்கும் மனிதர்களுக்கு உரத்த சத்தமாய் வாசிப்பார்களாம்.

இவ்வித குணமும் பலமும் வாய்ந்த பாரசீக ஸ்திரீகள் தங்கள் காலத்திலே தங்கள் தேசத்தை வெளிச்சத்திலும் சுயாதீனத்திலும் வழி நடத்துவார்கள் என்பதை அவர்களை நன்கு அறிந்த நாம் நம்புவது எளிது.

---

## CHILDREN'S PAGE.
## பிள்ளைகளின் பக்கம்.

### SOMETHING YOU CAN DO.
### நீ செய்யக்கூடிய ஏதாவதொன்று.

பிரட் என்பவன் அறைக்குள் வரும்போது தான் செய்த ஒரு மேசையை கொண்டுவந்தான். அதற்கு வர்ணம் பூசவில்லை. அதை அவன் அடுப்பண்டையில் அதனுடைய மேல்பாகத்துக்கு அனல் படக்கூடிய விதமாய் வைத்தான். அவன் பின்னால் பாப் என்பவன் தன் கையில் ஒரு சதுரக் கண்ணாடியை வைத்துக் கொண்டு வந்தான்.

பிரட் "யாராவது இரண்டு புஸ்தகம் கொண்டு வாருங்கள்" என்றான்.

பெற்றி என்பவள் அப்படியே கொண்டுவந்தாள். அவன் அவைகளை மேசையின்மேல் அக்கண்ணாடிக்கு எதி

ரேவைத்தான். "பாவைகளை செய்துவிட்டாயா" என்று மாலியைக் கேட்டான்.

மாலி என்பவள் உடனே ஒரு புஸ்தகத்தை திறந்து அரிசியினாலும் வெள்ளிசரிகைக் கடுதாசியாலும் செய்யப்பட்ட போலி ஆண்களையும் பெண்களையும் காண்பித்தாள். அவைகள் எல்லாம் முக்கால் அங்குல நீளம்தானும் இல்லை. மாலியினுடைய நேர்த்தியான வேலையைப் பார்த்து "வெகு நேர்த்தி" என்று பிரட் மெச்சிக்கொண்டான்.

அப்புறம் அவன் அச்சிறு மனிதரை கிட்டகிட்ட, மேசையின்மேலும் அவர்களறையின் கூரையை மூடியிருந்த கண்ணாடியின் கீழும் வைத்தான். அப்புறம் "இப்போ நான் எலக்டிரிஸிற்றி என்னும் மின்சார சக்தி என்ன கிரியைகளை செய்யக்கூடும்" என்பதைக் காண்பிக்கப் போகிறேன் என்றான்.

அப்புறம் ஒரு உலர்ந்த கறுப்பு பட்டு கைக்குட்டையை எடுத்து அக்கண்ணாடியை நன்றாய்த் தேய்த்தான். சிறிது நேரத்திற்குள் அச்சிறு மனிதர் தங்களுடைய அறையின் கூரைவரையும் குதித்தார்கள்.

அப்போ பெற்றி "அவைகள் ஆடுகின்றனவே" என ஆச்சரிய மொழி கூறினாள்.

அப்போ பிரட் "ஆம் அவைகள் நான் தேய்த்ததினால் உண்டான மின்சார சக்தியினால் இழுக்கப்படுகின்றன, அவைகள் சீக்கிறம் மறுபடியும் விழுந்துவிடும்" என்று விஸ்தரித்துக் கூறினான்.

பிரட் சொன்னபடியே நடந்தது. அப்போ அவன் திரும்பவும் கண்ணாடியைத்தேய்த்தான், மறுபடியும் அப்போலி மனிதர்கண்ணாடியண்டை குதித்து விளையாடினதைப்பார்த்து அச்சிறுவர் சந்தோஷித்து நகைத்தார், அதன் பின்னர் பிரட் கண்ணாடியை தொட்டவுடன் அவை அசைவுற்றன.

பின்னும் பிரட் "இச்செய்கை பிசகாமல் நடக்கவேண்டுமானால் குட்டையை உலர்ந்ததாயும், மேஜையை அனலாயும் வைத்துக்கொள்ளவேண்டும்" என்றான்.

அப்புறம் அப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் அவ்விதமாகத் தாங்களே செய்து சந்தோஷித்தார். பிரட் மின்சாரத்தின் சக்தியை இன்னொரு விதமாய் பரீட்சிக்கலாம் என்று சொல்லி இரண்டு கண்ணாடி ஜலபாத்திரம் கொண்டுவந்தான்.

அப்புறம் பிரட் "நான் இப்பொழுது இந்த குழலை தொடாமலும் அல்லது ஊதாமலும் மேசையை அசைக்காமலும் அதைக் கீழே விழப்பண்ணுவேன்" என்றான்.

அப்புறம் அவன் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை தன்னுடைய சட்டைகையில் நன்றாய்த் தேய்க்கவே அக்கண்ணாடிக்கு மின்சாரம் உண்டானது.

அவர்கள் அவனைப் பார்த்துக்கொண்டிருக்கவே குழாய்முன் அவன் அக்கண்ணாடியைக் கொண்டுவந்தான். ஆனால் அதைத் தொடவில்லை. அக்குழாய் கண்ணாடியின் நேரே திரும்பினது. அப்புறம் அதைத் தொடர்ந்து வந்து கீழே விழுந்து விட்டது.

அப்போ பெற்றி "நான் செய்துபார்க்கட்டும்" என்று விரும்பிக் கேட்கவே பிரட் அவள் அதைச் செய்யும்படிவிட்டான். அவள் குழாயைத் தொட்டாள், உடனே அது விழுந்துவிட்டது.

"ஐயோ அது உடைந்துவிட்டதே" என்று கூச்சலிட்டு, விசனத்தினால் கண்ணீர் விட்டாள். அப்போ பிரட் "அதற்குக் காரியமில்லை. நாம் இன்னொருநாள் மின்சார சக்தியை காண்பிக்கும் உதாரணம் காண்பிக்கலாம்; ஆனால் உடையக்கூடிய் பொருளினாலல்ல, உடையாத பொருளினால் பண்ணலாம்" என்றான்.

இதினால், இப்பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஏதாவதொரு சிறு வேலை செய்து, கடைசியில் எல்லாரும் சந்தோஷப்பட்டதை தெளிவாய்ப் பார்க்கலாம்.

Vol.XXVII. Registered No. M. 209 No. 8

FEBRUARY, 1914

# மாதர் மித்திரி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 29 APR 1914 MADRAS.

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance.* Postage for a single copy for one year is 3 annas *in advance,* Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance.* Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House,* MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | 115 |
| சின்ன சுமதி .... .... .... .... | 116 |
| நாம் எதைச் சாப்பிடவேண்டும்? எவ்வளவு சாப்பிடவேண்டும்? | 120 |
| விதைப்பும் அறுப்பும் .... .... .... | 122 |
| கர்த்தருடைய பாதுகாப்பில் .... .... .... | 122 |
| பல் முளைத்தல் .... .... .... .... | 122 |
| அன்பினால் சத்தியத்தைப் பேசுதல் .... .... | 124 |
| வர்த்தமானக் குறிப்புகள் .... .... .... | 125 |
| கோஜாவைக் குறித்துள்ள கதைகள் .... .... | 127 |



OFFICE OF THE ... OF BOOKS
20 APR 1914
MADRAS


# மாதர் மித்திரி.


புத். ௨௭. ௧௯௧௪ ௵ - பெப்ருவரி ௴. இல. ௮.


## PREACHING OF JOHN THE BAPTIST.

இராகம், பைரவி. அடதாளசாப்பு.

**பல்லவி.**

வான ராச்சியம் வந்ததோகோகோ!
மாந்தரே, தவம்செய்யும்; ஓகோகோ!

**அனுபல்லவி.**

ஆன சாட்சி, தியான சூட்சி, மெய்ஞ்
ஞான காட்சியர் தோன்றினார்;— வான

**சரணங்கள்.**

1. மன்னவன் கிறிஸ்தாநுபன் வந்தார்,
வாகுறப் பவமே ஒழிந்திடவே குணப்படுவீர்களே;
என்னிலும் பெரியார், வலியார் அவர்
இந்நிலந் திடை மேவினார்; உயர் உன்னதக் கிருபை ஆழமே!— வான

2. பிந்தி வந்தவர் முந்தி இருந்தவர்;
பேசரும் பொருளார், பரம்பர நேசர், நம் சரணம்பரர்,
சுந்தரப் பரிபூரணர், காரணர்,
ஜோதிசொந்த அனாதி மைந்தன் இம் மாநிலந்தனில் மேவினார்.— வான

3. அண்ணலார் பாத ரட்சையின் வாரையே
அவிழ்க்க, வாய்மையில் எடுக்க, அல்லது சுமக்கப் பாத்திரன் அல்ல நான்;
திண்ணம் என் முழுக்கோ ஜலத்தீர்த்தமே;
தீயினாலும் அரூபியாலும் ஸ்நானமே அவர் ஈகுவார்.— வான

4. வேதமார் பரிசேயர் சதுக்கேயரே,
வீம்புத் துட்டமுறு தீம்புக் கெட்டகுண பாம்புக்குட்டி விரியன்களே,
போதவே வரும் கோபத்துக்குத் தப்பிப்
போவதைத் திடமாய் உமக்கிது போதிவித் தெவர் காட்டினார்?— வான

5. மரத்தின் வேர் அருகே முன் கோடாலியும்
வைத்திருக்குது, பத்திரத்துடன் எச்சரிக்கை விடாதேயும்;
வரத்தில் நற்கனி தான் தருகாத் தரு
வைத்திடக் கிட வெட்டி மிக்கழல் அக்கினிக் கிரையாக்குவார்.— வான

6. தூற்றுக்கூடை கரத்தில் இருக்குது;
துறையினில் தமதுரிய நற்களம் அற விளக்கி, அறுதியிலே
தேற்றக் கோதுமை கேயத்தில் சேர்த்துமே
தியதூர்ப்பதர் ஆனதைத் தழலால் எரிப்பர் இந்நேரமே.— வான

வே. சா.

LITTLE SUMATI.

## சின்ன சுமதி.

சுமதி என்னும் சிறுமி அவ்வளவு அழகுள்ளவளல்ல. அவளுடைய தலைமயிர் கறுப்பாயும், கண்கள் பாரமானவைகளாயும், பார்வை அதிகம் தீமையை பார்த்தவைபோன்றதாயும் இருந்தன. கேவலமான ஜீவியத்திற்கென்றே அவள் தயாராக்கப்பட்டாள்.

தாயாரென்று சொல்லப்பட்டவளோ, அதிக சிற்றின்பப் பிரியமுள்ளவளாயும், மகாக் கேவல நடத்தையுடையவளாயுமிருந்தாள். தான் எதிர்பார்க்கும் காரியங்களைக்கொடாதவர்களுடன்வெட்கங்கெட்டவிதமாயும், வம்புத்தனமாயும், முரட்டுத்தனமாயும் நடந்துகொள்வாள். தன் மாயவலைக்குள் ஆட்களை வசப்படுத்த விரும்பும்போதும், ஏதாவது அவர்களிடத்தில் கைப்பற்ற விரும்பும்போதும், அதிக முகஸ்துதி செய்வாள். கேவலமான எந்த வேலையையும் செய்வாள். சுல்டான்பூர் என்னும் பட்டணத்தில் அதிக தீமையான விஷயங்களை நடத்தி வந்தாள். நடனமாடுவதினாலும், தீட்பான பாடல்களைப் பாடுவதினாலும், தன்னாலியன்றதைச் சம்பாதிப்பாள். இவ்விதமான ஜீவியத்திற்கென்றே சுமதி சிறுமியும் பழக்கப்பட்டு வந்தாள். இவ்வயசிலே தன்னுடைய நடனத்தினாலும், பாடல்களினாலும், தன் தாயாரின் ஆதாயத்திற்கென்று ஜனங்களைத் திரட்டுவாள்.

ஆனால் மெக்டுகல் மிசியோ, அவளை அடிக்கடி சந்திப்பார்கள். பத்துவயதிற்குட்பட்ட இச்சிறுமியின் நிலைமையை நினைத்து அடிக்கடி பரிதபிக்கிறதுண்டு. இவளை ஆதாயப்படுத்துகிறதற்கு வழியுண்டோவென்று யோசிப்பார்கள். அடிக்கடி இச்சிறுமியை தன் வசத்தில் ஒப்புவிக்கும்படி, இவளின் தாயாரை கேட்டார்கள். மனச்சாட்சி சூடுண்டிருந்த அந்தக் கிழவியின் மனதை திருப்புவது அசாத்தியமாயிருந்தது. ஆனால் ஒரு தினத்தில், வழியருகே, இந்தக் கிழவி அழுதுகொண்டிருந்தாள். காரணமென்னவோவெனில், இவளுடைய பொய்ச்சிநேகிதர்கள் இவளை இம்சைப்படுத்தி அடித்தார்கள். இப்போது தான் நம்பியிருந்த சிநேகிதர்கள் தன்னை கைவிட்டதினால், தன்னுடைய நிலைமை அதிக நிர்ப்பந்தமாயிருந்தது என்று கண்டாள். தந்திரசாலியான இந்தக் கிழவிக்கு, ஒரு புது ஆலோசனை தென்பட்டது. அது என்ன? தன்னுடைய புதல்வியை மிஷனருக்குக் கொடுத்துவிட்டால், பிற்பாடு தன்னையும் சேர்த்துக்கொள்வார்களென்பதே. அப்போது, தான் தன் ஜீவனார்த்தத்துக்கென்று ஒன்றும் பிரயாசப்படவேண்டியதில்லை. அப்படியே சிறுமி மிஷனுக்கு ஒப்படைக்கப்பட்டு, ஒரு மிஷன் போர்டிங் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டாள்.

சில நாளைக்குப் பின்பு, கிழவி பாடசாலைக்கு வந்து, தன்னையும் சேர்த்துக் கொள்ளும்படி கேட்டாள். ஏனெனில் தன் மகளை மிஷனார் எடுத்துக்கொண்டதினால் தன் ஜீவனார்த்தத்திற்கு ஒன்றும் சேகரிக்கக்கூடவில்லை. ஆனால் இதற்கு ஜேம்ஸ் மிசி சம்மதப்படவில்லை. இரவு பகலுக்கு எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரம் இக்கிழவி பரிசுத்த ஜீவியத்திற்கிருந்தாள். இப்பேர்க்கொத்தவளை பால்ய பெண்கள் மத்தியில் வைப்பது மகா அபாயம் என்று மிசியம்மாளுக்கு தோன்றிற்று. இந்த மிசியம்மாள், பாடசாலைப் பெண்களை மேலான ஜீவியத்திற்கென்று பயிற்றுவித்து வந்தார்கள். தன்



யோசனை நிறைவேறாததைக் கண்டு, கிழவி தன் மகளைப் பார்க்க விரும்பினாள். மிசியம்மாள் இக்கிழவியின் நோக்கத்தையும் தந்திரத்தையுமறிந்து, பெண்ணைப் பார்க்கக்கூடாதென்று அன்புடன் சொன்னார்கள். ஆனால் சில காலத்திற்குப்பின் வேளாவேளையில் வந்து பார்க்கலாமென்று சொன்னார்கள். கிழவி விரும்பின காரியமிதல்ல. ஆகையால் சற்று அப்பாலே போய் ஒரு கல்லின்மீது தன் தலையை மோதி, இரத்தம் பிரவாகிக்கும்படி செய்தாள். இப்படிச் செய்வது அவளுக்கு அதிக வாதையைக் கொடுத்ததாகக் காணப்படவில்லை. இவ்வித காரியத்தைச் செய்வது, அவளுடைய வழக்கமாயிருந்தது. அதன்பின் தன் மகளை மிசியம்மாள் திருடிக்கொண்டதாகவும், தான் அந்தப் பிள்ளையை மீட்கப் பிரயாசப்பட்டபோது மிசியம்மாள் அந்தப் பெண்ணை கொல்ல முயன்றதாகவும் கூக்குரலிட்டாள். சீக்கிரமாக ஒரு கும்பு சேர்ந்து இவளோடு, மற்றையோரும் நிந்திக்கவும், பயமுறுத்தவும் தொடங்கினார்கள். கூட்டத்தில் ஒருவன் பிள்ளையை பலவந்தம்பண்ணி கொண்டுவராமல், போலீசார் மூலமாய் கொண்டுவரவேண்டுமென்று ஆலோசனை சொன்னான். கூட்டத்தாரெல்லாரும், கிழவியை அழைத்துக்கொண்டு நியாயாதிபதியண்டை போனார்கள். விரோதிக்கப்பட்ட மிஷனெரிமாருக்கு விரோதமாய் நியாயம் வாதிக்க ஒரு வக்கீல் ஏற்படுத்தினார்கள். இவன் தேச சட்டம் இவர்கள் பக்கத்திலிருக்கிறதென்றும், திருடர்களையும், பிள்ளைகளை அபகரிக்கிறவர்களையும் அவர்களை காண்பிப்பார்களென்று சொன்னான். இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. ஒன்று இவர்கள் பிள்ளையை கொலைபுரிய பிரயத்தனம் செய்தார்கள். மற்றொன்று, பிள்ளையை அபகரித்துக் கொண்டார்கள். இதற்கு தண்டனை பெரிய அபராதமும், காவலும்.

நியாயாதிபதி மிஷனருக்கு அனுகூலமானவர். ஆனால் இரண்டாவது குற்றத்துக் குட்பட்டிருந்தார்கள் என்று தோன்றினது. ஆகையால் அவர்களை அமைதியாய் வீட்டுக்குப் போய். தங்கள் தாவாவை தயார்செய்துகொண்டு மறுநாள் வரும்படி சொல்லியனுப்பினார். அப்போது வழக்கை விசாரித்து நியாயத் தீர்ப்பையளிப்பதாகச் சொன்னார். மிஷனெரிமார்களை பார்த்துப் பேச அவர் விரும்பினார். மறுநாள் சாயந்தரத்தில் தப்பிதம் அவர்கள்மேல்தான் என்றார். தாயார் பிள்ளையை மிஷனுக்குக் கொடுத்துவிட்டாலும் நியாய சட்டப் பிரகாரம், அவளே பிள்ளைக்குப் பாத்தியக்காரி. ஆகையால் பிள்ளையினுடைய சுயாதீனத்திற்கும் பாதுகாப்புக்கும் எச்சமயத்திலும் அதிகாரமுடையவள். விரோதிகள் மிஷனெரிமார்மேல் சாட்டின குற்றம் உண்மையென்று இவர் நம்பவில்லை. மிஷனெரியின் வாக்குமூலத்தினால் இது பொய்யாகச் சாட்டப்பட்டதென்று அவருக்குப் புலப்பட்டது. ஆனால் பிள்ளையைத் தாயினிடத்தில் ஒப்புவிக்கவும் அவளோடு எவ்விதமாயாவது சமாதானமாய்ப் போகவேண்டுமென்று வற்புறுத்தினார். அதோடு தாய்க்கு பணத்தைக் கொடுத்து வழக்கை ஒழித்துவிடவேண்டுமென்றும் சொன்னார். ஏனென்றால் வழக்கு நடந்து அந்தப் பெண் இவளுடைய பிள்ளையென்று ருஜுவானால் ஜேம்ஸ் மிசியம்மாளையும், மெக்டுகல் மிஸியம்மாளையும் கொடூரமாய் தண்டிக்க வேண்டியது வருமென்று சொன்னார்.

“தாயானவள் தன் மகளை துன்மார்க்க ஜீவியத்துக்கென்று பழக்கி வரும்போது

அந்தப் பிள்ளையை சன்மார்க்கத்தில் வளர்க்க தங்களுடைய ஆதீனத்தில் யாராகிலும் எடுத்தால், அவர்களை தண்டனைக்கு நீங்கலாயிருப்பதற்கு ராஜாங்கத்தார் யாதாயினும் ஓர் நியாய சட்டத்தை ஏற்படுத்தவில்லையோ? ஓர் சட்டம் உண்டு. ஆனால்இந்ததேசத்திலே தாயானவள் தன் பிள்ளையை துன்மார்க்க ஜீவியத்திலே வளர்க்கிறாள் என்பதை ரூபகாரம் பண்ணுவதுமிகவும் கடினம்.

மறுநாளில் எதிரியின் வக்கீல் மிகவும் ஆரவாரத்தோடு அக்கிழவியோடும் அவள் சிநேகிதரோடும் கச்சேரிக்கு வந்து மிஷனரிமாரையும், அவர்கள் வேலையையும் நிர்மூலமாக்கவேண்டுமென்று மனதில் நிர்ணயம் பண்ணியிருந்தான். ஆனாலோ கிழவியின் வாக்குமூலத்தில் அவள் விபரீதமான மாறுத்தரவு கொடுத்ததினிமித்தம், இந்த வியாஜ்யம் சரியான தீர்ப்புக்கு வாராதென்றும், தன் எண்ணங்கள் வியர்த்தமாகுமென்றும் அவ்வக்கீல் கண்டான்.

ஆகவே அவன் வேறுவிதமான இன்னொரு பிராது கொண்டுவந்தான். யாதெனில், அக்கிழவி இச்சிறுபெண் தனக்கு மிக அருமையானதென்றும், மிஷனெரிமார் அப்பெண்ணை வைத்துக்கொண்டால், தான் அதைவிட்டு ஒருபோதும் பிரியாதமைப்பற்றி தன்னையும்கூட சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றுகேட்டதாகவும், அதற்கு அவர்கள் சம்மதித்ததாகவும், இப்போ மாற்றி சொல்வதாகவும் பிராது சொன்னாள். அதன்றி அப்பிள்ளையின் நேசத்துக்கு சாட்சியாக தன் மேல்வஸ்திரத்தை நீக்கி, நியாயாதிபதியை நோக்கி "என் பிள்ளையை என்னைவிட்டு பிரிப்பதைவிட ஒரு கத்தியால் என்னைக் குத்திவிடும்"என்றாள். அப்படிச்சொல்லி தன் கூந்தலை அவிழ்த்துவிட்டு மிகப் பரிதாபமாய் புலம்பி அழுது கெஞ்சின விதத்தின் மூலமாய் வந்திருந்தவர் எல்லாம் பரிதாபமுற்று அவள் பக்கத்திலாயினர்.

அதைக் கண்ணுற்ற நியாயாதிபதி அதிகமாய் விசனப்பட்டு மிஷனரிமாருடைய விஷயம் எப்படி தீர்மானமாகுமென நினைத்தார். பின்னர் மிஷனரிமாருடைய வாக்குமூலம் எடுக்கப்பட்டது. அவர்களெல்லாரும் ஜேம்ஸ் மிசியின் பாரிசமாகவே நின்று பேசி எல்லாவற்றையும் சரிப்படுத்தவேண்டுமென நினைத்தார்கள். பின்னர் அவர்கள் சாட்சிகள் தயார்பண்ண தங்களுக்கு ஒரு நாள் கேஸை மாற்றித்தரவேண்டுமென அனுமதி கேட்டார்கள். இவ்வித அபாண்டமான பிராதினின்று தப்பிப்போக அவர்களுக்கு வழியொன்றும் தென்படவில்லை. என்றாலும் அப்பெண்ணை மாத்திரம் அவ்வித பயங்கரமான ஜீவியத்துக்கு மறுபடியும் ஒப்புக்கொடுக்கக்கூடாது என்று தீர்மானித்தார்கள். அவர்கள் மனதில், பரம எஜமானுக்கு இஷ்டமான ஒரு காரியத்தை தாங்கள் செய்தமையால் தங்களுக்கு ஒரு கேடும் வாராதென்றும், கேஸ் ஜெயமாகிறதற்கு ஏற்ற வழி உண்டாகுமென்றும் தைரியம் தோன்றிற்று. அப்படியே கேஸ் மாற்றிவைக்கப்பட்டது. ஆனால் நியாயாதிபதியோ ஓயாமல் மிஷனரிமாரை அக்கிழவியோடு சமாதானமாகும்படி ஆலோசனை சொன்னார்.

சுமதி கச்சேரிக்கு வந்திருந்து, பள்ளிக்கூடத்திற்கு திரும்பப்போனாள். அவளுக்கு முன்னைவிட அதிக தைரியம் உண்டாயிற்று. ஏனெனில் கச்சேரியில் நடந்த விஷயங்கள் அவள் மனதை மாற்றிவிட்டன. பள்ளிக்கூடத்தினருகே ஒரு வயதுசென்ற குருட்டு கிறிஸ்தவள்



இருந்தாள். அவள் பிள்ளைகளுடைய ஆகாரத்துக்காக மாவரைத்துக்கொடுப்பாள். அதிக சந்தடியை அவள் கவனித்து 'என்ன விசேஷம்' என்றுபிள்ளைகளைக் கேட்க, அவர்கள் நடந்த சங்கதிகளையெல்லாம் சொல்ல அக்கிழவி உடனே தன்னை அம்மிசியிடம் கொண்டுபோகும்படியாகக் கேட்டாள். அச்சமயத்தில் ஜேம்ஸ் மிசியும் மற்ற மிஷனரிமாரும், அப்பெண்ணின் தாயார் அப்பெண்ணை வைத்து காப்பாற்றத் தகுதியற்றவள் என்பதை ரூபிக்க சாட்சிகள் எவ்விதமாய் ஏற்படுத்தலாம் என்று ஆலோசனைபண்ணிக் கொண்டிருந்தார்கள். அன்று இரவில், அப்பட்டணத்திற்குள் இரகசியமாய் அவர்கள் சென்று, கொஞ்சநேரத்திற்குள், கோர்ட்டாருக்கு முன் கொண்டுவர சாட்சிகள் ஏற்படுத்தினார்கள். அச்சாட்சிகளை மூடு பல்லக்குகளில் இரக்சியமாய் கொண்டுவரவேண்டியதாயிற்று.

அடுத்த நாள் கோர்ட்டில் முன்போலவே திரளானஜனம் கூடிற்று. எல்லாருடைய எண்ணமும் மிஷனரிமார் தோற்றுப்போவார் என்பதே. அக்கிழவி நல்ல குணசாலியென்றும், அப்பெண்ணின் தாயார் அவளேயென்றும், அவள் தன் மகளை மிகப்பத்திரமாய் வளர்த்து வந்தாளென்றும், அவள் கேவலமான நடத்தை உடையவளல்லவென்றும், அப்படி கேள்விப்பட்டாலும் அது நிஜமல்லவென்றும் சொல்லக்கூடிய சாட்சிகளை ஏற்படுத்தி அவர்கள் அவ்விதமே சொன்னார்கள்.

நியாயாதிபதி அப்பால் மிஷனரிமாரை விசாரித்தார். அவர்கள் வெளியே மூடுபல்லக்கில் இருந்தவர்களை சாட்சிகளாக கொண்டுவந்தார்கள். அவர்கள் வரும் சப்தத்தை சின்ன சுமதி கேட்டுக் கொண்டு, அவ்விஸ்திரீகளில் ஒருவருடைய கரங்களில் சென்றோடி 'ஆ, என் தாயே!' என்றுசொல்லி அழுதாள். அக்காட்சி கண்ணுக்கு மிகப்பரிதாபமாய் இருந்தது. சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒருவரும் ஒன்றும் செய்யமுடியவில்லை. எல்லாருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பிற்று. கிழவி நியாயாதிபதி முன்பாக விழுந்தாள். முன்னே தன் மகளுக்காக எப்படி மன்றாடினாளோ அவ்வண்ணம் இரக்கத்திற்காக மன்றாடினாள். சாட்சிகளும் சுத்த ஆகாயம் வேண்டுமென்று கதவண்டை வரும்படி பிரயாசப்பட்டார்கள். நியாயாதிபதி உடனே போலீஸ்காரரிடம் எல்லாரையும் காவல் பண்ணும்படி கட்டளையிட்டார்.

நல்லது, இவ்விதமாக நடக்கக் காரணம் யாது? அநேக வருஷங்களுக்கு முன் அக்கிழவி தன் துன்மார்க்க ஜீவியத்தை ஒண்டியாய் நடத்தமுடியாதென்று கண்டு, ஒரு சிறு பெண்ணை தேடி கண்டுபிடித்து அதற்கு இதைப் பழக்குவிக்கத் தீர்மானம் பண்ணினாள். அப்படியே ஒருநாள் இச்சிறு பெண் அழகுள்ளவளும், மனிதரை கவர்ச்சிக்கக்கூடியவளுமென்று கண்டு திருட்டளவாய் அதின் பெற்றோரிடமிருந்து கொண்டுபோய்விடவே, அதின் பெற்றோர் தங்கள் பிள்ளையை தேடி இவளிடமிருக்கப்பார்த்து, தரும்படி கேட்க: இவளுக்கு அப்பட்டணத்திலுள்ள அநேக உத்தியோகஸ்தருடைய அறிமுகம் இருந்தபடியால், தன் பிள்ளைதான் என்று பொய்பேசி மறுத்துவிட்டாள். திரும்பத்திரும்ப அதின் பெற்றோர் கண்ணீரோடு அப்பிள்ளைக்காக மன்றாடினர். ஆனாலும் அவள் கொடுக்கவேயில்லை. ஏனென்றால் மேலதிகாரிகளெல்லாம் அவள் பாரிசமாகவே பேசினார்கள். ஆகவே இத்தனைகாலமாய் தன் நேசத்தாயைக் காணாதிருந்த சுமதி, திடீரெனக்கா

ளவும் அவ்விதமாக சந்தோஷத்தினால் நிறைந்து அம்மாதாவின் நேசக்கரங்களுக்குள் பாய்ந்தாள். கிழவி தன் குற்றம் வெளியாகிவிட்டதைக் காணவும், எல்லாவற்றையும் அறிக்கையிட்டு, தன்னை ரட்சிக்க மன்றாடினாள். அவர்களை நியாயம் விசாரித்தவர் ஒரு நீதியுள்ள பிரிட்டிஷ் உத்தியோகஸ்தனானதால் எப்படியாகிலும் தன்னுடைய துன்மார்க்க ஜீவியத்துக்கு தகுந்த சிட்சையை விதிப்பார் என்று திட்டமாய் அறிந்தாள்.

நியாயாதிபதி மிஷனரிமாரை பேச்சிப்பேசினார்: அப்புறம் பெண்ணின் பெற்றோர், அக்கிழவி மறுபடியும் தங்கள் பிள்ளையை மோசம்போக்குவாளெனப் பயந்து, நியாயாதிபதியிடம் பிள்ளையை மிஷனரிமாரிடமே ஒப்புவிக்கச் சொன்னார்கள். சின்ன சுமதி மறுபடியும் தன் பள்ளித்தோழரிடம் செல்ல அவ்வளவு ஆசைப்பட்டாள். ஆகவே நியாயாதிபதி மிகநேர்த்தியாய் எல்லாவற்றையும் ஒழுங்காய்த் தீர்ப்புச் செய்தார். சுமதியின் பெற்றோரை தான் இந்துவாயிருக்கும்போது அந்தக் குருட்டுக் கிறிஸ்தவக் கிழவி நன்றாயறிந்திருந்தாள். அதன்றி மற்றக்கிழவி சுமதியைத் திருடிக்கொண்டு போனதையும் அறிந்திருந்தாள். அதின்மூலமாய் மிஷனரிமாருக்கு உண்டான துன்பத்தை நீக்க அக்கிறிஸ்தவள் மிக நல்ல கருவியானது மிக்கசந்தோஷமன்றோ!

நியாயாதிபதி உடனே, அக்கிழவியும் சாட்சிக்காரரும் பொய்ச்சாட்சி சொன்னதாக ரூபித்து, அவர்களை குற்றவாளிகளாக்கி, கிழவியை ஒரு வருஷம் மறியலில்போட்டார். சாட்சிக்காரருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

இச்சங்கதிகளெல்லாம் அநேக வருஷங்களுக்கு முன்னே நடந்தன. சின்ன சுமதி வளர்ந்து ஒரு நல்ல மனைவியும், நேர்த்தியான தாயுமாயிருக்கிறாள். அப்பட்டணத்திலுள்ளவர்களுக்கு தீமையைக் கொண்டுவருகிற பெண்ணாகாமல், அவளும் அவள் புருஷனும் அங்குள்ள ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைசெய்கிறவர்களானார்கள். இதை வாசிக்கிற நண்பரே, தீமை செய்யப்பழக்கப்பட்டு, துன்மார்க்க ஜீவியமாக மாள இருந்த இப்பெண்ணின் ஜீவியம் மிஷனரிமாரால் எவ்வளவோ பிரயோசனமும் பாக்கியமுமான வழிக்கென்று திருப்பப்பட்டதை பார்க்கும்போது நாம் எல்லாரும் சந்தோஷத்தால் நிறையவேண்டியதாமல்லவோ!

---

## WHAT SHOULD WE EAT AND HOW MUCH?

## நாம் எதைச் சாப்பிடவேண்டும்? எவ்வளவு சாப்பிடவேண்டும்?

சில ஜனங்களுக்கு சாப்பாட்டின்மேல் அவ்வளவு இஷ்டமானதால் தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்ட எல்லாவற்றையும் சாப்பிடுவார்கள். தங்கள் பசி தீர்ந்தாலும் தீராவிட்டாலும் மீதி ஒன்றும் வைக்காமல் அவர்கள் சாப்பிடுவது வழக்கம். சிலருக்கு வேறுசிலரைப் பார்க்கிலும் அதிக ஆகாரம் அவசியம். ஆகையால் ஒவ்வொருவனும் எவ்வளவு சாப்பிடவேண்டுமென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. சாதாரணமாய் பெண்களைவிட ஆண்கள் அதிகமாய் சாப்பிடுவார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் சரீரங்களை வேலைசெய்வதற்கு தகுதியாய் வைத்துக்கொள்ள அதிக போஜனம் வேண்டும். எந்தவிதமான ஆகாரம் சாப்பிடவேண்டும் என்பதை சட்டப்படுத்தி சொல்லுவது கஷ்டமான காரியம்.



என்றாலும் ஒருவன் தன் ஆகாரத்தை கிரமப்படுத்த பொதுவான சில நியமங்களை எழுதுகிறேன். முதலாவது ஒருவன் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் யாதெனில் ஆகாரத்திற்காக உன் வருமானத்திற்கு மிஞ்சின செலவு ஒருபோதும் பண்ணாதே என்பதாம். இப்பிரமாணம் ஆராய்ந்து பார்த்தால் சுகத்தையடுத்த விஷயமாய் இராதபோதிலும், எல்லா மனிதருக்கும் சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொண்டு வரக்கூடியது. ஆகாரம் ஜீரணமாக மனச்சமாதானம் முக்கிய கருவியாயிருக்கிறதாக அநேகர் கூறுகிறார்கள். கடன் மனச்சமாதானத்துக்கு பெரிய சத்துருவாயிருக்கிறதாகையால் உன் ஆகாரத்திற்காகவும் மற்றெந்த விஷயத்திற்காகவும் ஒருபோதும் கடன்படாதே. நல்லது இனி ஒருமனிதன் எவ்வளவு ஆகாரம் சாப்பிடவேண்டும் என்பதைக் கவனிப்போம். சுகதேகியான ஒருமனிதன் தனக்கு நல்ல பசி உண்டாகும்போது, ஆகாரம் தன் வாய்க்கு ருசிகரமாயிருந்தால் தன் வயிறார புசிப்பது வழக்கம். சிலவேளை ஜாஸ்திகூட சாப்பிடுவதைப் பார்க்கலாம். இது ஒருபோதும் சரியன்று. இதுதான் பிற்பாடு அஜீரணத்தையும், வயிற்று நோவையும் உண்டாக்கும். ஆகையால் நமது பசி தீர்ந்தவுடன் நமக்கு முன்னால் எவ்வித ருசியுள்ள பதார்த்தம் இருந்தாலும், சாப்பாட்டை நிறுத்தவேண்டும். அதன்றி நாம் சாப்பிடும்போது ஆகாரத்தை மெதுவாய், நன்றாய் மென்று தின்னவேண்டும். அப்படிச் சாப்பிட்டால் நாம் கொஞ்சம் சாப்பிட்டாலும் நல்ல திருப்தி உண்டாகும். படபடவென்று சாப்பிட்டால் ஒருபோதும் திருப்தி உண்டாகாது, சரியானபடி ஜீரணமாகாது. அதன்றி நாம் நம்முடைய வீட்டு செலவையும் கிரமப்படுத்திக்கொள்வோம். ஏனெனில் கொஞ்ச ஆகாரத்தினால் நாம் நமது சரீரத்தை திருப்திபண்ணி சுகமாக இருந்தால், மாத முடிவில் நமது வரும்படிக்குத்தகுந்த செலவு செய்து நமது ஜீவியமும் சமாதானமாயிருந்ததைக் காணலாம்.

அடிக்கடி கெட்டிகார வைத்தியர்களிடம் ஆலோசனைபண்ணிக் கேட்டுச் சாப்பிடுவதுமாத்திரமல்ல நம்முடைய ஆகார விஷயத்தை நாமே தீர்மானம் பண்ணிக்கொண்டால் மிகவும் நல்லது. சிலர் ஒரு பதார்த்தத்தை சாப்பிடலாம். அதே பதார்த்தம் வேறொருவனுக்கு ஒத்துக்கொள்ளாது. ஒவ்வொருவனும் தனக்கு ஏற்ற ஆகாரத்தைக் கவனித்து வைத்து அதை மாத்திரம் சாப்பிடவேண்டும். அப்போ அவன் சுகமாயும் பத்திரமாயும் இருக்கலாம். இவைகளன்றி கவனிக்க வேண்டிய வேறு சில விஷயங்களுமுண்டு. அதிக கொழுப்புள்ளவைகளை சாப்பிடக்கூடாது. லவங்கம், பட்டை, மிளகாய், மிளகு முதலியவைகளை அதிகம் சேர்க்கக்கூடாது. இதை வாசிக்கிற நமது சிநேகிதராவது அவர்கள் இனத்தாராவது மதுவை உண்டாக்கக்கூடிய லாகிரி பதார்த்தங்களை உபயோகிக்கமாட்டார்களென்று நம்புகிறேன். இவைகளை ஆகாரமாகவாவது அல்லது பானமாகவாவது ஒருபோதும் உபயோகிக்காதிருந்தால் மிகவும் நன்மையாயிருக்கும். அவைகள் எப்போதும் தீமையையே கொண்டுவரும், அதற்கு மாத்திரம் உதவும்.

கடைசியாக, நீ புசிக்கிற ஆகாரத்தை நன்றாய் கவனமாய் வேகவைத்து சாப்பிடு. இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாயிருந்தால் சுகமாயும், ஆறுதலாயும் ஜீவிக்கலாம் என்பதற்கு சந்தேகமில்லை.

ஆகையால் அதிகம் சாப்பிடக்கூடாது. படபடவென்று சாப்பிடக்கூடாது. நன்றாய் சமைக்காதவற்றை சாப்பிடக் கூடாது. அதோடு வரும்படிக்கு மிஞ்சி சாப்பிடக்கூடாது.

---

SOWING AND REAPING.

## விதைப்பும் அறுப்பும்.

எங்கே உன் விதையை விதைக்கக் கூடுமோ அங்கே அதை விதை. பின் அந்த வித்தை கர்த்தரிடம் ஒப்பித்து விடு. அப்புறம் உன்னால் இயன்றதைச் செய், அவ்வேலைக்கு மாத்திரம் நீ உத்தரவாதி.

நீ தேவனுடைய வேலையாள்; அவருடைய கைகளில் இருக்கிறாய். உன் வேலையைச் செய்து முடிக்குமட்டும் நீ சாவுக்குரியவனல்ல, அதைச் செய்து முடித்த பிற்பாடும் நீ சாவுக்குரியவனல்ல.

நீ கண்ணீரோடு விதைக்க வேண்டியது வந்தாலும் உன் விதையை வைத்து வைக்கவேண்டாம். கர்த்தருடைய பெரிய நியாயத்தீர்ப்பு நாளின் காலையில் உன் அரிக்கட்டுகளை சுமந்துகொண்டு அவர் முன்னால் போவாய்.

இரவின் அந்தகார அமைதலான வேளையில், மனிதர் நித்திரை பண்ணுகையில் சாமக்காரர் முதலாய் தாங்கள் நிற்கும் கோட்டையினின்று இறங்கிப் போயிருக்கையில், நீ தனிமையாயிருப்பாய். அப்போ தேவனிடம் உன் முழங்கால்களை முடக்கி, உன் ஜெபமாகிய விதையை விதை. அதிகாலை வெள்ளி உதிக்கையில் நீ விளைச்சல் சேர்க்கப்படுவதைப் பார்ப்பாய். "அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்."

IN GOD'S KEEPING.

## கர்த்தருடைய பாதுகாப்பில்.

பட்டாளத்திலுள்ள யுத்தவீரர் தங்களைச் சுற்றிலுமுள்ள காவலாளர் விழித்திருந்து தங்களைப் பாதுகாப்பதினால் ஒரு பயமுமில்லாமல் நம்பிக்கையோடும் அமைதலோடும் நித்திரை செய்வது வழக்கம். அவ்வண்ணமாகவே கர்த்தரை எவன் தன் அன்புள்ள கிட்டின பிராணசிநேகிதனாக்கிக்கொள்வானோ, அவனுடைய நினைவுகளெல்லாவற்றையுங்கூட அவருடைய சமாதானம் பாதுகாத்துக் கொள்ளும். கர்த்தருடைய பாதுகாப்புக்கு நிகரானது ஒன்றுமில்லை. நாம் நம்முடைய எண்ணங்களை பாதுகாக்குந் தொழிலை அவரிடம் ஒப்பித்தால் அவர் அவைகளை பாதுகாத்துக்கொள்வார். பெனிலன் என்பவனுடைய ஜெபம் எப்படியென்றால்:

"ஆண்டவரே என்னை எடுத்துக்கொள்ளும், நான் என்னை உமக்கு தானாகவே கொடுக்கமுடியாது. அப்படி நீர் என்னை எடுத்துக்கொண்டு, நான் என் ஜீவனை பாதுகாக்க முடியாததால், நீரே என்னை பாதுகாத்தருளும்" என்பதே.

---

CUTTING THE TEETH.

## பல்முளைத்தல்.

பல்முளைக்கும் பருவம் குழந்தைகளுக்கு மிகவும் விசேஷித்த பருவம். யாதெனில் அநேக குழந்தைகள் அச்சமயம் மிகுந்த கஷ்டப்படுவார்கள். சாதாரணமாக முதற்பல் ஏழாம் மாதம் முளைக்கும். நல்ல சுகமுள்ள ஒரு குழந்தை பிறந்த 26-ம் மாதத்திற்குள் 'பால் பற்கள்' அல்லது முதற்பற்கள் முழுவதும் ஒரு தொந்தரவும் கொடுக்காமல் வந்து விடும்.



புட்டிப்பால் குடித்து வரும் குழந்தைகளுக்கு, தாய்ப்பால்குடிக்கும் பிள்ளைகளைவிட வெகுநாளுக்கப்புறம் பற்கள் முளைக்கும்.

முதற்பற்கள் சீக்கிரம் விழுந்துவிடும். அவைகளின் மொத்தம் 20. அப்புறம் முளைக்கிற பற்கள்தான் ஸ்திரமான பற்கள். ஒரு குழந்தைக்கு முதலாவது முளைப்பது கீழ்வரி முன்பற்கள் இரண்டும், அப்புறம் அதேவிதமாய் மேற்பற்கள். அப்புறம் அவைகளின் இருபக்கமும் இரண்டு பற்கள். அதற்கப்புறம் இரட்டை அல்லது கடைவாய்ப்பற்கள். ஒவ்வொரு தாடையிலும் இரண்டு முளைக்கும். அப்புறம் கண் பற்கள். கடைசியாக இன்னும் இரண்டு கடைவாய்ப் பற்கள்.

சாதாரணமாய் அநேக சுகமுள்ள பிள்ளைகளுக்கு ஒரு தொந்தரவில்லாமல் பற்கள் முளைக்கும். சுகவீனமான பயந்த பிள்ளைக்கு அதிக தொந்தரவு நேரிடுவதுமுண்டு.

முதலாவது எரிச்சலும், தூக்கமில்லாமையும் உண்டாகும். ஊன்கள் சூடாய், வீங்கி நோவைக் கொடுத்துக் கொண்டிருக்கும். எச்சில் வாயிலிருந்து வந்து கொண்டிருக்கும். மலக்கட்டு, அஜீரணம், வாந்தி இவை முதலிய தொந்தரவும் உண்டாகும், ஜுரமும் இருக்கும். பேதிலும் காய்ப் போகாமல், ஒன்றிலோ அடிக்கடி, அல்லது கொஞ்சமும் போகாமலே இருக்கும்.

சில குழந்தைகளுக்கு ஒவ்வொரு பல் முளைக்கும்போதும் இருமல் அல்லது வயிற்றோட்டம் உண்டாகும். மெய்யாகவே பல் முளைக்கும் காலமுழுவதும் ஒரு குழந்தையைக்குறித்து ஜாக்ரதையாய் இருக்கவேண்டும்.

குழந்தை எப்போதும் சுத்தமாயும் சுகமாயுமிருக்கப்பார்க்கவேண்டும். சரியான ஆகாரம் கொடுக்கவேண்டும். நாள்தோறும் வலசுத்தியாகிறதைக் கவனிக்கவேண்டும். குழந்தை ஒரு விஷயத்திலும் பயப்படக்கூடாது. அதிக நேரம் வெளியே குளிர்ந்தகாற்று படக்கூடாது.

குழந்தைகளுக்கு அழுகையமர்த்தும் ஸிரப்புகளும், பல் முளைக்கக்கொடுக்கும் பொடிகளும் கொடுக்கவேகூடாது. டாக்டர்மார் எதையாகிலும் கொடுக்கச்சொன்னால் மாத்திரம் கொடுக்கவேண்டும். தேகத்தின் உஷ்ணத்தை தணிக்கக்கூடிய விளக்கெண்ணெய் அல்லது பேதி உப்பு திராவகம் கொஞ்சம் கொடுக்கவேண்டும். எப்படியாகிலும் வைத்தியனிடை கேட்காமல் ஒன்றுங் கொடுக்கக்கூடாது.

அக்குழந்தை இருக்கும் அறைகள் எல்லாம் நல்ல காற்றோட்டமுடையனவாயிருத்தல் வேண்டும். ஜுரம் உண்டானால் சளிப்பிடிக்கவிடக்கூடாது.

ஒரு குழந்தைக்கு அதிகமாய் எச்சில் வந்துகொண்டிருந்தால் அதின் உடை வழியாய் அந்த ஈரம் உட்புகுந்து, மார்ச்சளிப்பைக் கொண்டுவரும். அதைக்குறித்தும் கவனம்வேண்டும்.

வயிறு கொஞ்சம் போய்க்கொண்டிருந்தால் அதினால் தோஷம் ஒன்றுமில்லை. ஆனால் வயிற்றோட்டம் உண்டானால் உடனே அதை வைத்தியருக்கு அறிவிக்க வேண்டும்.

ஜுரம், அமைதலில்லாமலிருத்தல் இவைகளுக்கு சூடான தண்ணீரில் ராத்திரி குளிப்பிக்குதல் நல்லது; அப்போ நல்ல நித்திரைவரும்.

வீங்கி, சூடாயிருக்கும் ஊன்களுகு அந்நோவை நீக்க, நன்றாய் சுத்தமான விரலை தண்ணீர் கலந்த எலுமிச்சஞ்சாற்றில் தூவைத்து மெதுவாய் ஊன்கள்மேல் தேய்க்கவேண்டும். (எலுமிச்சம்பழங்களை வாங்கி சாற்றைப்பிழிந்து எடுக்கவேண்டும்.) அல்லது கிளிசறீன் (Glycerine) என்னும் மருந்தோடு அதேசமமான எலுமிச்சஞ்சாற்றை சேர்த்து தேய்க்கவேண்டும். தேய்க்குமுன் விரலை சுத்தமான மெல்லிய பழங்கந்தையால் சுற்றிக்கொள்ளவேண்டும. கொதித்தபின் குளிராக்கின தண்ணீரை, பல் முளைக்கிற கால முழுவதும் அடிக்கடி கொடுக்கவேண்டும். அதன் வாயில் பல்முளைக்கிறதற்காகக் கொடுக்கும் (Teething Ring) றப்பர் வட்டம் கொடுத்தால் அது அழுக்கடையாதபடி அடிக்கடி சோடாதண்ணீரிலும், போரக்ஸ் தண்ணீரிலும் கழுவி, சிலவேளை தண்ணீரில் கொதிக்கவும் வைக்கவேண்டும். அதோடு அவ்வட்டம் கீழேவிழாதபடி அதை குழந்தையின் கழுத்தில் கட்டி வைத்திருத்தல் மிகவும் நல்லது.

மேற்கூறிய விஷயங்களெல்லாவற்றையும் ஒவ்வொரு தாய்மாரும் நன்றாய் கவனித்து தங்கள் பிள்ளைகளுக்கு பரிபக்குவம் பண்ணிவந்தால் குழந்தைகள் பல் முளைக்கிற சமயம் நோய் வந்தாலும் யாதோர் மோசத்துக்கும் உள்ளாகாது. எத்தனையோ குழந்தைகளுடைய ஜீவனும் காக்கப்படும். ஆதலால் தாய்மாரே கவனியுங்கள்!

---

## SPEAKING THE TRUTH IN LOVE.

## அன்பினால் சத்தியத்தைப் பேசுதல்.

---

ஒருவன் பல விஷயங்களுக்காக சத்தியத்தைப் பேசக்கூடும். ஒருவன் இகழ்ச்சியினால் சத்தியத்தைப் பேசலாம், ஆனால் அது ஒரு மாறாத தழும்பை உண்டுபண்ணும். வேறொருவன் முரட்டுக் குணத்தோடு சத்தியத்தைப் பேசலாம், ஆனால் அது இன்னொருவனை துக்கப்படுத்தும். ஒருவன் பரிகாசமாக சத்தியத்தைப் பேசலாம், அது இன்னொருவன் இருதயத்தைக் குத்தும். ஒருவன் கோபத்தினால் சத்தியத்தைப் பேசலாம், அது சண்டையை மூட்டிவிடும். ஆகையால் இவ்விதமாக சத்தியத்தை பேசுவதனால் ஒரு பிரயோஜனமுமில்லை.

விசேஷித்த புண்யவான் ஒருவரைக் குறித்து ஆச்சர்யமாக மற்றவர் பேசுவது யாதெனில் அவர் அன்பினால் சத்தியத்தைப் பேசுவாராம். சிநேகிதரிடம் அவர்களுக்கு கோபத்தையும் எரிச்சலையும் உண்டுபண்ணாதவிதமாய் அவர்கள் குற்றங்களை எடுத்துச் சொல்வார். அவருடைய இருதயத்தில் உண்மையும் பரிசுத்தமும் தெளிவாய்க் காணப்பட்டது. தாம் சிநேகிதருடைய வாழ்வை எப்போதும் கருதுவார். ஆழ்ந்த சிநேகமுடையவர். அவர்கள் தீமைக்குள் பிரவேசித்து துன்பமடைந்து கெட்டுப்போவது அவருக்கு சற்றேனும் இஷ்டமேயில்லை. கபடு சற்றேனுங் கிடையாது. ஆதலால் அவர் கண்டித்த சிநேகிதன், அவரை வெறுப்பதற்குப் பதிலாகவும் கோபப்படுவதற்கு பதிலாகவும், அவருக்கு பண்ணின வாக்கை நாம் ஒருபோதும் மாற்றக்கூடாது என்றெண்ணத்தகுந்தவையாகும். அதன்றி அவர்களுக்குள்ள சிநேகம் அதிகமாகிவிடும். "சத்தியத்தை அன்பினால் பேசினால்," பேசவேண்டிய விஷயத்தை மாத்திரம் பேசப்பண்ணும். அதுவும் அன்பென்னும் ஆவியினால் மாத்திரம் ஏவப்பட்டுப் பேசுவதன்றி மற்றப்படியல்ல.



"அன்பினால் சத்தியத்தைபேசுவது," பேசாமல் விட்டுவிட்டால் நல்லதே என்று சொல்லக்கூடிய விஷயங்களை ஒருபோதும் பேசவொட்டாது.

அன்பினாலன்றி வேறு விதமாய் சத்தியத்தைப் பேசினால் மற்ற மனிதரை நம்மை விட்டு சீக்கிரம் தூரத்திவிடவேண்டியதாகும். சாதாரணமாய் ஒருவருக்கும் தூரத்துண்ணப்பட இஷ்டமிருக்காது. அதினிமித்தம் மூர்க்கமும் சண்டையும் உண்டாகும்.

கர்த்தரண்டை கிட்டிச்சேர்ந்து ஜீவிக்காத ஒருவருக்கும் அன்பினால் சத்தியத்தைப் பேச முடியாது. கர்த்தரோடு நெருங்கி சகவாசஞ் செய்வதனால்தான் அன்பும் மனத்தாழ்மையும் உண்டாகும்.

உலகப்பிரகாரம் பார்த்தால் அன்போடு கூட சத்தியத்தைப் பேசுவது மிகவும் கஷ்டமான காரியம். ஆனால் இவ்விதஜீவியஞ் செய்தால் நித்திய ஜீவன் என்னும் விலையேறப் பெற்ற மகிமை நிறைந்த பொக்கிஷத்தை தேவன் நமக்கு அளிப்பார். இந்த நம்பிக்கை நமக்கு இருப்பதினால் இக்கஷ்டம் நமக்குப் பெரிய காரியமில்லை.

---

## NEWS AND NOTES.

## வர்த்தமானக் குறிப்புகள்.

---

இப்போ சிறிது காலமாய் இவ்வுலகத்தில் மிகவினோதமான சம்பவங்கள் நடக்கின்றன. அவைகளில் சிலவற்றை நாம் கேட்டால் நம் இருதயம் துக்கத்தால் நிறைந்து கரைந்துவிடும். மரித்தோருக்காக துக்கமும், அவர்கள் விட்டுப்போனவர்களுக்காக பரிதாபமும் நிச்சயமாகவே உண்டாகும். கடந்த அக்டோபர் மாதம் 11-ம் தேதி அத்லாந்திக் சமுத்திரத்தின் மத்தியில் ஒரு பெரிய புகைக் கப்பல் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போகும்போது நெருப்புப் பற்றிக்கொண்டது. அதில் அநேகர் யாத்திரைசெய்தார்கள். அப்போ கப்பல் தலைவனும் உள்ளிருந்தவர்களும் தங்களாலான பிரயாசப்பட்டு அந்தநெருப்பை அணைக்க முயற்சித்தார்கள். முதலாவது பிரயாணிகள் ஒருவருக்கும் இம்மோசத்தைக் குறித்து அறிவிக்கவில்லை. ஏனெனில் அவர்களில் அநேகர் பயத்தினால் திமிர் பிடித்துப் போவார்களென்று. ஆனால் அக்கினி ஜுவாலித்து ஆகாயத்தில் அநேக அடிகளுக்குமேல் எழும்பிற்று. நெருப்பை அணைக்க முடியவில்லை. அப்போ தலைவன் வள்ளங்களை கீழே இறக்கி அவைகளில் பிரயாணிகளை ஏற்றவும், தந்தியில்லாத சமாசாரம் (Wireless Telegraph) மற்றக்கப்பல்களுக்கனுப்பி உதவிசெய்ய வரும்படி அழைக்கவும் உத்தரவு பண்ணினான். வெகுசீக்கிரத்தில் ஒரு பெரிய புகைக்கப்பல் வந்தது. இன்னம் கொஞ்சநேரத்தில் வேறு அநேகமும் வந்தன. ஆக ஏழெட்டு கப்பல்கள் உதவிசெய்யப் பிரயாசப்பட்டன. ஆனால் கடல் மிகவும் கொந்தளிப்பாயிருந்தமையால் துன்பத்திலிருந்த அக்கப்பலண்டை படவுகளை கொண்டுபோக முடியாதிருந்தது, சில படவுகள் அக்கப்பலில் மோதி உடைப்பட்டன, சில கண்ணுக்குக் காணாதேபோயின. இதன்றி தங்களாலான பிரயாசப்பட்டும் அக்கப்பல்களொன்றினாலும் ஒரு படவையாவது நெருப்பிலகப்பட்ட கப்பலண்டை கொண்டு சேர்க்கமுடியவில்லை. கடைசியில் எண்ணெய்கொண்டுபோன ஒரு கப்பலை, சைகைகாட்டி வரவழைத்து அதிலுள்ள எண்ணெயை ஊற்றி கடலின் கொந்தளிப்பை அமர்த்தப் பண்ணினார்கள். அவ்வெண்ணெய் அலைகளை அமர்த்தினதால் படவுகளை கப்பலண்டை கொண்டுபோய் அதில் உயிரோடிருந்த பிரயாணிகளையும் வேலையாட்களையும் ஏற்றினார்கள். கடைசியில் கணக்கெடுக்கும்போது 160 பேர் இறந்துபோனதாகக் காணப்பட்டது. அக்கப்பலின்சமையற்காரன் அது நெருப்

புப்பற்றக்காரணம் சுருட்டுப்பிடித்த ஒருவன் அதின் நெருப்பை அணைக்காமல் அதை கவலைத்தாழ்ச்சியாய் எறிந்துவிட்டதால் அதினின்று நெருப்பு பற்கொண்டதென்று சொன்னான். இது மெய்யோ பொய்யோ தெரியாது. என்றாலும் இந்தவிதமாக எத்தனையோ தடவை நெருப்புப்பற்றியிருக்கிறது! சுருட்டுப்பிடிப்பதினால் வருந்தீமை இவைமாத்திரமோ, இன்னம் எத்தனையோ! ஆகையால் ஜாக்ரதை!

விவசாயத்தொழிலை தற்காலம் மேலதிகாரிகள் முதன்மையோர் விர்த்திபண்ணயத்தனித்திருப்பது சந்தோஷமன்றோ! நாம் அறிந்தபடி பயிர்த்தொழில்தான் இந்துதேசத்தில் அனேகஜனங்களின் ஜீவனார்த்தமாயிருக்கிறது. ஆகையால் சாதாரண ஜனங்களுக்கு நாம் நன்மைசெய்யவேண்டுமானால் பயிரிடுந்தொழிலை விர்த்திபண்ணக் கற்றுக்கொடுப்ப தவசியம். கொஞ்ச நிலத்துக்குள் அதிக விளைச்சலைகொண்டுவரக் கற்றுக்கொள்வதவசியம். அலகபாத்திலிருக்கும் அமெரிக்க பிரஸ்பிற்றீரிய மிஷன், பயிர்த்தொழில் நிலங்களில் மிக நேர்த்தியாய்ப் பயிரிடும் விஷயங்களைக் கற்றுக்கொடுக்கிறார்கள். அவ்வூர்ப்பக்கத்திலுள்ள நாட்டுப்புறங்களிலுள்ள சமுசாரிகளும் அத்தொழிலைக்கற்றுக்கொண்டு தங்கள் நிலங்களை விர்த்திபண்ணுகிறார்கள். மிஷன் நிலங்களில் கற்றுக்கொள்ளும் வழிகள் ஐசுவரியவான்களுக்கு மாத்திரமல்ல ஏழைகளுக்கும் அதிக பிரயோஜனமுண்டாக்கத்தக்கதாக இருதிறத்தார்க்கும் கற்பிக்கப்படுகிறது.

இவ்வருஷம் ஒரு தடவையுமில்லாத நீரோட்டமுண்டாயிருக்கிறது. முதலாவது அமெரிக்காவில் பெரு மழைகள் உண்டாகி ஆற்றுப் பெருக்கெடுத்து எத்தனையோ பெரு நஷ்டத்தை விளைவித்தது. இந்தியாவின் பற்பல பாகங்களில் முக்கியமாய் வங்காளத்தில் ஜலப் பெருக்கினால் உண்டான நஷ்டம் இம்மட்டென்றில்லை. அநேக ஜனங்கள் வீடற்றவர்களாயினர், அநேக விளைச்சல்கள் நிர்மூலமாயின. இலங்கையிலும் பர்மாவிலுங்கூட முன் ஒருபோதும் உண்டாகாத ஜலப் பெருக்கு உண்டாயிற்று. இதற்கு காரணம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் என்று சிலர் குற்றப்படுத்துகிறார்கள். அப்படிச் சொல்ல ஒரு நியாயமுமில்லை. அவர்கள் அதற்கு கொடுக்கிற நியாயம் ஒவ்வாது. சரித்திரத்தை நாம் வாசித்தால் பெருமழை, பஞ்சம், விஷ வியாதி, இவைகள் இந்தியாவில் தொன்றுதொட்டே இருந்திருப்பதை நாம் அறியலாம். பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரால்தான், துன்பமும் கஷ்டமும் அனுபவிக்கிற ஏழைகளுக்கு வெகு சீக்கிரமாயும், தாராளமாயும் உதவி அனுப்பப்படுவதை நாம் பார்க்கிறோமேயன்றி, அவர்களால் இவ்வித துன்பம் ஒருபோதும் உண்டானதை நாம் பார்த்ததில்லை.

சீன தேசத்தில் புதிதாய் ஏற்படுத்திய சுயாதீன அரசாட்சிக்காக ஒரு பிரஜாதிபதியை தெரிந்து கொள்ளவேண்டியதாயிற்று. அமெரிக்கா ஐக்ய மாகாணத்தில் பிரஜாதிபதியை ஜனங்கள் தெரிந்துகொள்வதுபோலன்று. சீனாவிலுள்ள ஜனங்களெல்லாரும் சேர்ந்து ஒருவரை தெரிந்துகொள்ளத்தகுந்த அறிவு அவர்களுக்கில்லை. அதினிமித்தம் கவர்ன்மென்றார் சிலர் கூடி ஆலோசித்து ஒருவரைத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இந்தத் தடவை அப்படித் தெரிந்துகொள்ளப்பட்டவர் யுயான்-ஷி-காய் என்பவர். இவர் முன்னேயும் பிரஜாதிபதியாக ஆக்டிங் பார்த்தார். இவர்தான் சீனாவிலுள்ள எல்லாரிலும் பெலசாலி. இவருக்குமாத்திரம் சீனரை முன்னே கொண்டுவரவேண்டுமென்கிற ஆவல் இருதயத்தில் இருக்குமேயானால் நிச்சயமாகவே அவர் எண்ணம் நிறைவேறிப்போகும். அப்படி அவரை பிரஜாதிபதியாக்கினபின்னர் ஜனங்களில் சிலர் கவர்ன்மெண்டுக்கு விரோதமாக எழும்பி யுவான்-ஷி-காய் மெள்ள மெள்ள எல்லாருக்கும் மேலாக அதிகாரம்பண்ணுவான். அல்லது பெரிய வல்லமை செலுத்துவான் என்று சொல்லிக்



கலகம் பண்ணினார்கள். அவர்கள் சொன்னது பொய்யோ மெய்யோ தெரியாது. சீக்கிரத்தில் அவன் சக்ரவர்த்தியாக வேண்டுமென்று இவ்விதமாக நடந்துகொள்ளுகிறான் என்றும் சொன்னார்கள். கலகக்காரரைவிட கவர்ன்மென்றார் அதிக வல்லமையுள்ளவர்களானதால் வெகுசீக்கிரத்தில் கலகக்காரரை அடக்கிவிட்டார்கள். ஆகவே கலகக்காரருடைய கேவலமான எண்ணம் முற்றுப்பெறவில்லை.

அமெரிக்காவில் சிறிது காலத்திற்குமுன் நடந்த ஓர் சம்பவத்தால் ஒரு பிள்ளையின்மேல் அதின் தாய்க்கு எவ்வளவு பாசம் என்பதை அறியலாம். ஒரு குழந்தை பிறக்கும்போதே இரத்தாசயத்தில் (Heart) நோய்கொண்டதாயிருந்தது. அதற்கு சிகிற்சை செய்யும்படியாக அக்குழந்தையின் பெற்றோர் தூர இடத்திற்கு கொண்டுபோனார்கள். அது பிறந்ததுமுதற்கொண்டு அத்தாய் ஒருவிதமாய் அதற்காக தான் சுவாசம் விட்டுக்கொண்டிருந்தாள். போகிற வழியிலும் அவள் அப்படியே தன் சுவாசத்தை அதனுள்ளே செலுத்திக்கொண்டே போனாள். திரும்பத்திரும்ப அந்த தாய் தன்வாயை தன்குழந்தையின் வாய்மேல் வைத்து அவனுடைய சுவாசக்குழாயிலுள்ள காற்றை வெளியே இழுக்கவும், அங்கே வெறுமையுண்டாகி சுத்த ஆகாயம் உள்ளேபோய் அவனுக்குத் தெளிவு உண்டாகும். இவ்விதமாக இரண்டு தடவை அக்குழந்தை செத்துப்போயிற்றென்று சொல்லக்கூடியதாயிருந்தும் அத்தாய் இவ்விதம் பண்ணினதால் அவன் உயிர் திரும்பவந்தாற்போல் காணப்பட்டது. பத்து நாட்களாய் அம்மாதா இவ்விதமாகவே அப்பிள்ளையைக் காப்பாற்றினாள். என்றாலும் அவர்கள் தாங்கள் அப்பிள்ளையைக் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்த்தும், இரண்டொரு தினங்களுக்குள் அக்குழந்தை இறந்துபோனது. அவ்வேழைத்தாயின் பிரயாசமெல்லாம் வீணாய்ப்போயிற்று. துக்கத்தினால் நிறைந்த அத்தாய் இனிமேல் என்ன பிரயாசப்பட்டாலும் அதின் உயிர் திரும்ப வாராது என்றாலும், அம்மாதாவின் நேசம் மகா ஆச்சரியமானதன்றோ!

---

TALES OF THE 'KHOJA.'

## கோஜாவைக் குறித்துள்ள கதைகள்.

---

கொஞ்சக் காலத்துக்குமுன் எழுதப்பட்ட ஒரு புஸ்தகத்தில் கோஜா என்னும் ஒரு மகம்மதியனைக் குறித்துள்ள கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவன் சின்ன ஆசியாவிலுள்ள ஒரு சிறு நகரத்தில் சுமார் 500-வருஷங்களுக்கு முன் ஜீவித்தான். அப்புஸ்தகத்தை வாசிக்கிறதற்கு யாருக்கும் விருப்பம் இருக்கும். ஏனெனில் அதிலே முற்காலத்திலுள்ள ஜனங்களுடைய நடபடிகள் எவ்விதமாயிருந்ததென்று அறியலாம். அதன்றி கிழவனான அந்த கோஜா எத்தனை சாமர்த்தியமுள்ளவனாயிருந்திருக்கிறான் என்பதை அது காட்டும். ஆனால் அந்த மனிதன் சொன்ன வார்த்தைகள் எப்போதும் சத்தியமுள்ளவைகளாயில்லை.

ஒரு நாள் ஒரு ஒட்டகம் கோஜா வருகிற தெரு வழியாய் சென்றது. கோஜாவின் அயலான் ஒருவன் ஒட்டகத்தை ஒருபோதும் பார்த்திருந்ததில்லை. ஆகையால் அவன் கோஜாவினிடம் ஓடிச்சென்று அம்மிருகம் என்னதாயிருக்கும் என்றுவிசாரித்தான். ஆனால் கோஜாவோ ஒட்டையை ஒருபோதும் தானும் பார்த்திராதிருந்தும், தன் அறிவீனத்தை வெளியிட விருப்பமில்லாமல் "அந்த மிருகம் என்னவென்று உனக்குத் தெரியாதா?" அது ஆயிரம் வயதுள்ள ஒரு முயல் என்றான்.

ஒரு பெரிய மனுஷன் ஒரு விருந்து பண்ணினான். அதற்கு அவ்வூரிலுள்ள பெரியோரெல்லாம் அழைக்கப்பட்டார்கள். அவர்களோடு கோஜாவும் அப்பிரபுவினால் அழைக்கப்படும் ஸ்லாக்கியத்தைப் பெற்றான். குறித்த நாளில் கோஜாவும்

அப்பிரபுவின் வீட்டிற்குச் சென்றான். இவனைத் தவிர மற்றோர் யாவரும் வெகு கெம்பீரமான உடை தரித்திருந்தார்கள். மெல்லிய கறுப்பு அங்கியை தரித்திருந்த இவனை விசாரிப்பார் யாருமில்லை. ஒருவரும் இவனோடு பேசவுமில்லை. வந்தனம் புரியவுமில்லை. வேலைக்காரன் இவனுக்கு ஓர் தாழ்ந்த ஆசனத்தைக் காண்பித்தான். சற்று நேரத்துக்கு அப்பால் யாருக்குந் தெரியாமல் தன் இடத்தை விட்டு, அங்கிருந்து மண்டபத்துக்குச் சென்றான். அங்கே விருந்துண்ண வந்த பிரபுக்களின் மேலங்கிகள் வைக்கப்பட்டிருந்தன. அங்கிருந்த அங்கிகளில் அதிக அலங்காரமான ஒன்றை இக்கோஜா எடுத்து தரித்துக்கொண்டு தான் முன்னிருந்த அறைக்குச் சென்றான். இவ்வளவு காம்பீரமான உடையைத் தரித்திருந்த ஆள் கோஜாதான் என்று ஒருவருக்கும் தெரியாதிருந்தது. அங்கிருந்தவர்கள் இவனுக்கு வந்தனோபசாரம் செலுத்தி எழுந்திருந்தார்கள். முன்னே இவனை அவமதித்த பந்திக் விசாரிப்புக்காரனும் அதிக வணக்கத்தோடு அவனுக்கு எதிரே சென்று அவனுடைய சுக க்ஷேமத்தை விசாரித்தான். கோஜாவோ தன் இரவலங்கியின் கைத்தொங்கலை தன் கையினால் அடித்து "மெல்லியரோமமே, உத்தரவு சொல்" என்றான்.

வேறொரு சமயத்தில் மூன்று மனிதர்கள் சில கடுக்காய்களை தங்களுக்குள்ளே பங்கிட எத்தனிக்கும்போது, கோஜாவைக்கண்டு, "கோஜாவே எங்களுக்கு வந்து உதவிசெய், எங்கள் மூவராலும் இதைப் பங்கிட்டெடுக்க முடியவில்லை, ஆகையால் நீயே இவைகளை சரியாய்ப் பங்கிட்டு தரவேண்டும்" என்று முதலாவதானவன் கேட்கவும்,

"ஆம் நீரே அதை நீதியாய் பங்கிட்டுக் கொடும்" என்று இரண்டாவதானவனும்,

"இல்லை இல்லை, நீதியாய் பங்கிட்டால் போதாது, அல்லா எப்படிப் பங்கிடுவாரோ அப்படியே பங்கிடவேண்டும்" என்று மூன்றும் மனிதனும் சொன்னான்.

அப்படியே கோஜா கடுக்காய்களை எடுத்து "நான் அல்லாவைப் போலவா பங்கிடவேண்டும்," என்று சொல்லவே,

மூவரும் "ஆம், அல்லாவைப்போல தான்" என்று சத்தமிட்டார்கள்.

உடனே அவன் ஒரு கடுக்காயை மூன்றாவது மனிதனுக்கும், ஒரு கைப்பிடி கடுக்காய்களை இரண்டாவது மனிதனுக்கும், மீதியெல்லாம் முதலாவது மனிதனுக்கும் கொடுத்தான்.

அப்போ அவர்கள் "ஓ கோஜாவே, இதென்ன, இப்படியா பங்கிடுவது, இது அநியாயம்" என்றார்கள். அதற்கவன் "புத்தியீனர்களே, அல்லா எப்போதாகிலும் எல்லாவற்றையும் சரியாய் மனிதருக்கு பங்கிட்டு கொடுத்ததைப் பார்த்திருக்கிறீர்களா? நானும் அதுபோலவே செய்தேன்" என்றான்.

ஒருநாள் ஒருவன் கோஜாவினிடஞ் சென்று அவனுடைய கோவேறு கழுதையை இரவலாகக் கேட்டான். அப்போ கோஜா, கழுதை தன் வீட்டிலில்லை என்று சொல்ல, அதே சமயம் கழுதை கனைத்தது. அத்தொனியைக் கேட்ட மனிதன் "அதோ உன் கழுதை இங்கேதானிருக்கிறது, இப்போ கனைத்ததே" என்றான்.

அப்போ கோஜா "ஓ மடையா, ஓடிப்போ, என்னுடைய கழுதையை என் முன்னாலேயே நம்புவாயா" என்றான்.

இவ்வித கதைகள் நமக்கு விசேஷித்த பாடங்களை கற்றுக்கொடுக்கிறதில்லை. அவன் சொன்ன பொய்களை நாம் வாசிக்கும்போது அவனுக்கு ஒருவரும் சத்தியத்தைப் பேச கற்றுக் கொடுக்கவில்லை என்பதையும் நினைக்கவேண்டும். அவனைப்போல் நமக்கும் தீவிரபுத்தி இருப்பது நல்லது. ஏனெனில் நாமும் நமக்குத் திடீரென கஷ்டம் வந்தால் தப்பிக் கொள்ளலாம். ஆனாலும் எந்த கஷ்டத்தையும் நிவிர்த்திசெய்ய ஒருபோதும் பொய் பேசக்கூடாது.

Vol.XXVII. Registered No. M. 209 No. 9

MARCH, 1914

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 17 APR 1914 MADRAS

# மாதர் மித்திரி.

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்' பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

## THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*, Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

### பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை | 131 |
| பாதையில் கிடந்த கல் | 132 |
| ஜென்னி லின்ட் என்பவளும், பறவையும் | 133 |
| வர்த்தமானக் குறிப்புகள் | 136 |
| ஒரு திருடன் கண்டுபிடிக்கப்பட்ட விதம் | 137 |
| வக்கீலும் கடல் நண்டும் | 138 |
| ஒருவனுடைய ஆச்சரியமான புன்னகை | 139 |
| றெயில் வண்டி தப்பின விதம் | 139 |
| கரும்பும் மெழுகுவர்த்தியும் | 141 |
| ஒரு விந்தையான பொரிக்கும் பாத்திரம் | 143 |
| கல்நார் | 144 |


17 APR 1914 OFFICE MADRAS.

# மாதர் மித்திரி.

புத். உஎ. ககூகச ௵ - மார்ச்சு மீ. இல. கூ.

### PRESENCE OF CHRIST.

இராகம், ஆனந்தபைரவி. ஆதிதாளம்.

**பல்லவி.**

பாணிக்ரகணஞ் செய்யும்—இருபேருக்கும்,
பரனே, கிருபை செய்யும்.

**அனுபல்லவி.**

மாணைப் பெரிய வேத வாசக விதிகொண்டு
வந்தார், தெய்வாலயம் புரிந்தா ரடித்தொண்டு.— பாணி.

**சரணங்கள்.**

1. அன்றுநீ மேவை சேராய்—ஏகாந்தமாக
அன்போ டிணைந்த நேராய்,
துன்றி யபிராஞ் சாராய்—மனோகர
சுத்த இதயத்தோராய்
மன்றல் செய்வா ரவந்து—வைக இவர்பால் வந்து
வாக்குத்தத்தம் நினைந்து—வரப்ரசாதந் தந்து— பாணி.

2. கானா விவாகம் நாடி—சிந்தை மகிழ்ந்து
கரிசனையாய்க் கொண்டாடிப்
போவீ ராறு கற்சாடி—நிறைந்த ரசம்
புரிந்தீ ரங்குறவாடி.
கோனே ! யின்றுமைத் தேடிக்—கோயிற் புகுந்தார் கேடி,
குழைந்துந்தன் துதிபாடி,—கூடி மங்கில்யஞ்சூடி— பாணி.

3. திருச்சபை மனையாட்டி,—அன்பே, புருவே,
செல்வமே யென்று பாராட்டி,
வரச்சொல்லி, நேசங்காட்டி,—உன்னதகீத
வாக்கு வர்ணனை சூட்டி
உரைக்குமது, மெய்ஞ்ஞான—மணவாளா, உவமானம்;
உவமேயமிது நிதானம்;—வேணுநின் சமாதானம்— பாணி.

## THE STONE IN THE ROAD.
## பாதையில் கிடந்த கல்.

வெகுகாலத்துக்கு முன்னே ஒரு அரசன் இருந்தான். அவ்வரசனுக்கு தம் குடிகளுக்கு நல்ல பாடங்களை கற்றுக் கொடுக்க வெகு இஷ்டம். "துர் அதிர்ஷ்டம் சோம்பேறிகளுக்கும், கவலையீனருக்கும் உண்டாவதன்றி, சுறுசுறுப்புள்ளவருக்கு தேவன் இந்த ஜீவியத்தின் நல்ல காரியங்களையெல்லாம் கொடுக்கிறார்" என்று அவர் சொல்வது வழக்கம்.

ஆகவே ஒரு இரவில் அவ்வரசன் தமதரண்மனைக்கருகே பாதையின் நடுவில் ஒரு பெரிய கல்லைப் போட்டுவிட்டு அதின் வழியாய் நடக்கும் ஜனங்கள் என்ன பண்ணுகிறார்கள் என்பதைக் கவனித்துக்கொண்டிருந்தார்.

அடுத்த நாள் அதிகாலையில் பீற்றர் என்ற சமுசாரி ஒருவன் தன் வண்டி நிறைய தானியம் ஏற்றி அவ்வழியாய் வந்தான்.

அவன் தன் வண்டியை ஒரு ஓரமாய் ஓட்டிக்கொண்டு "என்ன சோம்பேறி ஜனங்கள் பாதையின் மத்தியில் இவ்வளவு பெரிய கல் இருக்கிறது, ஒருவரும் அதை புரட்டி விடுவார் இல்லை" என்று சொன்னான்.

இப்படியாகவே இவன் மற்றவர்களுடைய சோம்பேறித்தனத்தைக் குறித்து அவர்களை திட்டினானேயன்றி தானாக அக்கல்லை புரட்டிவிடாமல் போனான்.

அப்புறம் ஓர் வாலிப யுத்தவீரன் ஒரு வேடிக்கைப் பாட்டுப் பாடிக்கொண்டு வந்தான். அவன் தொப்பியில் ஒரு இறகு வைத்திருந்தது. அவன் பக்கத்தில் ஒரு பெரிய வாள் தொங்கினது. தான் யுத்தத்தில் செய்தவற்றைக் குறித்து பெரிய கதைகள் பேசுவது அவனுக்கு மெத்தப் பிரியம். அவன் தன் தலையை அதிகமாய் உயர்த்திக்கொண்டே நடந்ததால் தன் முன்னே கிடந்த கல்லைகூட கவனியாமல், அதன்மேல் தவறி தூசியும் அழுக்குமான இடத்துக்குள் போய் விழுந்தான்.

இதனிமித்தம் அவனுடைய உல்லாசப்பாட்டு நின்றுபோயிற்று. அப்புறம் அவன் எழுந்து நின்று, அந்நாட்டு ஜனங்களை அதிகமாய் திட்ட ஆரம்பித்தான்.

"இதென்ன புத்தியீனமான தேனீக்கள்! பாதையின் நடுவில் இப்பேர்ப்பட்ட கல்லைப் போட்டுவிட்டு அதை கவனியாமலிருக்கிறார்களே" என்று அவன் சொன்னான். அப்புறம் அவன் தன் வழியே போனான். ஆனால் பாட்டுப்பாடவே முடியவில்லை.

ஒரு மணி நேரத்துக்குப் பிற்பாடு, அவ்வழியே, ஆறு வியாபாரிகள் தங்கள் சரக்குகளை குதிரைகள்மேல் ஏற்றி கிராமத்தினருகே இருந்த சந்தைக்கு கொண்டுபோக வந்தார்கள். அக்கல்லருகே அவர்கள் வரவும் பாதை இடுக்கமாயிருந்தபடியால், அக்கல்லுக்கும் சுவருக்கும் இடையே குதிரைகளை ஓட்ட முடியாதிருந்தது.

அப்போ அவர்கள் "இதுபோல் யாராகிலும் பார்த்ததுண்டா? பாதையில் இத்தனை பெரிய கல் இருக்க, வழி நடக்கிற இவ்வூர் ஜனங்களில் ஒருவரும் இதைப் புரட்டவில்லையே" என்று ஆச்சரியத்தோடு உரைத்தார்கள்.

இப்படியாக மூன்று வாரங்களாக அக்கல் அவ்விடத்திலேயே கிடந்தது. ஊரிலுள்ள எல்லா ஜனங்களும் அவ்வழியே நடக்கையில் அக்கல்லைக் கண்டார்கள்.



என்றாலும் இன்னொருவன் செய்யட்டும் என்று ஒவ்வொருவனும் நினைத்தான்.

பிற்பாடு ராஜா எல்லா ஜனங்களும் ஒருநாள் அரமனைக்கருகே வந்து கூட வேண்டுமென்றும் தாம் அவர்களோடு ஒரு சங்கதி பேசவேண்டுமென்றும் விளம்பரம்பண்ணினார்.

குறித்த நாளில் ஏராளமான ஆண்களும் பெண்களும் பாதையில் வந்து கூடினார்கள். சமுசாரி பீற்றரும், வியாபாரிகளும், வாலிப போர்ச்சேவகனும் அக்கூட்டத்தில் நின்றார்கள்.

"ராஜா தமது குடி ஜனங்கள் பெரிய சோம்பேறிகளென்பதை கண்டுபிடிக்காதிருந்தால் மிகவும் நல்லதே" என்று பீற்றர் சொன்னான்.

அப்புறம் ஒரு சங்கு ஊதின சத்தம் கேட்டது. இதோ ராஜா ஜனங்களுக்கு நேராக வந்தார். அக்கல் மட்டும் அவர் வந்து தம் குதிரையை விட்டிறங்கி, ஜனங்களைப் பார்த்து, "என் சிநேகிதர்களே, நான்தான் இக்கல்லை இவ்விடம் வைத்தேன். நீங்கள் ஒவ்வொருவரும் அதைப் பார்த்தீர்கள். ஆனாலும் ஒருவரும் தானாக அதை புரட்டித்தள்ளாமல் தன் அயலான் அதைப் புரட்டித்தள்ளவில்லையே என்று அவனைத் திட்டினீர்கள்" என்று சொல்லி தாம் குனிந்து கல்லைப் புரட்டினார். அக்கல்லின் கீழ் வட்டமான ஒரு குழி இருந்தது. அதனுள் ஒரு சிறு இரும்புப்பெட்டி இருந்தது. ராஜா அப்பெட்டியை எல்லாரும் காணத்தக்கதாக தூக்கி காண்பித்தார். அப்பெட்டியின் மேல் ஒட்டப்பட்டிருந்த ஒரு கடுதாசியில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இது, இக்கல்லைப் புரட்டித் தள்ளுபவனுக்கு."

அப்புறம் அவர் பெட்டியை தலைகீழாகப் பிடித்தார். அதனுள்ளிருந்து ஒரு அழகான தங்க மோதிரமும், 20 பிரகாசமான தங்கக்காசுகளும் விழுந்தன. அப்போ அங்கிருந்த ஒவ்வொருவரும் "ஐயோ! நான் இன்னொருவன் இக்கல்லைப் புரட்டித்தள்ளக்கூடாதா என்று திட்டாமல் நானாகவே இக்கல்லை புரட்டித்தள்ளினேனில்லையே" என்று அங்கலாய்த்துக் கொண்டார்கள். ஆனால் பிரயோஜனமென்ன? எல்லாரும் வெகுமதியை இழந்தார்கள்.

இவ்விதமாகத்தான் அநேக ஜனங்கள் தங்களுக்கு முன்பாக வைத்திருக்கும் வேலையைத் தாங்களே செய்யாமல் தன் அயலானைக் குற்றம் பிடித்துக்கொண்டு தங்கள் வெகுமதியை இழந்துவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட ஜனங்கள் தங்கள் குற்றத்தை உணருகிறதில்லை. அது தங்களுடைய துர் அதிர்ஷ்டமும் கெட்ட காலமுமென்றே சொல்லுகிறார்கள்.

## JENNY LIND AND THE BIRD.
## ஜென்னி லிண்ட் என்பவளும், பறவையும்.

அநேக வருஷங்களுக்கு முன்னே சுவேதன் தேசத்திலுள்ள ஒரு துரைசானி தன் இனிய குரலினால் தான் போன இடமெல்லாமுள்ள ஜனங்களின் இருதயத்தைக் கவர்ந்தாள். அவள் பெயர் ஜென்னி லிண்ட். அவளை 'சுவேத நைற்றிங்கேல்' என்று அழைப்பார்கள். ஏனெனில் நைற்றிங்கேல் அல்லது இராக்குருவி என்னும் ஓர் பறவை எவ்விதமாக பாடி மனிதரை சந்தோஷப்படுத்துமோ

அவ்விதமாகவே சுவேதன் தேச பாலியப் பெண்ணாகிய இவளும் பாடுவாள்.

இப்பெண்ணுக்கு ஐசுவரியமுள்ள பெற்றோர் இருந்ததில்லை. அவளுக்கு தான் ஒரு பாடகியாகவேண்டும் என்ற ஆசை உண்டு. அவள் பெற்றோருக்கோ திராணியில்லை. ஆகையால் தான் ஒரு பாடகியாகலாம் என்ற நம்பிக்கை அவள் சிறுவயதில் உண்டாயிருக்குமோ என்னவோ. என்றாலும் அவள் எங்கேயிருந்தாலும், எந்த சமயத்திலும் வேலைசெய்யும்போதும் விளையாடும்போதும் பாடிக்கொண்டே திரிவாள். பாட்டின்மேல் மெத்தப் பிரியம். இப்படியிருக்க பாட்டின் மேன்மையை நன்றாயறிந்த ஒரு ஆள், அப்பெண்ணின் இனிய குரலைக் கேட்டு, உடனே ஒரு பேர்போன பாட்டு உபாத்தியரிடம் அவளை ஏழ்ப்பித்து படிப்பித்தான். நாளடைவாய் அவள் ஏராளமான ஜனக்கூட்டத்தின் நடுவில் நின்று பாட சக்தியுற்றாள். அவள் பாடலைக்கேட்ட ஜனமெல்லாம் அவளை மெச்சிப் பேசுவார்கள். ராஜாக்கள் முன்பாக முதலாய் நின்று நேர்த்தியாய்ப் பாடுவாள்.

என்றாலும் அவளுடைய இனிய குரல் மாத்திரம் மனிதரை கவர்ச்சிக்கவில்லை. அவளுடைய குணம் மிக நேர்த்தியாயிருந்தது. அவள் பட்சமுள்ளவள். ஜனங்கள் எவ்வளவோ அவளைப் புகழ்ந்தும் அவள் பெருமையுடையவளாகவில்லை. அவளைப் புகழ்ந்ததுபோல் உலகத்தில் சிலருக்குமாத்திரம் புகழ்ச்சி கிடைத்திருக்கும். அவள் குணம் மாறவேயில்லை. அவள் ஒரு உத்தம கிறிஸ்தவள். அவள் இருதயம் சுத்தமுள்ளதாயிருந்தது. தேவனையும் மனிதரையும் சிநேகித்தாள். நன்மை செய்ய ஆசைப்பட்டாள். தன் பாடலினால் கிடைத்த பணத்தைக்கொண்டு அவள் செய்த காரியங்களைக் குறித்து அநேக கதைகள் சொல்லப்படுகிறது. ஐரோப்பா முழுவதும் அவள் சுற்றி, பெரிய பிரஸ்தாபமான கீர்த்தியடைந்து, பின்பு சுவேதன் தேசத்தில் கொஞ்சகாலம் இருந்தாள். அப்புறம் அத்தேசத்திலுள்ள ஏழைப் பெண்களுக்காக ஒரு பாட்டுக்கச்சேரி வைக்க (Concert) யோசித்தாள். அவளுடைய இனிய குரலினால் எவ்வளவோ ஏராளமான பணம் சேர்ந்தது. அநேகர் வந்து கேட்டார்கள். அப்பணத்தைக் காணவும் அவள் சந்தோஷக்கண்ணீர் சொரிந்து ''ஆகா! என்ன ஆனந்தம், ஏழைப் பிள்ளைகளுக்காக பணஞ்சம்பாதிக்க எனக்கு இத்தனை நன்றாய்ப் பாடத் தெரிந்ததே'' என்றாள்.

இத்தனை கீர்த்தியடைந்த ஜென்னிலின்ட் ஒருநாள் ''என்னைவிட நன்றாய்ப் பாடக்கூடிய ஒன்றிருக்கிறது'' என்று சிலர் முன்பாக அறிக்கையிடவேண்டியதாயிற்று. ஒரு நாள் சில சிநேகிதரோடு அவள் ஒரு வண்டியில் நாட்டுப்புறம் சென்றாள். மெதுவாய் அவர்கள் போகையில் ஒரு மாஞ்சோலையில் அழகான இறக்கைகளுடைய ஒரு குருவி வந்துட்கார்ந்துகொண்டு மிக்க இனிமையாய்ப் பாட்டுப்போல அனுக்கிப் பாடிற்று. அப்போ அவள் வண்டியை நிறுத்தச் சொல்லி தன் தலையை வெளியே நீட்டி பறவையைப் பார்த்துக்கொண்டே தன் பாட்டுகளில் மிக்க இனிமையானதொன்றைப் பாடினாள். அவ்வலங்கார ஜெந்து தன் தலையைச் சாய்த்துக்கொண்டு அப்பாடலைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டு தன் குரலை உயர்த்தி முன்னிலும் மிக நேர்த்தியாய்ப் பாடிற்று. உடனே ஜென்னி ஆனந்த பரவசங்கொண்டு தன் கைகளைத்



தட்டினாள். அப்புறம் ஜென்னி தன் பாடலை அக்குருவி கேவலமாய் எண்ணினாற்போல் நினைத்து, பெரிய ஜனத்திரளுக்கு முன்பாக நிற்கிறாப்போல் முன்னிலும் நேர்த்தியாய் (Tyrolean Mountain Strains) மலைப்பாட்டுகளைப் பாடினாள். அக்குரலின் எதிரொலி ஆகாயத்தை எட்டினது. உடனே குருவி மறுபடியும் மிக நேர்த்தியாய் பாடினது. அப்போ ஜென்னி மிகவும் மனமகிழ்ந்து ''சுவேதன் தேசத்து நைற்றிங்கேலாகிய'' தன்னைவிட அக்குருவி நிச்சயமாகவே விசேஷித்த பாடகி என்று அறிக்கை செய்தாள்.

இன்னொரு கதை அவளைக்குறித்து சொல்லப்படுகிறது. அதினால் அவளை நான் நேசிக்கவும், அதிகமாய் மதிக்கவும் ஏவப்படுகிறேன். நான் முன் சொன்னதுபோலவே, அவள் எங்கே போனாலும் அங்குள்ளவர் யாவரும் அவளை மதித்து புகழ்ந்தார்கள். அப்புகழ்ச்சி அவளுக்கு மிக்க சந்தோஷத்தைக் கொடுத்திருக்கும். ஆனால் வேறொன்றை அவள் அதிகமாய் சிநேகித்தாள். அதுயாதெனில் தான் தேவனோடு தனித்திருந்து பேசும்போது தன் இருதயத்தில உண்டாகும் தேவசமாதானமே. இவ்விதமாக சிறப்புற்றோங்கும் ஜீவிய ஓட்டத்தின் மத்தியில் அவள் பெரியோர் சமுகத்தின்முன் நின்று பாடும் உத்தியோகத்தைவிட்டு, அந்தரங்க ஜீவியம் செய்ய ஆரம்பித்தாள். ஒருநாள் தன் மடியில் தன் வேதபுஸ்தகத்தை வைத்துக்கொண்டு அவள் ஆகாயத்திலுள்ள அதிசயங்களையும் முக்கியமாய் சூரியஸ்தமனத்தையும் பார்த்துக்கொண்டிருக்கையில் ஒரு ஆள் அவளைப் பார்த்து, ''உன் பாட்டைக் கேட்டு ஜனங்கள் ஆனந்திக்க ஆவலாயிருக்கிறார்கள். உன் பாடல்தொனி எத்தனையோ மதுரமாயிருக்கிறது. அப்படியிருக்க, நீ ஏன் உன் பாட்டுத்தொழிலை விட்டுவிட்டாய்?'' என்று கேட்டான். அதற்கவள் தன் மடியிலிருந்த வேதபுஸ்தகத்தைக் காண்பித்து, ''என்னுடைய பாடல்கள் இவ்வருமையான புஸ்தகத்தை என்னை மறக்கப்பண்ணினது'' என்பதையும், சூரியஸ்தமனத்தைக் காண்பித்து ''அப்பேர்ப்பட்ட தேவமகிமையை சற்றேனும் நினைக்கவிடவில்லை'' என்பதையும் நான் கவனித்தவுடனே, அப்பாடல்களை நான் நிறுத்தவேண்டிய சமயமாயிற்று என்று சொன்னாள். இம்மாறுத்தரவு அவள் எப்பேர்ப்பட்ட ஸ்திரீ என்பதை வெளிப்படுத்தி கர்த்தருடைய பார்வையில் விலையேறப்பெற்றது எதுவென்றும், அதல்லாதது எதுவென்றும் நன்றாய் அறிந்தவள் என்பதையும் தெளிவாக வெளிப்படுத்திற்று. மனிதரெல்லாராலும் புகழப்படுவதைவிட, கர்த்தருடைய வார்த்தையை நேசிப்பதும், அவருடைய செயல்களில் களிகூருவதுமே அதிக மேன்மையான வேலையாயிருந்தது. அவள் அப்படிப் பாடினது தப்பன்று. தேவன் அவளுக்கு பாடக்கூடிய நல்ல திறமையை அளித்திருந்தார். அவள் அத்தொனியினால் எத்தனையோ எண்ணடங்காத ஜனங்களை சந்தோஷப்படுத்தலாம். என்றாலும் இப்பேர்ப்பட்டவைகள் அவளை தேவனைவிட்டு அப்புறப்படுத்தினதாலும், அவருடைய அலங்காரமான சிருஷ்டிப்பைக்குறித்து அவள் அசட்டையாயிருந்ததாலும், அவள் தன் சமயத்தை பெரிய கூட்டத்தை சிறப்பிக்குந் தொழிலில் செலவு செய்வது தப்பென்றுகண்டு அதை விட்டுவிடவேண்டியதாயிற்று. அதற்கு பிற்பாடும் அவளுடைய பாடல்களை ஜனங்கள் கேட்டிருக்கலாம்.

அவளும் தன்தொனியை முன்போல்பாட்டில் உபயோகிக்க தடைசொல்லவில்லை.

அப்புறம் அவள் கோல்ட்ஸ்மித் என்ற ஒரு ஜர்மானிய துரையை விவாகம் பண்ணி, சில வருஷங்களுக்குமுன்தான் இங்கிலாந்தில் இறந்துபோனாள். அவள் மகள் இன்னமும் அங்குதானிருக்கிறாள். அவளுடைய பேத்தி அவளைப்போலவே மிக்க இனிமையாய்ப் பாடுகிறாள். ஆகையால் ஜனங்கள் அச்சிறுபெண் ஒரு காலத்தில் இரண்டாவது ஜென்னி லின்ட் என்னும் பெயர் பெறுவாள் என்று நினைக்கிறார்கள்.

---

## NEWS AND NOTES.
## வர்த்தமானக் குறிப்புகள்.

1. ஜனுவரி மாதம் 7-ம் தேதி வந்த தந்தி சமாசாரத்தில் ஒரு ஆகாய கமனம் (Aeroplane) ஒரு மணி நேரத்தில் 60 மைல் வீதம் 300 மைல் தூரம் சென்றதாக அறிகிறோம்.

2. இருபத்துநாலு வருஷங்களுக்கு முன்னே 11 மெத்தைகளுள்ள வீடுதானும் இவ்வுலகத்தில் இல்லை. கட்டடம் என்று சொல்லும்போது கோபுரங்களை நீக்கிவிடவேண்டும். ஏனெனில் 1000 அடி உயரமுள்ள (Eifel Tower) ஐபல் கோபுரம் பிரான்சு தேசத்திலிருந்தது. இப்போதோ 11 மெத்தைகளுக்கு மேலாக உள்ள எத்தனையோ வீடுகள் இருக்கின்றன, 55 தட்டுகளுள்ள கட்டடமொன்றுண்டு. அதிலும் குறைந்துள்ள வீடுகளுமுண்டு. இப்பேர்ப்பட்ட கட்டடங்கள் நியூயார்க்கில்தான் அதிகமாயிருக்கின்றன.

3. அநேக நூற்றுண்டுகளுக்கு முன்னே ஒரு விசேஷித்த சித்திரக்காரன், ஒரு பேர்போனபடமொன்றை சித்திரித்தான். அந்தச் சித்திரம் பார்வைக்கு வெகு அலங்காரமுள்ளதாயும் எவருடைய கண்களையும் கவர்ச்சிக்கக்கூடியதாயுமிருந்தது. அச்சித்திரக்காரனும் எவராலும் மதிக்கப்படக்கூடியவன். பிரான்சு தேசத்திலுள்ள ஒரு படமண்டபத்திலின்று அச்சித்திரம் காணாமற்போயிற்று. இரண்டு வருஷங்களாக அதை எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தும் கிடைக்கவேயில்லை. கொஞ்சக்காலத்துக்கு முன்னே இத்தாலியா தேசத்திலுள்ள ஒரு படவியாபாரி யாரிடத்திலாவது படங்கள் இருந்தால் தான் விலைக்கு எடுத்துக்கொள்வதாகவும், படங்கள் கொண்டு காட்சி காண்பிக்கப்போகிறதாகவும் விளம்பரம் செய்தான். அப்போ ஒரு மனிதன் தன்னிடம் ஒரு விசேஷித்த படம் இருப்பதாகவும், அதை விற்கப்போகிறதாகவும் அறிவித்தான். உடனே மற்றவன் வெகு ஜாக்ரதையாய் இவனிடம் வந்து அப்படந்தான் காணாமற்போன விசேஷித்த படம் என்று கண்டு, உலகமெங்கும் தேடியும் கண்டுபிடிக்கப்படாத இப்படத்தைக் குறித்து போலீசாருக்கறிவித்து அம்மனிதனை காவலில் போடுவித்தான். அம்மனிதனே அவ்வரிய சித்திரத்தை திருடினவன். அவன் அச்செய்கைக்கு கொடுக்கிற காரணம் யாதெனில்:—தான் பிரான்சு தேசத்திலுள்ள படமண்டபத்தில் ஒரு வேலையாளாக இருக்கையில் இத்தாலியாவிலுள்ள இவ்வழகிய சித்திரத்தை நெப்போலியன் சக்ரவர்த்தி இத்தாலியாவை ஜெயித்து எடுத்துக்கொண்டு வைத்திருந்ததை கவனித்து அதிக கோபங்கொண்டு எப்போ அதை எடுத்துக்கொண்டு போய்விடலாம் என்று சமயம் பார்த்துக்கொண்டிருந்ததாகவும், கடைசியாக ஒருநாள் ஒருவரும் இல்லாத



சமயத்தில் எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும் சொன்னான். இம்மனிதனுடைய தேசாபிமானம் எத்தனை ஆழமானது!

4. இந்தியாவிலுள்ள அநேக மாணாக்கருக்கு ஆபிரகாம் லிங்கன் (Abraham Lincoln) என்றால் யாரெனத் தெரியும். அவர் ஒரு மகான். சிறந்த குணசாலி. ஒரு தடவை ஐக்ய மாகாணத்து பிரஜாதிபதியாயிருந்தவர். ஒரு பிரஜாதிபதியையும், அவரை நினைப்பதுபோலும், மதிப்பதுபோலும், அம்மாகாணத்திலுள்ளவர்கள் மதித்ததில்லை. ஐக்ய மாகாணத்தின் சில பாகங்களில் கவர்ன்மென்ற் உத்தியோகஸ்தரை தெரிந்தெடுக்க ஸ்திரீகளும் சம்மதச்சீட்டு (Vote) கொடுக்க அநுமதி உண்டு. இவ்வித சட்டமுள்ள ஒரு நாட்டில் ஒரு வயது சென்ற அம்மாள் இருக்கிறார்கள். அவர்கள் லிங்கனுடைய மைத்துனி. அவர்களுடைய வயது 103. சில நாட்களுக்குமுன் அவர்கள் தன்னுடைய முதல் சம்மதச்சீட்டுக் கொடுத்தார்கள். அவ்வளவு வயதாகியும் நல்ல சுகமும் பெலனும், உற்சாகமும் உள்ளவர்களாயிருக்கிறார்கள். ஸ்திரீகளுடைய விஷயமாய் என்ன செய்யப்படுமோ அவ்விஷயங்களில் மிக்கசிரத்தை காண்பிப்பார்கள். தன்னுடைய சம்மதச்சீட்டு கொடுக்கப்போகும் இடந்திற்கு ஒருவருடைய உதவியையும் வேண்டாமென்று சொல்லி தானாக தன் கோலைமாத்திரம் ஊன்றிப் பிடித்து நடந்துபோனாள்.

5. அபூர்வயான தபால்முத்திரைகளை இங்கிலாந்திலுள்ள கிராபோட் என்னுமிடத்திலுள்ள பிரபு ஒருவர் சேர்த்து ஒன்றரை லட்சம் ரூபாய்க்கு விற்றார். இதினால் எப்பேர்ப்பட்ட முத்திரைகளைச் சேர்த்தாலும் இவ்விதமாய் விலையாகும் என்று நாம் நினைக்கலாகாது. அதுபோல் உலகத்தில் வேறொன்றும் கிடையாமலோ, அல்லது இரண்டொன்று மாத்திரம் கிடைக்கக்கூடியதாய் அத்தனை அபூர்வமாயிருந்தால் மாத்திரம் அம்முத்திரைகளுக்கு இவ்வித விலை கிடைக்கும். முத்திரைகள் விலையேறப்பெற்றதாயிருந்தால் மாத்திரம் அப்புஸ்தகம் (Stamp Album) முழுவதும் விலையேறும். ஆராய்ந்து பார்த்தால் அவ்வித முத்திரைகளால் ஒரு பிரயோஜனமுமில்லை. பணக்காரர் வீடுகளில் ஒரு காட்சிக்கு அபூர்வமான முத்திரையாக இருப்பதன்றி வேறொரு உபயோகமுமில்லை.

---

## HOW THE THIEF WAS FOUND OUT.
## ஒரு திருடன் கண்டு பிடிக்கப்பட்ட விதம்.

தமஸ்குவிலுள்ள முஸ்தாபா என்னும் ஒரு தனவந்தனான வியாபாரி அதிக புத்திமானாயிருந்தான். அவனுக்கு சாயிட் என்று பெயருள்ள ஒரே மகனிருந்தான். அவனை இவன் சத்தியவந்தனாக வளர்க்க ஆசைப்பட்டான். ஆனால் சாயிடோ ஒரு வாலிப அர்மீனியனோடு சிநேகஞ்செய்து அவனுடைய ஆலோசனையைக் கேட்டு நடந்தான். அந்த அர்மீனியன் சூதுள்ளவனும், சாயிடை மோசம்போக்குகிறவனுமாயிருந்தான். அதை சாயிட் அறியவில்லை. ஒருநாள் முஸ்தாபாவும் சாயிடும் பாக்தாத் என்னும் நகரத்துக்கு வேலை விஷயமாய் போகவேண்டியதாயிற்று. அப்போ தகப்பன் மகனைப் பார்த்து: "மகனே நாம் இருவரும் போய்விட வேண்டியதாயிருக்க என்னுடைய பணம் முழுவதையும் யார்வசம் ஒப்பிக்க என்று சொல்" என்றான்.

உடனே மகன் "என் அர்மீனிய சிநேகிதனைப்போல் தமஸ்கு ஊர் முழுவதிலும் உண்மையுள்ள ஒரு ஆள் கிடையாது. ஆகையால் உடனே அவனிடம் ஒப்பித்து விடும்" என்றான்.

அப்போ தகப்பன் "அதிக சந்தோஷம், நீ சொல்லுகிறபடியே அவனிடம் கொடுக்கலாம்" என்றான்.

அப்புறம் அவன் ஒரு பெரிய இரும்புப்பெட்டியைக் கொண்டுவந்து மகனிடம் கொடுத்து அர்மீனியனிடம் ஒப்பித்து வர்ச்சொன்னான். அப்படியே அவன் கொடுத்துவிட்டுத் திரும்பவும் இருவரும் பாக்தாத்துக்கு சென்றார்கள். இரண்டு மாதம் அங்கிருந்து அதிக திரவியம் சம்பாதித்து தங்கள் வேலை முடிந்தவுடன் தமஸ்குவுக்கு திரும்பினார்கள்.

அப்புறம் முஸ்தாபா மகனைப் பார்த்து: "நீ போய் உன் சிநேகிதனிடமிருந்து என் இரும்புப்பெட்டியை வாங்கிவா" என்றான்.

சாயிட் அர்மீனியனிடம் போய் அதிக கோபத்தோடு வீட்டிற்கு விரைவாய் வந்து தகப்பனைப் பார்த்து: "நீர் எப்படி என் சிநேகிதனை ஏமாற்றுவீர்? அவனிடம் பணத்தை ஒப்பிக்காமல் கற்களை ஒப்பித்தீரே" என்றான்.

உடனே தகப்பன் "மகனே, உன் உத்தம சிநேகிதனாகிய அவனுக்கு பூட்டப்பட்டிருந்த அப்பெட்டிக்குள் பணமில்லாமல் கற்கள் இருந்தது என்று எப்படித்தெரியும்? அவன் என்மூன்று பூட்டுள்ள பெட்டியைத் திறந்து பார்த்திருக்கத்தான் வேண்டும். இப்போது அவனுடைய உண்மை வெளிப்பட்டதைப் பார்த்தாயா? நான் பணத்தை வைத்திருந்தாலும் அவன் முழுவதும் எடுத்திருப்பானே!" என்றான்.

சாயிட் வெட்கத்தினால் தலைகுனிந்து அதுமுதல் தகப்பனுடைய நல்லாலோசனையையும் ஞானத்தையும் கேட்டு, நற்புத்திரனாக வளர்ந்து புத்திமானானான்.

---

## THE LAWYER AND THE CRAB.
## வக்கீலும் கடல் நண்டும்.

---

இரண்டு மனிதர் கடலோரமாய் நடக்கையில் ஒரு நண்டைக் கண்டெடுத்து அதைக்குறித்து சண்டையிடத் தொடங்கினார்கள். ஒருவன் "நான்தான் முதலாவது அதைக் கண்டேன், ஆகையால் அது என்னைச் சேரவேண்டும்" என்றான். மற்றவன் "நான்தான் அதை பொறுக்கியெடுத்தேன், ஆகையால் அதை நானே வைத்திருக்க உரிமையுடையவன்" என்றான். இவ்விதமாக அவர்கள் வாக்குவாதம் பண்ணுகையில் வக்கீலொருவன் அவ்வழியே வந்தான். உடனே அவர்கள் தங்கள் வழக்கைத் தீர்க்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள். வக்கீல் நல்லதெனச் சம்மதித்து அவர்கள் இருவரையும் தான் தீர்த்ததை அவர்கள் திருப்தியாய் ஏற்றுக்கொள்வோம் என்றும், அவன் வார்த்தைக்கு மறுபடியும் எதிர் பேசக்கூடாது என்றும் உறுதிவாக்கு கேட்டான். அவர்கள் ஆகட்டும் எனவே, வக்கீல் "உங்கள் வழக்கைப் பார்க்கையில் இருவருக்கும் அதில் பங்குள்ளதாக தோன்றுகிறது. ஆகையால் நான் உங்களிருவருக்கும் நேர்பாதியாகப் பங்கிடுவேன். அப்போ உங்களுக்குத் திருப்தி உண்டாகும்" என்று சொல்லிக்கொண்டு, நண்டை உடைத்து உள்ளேயிருந்த சதையை படபடவென்று வாயில் போட்டுக்கொண்டு, இரண்டு ஓடுகளையும் இருவருக்கும் கொடுத்தான். அவர்களிருவரும்: "ஐயோ, சதை முழுவதையும் நீ



சாப்பிட்டு விட்டாயே" என்று கூச்சலிட்டார்கள். வக்கீல் "அதுதான் என்னுடைய கூலி, நான் உங்கள் வழக்கைத் தீர்த்தேனல்லவா? இருபேருக்கும் சரியாய்ப் பங்கிட்டுவிட்டேனே?" என்றான்.

இக்கதையினால் நாம் அறிவது என்ன? இரண்டுபேர் சண்டையிட்டு வழக்காடி தாங்களே அதைதீர்த்துக் கொள்ளாமல் கோர்ட்டில் பிரியாது செய்வார்களானால் சாதாரணமாய் இவ்விதமான முடிவே வரும்.

---

## HIS WONDERFUL SMILE.
## ஒருவனுடைய ஆச்சரியமான புன்னகை.

---

நாங்கள் இருந்த இடத்திலுள்ள ஒரு ஏழை அடிமையான ஆப்பிரிக்க கிறிஸ்தவன் இயிர்வாதத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் வேதனையினால் "என் பாவங்களுக்காகத்தான் சுவாமி என்னை தண்டிக்கிறார்" என்று சொன்னான். "கிறிஸ்துவோடுகூட இவ்விதமாய் பாடுபடுவது நல்லது. அது மிக மேன்மையான சிலாக்யம் என்று அவனுக்கு சொல்லப்பட்டது." இதை கேட்கவும் அவன் முகம் பிரகாசமடைந்தது. "இது உண்மையானால் என் அவஸ்தை எனக்கு ஒரு பொருட்டல்ல" என்று அவன் சொன்னான். இன்னொரு நாள்: "நான் சீக்கிரம் மோட்ச வீட்டுக்குபோக எனக்கு ஆசை. ஆனால் என் கால்களால் நடக்கமுடியாது, வழியும் பாரமாயிருக்கிறதே!" என்றான். "உன்னுடைய பரமபிதா உன்னை சுமந்து போக தமது தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" என்று தைரியச்சொல் கூறவே, அவன் ஆனந்தங்கொண்டு அப்புறம் முறுமுறுக்கவேயில்லை. அவன் இறக்கும்போது அவன் முகத்தில் ஒரு ஆச்சரியமான புன்னகை இருந்தது. சாதாரணமாய் புறமதஸ்தர் ஒரு பிரேதத்தண்டை போவதில்லை. ஆனால் அவனுடைய முகமலர்ச்சியைப் பார்க்கும்படியாக அவனுடைய குடிசைக்குஅநேகர் வந்தார்கள். அவனுடைய மகள் அவனைக் கண்டவுடனே: "இதென்ன? என் தகப்பனார் ஒரு நாளும் இவ்வளவு அழகாயிருந்ததில்லையே. அவர் பிரேதமாயிருந்தாலும் அவரண்டை நின்று அவர் முகத்தைப்பார்க்க எனக்கு ஆசையாயிருக்கிறது. எனக்கு ஒரு பயமுமில்லை!" என்றாள். அதற்கு காரணம் யாதெனில்: "இவ்வேழை மனிதன் ராஜாதி ராஜனை அவருடைய மகத்துவத்தில் பார்த்ததினிமித்தம் அப்படிப்பட்ட அழகு அவனுக்கு வந்தது" என்று அவளுக்கு மறு உத்தரவு அளிக்கப்பட்டது.

---

## HOW THE TRAIN WAS SAVED.
## றெயில் வண்டி தப்பின விதம்.

---

ஒரு பெரிய பிளப்பு ஒரு இடத்தில் இருந்தது. அப்பிளப்பினோரத்தில் ஒரு கேவலமான குடிசை இருந்தது. அக்குடிசையில் ஒரு ஏழை வயது சென்ற விதவையும் அவள் மகளும் தங்கள் ஜனத்தாரைவரையும் விட்டுத் தனிமையாய் வாசஞ்செய்தார்கள். அதன் சமீபத்தில் ஒரு றெயில்வண்டி போகவேண்டியதாயிருந்தமையால், அப்பிளப்பின் மேல் ஒரு மரப்பாலம் போட்டிருந்தது.

அத்தேசத்தில் மாரிகாலந்தோறும் தரைமுழுவதும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். கோடைகாலத்தில் அந்த பனிக்கட்டி முழுவதும் உருகி பக்கத்திலுள்ள ஆறுகளையும் நீருவிகளையும்

தண்ணீரால் நிரப்பி அநேக ஆபத்துகளை உண்டாக்கும். மார்ச்சு மாசத்தில் ஒரு நாள் அதிக புசல் அடித்தது. அன்று வெயிலும் அதிகமாயிருந்ததால் பனிக்கட்டி இளகி தண்ணீர் பெருகி, பிளப்பிலுள்ள ஆறும் நிரம்பினது. நேரம் இருட்டவே தண்ணீரோட்டம் அதிக பிரவாகமாயும், கொந்தளிப்பின் சத்தமும் உண்டானது. அந்த இடைவிடாத முழக்கம் இந்த ஏழை விதவையையும் அவள் மகளையும் தத்தளிக்கப்பண்ணிற்று. அவர்களுக்கு படுக்கைக்குப்போக இஷ்டமே இல்லை. ஆனாலும் கடைசியில் நடுக்கத்தோடும் பயத்தோடும் படுத்துக்கொண்டார்கள்.

நடுராத்திரியில் படார் என்று ஓர் பெரிய சத்தம் கேட்டது. அவர்கள் நடுக்கத்தோடே எழுந்திருந்து, ஒருவரையொருவர் கட்டிப் பிடித்துக்கொண்டு பிளப்பின் ஓரம் வரையில் நகர்ந்து போனார்கள். ஆ! அந்த மரப்பாலம் துண்டுதுண்டாய் உடைந்துபோயிற்று என்று அவர்கள் கண்டு திகைத்து நிற்கவே, இன்னும் அரைமணி நேரத்திற்குள் ரெயில்வண்டி அவ்வழியே வரும் என்பது அவர்கள் ஞாபகத்தில் வந்தது. அங்கே ஒருவரும் இல்லை. அடையாளப் பெட்டி இல்லை. தந்தி இல்லை. ஏதாகிலும் ஒருவழியிலாவது வண்டிக்கு வர இருக்கும் ஆபத்தை அறிவிக்க ஏதுவைக்காணோம். இவர்களால் ஒன்றும் செய்யமுடியாதா? சற்றுநேரத்தில் ஓடிவந்து பாதாளத்தில் விழுந்து எத்தனையோ நஷ்டத்துக்குள்ளாகப் போகும் அவ்வண்டியை ரட்சிக்க ஒரு வழியுமில்லையா? ஆ! ஒரே ஒரு வழி. ஒரு வெளிச்சம்! ஒரு வெளிச்சம் போதும்! இந்தப் பயங்கரமான காற்றடிக்கும்போது எவ்வளவு சத்தமாய்க் கூவினாலும், அத்தனை விரைவாய் வரும் வண்டியை ஓட்டுபவன் காதில் சற்றேனும் கேட்காது. ஆனாலோ வெளிச்சத்தை அவன் பார்க்கக்கூடும்.

ஆனால் அக்கிழவிக்கு எங்கேயிருந்து விளக்கு கிடைக்கும்? அவள் குடிசையில் பாதி மெழுகுவர்த்தி மாத்திரமிருந்தது. அதைக் கொண்டுவந்து கொளுத்தி காண்பிக்கலாமென்றால், மழையும் காற்றும் உடனே அணைத்துவிடும். அதிக ஏழையாயிருந்ததால் வீட்டில் ஒரு விளக்கோ, லாந்தரோ கிடையாது. காட்டிலிருந்து பொறுக்கி வைத்திருந்த விறகுகளையெல்லாம் மாரிகாலத்து குளிரை நீக்க எரித்துவிட்டாயிற்று. இன்னம் ஏதாகிலும் கிடையாதா என்று அவள் தன் குடிசையை சுற்றிச் சுற்றிப் பார்க்கவே அவள் கண்களுக்கு தன் பழைய கட்டிலும் இரண்டு நாற்காலிகளும் தென்பட்டன. அவைகளைத் தவிர வேறொன்றையும் அவள் எரிக்கமுடியாது. அவை காய்ந்து பழசாயிருந்தன. கட்டிலின் கால்களெல்லாம் செதிலரித்துப் போயிருந்தன. இவைகளை எரித்தால் நல்ல வெளிச்சமுண்டாகும். காற்று அணைக்காதபடி மாத்திரம் பார்த்துக்கொண்டால் வண்டிக்கு மோசம் வராமல் தடுக்கலாம் என்று அவள் யோசித்தாள். நல்லது, அந்த வண்டியை ரட்சிக்க வேண்டுமானால் ஒரு நிமிஷமும் இனித் தாமதிக்க முடியாது. ஆகவே நடுக்கத்தோடும், ஆவலோடும் அந்த இரண்டு பெண்களும் கட்டிலை துண்டு துண்டாக நறுக்கி தரையில் போட்டார்கள். அப்புறம் அவைகளை கொண்டுபோய் மேலே ஏறி ரெயில் வண்டி வரும் பாதையின் மத்தியில், அந்தப் பிளப்புக்குச் சற்றப்பால் இந்தண்டை அம்மரத்துண்டுகளை காற்றடிக்காத மறைவிடம் பார்த்து



வைத்தார்கள். அப்புறம் அவ்வயோதிப ஸ்திரீ நடுங்கின கைகளால் ஒரு நெருப்புக்குச்சியால் நெருப்புப் பற்றவைத்தாள். அவளுக்கே ஆச்சரியமுண்டாகத்தக்கதாய் சரியான சமயத்தில் குவியலில் நெருப்புப்பற்றி எரிந்தது. ஏனெனில் அது எரியும்போது தூரத்தில் வண்டிவரும் சத்தம் தெளிவாய்க் கேட்டது. ஆ! அந்த தாயும் மகளும் எவ்வளவோ ஆவலோடு அக்குவியல் எரிகிறதை ஜாக்ரதையாய்ப் பார்த்தார்கள்! அவர்கள் ஜெபமும் நம்பிக்கையும் என்னமாயிருந்தது என்று நினைக்கிறீர்கள்? ரெயில்வே சாரதி சரியான சமயத்தில் அந்த வெளிச்சத்தைக் கண்டு வண்டியை நிறுத்தவேண்டுமென்பதே! அத்தாய் தான் போட்டிருந்த சிகப்பு பாவாடையைக் கழற்றி அதை ஒரு கொம்பில் கட்டி வண்டி வரும் பாதைக்கு எதிரே வெளிச்சத்தின் முன்பாக ஆட்டிக்கொண்டே போனாள். மகள் அந்த நெருப்பு அணைந்துபோகாதபடி எரித்துக்கொண்டிருந்தாள். அப்புறம் ரெயில் அடுத்தடுத்து வந்தது. பாலத்துக்கு முன்னேயிருந்த வளைவான இடத்தைச் சுற்றி வந்துவிட்டது. முதல் வண்டியின் முன்னால் இருக்கும் பெரிய வெளிச்சத்தைக்கூட அவர்கள் காணக்கூடிய தூரத்தில் வந்துவிட்டது. அப்போ தாயும் மகளும் தங்கள் பெலனையெல்லாம் கூட்டி "நிறுத்து! வண்டியை நிறுத்து!" என்று உரக்கக் கூவினார்கள்.

படிப்படியாய் வண்டியின் வேகம் குறைந்து குறைந்து எரிகிற அந்த விறகுக்குவியல் முன்பாக, வண்டி நின்றது. ரெயில்வே சாரதியின் கூர்மையான கண்கள் அவ்வெளிச்சத்தையும் சிவப்பு கொடியையும் கண்டதோடு, பயங்கரமான படுகுழியையும், பாலம் ஒடிந்து அவ்விடம் திறப்பாயிருப்பதையும் கண்டு பிடித்தன. அப்புறம் அவன் பார்க்கையில், கட்டில் கால்கள் எரிவதையும் ஏழைக்கிழவியும் அவள் மகளும் அருகே நிற்பதையும் கவனித்தான். உடனே அவன் மனதில் இவ்விருவருமே அந்த விதமான தைரியத்தோடு வண்டியை ரட்சிக்க இவ்விதமான வேலைசெய்திருக்கிறார்கள் என்று தென்பட்டது.

---

## SUGAR CANES AND A CANDLE.

## கரும்பும் மெழுகுவர்த்தியும்.

---

மதுரையில் பழைய ராஜாக்கள் அரசாண்ட காலத்தில் புத்தியும் சாமர்த்தியமுமுள்ள ஒரு வியாபாரி இருந்தான். அவன் பெயர் சண்முகம். அவனுடைய சிறு கப்பல்கள் இலங்கைக்கு துணியும் பட்டும் கொண்டுபோய் போர்த்துக்கேசியரிடமும், டச்சுக்காரரிடமும் வியாபாரஞ்செய்து அங்கிருந்து கருங்காலியும், முத்தும் திரும்பக் கொண்டுவந்தன.

அவைகளை சண்முகம் மதுரை அரசனுக்கு ஜாஸ்தி விலைக்குக் கொடுப்பான். அரசனின் சேனைக்காக, அவன் சுற்றிலுமுள்ள நாட்டுப்புறங்களிலிருந்து அரிசி கொண்டுவந்து போடுவான். அரசனுக்கு விரோதமாக சத்துருக்கள் படையெடுக்கும்போது, ராஜா அவனிடமிருந்து பணம் கடன் வாங்கி இதர நாட்டு வில்வித்தைக்காரர், படைகள், யானைகள், ரதங்கள் முதலியவை கொண்டுவந்து தன் தேசத்தை மீட்பான். இதினிமித்தம் சண்முகம் மிக ஐசுவரியமுள்ளவனும், பேர் பிரஸ்தாபமுள்ளவனுமானான். அவனுடைய திரவியத்தை அவன் தன் வீட்டில் ஒருவரும் காணாத ஒளிப்பிடங்கள், மூலைமுடங்குகள் முதலியவற்றிலும் மரங்களினடியிலும் ஒளித்துவைத்தான்.

அவ்வூர் ஜனங்களுக்கெல்லாம் சண்முகந்தான் இவ்விடத்தில் பெரிய வியாபாரி என்று நன்றாய்த் தெரியும்.

சண்முகனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். ஜாதி வழக்கப்படியே அவர்களில் ஒருவனை, குடும்பத் தலைவனாக தன் மரணத்துக்கு முன் ஏற்படுத்தவேண்டும். அதோடு ராஜாவுக்கு வேண்டிய பணிவிடை செய்யவும், தான் சேகரித்தவைகளையெல்லாம் ஆண்டு நடத்தவும் அக்குமாரன் தகுதியுள்ளவனாயிருந்தால் மாத்திரம் அவன் குடும்பம் நெடுங்காலம் பேர்பெற்றோங்கும் என்று கண்டான். அவன் தன் பிள்ளைகளை மிக ஜாக்ரதையாய் வளர்த்து வந்தான். இப்படியிருக்க அவனும் வயது சென்று தள்ளாடினவனாகவும், பையன்கள் நல்ல வாலிபராகவும் காணவே தன் மனதினெண்ணத்தை வெளியிட காலம் சமீபமாயிற்று.

அப்படியே ஒருநாள் அவன் தன் சிநேகிதரில் அறிவாளிகளும், மதிக்கப்படக்கூடியவர்களுமான சிலரை கூப்பிட்டு, தாமரைப் பூக்கள் நிறைந்த ஒரு குளத்தின் ஓரத்தில் நின்ற பனைமரங்களின் நிழலில் உட்காரவைத்து தன் மக்களிருவரையும் வரவழைத்தான். அவர்கள் வரவும் அவன் அவர்கள் கையில் ஆளுக்கு ஐந்து வெள்ளிப்பணம் கொடுத்து அவர்களையும் பெரியோரையும் பார்த்துக்கொண்டு, "என் மக்களே! நான் சீக்கிரம் இறந்துபோவேன், அதற்கு முன்னே உங்களில் ஒருவனை என் குடும்பத்துக்கு தலைவனாக்கவேண்டும். உங்கள் கையிலிருக்கிற இந்தச் சிறிய தொகையைக் கொண்டு எதாகிலும் பொருள் வாங்கி என்னுடைய வீட்டின் பெரிய அறை முழுவதும் நிரப்பி வைக்கவேண்டும். யாருடையது நேர்த்தியாயிருக்குமோ அவனே என் குடும்பத்துக்கு தலைவனாயிருப்பான்" என்றான். அப்போ மூப்பர்களும் "ரொம்ப நல்லது" என்றார்கள். அப்போ அவ்வாலிபர் தங்கள் தகப்பனுக்கும், மூப்பருக்கும் தலைகுனிந்து வந்தனம் சமர்ப்பித்து தாங்கள் எவ்விதமாய் அவ்வறையை நிரப்பலாமென்று வெவ்வேறு இடத்தில் நின்று ஆலோசிக்கலானார்கள்.

மூத்தமகன் தன் தகப்பனாருடைய தோட்டத்தின் வழியாய் போகையில், வெளியான ஒரு இடத்தைக் கண்டான். அங்கே பெரிய கரும்புச் சோலை ஒன்றிலுள்ள கரும்புகளையெல்லாம் வெட்டி, அக்கரும்புகளை ஆலையிலிட்டு ஆட்டி சாற்றை சர்க்கரையாக்குவதைப் பார்த்தான். சாறெடுத்தபின் அக்கரும்புக் குச்சுகளை விறகெரிப்பதற்காகப் போட்டார்கள். அப்படிக் குவிக்கப்பட்டிருந்த கரும்பு நாரையெல்லாம் இவன் கண்டு "இதற்கு கொஞ்ச விலைதான் பிடிக்கும். ஆனால் தகப்பனாருடைய அறையை நிரப்பிக்கொள்ள, ஏற்ற பொருளாகவுமிருக்கிறதே" என்று சொல்லி, கரும்பு ஆலையை மேல்பார்க்கிறவனிடஞ் சென்று, "நீ சில ஆட்களைக் கொண்டு, இக்கரும்பு நாரினால் என்னுடைய தகப்பனார் வீட்டின் பெரிய அறையை நிரப்பவேண்டும்" என்று சொன்னான். அப்போ மற்றவன் பிரமித்து நிற்க: "நீ அப்படிச் செய்தால் உனக்கு ஐந்து வெள்ளிப்பணம் கொடுப்பேன்" என்றான். உடனே அவனும், அவன் வேலைக்காரரும் அவ்வேலையை செய்ய ஆரம்பித்தார்கள்.

மூத்தமகன் அப்புறம் தாமரைக்குளத்தண்டை வந்து தகப்பனாரிடமும், மூப்பரிடமும் சென்று அவரை நமஸ்கரித்து "அப்பா!' நீர் கொடுத்த ஐந்து வெள்



ளிக்காசையும் கொண்டு உமது வீட்டின் பெரிய அறையை நிரப்பிவைத்தாயிற்று" என்றான். அவர்கள் அவனோடு சென்று, கூலியாட்கள் மிகக் கேவலமான கரும்புக்குச்சிகளால் அவ்வறையை நிரப்புகிறதைக் கண்டார்கள்.

"இவ்வறையை நான் சரியாய் நிரப்பிவிட்டேனல்லவா, என் தகப்பனே!" என்றான் மூத்த மகன். அப்போ அருகில் நின்ற சிலர் "ஆம் சரியாய் நிரம்பியிருக்கிறது. இளையவனுக்காக ஏன் காத்திருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். ஆனால் மூப்பர்களில் ஒருவன் "பொறுங்கள், ஆத்திரப்பட்டவன் அறுப்பை இழந்தது போல ஆகக்கூடாது. இளையவன் என்ன செய்வான் என்பதைப் பார்ப்போம்" என்றான். அப்படியே எல்லாரும் காத்திருந்தார்கள்.

இதற்குள்ளாக சூரியன் அஸ்தமித்து, வீட்டை இருட்டு மூடினது. இளைய மகன் வந்து அறையைப் பார்க்கையில் அது நிறைய கரும்பு வைக்கோலைக்கண்டான். ஆனாலும் அவன் அதைரியப்படவுமில்லை. அவனோடு வேலைக்காரருமில்லை. ஆகையால் அவன் அறையை காலிபண்ணும்படி மாத்திரம் கேட்டான். அப்படியே அறை காலியாக்கப்பட்டது. அப்புறம் அவன் உள்ளே போய் ஒரு மெழுகுவர்த்தியைக்கொளுத்தி அதை அறையின் மத்தியில் வைத்தான். வர்த்தி தெளிவாயும், பிரகாசமாயும் எரியவே, வெளிச்சம் அவ்வறையின் ஒவ்வொரு மூலையிலும், முழுவதிலும் மிக நேர்த்தியாய்ப் பிரகாசித்தது.

அப்போ தகப்பன் "இந்த மகன்தான் அவனைவிட புத்திமான்; அவன் அண்ணன் நான் கொடுத்த ஐந்து வெள்ளிக்காசையும் சிலவழித்தும், கேவலமும் உபயோகமற்றதுமான பொருளினால் அறையை நிரப்பினான். இவனோ ஒரு செம்புக் காசு மாத்திரம் செலவு செய்தும், இந்த அறை முழுவதையும், எல்லா மூலைகளையுங்கூட வெளிச்சத்தால் நிரப்பிவிட்டான். ஆகையால் இவன்தான் என் குடும்பத்துக்குத் தலைவனாயிருக்கத் தகுதியுள்ளவன்" என்று சொன்னான்.

அப்போ அங்கிருந்த மற்றெல்லோரும் சரிதான் என்று ஒத்துக்கொண்டார்கள். ஏனெனில் முற்காலத்தவர் கூறுமாப்போல் "எவன் புத்திமானோ அவனே பெரியவன்."

## A CURIOUS FRYING PAN.

## ஒரு விந்தையான பொரிக்கும் பாத்திரம்.

காட்சி சாலையொன்றை மேல்பார்ப்பவர் ஒருவர் ஒருநாள் பிரான்சு தேசத்திலுள்ள சாதாரண விடுதியொன்றில் சாப்பிட நேரிட்டது. சமையலும் சாப்பாடும் ஒரே அறையில் நடந்தது. சாப்பாட்டுக்காக அவர் காத்துக்கொண்டிருக்கையில், அவ்வறையை சுற்றி நோக்கிப் பார்த்தார். அப்போ அவர் கண்ணுக்கு ஓர்விந்தையான பொரிக்கும் பாத்திரம் தென்பட்டது. அதன் சாயலும் பருமனும் விபரீதமாயிருந்தது. அவர் அதை எடுத்து அதை மூடியிருந்த புகைகரியை நீக்கிவிட்டு பார்த்தபோது அதின்மேல் சில எழுத்துக்களை கவனித்தார். அவ்வெழுத்துகள் அவருக்கு ஆச்சரியத்தை கொடுக்கவே, அவர் அப்பாத்திரத்தை விலைக்கு வாங்கினார்.

அப்புறம் அதை சரியாய் சுத்தப்படுத்தவே பிரான்சு தேசத்தின் யுத்தாயுத அடையாளங்களை அங்கே பார்த்தார்

அதோடு பின்வருமாறு அதில் எழுதப்பட்டிருந்தது.

"இதனுள்ளே படுத்திருப்பவர் மேன்மையுள்ளவரும். பிரான்சுக்கும், நவார் தேசத்துக்கும் அரசனுமான பதினான்காவது லூயி ராஜா" என்பதே. அப்படியானால் அது அவ்வரசனுடையசவப்பெட்டிமூடியின்மேல் வைக்கப்பட்ட ஒரு தட்டாகவேயிருந்திருக்கவேண்டும். அவ்வரசன் அப்போதிருந்த அரசர்களில் பிரக்யாதை பெற்றவனும், வல்லமையுள்ளவனுமாயிருந்தான். யுத்தகாலத்தில் கல்லறைகளிலுள்ளவற்றை சத்துருக்கள் ஏலம்போட்டு எடுத்திருப்பார்கள். அப்புறம் அதற்கு ஒரு பிடி வைத்து பொரிக்கும்பாத்திரமாக்கப்பட்டிருக்கவேண்டும். இப்படித்தான் உலகத்தின் மகிமையும் கனமுமிருக்கின்றன.

---

ASBESTOS.

## கல்நார்.

கல்நார் ஒரு ஆச்சர்யமான வஸ்து. அப்பெயர் கிரேக்கு பாஷையில் ஒரு வார்த்தையிலிருந்துண்டானது. அவ்வார்த்தைக்கு அர்த்தம் "அவிந்துபோகாது" என்பதாம். நெருப்பு அதை எரிக்காது. திராவகங்கள் அதை நறுக்காது. ஆகாயம் அதைக் கெடுக்காது. அது பார்வைக்கு ஓர் மெல்லிய பட்டுத்துணியைப்போலிருந்தாலும் உலோகங்களிலெல்லாம் விசேஷித்த உலோகமென்று சொல்லத்தடையில்லை. ஏனெனில் அதை பளிங்குகல்லைப்போல் வெட்டியெடுக்கலாம். அதோடு அதின் நாரெல்லாம் மெல்லியதாயும், பட்டுப்போலும், தண்ணீரில் மிதக்கக்கூடிய மெல்லிறகுபோலுமிருக்கிறது ஆச்சர்யமே. கேணிகளில் அதை வெட்டியெடுக்கும்போது முதலாவது அதின் நார்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து கல்போல் கட்டியாயும், பளிங்காயும் இருக்கும். வெகுகாலமாக இப்பேர்ப்பட்ட ஒரு வஸ்து இருக்கிறதாக தெரியும். என்றாலும் அதின் பூகோள உறுப்பிலக்கண சரித்திரமும், அது உண்டான விதமும் ஒருவருக்குந் தெரியாது.

சார்லிமேன் சக்ரவர்த்தியினிடம் கல்நாரினால் செய்யப்பட்ட ஒரு மேஜைத்துப்பட்டி இருந்ததாக ஒரு கதையுண்டு. அவன் அரமனையில் விருந்துண்ணும் பிரபுக்கள் அதிசயிக்கத்தக்கதாக, அம்மேஜைத்துப்பட்டியை அவன் எடுத்து நெருப்புக்குள்போட்டு, சற்றப்புறம் அதை வெளியே எடுத்துக்காண்பிக்கும்போது ஒன்றும் வெந்துபோகாமல் சுத்தமாயிருக்கும். ஆகவே அக்காலந் தொடங்கியே அதின் பிரயோஜனத்தை மனிதர் அறிந்து, அதை அதிகமாய் உபயோகிக்கவில்லை. 30 வருஷங்களுக்கு முன்னேதான் அதை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். 35 வருஷங்களுக்கு முன்வரையிலும் ஆல்ப்ஸ் மலையிலும், சிரியாவிலிருந்தும் மாத்திரம் கல்நார் எடுக்கப்பட்டது. ஆனால் ஒருநாள் கேணி ஆராய்ச்சிக்காரர், கன்னடாவிலிருக்கும் க்யுபெக் என்னும் பட்டணத்தின் கீழ்பாகத்தில் எவ்வளவோ ஏராளமாய் கல்நார் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். உடனே அநேக கம்பெனிக்காரர் ஏற்பட்டு 1879-ம் வருஷத்தில் கேணிகள் திறக்கப்பட்டன. இந்தக் கல்நாரின் நரம்புகள் ஒருவகைக் கல்லின் அடுக்குகளால் நிறையப்பட்டிருக்கிறது. அவை இரண்டு அல்லது நாலு அங்குலங்கள் நீளமுண்டு. கேணியிலிருந்து கல்நாரை எடுக்கும்போது அது ஒருவகைப் பச்சை நிறமாயிருக்கிறது. அதின் ஓரமெல்லாம் தளர்ந்த நார்களால் மூடப்பட்டிருக்கும். கல்நார் எவ்வளவு வெண்மை நிறமாயிருக்குமோ அவ்வளவு உத்தமமாயிருக்கும். அதோடு அந்த நார் எவ்வளவு நீளமாயிருக்குமோ அவ்வளவுக்கு விலை அதிகமாயிருக்கும். ஆகையால் கல்நாருக்கு விலை ஏற்றுவது அதின் நிறமும், நீளமுமே.

Vol.XXVII. Registered No. M. 209 No. 10

APRIL, 1914

# மாதர் மித்திரி.

THE REGISTRAR OF ... 13 MAY 1914 MADRAS

# Tamil Woman's Friend

"MATHAR MITHIRI"

PUBLISHED BY THE
Woman's Foreign Missionary Society
Methodist Episcopal Church
U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

## மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு, கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

---

## THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance.* Postage for a single copy for one year is 3 annas *in advance.* Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance.* Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House,* MOUNT ROAD, MADRAS.


---

### பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | .... 147 |
| ஒரு ஆச்சர்யமான பூர்வீக நகரம்.... .... .... | .... 148 |
| ஆரத்தை நிதானிக்கும் விதம் .... .... .... | .... 150 |
| ஒரு பிள்ளை பிறந்தவுடன் செய்யவேண்டியதென்ன? .... | ... 151 |
| ஒரு தாய் தன் பிள்ளைக்கு படிப்பித்த விதம் .... .... | .... 153 |
| பலவித சமாச்சாரக் குறிப்புகள் .... .... .... | .... 155 |
| மேரி என்னும் இளவரசி .... .... .... | .... 157 |
| நிறையும் அளவும் .... .... .... .... | .... 159 |



# மாதர் மித்திரி.

புத். ௨௭. ௧௯௧௪ ஹு - ஏப்பிரல் மீ. இல. ௰.


### VICTORY.

இராகம், இங்கிலீஷ். ஆதிதாளம்.

**பல்லவி.**

ஆமென், அல்லெலூயா! மகத்துவத் தம்பராபரா;
ஆமென், அல்லெலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த ஸ்தோத்திரா.

**அனுபல்லவி.**

ஆம் ஆறுதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே!—

**சரணங்கள்.**

1. வெற்றிகொண் டார்பரித்து,—கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,—முரித்து;
பத்ராசனக் கிறிஸ்து—மரித்து,
பாடுபட்டுத்தரித்து, முடித்தார்.— ஆமென்

2. வேதம் நிறைவேற்றி,—மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,—பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,—கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார்.— ஆமென்

3. சாவின் கூர் ஒடிந்து,—மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து—விழுந்து,
ஜீவனே விடிந்து,—தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது.— ஆமென்

4. தேவ கோபந் தீர்ந்து,—அலகையின்
தீமை எலாஞ் சோர்ந்து,—முடிந்தது;
ஆவலுடன் சேர்ந்து,—பணிந்துகொண்
டாடும், களிகூர்ந்து மகிழ்ந்து.— ஆமென்

## A WONDERFUL ANCIENT CITY

## ஒரு ஆச்சர்யமான பூர்வீக நகரம்.

---

பாபிலோன் பூர்வ உலகத்தின் அதிசய நகரங்களில் ஒன்று. பூர்வீக சரித்திரக்காரர் அதை மிகப் பெரியதாகவும், அதிசயமுள்ளதாகவும் விஸ்தரிக்கிற விதத்தினால், ஜனங்கள் அவர்கள் எழுதினவைகள் பொய்யாயிருக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனாலோ அது நிஜமோ பொய்யோ என்று ரூபித்துக்காட்ட இன்னமும் சாத்தியப்படவில்லை. மகா பாபிலோன் ஒரு பட்டணமாக இப்போ இல்லை. அது 2000 வருஷங்களுக்கு முன்னே அப்படியிருந்தது. வேதாகமத்தில் அப்பட்டணம் அழிக்கப்படுமென்றும், அதின் மகிமையும், அழகும் ஒன்றுமில்லாமல் போகுமென்றும் ஒரு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அந்நகரம், பாரசீகக் குடாவில் விழும் ஐப்பிராத்து நதியின் ஓரங்களில் கட்டப்பட்டிருந்தது. அதின் கோட்டைகள் 365 அடி உயரமும், 85 அடி அகலமுமாயிருந்ததாம். அதில் 250 கோபுரங்கள் அடுக்கடுக்காய் இருந்ததாம். 100 வெண்கலக் கதவுகள் அந்நகரத்துள் போக்குவரவுக்காக கட்டப்பட்டிருந்ததாம். அதின் கோட்டைகள் 40 மைல் நீளத்துக்குமேலாயிருந்தது. அதின் அரமனைகளின் சிறப்பும், அதின் தொங்கு தோட்டங்களும் மிக விசேஷமே. இவையெல்லாம் அமைந்துள்ள அந்நகரம் மெய்யாகவே பூர்வீக நகரங்களில் மிகச் சிறப்பான தென்பதற்குச் சந்தேகமேயில்லை.

'பாபிலோனின் தொங்கு தோட்டம்' உலகத்திலுள்ள ஏழு அதிசயங்களில் ஒன்று. அத்தோட்டம் வில்வளைவான சுவர்கள்மேல் வளர்த்தப்பட்டதாலும், அவைகளின் கீழும் நேர்த்தியான குளிரையும் மனோகரத்தையுங் கொடுக்கக் கூடிய பாதைகளும் இடங்களுமிருந்ததாலும் அதற்கு தொங்கு தோட்டம் என்று பேர். அதன்றி அதன்மேல் நேர்த்தியான செடிகளும் விருட்சங்களும் நாட்டப்பட்டிருந்தன.

பாபிலோன் ஒரு பொல்லாத நகரமாயிருந்தபடியால் அது அழிக்கப்பட்டுப் போயிற்று. அதின் கொடிய துன்மார்க்கத்தினால் அது அழிக்கப்பட்டுப் போகுமென்று முன்னமே ஒரு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்க்கதரிசனம் பிற்காலத்தில் நிறைவேறினது. அநேக நூற்றாண்டுகளாக இந்தப்பட்டணம் பூமிக்குக் கீழ் புதைந்து கிடந்தது. காலஞ்செல்லவே, கட்டடங்கள் விழுந்துபோய் சகலவிதமான அழுக்குகளும் குப்பைகளும் அக்கட்டடங்களையும் முழுப்பட்டணத்தையும் நிரப்பினதால் அவ்விடத்தில் ஒரு பட்டணம் இருந்ததுபோல் காணாதபடி ஆயிற்று. கோட்டைகளிருந்த இடத்தில் மேடுகளும், அரமனைகள் இருந்த இடத்திலே குவியல்களையுமேயன்றி அம்மகா நகரத்தில் வேறொன்றும் காணப்படவில்லை. ஏதோ சில காரணத்தினால் அப்பட்டணம் இருந்த திசை முழுவதும் வறண்டு போனதால் ஒருவரும் சஞ்சாரம் செய்யமுடியவில்லை. ஒருகாலத்தில் செழிப்பும் அழகுவாய்ந்ததுமான தேசம் இப்போ வறண்ட பாலைவனமாயிற்று. காரணம் யாதெனில் நகரத்தினூடே ஓடின நதியானது கொஞ்சதூரம் அகன்று செல்வதனால்தான்.

ஆனால் மானுக்கர் அதினுள் மறைந்து கிடந்த பொக்கிஷங்களை வெளிப்படுத்த



மிக்க ஆசைப்பட்டு அதற்காக அதிக பிரயாசப்பட்டார்கள். கடைசியில் அவர்கள் பிரயாசத்துக்கு பலன் கிடைத்தது. கடந்த 12 வருஷங்களாக ஜர்மானியர் அதிக பிரயாசப்பட்டு இவ்வேலையைச் செய்தார்கள். இப்போ அவர்களுக்கு ஜெயம் கிடைத்தது. அவர்கள் அழிந்து போய்க்கிடப்பவைகளை தோண்டி எடுத்துப்பார்த்து அவைகளை ஆராய்ச்சிசெய்து அநேக நூதனங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

வேதாகமசரித்திரத்தில் நேபுகாத்நேச்சாரின் கதை சொல்லப்பட்டிருக்கிறது. அவனுடைய பெயர் மற்ற சரித்திரங்களிலும் கூறப்பட்டிருக்கிறது. ஆனாலும் சாதாரண ஜனங்களுக்கு அவ்வரசனைக்குறித்து வேதாகமத்தில் சொல்லியிருக்கிறது மாத்திரந்தான் தெரியும். பாபிலோனின் பாழிடங்களில் கண்டுபிடித்த செங்கல்கள் ஒவ்வொன்றிலும் நேபுகாத்நேச்சாரின் பெயர் கொத்தப்பட்டிருந்தது ஆச்சரியப்படத்தக்க விஷயம். ஏனெனில் இவ்வரசன்தான் மகா பாபிலோனை அதின்சகல மகிமையோடும் அரசாண்டவன். அவன் காலத்தில்தான் தானியேல் என்னும் யூதன் அல்லது எபிரேயனும் அவனுடைய மூன்று தோழர்களும் அடிமைகளாகக் கொண்டுபோகப்பட்டார்கள். அங்கே அவர்களுக்கு எத்தனையோ துன்பங்களும் சோதனைகளும் உண்டாயின. ஆனாலும் அவர்கள் தங்கள் தேவனை மறக்கவில்லை. ராஜாவைவிட தேவனே மகா பெரியவர் என்று ரூபித்தார்கள். தானியேல் பிரதான மந்திரிகளில் ஒருவனாயிருந்தும், சிங்கக் குகையில் போடப்பட்டான். ஆனால் தேவன் அவைகளின் வாய்களை அடைத்துப்போட்டதால் அவனுக்கு ஒரு தீங்கும் நேரிடவில்லை. வெட்டித் திறந்து பார்த்த சாமான்களில் ஒன்று, ஒரு கல்லால் செய்யப்பட்ட பெரிய ஒரு சிங்கம். அச்சிங்கம் படுத்திருக்கும் ஒரு மனிதன் மேல் நிற்கிறதாக காணப்படுகிறது. அதைப்பார்த்தவுடன் யாருக்கும் தானியேலுடைய சரித்திரம் ஞாபகத்தில் வரும். இப்போதும் 40 அடி உயரமாயிருக்கும் கோட்டையை ஒருவன் சற்று நேரம் நின்று ஆராய்ந்து பார்த்தால் பூர்வீக சரித்திரக்காரர் சொல்லியிருக்கிற அதிசயங்களெல்லாம் உண்மைதான் என்று சொல்ல ஏவப்படுவான். அங்கே கற்களில் சித்திரிக்கப்பட்டிருக்கிற சில மிருகங்கள் சுவர்களுக்கு மேலாக எழும்பி நிற்கிற சாயலாயிருப்பது மிக அலங்காரமாயிருக்கும். வாசல் மண்டபங்களின் சுவரின்மேல் நேர்த்தியான வர்ணந்தீர்ந்த படங்களிருக்கின்றன. அப்படங்களின் நிறம் பூசும்போதிருந்ததுபோலவே இப்போதும் புதிதாயும் நிறம் மங்காமலுமிருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளாக அதிப்படியிருப்பது ஆச்சர்யமே. நேபுகாத்நேச்சாரின் அரமனை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதோடு பூர்வ உலகத்திலுள்ள அதிசயங்களில் ஒன்றாகிய பாபிலோனின் கோவிலும் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோவிலை கண்டுபிடிக்க எவ்வளவோ பிரயாசமும், காலமும் பிடித்தது. 40 அடி ஆழம் ஒரு ஏக்கர் நிலத்தை மிகப் பொறுமையோடு கைகளால் வெட்டி தோண்டியெடுத்து கடைசியில் இது கண்டு பிடிக்கப்பட்டது நமது புத்திக்காச்சர்யத்தை பிறப்பிக்குமன்றோ!

இதை வாசிப்போர் இப்படியெல்லாம் பிரயாசப்பட்டதினால் என்ன பிரயோஜனம் என்று கேட்பார்கள். பழைய பாழிடங்களை தோண்டி வெட்டிப்பார்ப்பதற்கு மனிதர் ஏன் இவ்வளவு பிரயாசப்

படுகிறார்கள்? என்னவெனில் இவ்வுலகத்தில் முன் இருந்த மனிதர் என்ன வேலை செய்தார்கள், எவ்விதமாய் ஜீவித்தார்கள் என்பதை அறிய இப்போதிருக்கிற மனிதர் அதிக வாஞ்சைகொண்டு இவ்வித பிரயாசங்களை எடுத்து வருகிறார்கள். இவ்வாஞ்சையினிமித்தம் அவர்களுக்குண்டாகும் பணநஷ்டங்களையும் வேலையின் கஷ்டத்தையும் அவர்கள் சட்டைபண்ணுகிறதேயில்லை. பூர்வீக ஜனங்களைக் குறித்து புது புது சமாசாரங்களை நாம் அறிவது எவ்வளவு பிரயோஜனமும், மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறதாயுமிருக்கிறது. பூமிக்குள் புதைந்து கிடக்கும் இவ்வித நகரங்களை தோண்டியெடுத்துப் பார்ப்பதால் பூர்விக ஜனங்கள் எவ்விதமாய் ஜீவித்தார்களென்றும், அவர்களுக்கு எவ்வளவோ அறிவும் நாகரீகமும் இருந்ததென்றும், அவர்கள் சரித்திரம் என்னவென்றும் நாம் அறிந்து வருகிறோம். அப்பேர்ப்பட்ட வேலைகளைக்குறித்து அதிகமாய் வாசித்தறிய நமக்கு எப்போதும் ஆசையுண்டாகிறதில்லையா? அப்படியே எல்லாவற்றையும் கண்டுபிடித்து தீருமட்டும் மனிதர் வெட்டித் தோண்டியெடுக்கும் தொழிலை விடமாட்டார்கள்.

---

JUDGING DISTANCES.

## தூரத்தை நிதானிக்கும் விதம்.

---

தூரத்தை நிதானிக்க அறிவது மிகவும் நல்லது. முக்கியமாய் நாட்டுப்புறங்களுக்கு இது மிக்க அவசியம். கொஞ்சம் கொஞ்சமாய் பழகிக்கொண்டால் அப்புறம் மிகத் துல்லியமாய் நாம் எல்லாவற்றையும் கிரகிக்கலாம். இரண்டு மூன்றுபேர் வயல் வெளிகளில் உலாவப்போனால் தூரத்தை கிரகிக்கும் விதத்தை யார் மிக நேர்த்தியாய் செய்யக்கூடும் என்பதை ஒரு நேரப்போக்கு சாமர்த்திய விளையாட்டாக வைத்துக்கொள்ளலாம்.

முதலாவது, ஒரு வீடாகிலும், ஒரு மரமாகிலும், ஒரு ஆளாகிலும் நமக்கு எவ்வளவு தொலையிலிருக்கிறது என்பதை இரண்டு மூன்று நிமிஷங்களுக்குள் கண்டுபிடிக்கலாம். ஆனால் பழகப்பழக ஒரு நொடிக்குள்ளாக நாம் காண்கிற ஒரு வஸ்துவுக்கும் நமக்கும் எவ்வளவு தூரம் என்பதை சுலபமாய்ச் சொல்லிவிடக்கூடும்.

நாட்டுப்புறங்களில் ஒரு பட்டணக்கரையைப்போல் ஒரு பொருளுக்கும் நமக்கும் உள்ள தூரம் ஜாஸ்தியாகக் கண்ணுக்குத் தோன்றாது. வெளிச்சம் பிரகாசமாயிருக்கும்போது சாதாரணமாய் ஒரு பொருள் இருக்கும் இடத்தைவிட அதிகச் சமீபமாய் காணப்படும். ஒரு நாட்டுப்புறத்தில் கட்டடங்கள் அதிகமாயிருப்பதில்லை. ஆகாய முழுவதும் புகையை அனுப்பிவிடும் இயந்திரசாலைகளும் கிடையா. ஆகையால் நாட்டுப்புறத்தில் நகரத்தைவிட வெளிச்சம் துலாம்பரமாய் இருக்கும். அதன்றி ஜலத்தினூடே ஒரு வஸ்துவை நாம் பார்த்தால் அது இருக்கும் தூரத்தைவிட சமீபத்தில் காணும். ஒரு பள்ளத்தாக்குக்கு அந்தண்டையில் ஒரு பொருள் இருந்தால் அப்பொருள் இந்தண்டை நிற்பவருக்கு அதிக தூரத்தில் காணும். மேலும் ஒரு பொருள் அதே நிறமுள்ள இன்னொரு பொருளோடு சம்பந்தப்பட்டாகிலும் அல்லது அதற்கு எதிராகவாகிலும் இருந்தால் அது அதின் ஸ்தானத்தைவிட அதிக தூரத்திலிருப்பதாகத் தோன்றும்.



தூரத்தைக் கண்டுபிடிக்க பழக லேசான வழி யாதெனில் நமக்கு சமீபத்திலிருக்கும் பொருளின் தூரத்தை நாம் வெகு சுலபமாய் கணிக்கலாம். அப்புறம் அதைக்கொண்டே மற்றப் பொருள்களின் தூரத்தை நிதானிக்க முடியும்.

அதன்றி முக்கியமாய் ஞாபகம் பண்ணிக்கொள்ளவேண்டிய விஷயம் யாதெனில்:—ஐம்பது கெஜ தூரத்தில் ஒரு மனிதனுடைய வாயுங் கண்களும் தெரியும். நூறு கெஜ தூரத்தில் கண்கள் இரண்டு புள்ளிகளாகத் தோன்றும். 200 கெஜ தூரத்தில் அவன் சொக்காவிலுள்ள புத்தான்கள் தெரியும். 300 கெஜத்தில் அவனுடைய முகம் சற்றுத் தெரியும். 400 கெஜத்தில் அவனுடைய கால்கள் அசைகிறதாகக் காணப்படும். 500 கெஜத்தில் அவன் உடையின் நிறம் தெரியும். இது வாசிக்கிற நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லையா? இம்முக்கியமான குறிப்புகளைத்தான் ஐரோப்பா கண்டத்தில் பட்டாளத்திலுள்ள போர்ச்சேவகருக்குக் கற்றுக்கொடுக்கிறார்கள். நாமும் இவ்விஷயங்களை மனதில் பேணிவைப்போமானால் நாம் வெளியே உலாவும்போது, அக்குறிப்புகளின் உபயோகத்தைக் காணலாம்.

---

WHAT TO DO WHEN A CHILD IS BORN.

## ஒரு பிள்ளை பிறந்தவுடன் செய்யவேண்டியதென்ன?

---

இத்தேசத்தில் பெரும்பான்மையோர் பிள்ளைப் பேற்றின் அவஸ்தையை அனுபவிக்க வேண்டியதாயிருக்கிறது. சாதாரண பிரஸவத்திலும்கூட ஒவ்வொரு ஸ்திரீயும் வேதனைப்பட வேண்டியதாயிருக்கிறது. அதன்றி பிற்பாடு எவ்வளவோ பெலவீனமுமுண்டாவதுமுண்டு. இவ்வளவு மாத்திரமோ! அறிவீனமுள்ள நாட்டுப்புறங்களில் புத்தியீனமுள்ள ஸ்திரீகள், பிரஸவித்திருக்கும் ஸ்திரீயை பக்குவமாயும் சுத்தமாயும் பார்க்காதபடியாலும், அக்கியானமுள்ள பேய் வழக்கங்களை கொண்டு செலுத்துவதாலும் எத்தனையோ ஸ்திரீகள் தீரா வியாதியால் பீடிக்கப்படுகின்றார். இது மகா பயங்கரமன்றோ! இந்தியாவில் நாகரீக அபிவிர்த்தியடைந்தவர்களுக்குள் மாத்திரம் இவ்வித குரூரசெய்கைகள் குறைந்துகொண்டே வருகின்றன. உயர்குலத்தைச் சேர்ந்த ஸ்திரீகள் அநேகர் இப்போ வைத்திய புஸ்தகங்களை வாசித்து, அதில் கூறியிருக்கும் புத்திமதியை மனதில் வைத்து, சரியான விதமாய் நடக்கிறார்கள். ஆனால் நாட்டுப்புறங்களில் உள்ளவர்களோ இன்னமும் தங்கள் குரூர செய்கைகளை விட்டுவிடவில்லை. அதன்றி நாகரீகமுள்ள சில இடங்களிலுள்ளவர் முதலாய் இவ்விதமாக நடப்பது மிக்க ஆச்சரியமன்றோ! இதை எழுதின டாக்டர் துரைசானி எழுதுவதாவது: 'கொஞ்ச நாட்களுக்கு முன்னே நான்' ஒரு ஸ்திரீயை பார்க்கப்போயிருந்தேன். அங்கே இரண்டு நாட்டு மருத்துவச்சிகள் அவ்வேழை ஸ்திரீயின் மேலேறி மிதித்ததைப்பார்த்தேன். இப்பேர்ப்பட்ட குரூரச் செய்கையினால் வயிற்றிலிருந்த சிசு மரித்துப்போனது, அந்த ஸ்திரீயும் மகா மோசத்திலானாள். அக்குழந்தை பிறந்த பின் அதின் தாய் எத்தனையோ நாள் அவஸ்தைப்பட்டு, கடின ஜுரமும் உண்டானது. கடந்த வாரம் நான் இரண்டு நாட்களாய் பிரஸவ வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணைப் பார்க்கப்போனேன். அவளுக்கு ஒரு ஆகாரமும் கொடுக்கப்பட

வில்லை. அயலகத்தார் கூட்டங் கூட்டமாக அவள் என்ன நிலைமையிலிருக்கிறாள் என்பதைமாத்திரம் பார்த்துக்கொண்டு, ஒவ்வொருவரும் வித்தியாசம் வித்தியாசமான மருந்து முதலிய பக்குவங்களை சொன்னதோடு பயங்கரமான பிரஸவங்களைக் குறித்தும் பேசினார்கள். அவளுடைய கைகளிலும், கால்களிலும், இடுப்பிலும், தலைமயிரிலும் மந்திரங்கள் கட்டப்பட்டிருந்தன. மந்திரவாதி மந்திரித்த ஜலமாத்திரம் குடிக்கக் கொடுத்தார்கள். அவள் ஒரு மகம்மதியப்பெண்ணானபடியால், பொதுவான அறையில் ஒரு மூலையில் கிடத்தப்பட்டாள். சூரியாஸ்தமனமாகும்போது ஆடுகளும், கோழிகளும் அவளை மிதித்துக்கொண்டே தங்களிடங்களுக்குப் போவதைப் பார்த்தேன். அதன்றி நாள் முழுவதும் கோழிகள் கொக்கரித்தும், ஓடிக்கொண்டிருந்ததும் அவள் படுக்கையண்டைதான். ஐயோ என்ன பரிதாபம்! பயங்கரம்.

இந்துக்கள் பிரஸவ வேதனைப்படுகிற ஸ்திரீயை அசுத்தமாக எண்ணுவதால், ஒரு சிறு குடிசையில்தான் வைப்பார்கள். அக்குடிசை நான் என் தலையை நிமிர்த்தி நிற்க முதலாய் கூடாத அவ்வளவு சிறிதாயிருக்கும். அதோடு வெயில் காலத்தில் பயங்கரமான வெயிலும், மழைகாலத்தில் தரை ஈரமாயும், குளிராயும் இருக்கும். இவ்விதமான தரையின் மேல் அவ்வேழை ஸ்திரீகள் படுத்திருப்பதால்தான் பிற்பாடு ஜுரமும், வயிற்றோட்டமும் உண்டாகி தங்கள் ஜீவகால முழுவதும் நோயாளிகளாகிப் போவதோடு, சூதகநோய்கள் பல உண்டாகி அப்புறம் குழந்தைப்பேறு இல்லாமலே போகிறது. எல்லாப் பிரஸவ வீடுகளிலும் முக்கியமாய் கவனிக்கவேண்டியது யாதெனில் சுத்தம். பிரஸவமாகப்போகும் ஸ்திரீயை தொடுபவரெல்லாரும் தங்கள் கைகளையும் வஸ்திரங்களையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். மருத்துவச்சி தன் கைகளை சோப்பினால் கழுவுவதோடு கர்பாலிக் அல்லது க்ளோரயிட் ஆப் மெர்க்கூரி (Carbolic 1 in 40 or Perchloride of Mercury 1 in 1,000) முந்தினது 40 இல் ஒரு பாகமும் பிந்தினது 1,000 இல் ஒரு பாகமுமாக ஜலத்தில் சேர்த்து அதில் கைகழுவவேண்டும். படுக்கையும், அங்கே உபயோகிக்கிற கந்தைகளெல்லாம் சுத்தமாயிருக்க வேண்டும். ஆனால் ஐயோ பரிதாபம்! சில வீடுகளில் அவலட்சணமும் அழுக்குமான கந்தைகளை உபயோகிக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். குழந்தையின் தொப்புள் கொடியை ஒரு சுத்தமான கருவியால் அறுத்து, போராஸிக் பவுடர் (Boracic Powder) போட்டு சுத்தமாய் வைக்கவேண்டும். இந்தவிஷயத்தில்காண்பிக்கும் கவலையீனத்தால் எத்தனையோ அழகும் சுகமுமான பிள்ளைகள் மரித்துப் போகிறார்கள். அதற்குக் காரணம் இரத்தம் விஷமாகிப்போவது மன்றி ஜன்னியும் உண்டாகி சாகிறார்கள். ஆனால் பேதமையுள்ள ஜனங்கள் பிள்ளையை கண் போட்டுவிட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். குழந்தையின் தாடைகள் மரத்துப்போகும். அப்புறம் அது ஒன்றும் சாப்பிட முடியாது. இப்படியே சிலநாள் இருந்து குழந்தை செத்துப்போகிறது.

கர்ப்பஸ்திரீக்கு. பிள்ளைப்பேறு நோவு ஆரம்பித்தவுடன், வலசுத்தி ஆக ஏதாகிலும் ஒரு பக்குவம் செய்யவேண்டும். ஏனெனில் வயிற்றுக்குள் ஏதாகிலும் அழுக்குகளிருந்தால் அதையெல்லாம் இது வெளியே கொண்டுவரும். அப்போ குழந்தை கீழே இறங்கிவர லேசா



னவழி உண்டாகும். அந்த ஸ்திரீக்கு பெலனுக்கேற்ற லேசான ஆகாரமும் பாலும் கொடுப்பதோடு, அமைதலாய்ப் படுக்கையில் வைத்து, தூங்க இஷ்டமானால் தூங்க விடவேண்டும். கூடும்போதெல்லாம் நடக்கும்படி விடவேண்டும். ஏனெனில் நிற்கும்போதெல்லாம் கர்ப்பப்பை விரிவாகி திறந்து, குழந்தையின் தலை கீழே வரும். அந்த ஸ்திரீக்கு துக்கத்தையும், பயத்தையும் உண்டாக்கக்கூடிய ஒரு பேச்சும் பேசக்கூடாது, பிள்ளைப்பேற்றில் மரித்துப்போனவர்களுடைய சரித்திரங்களைப் பேசவே கூடாது. எப்போதும் சந்தோஷமும் உற்சாகமும் உண்டாக்கக்கூடியதையே பேசவேண்டும். மருத்துவச்சி குழந்தை சுகமாய் பிறக்கக்கூடிய பிரஸவமாகுமா என்பதை கவனித்துக்கொண்டு அதோடு தலை முதலாவது காணப்படுகிறதா என்பதையும் பார்க்கவேண்டும். அப்புறம் நோயாளியை ஒரு தொந்தரவும் பண்ணக்கூடாது. அடிக்கடி பார்க்கவும் கூடாது. இந்திய மருத்துவச்சிகளுக்கு இருக்கும் ஓர் தீய பழக்கம் யாதெனில், நோயாளியை ஓயாமல் பார்க்கிறதும் இழுக்கிறதும் தூக்குகிறதுமான இவ்வித இம்சைப்படுத்துவதே. ஏனெனில் அவர்கள் ஒரு பக்கத்தில் அமைதலாய் உட்கார்ந்திருந்தால், தனக்கு சரியான கூலி கொடுக்கமாட்டார்கள் என்கிற பயத்தினால்தான்.

குழந்தை பிறந்த பிற்பாடு, தாயை நன்றாய் படுக்கையிலேயே கழுவி, சுத்தமான ஒரு படுக்கையின்மேல், மெதுவாகப் படுக்கவைக்கவேண்டும். தரையில் கிடத்தவேகூடாது. சில இடங்களில் இப்படிச் செய்வதற்குப் பதிலாக அப்பெண்பிள்ளையை ஏறி மிதித்து, கைகால்களை பின்னால் முறுக்கி, வாய்க்குள் தலைமயிரை அமுக்கி, அவ்வேழைப்பெண் மிகச்சோர்வுற்றிருக்கையில் வெளி முற்றத்துக்குக் கொண்டுபோய், குளிர்ந்த ஜலத்தினால் குளிப்பாட்டுவார்கள். அப்போ ஆண்பிள்ளைகள், பெண்பிள்ளைகள், வாலிபர் முதலியோரெல்லாம் அவர்களின் அகோர நிலைமையைப் பார்ப்பார்கள். இது எத்தனை கேவலம், பரிதாபம்.

மூன்று நாட்களாய் லேசான ஆகாரம் கோதுமை, ஜவ்வரிசி, கஞ்சி, பால் முதலியவை கொடுக்கவேண்டும். அப்புறம் ஜுரம் இல்லாதிருந்தால் சாதமும் பாலும் கொடுக்கலாம். அப்புறம் வழக்கமான ஆகாரம் கொடுக்கத் தடையில்லை. குழந்தை உயிரோடிருந்து, தாய்ப்பால் குடிக்கிறதாயிருந்தால், தாயார் லவங்கம் முதலியவை சாப்பிடக்கூடாது. மூன்று வாரங்களாய் படுக்கையிலேயே இருக்கவேண்டும். எழும்பி உட்காரலாம். ஆனால் நிற்கவும் கூடாது, நடக்கவும் கூடாது. இன்னும் மூன்று, நான்கு வாரங்களாக அவள் ஒரு கடினமான வேலை செய்யவோ, பாரமான வஸ்துக்களை தூக்கவோ கூடாது. ஏனெனில் கெர்ப்பப்பை தன்னுடைய சரியான பருமனுக்கும் இடத்துக்கும் திரும்பிவர ஆறு வாரங்கள் செல்லும். அந்த சமயம் ஏதாவது ஜாஸ்தி வேலையினாலோ, சுளுக்குகளினாலோ அந்தப்பை மிகலேசாக இடம் மாறிவிடும். ஆகையால் இதை வாசிப்பவரெல்லாம் ஜாக்ரதையாயிருப்பதோடு, மற்ற சகோதரிகளுக்கும் புத்தி கூறுவாராக.

---

## MOTHER TEACHING HER CHILD.

## ஒரு தாய் தன் பிள்ளைக்கு படிப்பித்த விதம்.

---

"என் அருமைப் பிள்ளையே இங்கே வா, நான் உனக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன்."

"நல்லது அம்மா! எனக்கு கதை கேட்க மிகவும் ஆசை, ஆகையால் அதிக சந்தோஷப்படுகிறேன்."

"நல்லது, இந்த கதை உன்னைப்போல வேறொரு பிள்ளையைக் குறித்தது. நான் உன்னை நேசிப்பதுபோலவே அப்பிள்ளையின் தாயாரும் அதை நேசித்தாள். நான் உன்னை என் கையில் எடுத்தேந்தி விளையாடுவதுபோலவே, அப்பிள்ளையையும் தாயார் எடுத்து விளையாடினாள்."

"அம்மா, அப்படியானால் உங்களுக்கு அந்தப் பிள்ளையைத் தெரியுமா? நீங்கள் சிறு பெண்ணாயிருக்கும்போது அது ஒரு சிறு பையனாயிருந்ததா?"

"இல்லை என் கண்மணியே, நமக்கு வெகுதூரத்தில், அநேக வருஷங்களுக்கு முன்னே அது பிறந்தது. அவருடைய தாயும் தகப்பனும் ஏதோ ஒரு விஷயமாய் ஒரு பட்டணத்துக்கு வந்தபோது, சத்திரத்திலே அவர்களுக்கு இடங்கிடையாதுபோயிற்று. அதினிமித்தம் அவர்கள் ஆடுமாடுகள் தங்குமிடத்திலே தங்கியிருக்கையில் இந்தக் குழந்தை பிறந்தார்."

"அம்மா, அவர்கள் அதிகம் ஏழைகளா?"

"ஆம், அவர்கள் ஏழைகள்தான். ஆனால் உண்ணவும் உடுக்கவும் போதுமானதிருந்தது. அக்குழந்தையின் தகப்பனார் ஒரு தச்சன்."

"அம்மா! குழந்தையின் பெயர் என்ன?"

"தேவன்தான் அந்தக் குழந்தைக்கு பெயர் கொடுத்தார். அவர் அக்குழந்தைக்கு இயேசு என்னும் பெயரிடச் சொன்னார். ஏனெனில் அதற்கு இரட்சகர் என்று அர்த்தம். அச்சிறு குழந்தை தமது ஜனத்தின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்."

"அப்படியானால் அவர் வளர்ந்தபோது அவர் பெரிய மனிதனாயிருந்திருக்கவேண்டுமே!"

"ஆம், சற்றுப் பொறு பிள்ளாய்! அவருடைய பிறப்பைப்பற்றி முதலாவது நான் உனக்குச் சொல்லட்டும். முன் நான் சொன்னபடியே அவர் ஒரு பசுத்தொழுவத்தில் பிறந்தார். ஆனால் அந்த இடம் எவ்வளவோ மகிமையுள்ளதாய்க் காணப்பட்டது. ஒரு இராஜ குமாரன் பிறக்கும் அரண்மனைதானும் அவ்வளவு மகிமைக்குள்ளானதில்லை. அந்த ராத்திரியில் நகரத்திற்கு வெளியே ஒரு வயல்வெளியில் சில மேய்ப்பர்கள் தங்கி தங்கள் மந்தையைக் காத்துக்கொண்டிருக்கையில் திடீரென ஒரு தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். அவர்களைச் சுற்றிலும் மகிமையான பிரகாசமிருந்தது. அந்த மனிதர் மிகவும் பயந்தார்கள். அப்போ அவன் அவர்களை நோக்கி 'பயப்படாதிருங்கள். உங்களுக்கும், உலகத்திலுள்ள எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தியிருக்க காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்' என்றான் அந்த க்ஷணமே பரம சேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி 'உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர்மேல் பிரியமுமுண்டாவதாக" என்று தேவனைத் துதித்துப் பாடினார்கள். அப்புறம் தூதர்கள்போய்விடவே, மேய்ப்பர்கள் தாங்கள் கேள்விப்பட்ட குழந்தையை தேடிக்கண்டுபிடித்து அதைப் பார்த்து தேவனைத் துதித்து போனார்கள். அநேக வருஷங்களாக இப்பேர்ப்பட்ட ஒரு குழந்தையின் பிறப்புக்காக அநேகர் காத்துக் கொண்டிருந்தார்கள். தீர்க்கதரிசிகள் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னேயே இவ்விதமாக ஒரு குழந்தை பிறக்கும் என்று உரைத்திருந்தார்கள்."



"அம்மா, இவ்விதமாக ஒரு குழந்தை பிறந்ததாகவும் நான் கேட்டதில்லையே. இந்தக் குழந்தை மிகவும் விசேஷித்த குழந்தையாயிருக்க வேண்டும். அதினால் தான் தூதர் வந்து சொன்னார்களில்லையா?"

"இல்லை. ஒரு குழந்தையும் இவ்விதமாக பிறக்கவில்லை. அவர் தேவனுடைய குமாரன். நம்முடைய பாவத்தினின்று நம்மை மீட்க தேவன் அவரை இவ்வுலகத்துக்கனுப்பினார். இவரைக் குறித்து இன்று நான் சொன்னது போதும். இன்னொரு நாள் ஜாஸ்தி சொல்லுவேன். ஆனால் ஒன்றை மாத்திரம் மனதில் வைத்துக்கொள். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

"அம்மா இது நேர்த்தியான கதை. நான் அந்தத் தாயையும், அவர்கள் குழந்தையையும் நேசிக்கிறேன். சீக்கிரம் இவர்களைக்குறித்து அதிகமாய்ச் சொல்ல வேண்டும் அம்மா."

## NEWS AND NOTES.

## பலவித சமாச்சார குறிப்புகள்

---

சில வாரங்களுக்குமுன் அநேகருக்குள் அதிர்ச்சியும் பலவித தர்க்கங்களும் உண்டாகும்படியான மிகவும் துக்கமான சம்பவம் ஒன்று கல்கத்தாவிலே நடந்தது. ஒரு பிராமணப்பெண் ஒன்றுக்கு கலியாணப்பருவம் வந்தவுடன், அவள் தகப்பன் கலியாணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்தார். மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண்வீட்டுக்காரரை அதிகப் பணம் கேட்டபடியால், பெண்ணின் தகப்பனார் அதிகப் பணக் கஷ்டத்திற்குட்பட நேரிட்டது. இதை அறிந்த இந்த பதினாறு வயது பெண், தகப்பனுக்காக அதிகம் துக்கித்து அப்படிப்பட்ட காரியம் நேரிடக்கூடாதென்று அதிகமாய் பேசிப்பார்த்தாள். கடைசியாக, தன் தகப்பனுடைய பாரத்தை நீக்க ஒருவழி ஒன்று கண்டுபிடித்து, மண்ணெண்ணையும் (kerosine) நெருப்புக்குச்சியும் எடுத்துக்கொண்டு வீட்டுக் கூரையின் மேல் ஏறினாள். எண்ணை முழுவதையும் தன் மேல் ஊற்றிக்கொண்டு குச்சியைத் தேய்த்து தன் மேல் நெருப்பு பற்றவைத்தாள். கூரையின் மேல் நெருப்புப் பற்றினதைக் கண்ட ஒரு அயலான் ஓடிவந்து பார்த்தபோது, அவள் அதிகமாய் எரிந்து போயிருந்தாள். வெகு சீக்கிரத்திற்குள் அவளும் மரித்துப்போனாள்.

மேற்சொல்லிய சம்பவத்திலிருந்து, கலியாண விஷயத்தினாலுண்டாகும் அநியாயங்களை தவிர்க்கும்படி கூட்டங்கள் நடத்திவருகிறார்கள். பெண்வீட்டு குடும்பத்திற்கு துன்பமும் தொல்லையும் கலியாணத்தினால் உண்டாவதினால், கலியாணம் செய்யவேகூடாது.

சில வாலிபர்கள் தங்களுக்குள்ளே கட்டுபாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது அளவுக்கு மிஞ்சி ஸ்திரீதனம் வாங்கலாது. இப்படிப்பட்டவழக்கத்தை நீக்கும்படியான காலம் ஒன்று வரும். அதுவரைக்கும் குறைவான பணம் கேட்டு கலியாணம் நடத்தலாம். எல்லாருக்கும் இது கஷ்டந்தான். ஆனால் அதிகப் பணக்காரரைத் தவிர இன்னும் சிலர் தங்கள் பெண்கள் விஷயத்தில் இந்தக் கஷ்டத்தை உணர்வதில்லை. இன்னும் சில இடங்களில்; காரியம் முற்றிலும் நேர் விரோதம். அதாவது மாப்பிள்ளை வீட்டுக்காரர் பணம் கொடுக்கும்படி நேரிடும். அது எந்தப்பக்கமிருந்தாலும் சரி. இதினிமித்தம் உண்டாகும் தீமை எல்லாம் ஒன்றே. இந்த பிராமணப் பெண்ணின் மாணத்தின் மூலமாய் மனுஷருக்கு நன்மை உண்டாகுமேயானால், அவளுடைய பயங்கரமான மரணம் வீணாய் போகாது. இதேமாதிரி காரியம் நடக்கவேண்டும் என்று நாங்கள் ஒரு போதும் சொல்லவில்லை. தற்கொலை செய்ததின் நோக்கம் எவ்வளவு நன்மை செய்யுமோ அதைப் பார்க்கிலும் அவளுடைய மாதிரி அதிக தீமைசெய்யும். இந்தியாவிலே தற்கொலை அதிக சாதாரணம். ஆகையால் அதை நிறுத்துவதற்கு பிரயாசப்பட வேண்டுமே ஒழிய, அதை செய்யும்படி உற்சாகப்படுத்தக்கூடாது.

ஆகாயத்தில் கப்பல்விடும் வித்தையானது நாளுக்கு நாள் தேர்ச்சியடைந்து கொண்டே வருகிறது. நாள்தோறும் பிராணத்திற்கு மோசமிருக்கிறபடியால், அது அபாயமான வித்தை என்று சொல்லலாம். ஒரு வளையத்தில் ஆகாயத்தில் பறந்துபோக ஒரு மனிதன் கண்டுபிடித்திருக்கிறது புதிதான வித்தை. அதாவது ஒரு வட்டமாய்த் திரும்புவதுமல்லாமல் அந்நேரத்தில் தலைகீழ் மேலாக பறக்கிறான்.

சிறிதுகாலத்திற்கு முன்னே இராஜாவும் ராணியாரும் உயின்சார் (Windsor) மாளிகையிலுள்ள தங்கள் இருப்பிடத்திலிருந்து இக்காட்சியை கண்ணுற்றார்கள். ஆகாயத்தில் பறக்கிற இவன் இராஜன் ராணி முன்பாக 14 தடவை வளையம் சுற்றினான். முடிந்தவுடன் அவர்கள் நின்றுகொண்டிருந்த படிக்கட்டுகளின் எதிரில் இருந்த மைதானத்தில் இறங்கினான்.

இதைவாசிக்கும் யாவருக்கும் (Telephone) வாயினால் பேசும் தந்தி என்னவென்று தெரியும். அநேகர் தூரத்திலிருக்கும் சிநேகிதனிடம் இதன் மூலமாய் பேசியிருக்கலாம். அநேக மைல் தூரத்திலிருக்கும் சிநேகிதனிடம் போகாமல் அல்லது ஆள் அனுப்புவதற்கு பதிலாக சுவரில் இருக்கும் யந்திரத்தினிடம் நடந்துபோய் சங்கதி பேசுவது அதிக சுலபமாய் இருக்கிறது. ஐக்கியமாகாணங்களின் ஜனத்தொகை உலகமுழுவதின் இருபதிலொருபாகமாயிருந்த போதிலும் உலகத்திலுள்ள தந்திகளில் நூற்றுக்கு 69 வீதம் அவ்விடத்தில் உண்டு. அக்கண்டத்தின் பிரதான பட்டணமாகிய நியூயார்க்கில் மாத்திரம் 500,000 தந்தி யந்திரங்கள் இருக்கின்றன. இதைவிட பெரிய பட்டணமாகிய லண்டன் நகரத்தில் இத்தொகையில் அரைவாசிகூட இல்லை. இந்தியாவில் வேலைகள் நடக்கும் வீடுகளில் தவிர மற்றிடங்களில் இவ்வித தந்தி ஏற்பாடுகள் இருப்பது அரிது. இதற்கொரு காரணம் என்னவென்றால் அஞ்சல்காரன் அல்லது வேறு வேலையாள் மூலமாய் சமாச்சாரங்கள் அனுப்புவது உலக வழக்கமாய் இருக்கிறது. இப்படிச் செய்வது அதிக செலவிற்கு இடமில்லை. மேலும் அநேகருக்கு இது திருப்திகரமாய் இருக்கிறது. இந்தியாவிலும் சில ஐரோப்பியர்கள்கூட தங்களுடைய பழைய வழக்கங்களை புதியவற்றிற்காக மாற்றுவது சில வேளைகளில் இஷ்டமில்லை.



---

## PRINCESS MARY.

## மேரி என்னும் இளவரசி.

பிரித்தானியா ராஜ்யத்தின் பிரதான ராஜபெருமாட்டியாகும் மேன்மைபொருந்திய இளம் பெண்ணுக்கு இப்போது பதினேழு வயது. பதினேழு வருஷங்களுக்கு முன் எப்பிரல் மாசம் 25-ம் தேதியில் பிறந்தார்கள். அவர்களுடைய பெரிய பாட்டியாராகிய விக்டோரியா அரசியின் பெயருடையவளாயிருந்தும், அதே பெயரைத்தரித்த வேறு இரண்டு பெருமாட்டிகள் இருந்தபடியால், இவர்கள் தங்களுடைய இரண்டாவது பெயரின்படியே மேரி பெருமாட்டி என்று அழைக்கப்படுகிறார்கள்.

அவர்கள் வளர்ந்து, ரோஜாப்பூவைப் போல நிறமுடையவர்களாயும், சாம்பல் கலந்த ஊதா நிறமுள்ள கண்களையுடையவர்களாயும், அடர்த்தியானகபிலமுடியும், அவர்கள் தேக சௌக்கியமும், எப்போதும் சந்தோஷமாயும், தன் தாயாருடைய சிறந்த நற்குணங்கள் அநேகமுடையவாயும், காரியாதிகளை சுறுக்காயும் நேர்த்தியாயும் செய்கிறவர்களாயுமிருக்கிறார்கள். அவர்கள் மேரி ராஜாத்தியினால் அதிக கவலையோடு வளர்க்கப்பட்டு, கீழ்ப்படிதலும், அவர்களைப்போலொத்த மற்றப்பிள்ளைகளைவிட அதிக கண்டிப்பாயும் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் தன் சகோதாரின் படிப்புகளிலும் விளையாட்டுகளிலும் சேர்ந்து, அவர்கள் 5 சகோதாருக்கு ஒரே சகோதரியானதால் கெடுதிசெய்யாத கேலி விளையாட்டுகளில் அவர்கள் அநேகம்சேர்ந்து வீட்டிற்குவெளியேயேயிருப்பார்கள். அவர்களுக்குமுந்தின இரண்டு சகோதரர் செய்கிறதையெல்லாம் செய்யவேண்டுமென்பதே அவர்கள் சிறுமியாயிருக்கும் போதிருந்த பெரிய வாஞ்சை. அவர்களோடு சேர்ந்து குதிரை சவாரி செய்யவும், வண்டி ஓட்டவும் கற்றுக்கொண்டு, கிறிக்கட் விளையாட்டு நன்றாய் விளையாடுவார்கள். அவர்கள் பெரியவர்களானபோது, கப்பலோட்டுகிற சூச்சயத்தைப் படித்துக்கொடுக்கும் வித்தியாசாலையில் சேரும்படியாக இருக்கும்போது, அவர்களோடு இவர்களும் அதைப் படிக்கும்படியாக பிரயாசப்பட்டார்கள். அப்படியே கப்பலின் வெவ்வேறு பாகங்கள் எப்படி இணைக்கப்பட்டிருக்கிறதென்றும், தடாகங்களில் எப்படிப் படவுகளை நடத்துகிறதென்றும் படித்தாள். தண்ணீரில் நீந்துவதற்கும் படித்தாள். வீட்டில் அவர்களின் தாயாரே அவர்களுடைய படிப்பு விஷயங்களை விசாரித்து வந்தார்கள். ராஜாத்தி நன்றாய் படித்து தேறினவர்களும், அதிகபாக தேசயாத்திரை செய்தவர்களும், அநேக காரியங்களில் நன்றாய் தேர்ந்தவர்களும், தன் பிள்ளைகளை வித்தியாசமான அநேக விஷயங்களில் படிப்பிக்கவேண்டுமென்ற விருப்பமுடையவர்களுமாயிருக்கிறபடியால், மேரி பெருமாட்டி அவர்கள் மூலமாய் அதிக நன்மைபெற ஏதுவாயிருக்கிறது. அவர்களுடைய அறிவு வெறும் புஸ்தக அறிவு மாத்திரமேயல்ல, தான் பெற்றோரோடு அதிகமாய் வெளி இடங்களைப் பார்க்கப்போயிருக்கிறார்கள். தான் பார்த்த இடங்களை நுட்பமாய் கவனித்து அவைகளை விஸ்தரிக்கக்கற்றிருக்கிறார்கள்.

பெருமாட்டி பிரஞ்சு, ஜெர்மன் பாஷைகளைப் பேசுவதுமன்றி, சித்திரம் வரைவதிலும், முகப்படங்கள் தன் அத்தைமாரோடு சேர்ந்து செய்து வருகிறார்கள்.

அதிக கஷ்டத்தோடு படித்து தையல் வேலைகளிலும் தேறினவர்களாயிருக்கிறார்கள். தையற்சாலையில் அவர்களுடைய வேலை வைக்கப்பட்டிருந்தபோது அதைப் பார்க்கவந்த ஒருவர் மேரி பெருமாட்டி செய்துவைத்திருந்த ஒரு வேலையைப் பார்த்து அதிசயித்தபோது ராஜாத்தி புன்னகையோடு "இவ்வேலை கண்ணீரோடு செய்யப்பட்ட வேலை" என்று சொன்னார்கள். தையற் கூட்டத்தில் (Needlework Guild)ற்கு இச்சிறுவியே பிரதான தலைவி (President). ஒவ்வொரு வருஷமும், தன் சொந்த பணத்தைக் கொண்டு சாமான்கள் வாங்கி, தைத்து, அநேக சாமான்களை அங்கு அனுப்புவார்கள். இது ஒரு காரியத்தை எனக்கு ஞாபகப்படுத்துகிறது. சில வருஷங்களுக்கு முன்னே இந்த பெருமாட்டி சேவிங்ஸ் பாங்க்கில் (Savings Bank) பணம்போட ஆரம்பித்தார்கள். அவர்கள் தபால் ஆபிசுக்கு ஒழுங்காய் போய் தானே தன் வேலைகளைச் செய்தார்கள். கடைகளுக்குப் போவதில் அதிகப் பிரியம் உண்டு. கிறிஸ்மஸ் பண்டிகை சமயத்தில் தன் சிநேகிதருக்கு இனாம் வாங்கும்படி கடைகளுக்குப் போவார்கள். தான் வாங்க விரும்பும் பொருள் கட்டாயமாய் வாங்கித்தீரவேண்டும் என்பது பெருமாட்டியின் விருப்பம். இதை ருசுப்படுத்த அவர்கள் ஒரு வருஷ காலத்திற்கு முன்னே கடைக்குப்போய் வியாபாரம் செய்த சங்கதி சொல்லப்பட்டிருக்கிறது. தன் வீட்டிற்கருகாமையிலிருந்த ஒரு கடைக்கு சின்ன ராணி தன் சிறிய சகோதரன் என்றி (Henry)க்கு பிறந்த நாள் இனாம் வாங்கும்படி போனார்கள். ஒரு சிறிய கட்டைத் துடப்பம் வேண்டும் என்று கேட்டவுடன் கடைக்காரன் அதிக ஆச்சரியப்பட்டான். அவர்கள் விரும்பிய அதேமாதிரி சாமான் அகப்படவில்லை. கடைக்காரன் சின்ன ராஜ குமாரனுக்கு பிரியம் கொடுக்கக்கூடிய அநேக பொருள்களைக் காண்பித்து சின்ன ராணியை சோதித்தான். ஆனால் அவர்கள் அவைகளில் ஒன்றும் தனக்கு தேவை இல்லை என்றார்கள். "என்றி தோட்டத்து பாதையை பெருக்கும்படி ஒரு சிறு நல்ல கட்டைத் துடப்பம் வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள். கடைசியாய் தான் விரும்பிய துடப்பம் கிடைத்தது. இதன் பின் அரண்மனையின் பாதைகள் விசேஷமாக சுத்தமாய்க் காணப்பட்டது என்பதற்கு சந்தேகமில்லை. சவாரி செய்வது மேரி ராணியாருக்கு அதிகப் பிரியமான அப்பியாசம். தன் சிறு பிராயத்தில் "மரியா" என்னும் ஓர் அழகிய கோவேறு கழுதைமேல் சவாரி செய்தார்கள். பிற்பாடு ஒரு மெலிந்த வெல்ஷ் குதிரைமேல் சவாரி செய்து அதை மேற்கொண்டார்கள். இப்போது அதிக சாமர்த்தியமுள்ளவர்களாகிவிட்டார்கள்.

இப்போது ராணியார் அம்மாள் தன் குமாரத்திகளுக்கு உடுப்பு தெரிந்தெடுப்பார்கள். அவைகள் அதிக சாதாரண மாதிரியாயும் உறுதியுள்ளதாயும் பிரயோஜனமுள்ளதாயும் இருக்கும். எண்ணிக்கைக்கு ஜாஸ்தியாய் இருக்காது. ஆனால் இப்பேர்ப்பட்ட சாதாரண உடுப்பு தரித்திருப்பதினால் அவர்கள் அதிக அழகாய் காணப்படுவார்கள். தன் உடுப்பைப்பற்றி யாவது தன்னைப்பற்றியாவது சிந்தனை கொள்வதே இல்லை.

மேரி பெருமாட்டி ஏழைகள், வருத்தப்படுகிறவர்கள் முதலியவர்கள்மேல் அனுதாபப்படும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள். இரக்க சங்கத்தில் சேர்ந்து இருக்கிறார்கள். அடிக்கடி குழந்தைகள் ஆஸ்பத்திரிக்கும்அப்பேர்ப்பட்ட இடங்களுக்கும் விளையாட்டு சாமான்கள் வாங்கி அனுப்புவார்கள். அவர்கள் தையல் சங்கத்துக்கு செய்யும்வேலையைப்பற்றி முன்னதாகவே சொல்லியிருக்கிறேன்.

அவர்கள் சன்மார்க்கமாய் கைக்கொள்ளும்படி மதத்தைப்பற்றியும் வளர்க்கப்பட்டிருக்கிறார்கள். தனக்கு மற்றவர்கள் என்ன செய்யவேண்டும் என்று விரும்புவார்களோ அதையே தான் மற்றவர்களுக்கு செய்யவேண்டும் என்கிற தங்க வாக்கியத்தின்படி நடக்க கற்பிக்கப்பட்டிருந்தார்கள். பரிசுத்த விஷயங்களைக் கனப்படுத்தவும்பழக்கப்பட்டிருந்தார்கள் ஒவ்வொருநாளும் சின்ன ராணியும் தன் சகோதரரும்வேதாகமத்தில் ஒரு அதிகாரம்வாசிக்கிறார்கள். இராஜாவுக்கும் இது வழக்கமாய் இருக்கிறது. அவர்தன் தயாரிடம் இப்படிச் செய்வதாக வாக்குக் கொடுத்திருந்தார். அந்த வார்த்தையை எப்போதும் நிறைவேற்றுகிறார்.

---

## WEIGHTS AND MEASURES.

## நிறையும் அளவும்.

இந்தியா முழுவதிலும் சாதாரணமாய் வழங்கும்படியாக ஒரே மாதிரியான நிறைகளும் அளவும் ஏற்படுத்தும்படி எத்தனங்கள் செய்யப்பட்டு வருகின்றது. இதுவரையிலும் இன்னும் ஒரு ஒழுங்கிற்கும் வரவில்லை. ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் குடியிருக்கும் இடத்திலுள்ள ஏற்பாடுகளே சிறந்தது என்கிறார்கள். ஒவ்வொருவனும் அவனவனுக்கு வழக்கமாய் உள்ளதுதான் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான். நமக்கு வரும் விளைச்சலை நிறுத்து அளவுபடுத்தவேண்டிய அவசியம் ஏன் உண்டாகவேண்டும். இத்தேசம் சிறு சிறு பாகங்களாக பிரிக்கப்பட்டு, போக்குவரவு கொஞ்சமாய் இருந்தகாலத்தில் ஒரு தேசத்து அதிபதியின் மணங்கு இன்னொரு தேசத்து அளவிற்கு சற்று வித்தியாசப்பட்டிருந்தபோதிலும் அது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. அநேக நிறை அளவு, பழைய அரசர்கள் தங்கள் பின் சந்ததியாருக்கு கொடுத்தார்கள். ஆனால் தற்காலத்திலோ ஒரு தேசமாவது அவரவர்மட்டில் சொந்தமாய் இருக்கவில்லை. இப்போது போக்குவரவு அதிக தாராளமாய் இருப்பதினால் அதிக குழப்பம் உண்டாகிறது.

ஏனென்றால் ஒரு இடத்தில் ஒரு சேர் அல்லது மணங்கு என்றால் ஒருவிதமாய் இருக்கிறது. இன்னொரு இடத்தில் அதற்கு விரோதமாய் இருக்கிறது. இதனால் குழப்பம்மாத்திரம் உண்டாகவில்லை. நிறை அளவு இவற்றிற்கு ஒரு ஏற்பாடு இருப்பது தெரியாத மூடஜனங்களுக்கு இதனால் நஷ்டம் விளைகிறது. சில அயோக்கியர் பயிரிடுகிறவனிடம் இருந்து பெரிய மணங்குகொண்டு தானியத்தை அளந்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். குறைந்தநிறையுள்ள மணங்கினால் அளந்த வேறொரு தானியத்தை அவனுக்கு திரும்பவும் விற்கிறார்கள். இதில் பயிரிடுபவன் வஞ்சிக்கப்பட்டான் என்பது விளங்குகிறது. தான் அளந்து கொடுத்த அளவிற்கு திரும்ப வாங்கிக் கொண்டதாக நினைக்கிறான். ஆனால் கொடுத்ததில் ஒருபாகம்தான் தனக்கு கிடைத்தது. தேசமுழுவதிலும் வியாபாரங்கள் நடத்தும்போது இவ்வித கணக்குகள் கவிப்பது அதிக அசந்தர்ப்பமாய் இருக்கிறது. ஒருவனாகிலும் தான் வழக்கமாய் உபயோகித்தவைகளை விட்டுவிட இஷ்டப்படான். அப்படியே நாமெல்லாரும் எப்போதும் உபயோகித்துவந்த அளவுகளையே வைத்துக்கொள்ள விரும்புவது இயற்கை சுபாவம். ஆனால் புதிய அளவுகளை ஏற்படுத்திவிட்டால் நாமெல்லாரும் அவைகளையே உபயோகிக்க வேண்டும். கூடிய சீக்கிரத்தில் அதில் பழகிப்போவோம். பிற்பாடு அதை மாற்ற இஷ்டப்படமாட்டோம்.

அளவுகளைப்பற்றி முதலாவது பார்ப்போம். சாதாரணமாய் இப்போது உப

யோகிக்கப்படும் அளவுகள் முதலாவது எப்படி உண்டானது என்று தெரியுமா? உதாரணமாக கெஜம் எப்படி ஏற்பட்டது என்று யார் சொல்லக்கூடும். இது ஆங்கிலேய அளவு. இது இவ்வளவு நூற்றாண்டுகளாய் ஒருமாறுதலுக்கும் உட்படாமல் உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆனால் முழுதுமாய் மாறுதலுக்குட்படாமல் இருப்பது வாஸ்தவம். 800 வருஷங்களுக்கு முன்னே என்றி V (Henry V) என்னும் இங்கிலாந்து தேசத்து அரசன் தன் மூக்கு நுனியிலிருந்து கைப்பெருவிரல் நுனிவரையிலும் உள்ளதூரம் ஒருகெஜம் என்று கணித்து, அதே அளவில் ஒரு வெங்கல கெஜக்கோல் செய்வித்தார். ஆனால் அவ்வரசன் மரித்துப்போனார். அந்த கெஜக்கோலும் போக்கடிந்துபோயிற்று. ஒருவருக்கும் ராஜனின் மூக்கிலிருந்து கைபெருவிரலின் நுனிவரையிலுள்ள நீளம் தெரியவில்லை. ஆனால் ராஜாவின் அளவு கோலைக்கொண்டு செய்த மற்றவைகளைக் கொண்டுஉபயோகித்தார்கள். இதன் பின் என்றி ஏழாவது (Henry VII) என்பவர் இதைக்கொண்டு சரியான ஒரு கெஜக்கோல் செய்தார். அது இந்நாள்வரை உபயோகப்பட்டு வருகின்றது. இது 400 வருஷங்களுக்குமுன்னே நடந்தது. இப்போதுள்ள கெஜக்கோலுக்கு சற்று குறைவுள்ளதாய் இருந்து. 1588-ம் வருஷம் வரையில் இதுதான் இங்கிலாந்தில் பிரதான அளவாய் இருந்தது. பிற்பாடு இன்னொன்று செம்பினால் செய்யப்பட்டு சுமார் 90 வருஷங்களுக்குமுன்வரையில் வழங்கப்பட்டுவந்தது. இதுசரியல்ல. வேறொருவிதமான பிரதான அளவு ஒன்றிருக்கவேண்டும். அது கெஜஅளவு சரியாக இருக்கவேண்டும் என்று யோசனை உண்டாயிற்று. ஆனால் இப்படி கண்டுபிடிப்பது அதிக கஷ்டமாய் இருந்தது. ஒருதொங்கட்டம் சுற்றும் நீட்டத்தைக் கொண்டு ஒரு அளவு எடுக்க பிரயாசப்பட்டார்கள். இது 150 வருஷங்களுக்கு முன்னே ஏற்பட்டது. ஆனால் அப்போது செய்த கட்டை நெருப்பில் அழிந்துபோனது. அதே அளவினால் வேறொன்றுசெய்ய எத்தனித்தபோது, இரண்டு கோலாவது ஒரே நீட்டமாய் வரவில்லை. என்றாலும் 1855-ம் வருஷத்தில் பார்லிமெந்து சங்கத்தார் இப்போது பிரயோகிக்கும் கெஜத்தை ஏற்படுத்தினார்கள். அங்குள்ள பிரதான பாங்க் (Exchequer) கில் கோடுத்திருக்கும் செம்பு கலந்த கட்டைக்குள் இருபக்கமும் பொன்குண்டுகள் அடைத்து இரண்டிற்கும் உள்ள நீளத்தை அளவெடுத்தார்கள். அதேமாதிரி அச்சுகள் எடுத்து பற்பல கட்டடங்களில் வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் ஒன்று நாசமாகிவிட்டாலும் இன்னொன்று இருக்கும். இந்தியாவில் கைதான் சாதாரண அளவாய் இருக்கிறது. கால்கூட பிரயோகிக்கப்படுகிறது. அநேக தேசங்களில் இதுதான் மூல அளவாய் இருக்கிறது. ஆனால் இரண்டு ஒரே அளவாய் இல்லை. மனுஷபாதத்தின் அளவினால் அது அளவிடப்பட்டது என்று நினைக்கவேண்டும். இப்போது 12 அங்குலமுள்ள பாதம் உடையவர்கள் வெகு சொற்பம், ஆனால் சிலருக்கு 14 அங்குலம்கூட இருந்ததாகத்தோன்றுகிறது. நிலத்தை அளக்க ஆங்கிலேயர் 16 அடி நீளமுள்ள கோலை உபயோகிக்கிறார்கள், ஒரு மேஸ்திரி சரியான அளவு எடுக்கும்படி ஒழுங்கு செய்தார். இவர் ஒரு கோவில் கதவண்டை நின்றுகொண்டு உள்ளிருந்து வெளியே வருபவர்களில் நெட்டையும் குட்டையுமாக வந்துகொண்டிருந்த 16 பேரை நிற்கும்படி சொன்னார். பின்னால் ஒவ்வொருவரையும தங்களுடைய இடது பாதத்தை பின்னாலே வைக்கச் சொன்னார். இப்படியாக 16 பேருடையபாதத்தின் நீள அளவை எடுத்து கோலின் அளவு இதுதான் என்றார். இதில் 16-ல் ஒரு பாகம் ஒருஅடி என்று கணித்தார். ஒரு கஜத்தில் 3 அடி இருக்கிறது. லண்டன் பொக்கிஷசாலையில் வைத்திருக்கும் கோலின் அளவைக்கொண்டு இப்போது நாம் பிரயோகிக்கும் அடி ஏற்படுத்தப்பட்டது.

Vol. XXVII. Registered No. M. 209 No. 11

MAY, 1914

# மாதர் மித்திரி.

THE REGISTRAR ... 11 JUN 1914 ... MADRAS OFFICE

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர்மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | 163 |
| ஒரு ஆச்சர்யமான படம் .... .... .... | 164 |
| எங்கே மனமுண்டோ அங்கே இடமுமுண்டு .... .... | 167 |
| ஜர்மானிய சக்ரவர்த்தி தமது மகளுக்கு சொன்ன புத்திமதி.... | 168 |
| சர்க்கரை கிடைப்பது எதிலிருந்து? .... .... | 168 |
| கின்னரம் உண்டுபண்ணின குருட்டு ஜோசப் ஸ்றிருங் .... | 170 |
| கற்பலகையில் பல்பத்தினால் வரைந்து விளையாடுதல் .... | 173 |
| ஈக்களுக்கு செவி கேட்குமா? .... .... .... | 173 |
| உலகத்தின் ஞானம் .... .... .... | 174 |
| ஒரு விடுகதை .... .... .... .... | 174 |
| சமாச்சாரக் குறிப்புகள் .... .... .... | 175 |


# மாதர் மித்திரி.


புத். உஎ. ௧௯௱௰௪ ௵ - மே மீ. இல. ௰க.


JUDGMENT.

இராகம், இந்துஸ்தான் காப்பி. ஆதிதாளம்.

**பல்லவி.**

வையகந்தனை நடுத்தீர்க்க இயேசு
வல்லவர் வருகிறார் திருமறைக்கேற்க.

**அனுபல்லவி.**

பொய்யுலகோர்களின் கண்களும் பார்க்க,
பொற்பதிதனிற் பரன் சேயரைச் சேர்க்க— வைய.

**சரணங்கள்.**

1. வானங்கள் மடமடப்போ டொழிந்திடவே,
மகிதலம் அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே,
பானுவும் மதி யுடு அனைத்து மங்கிடவே,
பஞ்சபூதியங்களுந் ;தானழிந்திடவே,— வைய.

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க,
முன்மரித்தோரெலாந் தாமெழுந்திருக்க,
அக்கணமுயிருளோர் மறு உருத்தரிக்க,
ஆண்டவர் வருகிறார், பக்தர்கள் களிக்க,— வைய.

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிப்படற்கு
இரண்டு புத்தகங்களுந் திறந்தவரவர்க்கு
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்கு
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு— வைய.

4. அடைக்கலன் யேசுவை யறிந்தவர் நாமம்
அழிந்திடாதவர்களின் வாழ்வது க்ஷேமம்;
படைத்திடுவாயிந்தக் கணமுனை, க்ஷாமம்
பற்றிடக் கூடுமே திடுக்கெனவே; நம்— வைய.

## THE MYSTERIOUS PORTRAIT.

## ஒரு ஆச்சரியமான படம்.

யோக்கஸ்கி என்னும் ஒரு சிறு ஜப்பானிய கிராமத்திலுள்ளவர் முகம் பார்க்கும் கண்ணாடியைக் குறித்து கேள்விப்பட்டதில்லை. அவ்வூர்ப்பெண்கள் மற்றவர்கள் சொல்வது தவிர தங்கள் முகங்கள் எப்படிப்பட்டது என்று அறிந்தவரில்லை. இப்படியிருக்க ஒரு நாள் ஒரு வாலிப ஜப்பானியன் தெருவில் ஒரு சிறிய கைக்கண்ணாடியைக் கண்டெடுத்தான்.

கிக்கிஸம் என்னும் அவ்வாலிபன் இப்பொருளை இப்போதான் முதல் தடவையாகப் பார்த்தான். அவன் அதை உற்று நோக்கவே அதில் புத்திக்கூர்மையுள்ள கருங்கண்களோடு தவிட்டு நிறமுள்ள ஒரு முகத்தை கண்டான். இது அவனுக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், அதை பார்க்கப் பார்க்க அதிக பிரமையும் உண்டுபண்ணிற்று. "ஆகா இது என்னுடைய பக்தியுள்ள தகப்பனாரின் ரூபமல்லவா? அவருடைய படம் இங்கே எப்படி வரக்கூடும்? அவர் ஏதோ ஒரு தீமையை எச்சரிப்பதற்காக வந்திருக்கலாம்" என்று அவன் சொன்னான்.

அப்புறம் அவன் அந்த அருமையான பொக்கிஷத்தை தன் கைக்குட்டையில் சுற்றி, தன் மேல்சட்டையிலுள்ள பெரிய ஜேப்பில் போட்டுக்கொண்டான். தன் வீட்டிற்கு அன்று இரவில் அவன்போய், ஒரு பூ பாத்திரத்திற்குள் அதைப்போட்டு பத்திரமாய் ஒளித்துவைத்தான். அதைவிட வேறே நல்ல இடம் அவன் கண்ணுக்கு தென்படவில்லை. சில காலத்துக்கு முன்னே கலியாணம் பண்ணியிருந்த தன் மனைவியினிடம் அவன் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவில்லை. ஏனெனில்: "ஸ்திரீகள் ஒரு வகையான ஆத்திரமுள்ள ஜாதி. எவ்விஷயத்தையும் மனதில் அடக்கி வைக்காமல் வெளியே சொல்லிப்போடுவார்கள்" என்று அவன் சொன்னான்.

இப்படியே சில நாட்களாய் கிக்கிஸம் பிரமை கொண்டவனாயிருந்தான். எப்போதும் அவனுக்கு அப்படத்திலேயே எண்ணமாயிருந்தது. சில சமயங்களில் தன் வேலையை நிறுத்திவிட்டு திடீரென வீட்டுக்கு வந்து அப்படத்தைப் போய்ப் பார்ப்பான்.

நல்லது, எல்லா தேசங்களிலும் போலவே ஜப்பானிலும் புருஷன் செய்யும் ஒவ்வொரு அந்தரங்க கிரியைகளும், ஒழுங்கற்ற நடபடிகளும் மனைவிக்கு எப்படியாகிலும் விஸ்தரித்துச்சொல்ல வேண்டியது. அப்படியே இவன் மனைவியாகிய வில்லிசி, தன் புருஷன் அடிக்கடி வீட்டிற்கு தன் வேலை ஸ்தலத்திலிருந்து வருவதின் காரணம் என்னவென்று தெரியவில்லை. வில்லிசி தன் புருஷன் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உற்று நோக்கி, வீட்டின் பின்பக்கம் இருந்த அறையில் சற்று நேரம் தனித்திருந்தபின்தான் அவன் வெளியே போவதை அவள் கவனித்தாள். ஆகவே ஒவ்வொரு நாளும் அவளும் அவ்வறைக்குள் போய் தன் புருஷன் மனதை கவர்ச்சிச் செய்யக்கூடிய சிறு வஸ்து எதுவென்று ஆராய்ந்து பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை.

என்றாலும் ஒரு நாள் திடீரென அவள் அவ்வறைக்குள் பிரவேசித்தாள் அப்போ அவள் புருஷன் ரோஜாப்பூ வைக்கும் பாத்திரத்துக்குள் ஏதோ ஒன்றை ஒளித்துவைப்பதை அவள் கண்டாள். அப்புறம் அவன் வீட்டைவிட்டுப் போனவுடன் தானே அவ்வறைக்கோடிச் சென்று, ஒரு ஆசனத்திலேறி அப்பூப்பாத்திரத்தை எடுத்து அதனுள்ளே யிருந்த கண்ணாடியை வெளியே எடுத்தாள். அப்போது உண்மை வெளிப்பட்டது. அங்கே அவள் பார்த்ததென்ன? ஆ! ஒரு ஸ்திரீயின் முகரூபம். அவள் புருஷன் தன்னை எவ்வளவோ அன்பாயும், தயவாயும், உண்மையாயும் சிநேகித்து வந்தான் என்பது அவள் அறிந்த சத்தியமல்லவோ! அப்படியிருக்க இது எந்த ஸ்திரீ!

நல்லது, திடீரென அவளுக்கு கோபாவேசம் உண்டாயிற்று. மறுபடியும் கண்ணாடியிலே பார்த்தாள். அதே முகம் தன்னைப் பார்த்தது. ஆனால் அத்தனை கோபாவேசமுள்ள முகரூபமுடைய அந்த ஸ்திரீயை தன் புருஷன் எப்படித்தான் நேசிக்க ஆரம்பித்துவிட்டாரோ!

அதைப்பார்த்ததும் அவளுக்கு ஒன்றும் பண்ண இஷ்டமில்லை. தன் புருஷனுக்கு சாப்பாடு முதலாய் தயார் பண்ணவில்லை. சாயரட்சை அவன் வந்ததும் வீட்டில் போஜனம் ஒன்றுமில்லை யென்பதைக்கண்டான்.

"வில்லிசி! நாம் கலியாணம் பண்ணி ஒரு வருஷம் முதலாய் ஆகவில்லையே, அதற்குள்ளாக இந்தவிதமாய் என்னை நடத்த ஆரம்பித்த காரணமென்ன?" என்று தன் மனைவியைக் கேட்டான்.

"ஆம், ஆம், வெகு நேர்த்தி! எனக்குத் தெரியாதோ! என்னுடைய ரோஜாப்பூப் பாத்திரத்துக்குள்ளே படங்களை வைத்திருப்பதின் அர்த்தமென்ன? இதோ உன் பொக்கிஷம், அதை எடுத்துக்கொள். எனக்கு அது வேண்டியதேயில்லை. ஆ,



பயங்கர, சீர் கெட்ட பெண்பிள்ளையே!" என்றாள் வில்லிசி.

"நீ சொல்வதொன்றும் எனக்குத்தெரியவில்லையே? என்றான் கிக்கிஸம்.

"ஆம்! உனக்குத் தெரியாதுதான். ஆனால் எனக்குத் தெரியும். உனக்கு இத்தனை உண்மையாயிருந்த உன் சொந்த மனைவியைவிட இவ்வளவு அசங்கியமும், துன்மார்க்கப் பார்வையுமுடைய அந்தப் பெண்ணை நீ நேசிக்கிறாயல்லவா, என்றாள்." "வில்லிசி, நீ ஏன் இந்த அபாண்டம் பேசுகிறாய்? அந்தப் படம் இறந்துபோன என்னுடைய அருமைத் தகப்பனாருடைய படம். நான் அன்றொருநாள் தெருவிலே அதை கண்டெடுத்து, உன்னுடைய பூப்பாத்திரத்திற்குள்ளே வைத்தால்தான் அது பத்திரமாய் இருக்குமென்றெண்ணி அதற்குள் வைத்தேன்" என்றான்.

அப்போ அவள் முன்னிலும் அதிகக் கோபத்தோடு "ஐயோ, என்ன அபாண்டம் நீ பேசுகிறாய், ஒரு பெண்ணின் முகத்திற்கும் ஒரு ஆணின் முகத்திற்குமுள்ள வித்தியாசம் எனக்குத் தெரியாதா?" என்றாள்.

ஆகவே இந்தப் படத்தின் நிமித்தம் இவர்களுக்குள் பெரிய வாக்குவாதமும், விபரீதமான பேச்சும், பிரிவினை உண்டாகிறதற்கேதுவான சொற்களும் உண்டாயின. அத்தனை காலமும் எப்போதும் சமாதானமும் அன்புமே குடிகொண்டிருந்த அவர்கள் இல்வாழ்க்கைக்குள் அன்புக்கேடும், சச்சரவும் பிரவேசித்தன.

கிக்கிஸம் அதிக கோபாவேசமுண்டவனாயிருந்தான். அவன் மனைவி அவன்

மேல் சாட்டின குற்றம் மகா ஆச்சரியமும் விபரீதமுமாயிருந்தது. அந்தப் படம் அவனுடைய தகப்பனுடைய படமல்லாமல் ஒரு ஸ்திரீயின் படமன்று. அவன் கண்ணுக்குத் தென்பட்டது ஒருபோதும் தப்பல்ல. ஆகையால் அவ்விருவருடைய கோபமும் அதிகரித்தது. சண்டை மும்முரமானது. அவ்விருவரும் அத்தனை சத்தமாய் வாக்குவாதம் பண்ணினதை அத்தெருவழியாய்ச் சென்ற ஒரு ஜப்பானிய குரு கேட்டார். சற்று நேரம் நின்று இதென்ன கூச்சல் என்று உற்றுக்கேட்டார். அப்பேர்ப்பட்ட சண்டையை உடனே நிறுத்தவேண்டும், இல்லாவிட்டால் மோசம் வரும் என்பதை அவர் கண்டார். ஒருவேளை அவ்விருவருக்கும் ஏதோ ஒரு அற்ப விஷயத்தினிமித்தம் இப்பேர்ப்பட்ட மனஸ்தாபம் உண்டாயிருக்கலாம். அப்படியானால் தான் அதைச் சீக்கிரம் சரிப்படுத்திவிடலாமென்றும் அவர் நினைத்தார். அப்படியே அவர் வாசலுக்குள் பிரவேசித்து "என் பிள்ளைகளே ஏன் ஒரு நாளுமில்லாத கோபம்? ஏன் இந்த விதமான வாக்குவாதம்?" என்று அவர் கேட்டார்.

"குருவாகிய தகப்பனே, என் மனைவிக்கு புத்திக்கு சுகமில்லை" என்றான்.

"என் மகனே எல்லா ஸ்திரீகளும் அப்படித்தான். ஒரு ஸ்திரீயும் பூரண சற்குணமுடையவளாயிருப்பதில்லை. அதினிமித்தம் இவ்விதமாகக் கோபப்படுவது ஒருபோதும் சரியல்ல" என்றார் குரு.

"என் புருஷன் என்னுடைய ரோஜாப்பூ பாத்திரத்திற்குள்ளே ஒரு ஸ்திரீயின் படத்தை ஒளித்து வைத்திருக்கிறார்" என்றாள் வில்லிசி.

"காலஞ்சென்ற என் ஏழைத் தகப்பனுடைய படத்தைத்தவிர வேறொரு படத்தையும் நான் வைத்துவைக்கவில்லை என்று நான் ஆணையிடுகிறேன்" என்றான் ஙிக்கிஸம்.

"என் பிள்ளைகளே படத்தை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றார் குரு.

அப்படியே கொண்டு வந்த படத்தை அவர் தமது கையில் வைத்துக்கொண்டு சற்றுநேரம் கூர்மையாய் கவனித்தார். அப்புறம் அவர் அதற்கு முன்பாகத் தலை வணங்கி குனிந்து, தன் தொனியைத் தாழ்த்திக்கொண்டு, அவர்களைப் பார்த்து :—

"என் பிள்ளைகளே, உங்கள் சண்டையை நீங்கள் நிறுத்திவிட்டு இருபேரும் முன்போல் சமாதானமாக வாழுங்கள். நீங்கள் இருவர் சொல்வதும் தப்பு. இதற்குள் இருப்பவர், பக்தியுடையவரும், கனம்பொருந்தியவருமாகிய ஒரு குருவானவர் அன்றி வேறொருவருமல்ல. இத்தனை பரிசுத்தமுடைய ஒரு முகத்தை நீங்கள் எப்படித்தான் சரியாய் நிதானிக்கமுடியவில்லையோ" என்று சொல்லி, அவ்விருவரையும் ஆசீர்வதித்து பின்பு அக்கண்ணாடியை எடுத்து பத்திரமாய் வைத்துக்கொண்டு அங்குள்ள கோவிலில் வைக்கப்பட்டிருந்த அருமையான பரிசுத்தப் பொருட்களோடு இதையும் ஒன்றாய் வைத்துவைத்தார்.

இக்கதையினின்றும் நாம் படிக்கக்கூடியது யாதெனில் :—

ஒரே பொருளையாவது காரியத்தையாவது, விபரீதமாய் நோக்கிப்பார்ப்பதினால்தான், ஒருவருக்கொருவர் மனஸ்தாபமும், வாக்குவாதமும், தப்பபிப்பிராயங்களும், சண்டைகளும் உண்டாகின்றன என்பதே.



WHERE THERE'S A WILL THERE'S A WAY.

## எங்கே மனமுண்டோ அங்கே இடமுமுண்டு.

ஸ்பானியா தேசத்தில் நடந்த ஒரு யுத்தத்தைக்குறித்து ஒரு சரித்திரம் சொல்லப்போகிறேன். ஒரு சேனையில் தலைவனாயிருந்த டான் பாசில்லியோ என்பவனும், எதிராளிகளின் படையிலிருந்த ரேமன் என்பவனும் சிநேகிதராயிருந்தார்கள். பாசில்லியோவின் சேனைத் தோற்றுப்போயிற்று. எதிராளியின் தளகர்த்தன் அவனையும் அவனோடு இன்னம் இருபது பேரையும் கைதிகளாக்கி உடனே துப்பாக்கியினால் சுட்டுவிட உத்தரவு பண்ணினான். அப்படியே வரிசையாய் நின்ற 21-பேரில் பாசிலியோ 10-வதாக நிற்கையில் மற்ற ஒன்பது பேரையும் சுட்டு முடியும்போது, தளகர்த்தனண்டை ரேமன் தற்செயலாய் வந்தான். 10-வது ஆள் யாரென்று அவன் பார்க்கையில் தன் சிநேகிதனாகிய பாசிலியோ என்பதைக் கண்டு ஓடிச்சென்று அவனை தன் கரங்களால் பிடித்துக்கொண்டு "தளகர்த்தரே! இவனைக் கொல்லவேண்டாம், கொல்லவேண்டாம்" என்று சத்தமிட்டான்.

"ஏன் அவன் ஒரு வாத்தியக்காரனோ?" என்றான் தளகர்த்தன். ஏனெனில் எந்த யுத்தத்திலும் கைதிகளில் வாத்தியக்காரராயிருப்பவரைக் கொல்லமாட்டார்கள். அவர்களுடைய வாத்தியம் எந்த வேளையிலும் சேனையை உற்சாகப்படுத்த அவசியமாதலாலும், அவர்கள் ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லையாதலாலும், அவர்களைத் தப்பவிடுவார்கள்.

"வாத்தியக்காரனா! ஆம், ஒரு பெரிய வாத்தியக்காரன்தான்," என்று ரேமன் மறுமொழி கூறினான்.

"எந்த வாத்தியத்தை அவன் வாசிப்பான்?" என்று தளகர்த்தன் கேட்டான்.

"அவனா, இந்த....ந்த...இப்போதான் ஞாபகம் வருகிறது, பிராஞ்சு தேசத்து யாழ் ஊதுவான்" என்றான். ஆனால் வாஸ்தவத்தில் பாஸிலியோவுக்கு ஒரு வாத்தியமும் தெரியாது. இதை தளகர்த்தர் கிரகித்துக்கொண்டபோதிலும் ரேமன் அத்தனை பரிதாபமாகத் தன் சிநேகிதனுக்காக கெஞ்சினதினிமித்தம் அவன் பேரில் பரிதாபமுற்று, மனமிரங்கி அவனிடம் வேறொரு கேள்வியும் கேட்காமல், மரண தண்டனைக்குத் தப்பும்படி அவனுக்கு ஒரு தருணத்தைக் காண்பித்தான். பாஸிலியோவை பதினாறு நாட்களுக்குள் யுத்தத்திற்கென்று தயாராக்கப்படவேண்டிய ஒரு வாத்திய சேனையில் சேர்த்தான். பதினாலாம் நாளில் அவன் அந்த வாத்தியத்தை சரியானபடி வாசிக்காவிட்டால் அவன் தளகர்த்தனை வஞ்சித்ததற்காக உடனே கொல்லப்படவேண்டும் என்று அவன் உத்தரவு அளித்தான்.

நல்லது, பாஸிலியோ கொல்லப்பட்டானா? இல்லை. பாஸிலியோ தன் சிநேகிதனைப் பார்த்து, "பதினாறு நாட்களுக்குள் நான் அந்த யாழை வாசிக்கக் கற்றுக்கொள்வேன்" என்றான். பிற்காலத்தில் அடிக்கடி இச்சங்கதியை எடுத்துச் சொல்வான். "நான் பதினாறு நாட்களும் இராப் பகலாய் ஒரு நேரமும் தூங்காமல் அவ்வாத்தியம் வாசிக்கக் கற்றுக்கொண்டேன். ஒன்றுந் தெரியாத நான் அவ்விதமாகக் கற்றுக்கொண்டது எல்லாருக்கும் ஆச்சரியத்

தைக் கொடுக்குமல்லவோ! அவைகள் என்ன ஆச்சரியமான நாட்கள்! நான் நாள்தோறும் வயல்வெளியில் போய் பக்கத்து ஊரிலிருந்த ஒரு வாத்தியக்காரனிடம் யாழ் வாசிக்கக் கற்றுக்கொண்டேன். நான் ஒருவரிடமும் ஒன்றும் பேசுவதுமில்லை. ஒன்றையும் நினைப்பதுமில்லை. சாப்பிடுவதுமில்லை. என்னுடைய முழு எண்ணமும் பிராஞ்சிய யாழ் என்னும் வாத்தியத்தின் பேரிலேயே. எப்படியாகிலும் படித்துத் தீரத்தான் வேண்டுமென்று தீர்மானித்தேன். அதின்படியே கற்றுக்கொண்டேன். நான் ஊமையனாயிருந்தேனானால் பேசக்கற்றிருப்பேன். குருடனாயிருந்திருந்தால் காணவும், முடவனாயிருந்திருந்தால் நடக்கவும் கற்றிருப்பேன். ஏனெனில் என் மனதில் அப்பேர்ப்பட்ட தீர்மானமிருந்தது. நமது மனது! இதுபோல் அதிக வல்லமைபொருந்தியது வேறொன்றுமில்லை. அதை கற்றுத்தீரவேண்டுமென்ற மனத்தீர்மானம் எனக்குள்ளிருந்ததினால்தான் நான் கற்றுத்தீர்த்தேன். என் மன உறுதி எனக்கு ஜெயத்தைக் கொண்டுவந்தது நிச்சயம்.

அப்படியே பதினாறு நாட்களுக்குள் நான் நன்றாய்க் கற்றுக்கொண்டேன். தளகர்த்தர் என்னைப் பரீட்சித்தார். நான் நன்றாய் வாசித்தேன். அவர் என் ஜீவனை ரட்சித்து, வாத்தியப்படையில் என்னையும் சேரப்பண்ணினார். இப்படியாக மனமுண்டானால் இடமுமுண்டு என்பதை இச்சரித்திரத்தால் தெளிவாய் அறியலாம்.

THE KAISER TO HIS DAUGHTER.

## ஜர்மானிய சக்ரவர்த்தி தமது மகளுக்கு சொன்ன புத்திமதி.

இச்சக்ரவர்த்தியின் மகளுக்கு போன வருஷம் கல்யாணம் நடந்தது. அச்சமயத்தில் சக்ரவர்த்தி தமது மகளுக்கு பின்வரும் நேர்த்தியான வார்த்தைகளைக் கூறினார்:—"என் அருமை மகளே, இன்று நீ எங்களுடைய வீட்டை விட்டுப்போகிறாய். நீ எனக்கும் உன் தாயாருக்கும் எப்பொழுதும் கொடுத்த சந்தோஷ பாக்கியத்திற்காகவும், நீ எங்கள் வீட்டுக்குள் இருந்த வருஷங்களெல்லாம் அதைச் சிறப்பித்து பிரகாசிப்பித்ததற்காகவும், முழு இருதயத்தோடும் நன்றி சொல்லுகிறேன். ஆனால், இனிமேலோ, இந்த விதமான வேலையல்ல, நீயும் உன் துணைவரும் உங்கள் இளவயதிலே மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யவும், மற்றவர்களுக்காக கவலைப்படவும் வேண்டியது. அந்த ஊழியம் மகா மேன்மையானது. அதுவே உங்கள் ஜீவியத்தை நிரப்புவதாக" என்பதே. இதின் தாற்பரியம் யாதெனில், அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்தால் அப்பெற்றோருடைய முக்கியமான வேலையும் கடமையும் எதுவென்றால், அப்பிள்ளைகள் சரியான வழியில் நடக்கவும், கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்க்கவும் படிப்பிக்கவேண்டியதுதான்.

WHERE SUGAR COMES FROM?

## சர்க்கரை கிடைப்பது எதிலிருந்து?

இந்தியாவிலுள்ள ஜனங்களில் ஏகதேசம் எல்லாரும் கரும்பைக் கண்டிருக்கக்கூடும். அதன்றி கருப்பஞ்சாற்றிலிருந்தெடுக்கும் கற்கண்டு, சர்க்கரை முதலியவற்றை சாப்பிட்டுமிருக்கலாம், அவை எடுக்கப்படும் விதத்தையும் பார்த்திருக்கலாம். சர்க்கரை இதிலிருந்து மாத்திரமல்ல வேறு அநேக விதமாயும் எடுக்கலாம். இந்தியாவில் ஈந்தம் பனையிலிருந்தும் மற்றப் பனைகளிலிருந்தும் எடுக்கிறார்கள்.



நாம் வாசித்த ஒரு புஸ்தகத்தில் அநேக பிரயோஜனமும் விசேஷமுமுள்ள விஷயங்கள் உண்டு. அதில் பின்வருமாறு கூறியிருந்தது: "அநேக வருஷ காலமாய் சர்க்கரை கரும்பிலிருந்துமாத்திரம் எடுக்கப்பட்டது. அதன்றி ஒரு காலத்தில் உலக முழுவதுக்கும் ஒரே இடத்திலிருந்து சர்க்கரை அனுப்பப்பட்டது. இது அதிசயமன்றோ? பங்காளத்தில்தான் முதல் முதலாக கரும்புச்செடி வளர்க்கப்பட்டது என்பது சரியல்ல, ஆனால் செடியின் சாற்றிலிருந்து சர்க்கரை பிழிந்து எடுக்கப்பட்டது பங்காளத்தில்தான் என்பது எல்லாருமறிந்த விஷயம். ஏகதேசம் கி. மு. 800 வருஷங்களுக்குமுன் சீனர் பங்காளரிடமிருந்துதான் சர்க்கரை எடுக்கும் விதத்தைக் கற்றனர். அப்புறம் 1600 வருஷங்கள் சென்றபின், பாரசீகர் கரும்புச்செடி பயிரிட்டு வளர்த்தார்கள். பாரசீக டாக்ற்றர்மார்தான் முதல் முதலாக சர்க்கரையை மருந்துக்களோடு சேர்த்தார்கள். அரபியர் மத்தியதரைக்கடலைச் சுற்றியுள்ள நாடுகளைக் கைப்பற்றினபோது, அவ்விடங்களிலெல்லாம் கரும்புப் பயிர்வகை செய்தனர். இப்படியாக கரும்புச்செடி உலக முழுவதும் பரம்பிற்று.

கொஞ்சம் கொஞ்சமாக உலகத்திலுள்ள உஷ்ணமான நாடுகளுக்குள் அது பிரவேசித்தது. மிஷனெரிமார் அதைக் கொண்டுபோய், அதைப் பயிராக்கும் விதத்தை ஜனங்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். பிரயாணிகள் தாங்கள் புதிதாய்க் கண்டுபிடிக்கும் இடங்களுக்கு அதைக் கொண்டுபோனார்கள். அப்படியே மேல் இந்திய தீவுகளுக்கும், ஐக்கிய மாகாணத்தின் அனலுள்ள தென் பாகத்திற்கும், தென் அமெரிக்காவின் பற்பல பாகங்களுக்கும் இது கொண்டுபோகப்பட்டது.

ஆனால் கொஞ்சக்காலத்துக்கு முன்தான் அதிலே அதிக வியாபாரம் நடந்தது. ஏனெனில் இப்போதுதான் நமக்கு நன்றாய்த் தெரிந்த (Beet root) வள்ளிக்கிழங்கிலிருந்தும் சர்க்கரை எடுக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஐரோப்பாவில் இந்தக் கிழங்கு ஏராளமாய் பயிர் செய்யப்படுகிறது. ருஷியா, ஜெர்மனி, ஆஸ்திரியா தேசங்களில் இவ்விதமான சர்க்கரை வியாபாரம் ஜாஸ்தியாய் நடக்கிறது. ஆகையால் கரும்பிலிருந்து எடுக்கும் சர்க்கரையைவிட இந்த வியாபாரந்தான் ஜாஸ்தி.

வேறு வஸ்துக்களிலிருந்தும் சர்க்கரை எடுக்கப்படுகிறது. மத்திய ரேகைக்குள்பட்ட நாடுகளில், முக்கியமாய் அமெரிக்காவில் ஒரு மரத்திலிருந்து மிக நேர்த்தியான சர்க்கரை எடுக்கப்படுகிறது. அம்மரத்திற்கு மேப்பிள் என்று பெயர். அதினின்று கிடைக்குஞ் சர்க்கரைக்கு ஜாஸ்தி விலை. ஏனெனில் அது அதிக ருசியாயிருக்கும். விரப்புகளுக்கும் அதைத்தான் உபயோகிக்கிறார்கள். அம்மரத்தின் மூட்டில் ஒருசிறு துவாரம் உண்டாக்கப்பட்டு, அதில் ஒரு குழாயை வைக்க, அதின் வழியாய் சாரம் ஏறி அடியிலிருக்கும் ஒரு சிறு தொட்டிக்குள்

பாய்கிறது. மாரிகாலத்தில் சாரமிருக்காது. குளிர்காலத்தின் ஆரம்பத்தில்தான் அதிகமான சாரம் கிடைக்கும். வருஷந்தோறும் 125 மணங்கு மேப்பிள் சர்க்கரை அமெரிக்காவில் உண்டாக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. கரும்பிலிருந்து சர்க்கரை உண்டுபண்ணுவதுபோலவே மேப்பிள் சர்க்கரை உண்டுபண்ணும் விதமுமிருக்கிறது.

---

JOSEPH STRONG THE BLIND ORJAN BUILDER.

## கின்னரம் உண்டுபண்ணின குருட்டு ஜோசப் ஸ்றிருங்.

---

கார்லயில் ஊரானும் கின்னரப்பெட்டி உண்டுபண்ணினவனுமான குருட்டு ஜோசப் ஸ்றிருங் என்பவன் சரித்திரத்திலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவெனில், மனுஷர்கள் முயற்சியுடையவர்களானால் சித்தி பெறுவார்கள். அவரைப்பற்றி பதினெட்டாம் நூற்றாண்டிலவசித்த ஒரு ஆசிரியர் எழுதுகிறார். அவருடைய ஜீவியத்தைப் பற்றி அதிக பிரபல்லியமாக்க வேண்டிய தவசியம்.

தனக்கு கண்ணியத்தையல்ல, அவமானத்தையே விளைவித்த ஒரு சம்பவத்தினால் அவர் பிரசித்திபெற்றார். கார்லயில் அத்தியட்சர் தேவாலயத்தின் கின்னரப் பெட்டியை வாசித்துவந்தவர் மரித்துப் போனதினால், வேறொருவர் அவருக்குப் பதிலாய் நியமிக்கப்படவேண்டியதாயிருந்தது. மேற்சொன்ன வாத்தியக்காரன் மரித்தபின், ஓர் இரவில், மகா ஆச்சரியமான காரியம் நேரிட்டது. ஆலயத்தில் ஆராதனை முடியவே, ஜனங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள். விளக்குகள் அணைக்கப்பட்டு, கதவுகள் சாத்தப்பட்டு, ஆலயமும் பூட்டப்பட்டதினால், எல்லாம் வெறுமையாயிருந்தது. ஆலயத்துக்கருகிலிருந்த வீட்டில் சப்தமிருந்தது. அப்போது நடுராத்திரி.

இப்படியிருக்கையில், ஒருபோதும் அவ்வமைதியான நேரத்தில் கேட்டிராத மகா ஆச்சரியமான சத்தம் உண்டாயிற்று. இந்தத் தொனி அநேகரை திடுக்கிட்டு தூக்கத்தினின்று எழுந்திருக்கச் செய்தது. கின்னரப்பெட்டியின் வாத்தியம், இரவு முழுதும் பிழையின்றி, தெளிவாக முழங்கினது. எல்லோரும் பயமடைந்திருந்தார்கள். வாத்தியத்தை கேட்ட ஒவ்வொரு ஆளும் அதே நிலைமையிற்றானிருந்தது. மரித்துப்போன கின்னர வாத்தியக்காரனுடைய ஆவி அவன் உயிரோடிருந்தபோது அதிகமாய் நேசித்த கின்னரப் பெட்டியை வாசிக்கிறதினால், அந்த இனிய ஓசைகள் உண்டாயினவென்று அனைவரும் நினைத்தார்கள்.

இது ஒரு பெரிய விசேஷமாகையால்: இதன் இரகசியத்தையறிய, தேவாலயத்துக்குப் போய் அதை பரீக்ஷிக்கவேண்டுமென்று கடைசியில் தீர்மானித்தார்கள். கோவில் குட்டிகள் கைகளில் சாவியையும், மற்றவர்கள் கைகளில் விளக்குகளையும் பிடித்தவர்களாய் அணி அணியாய் அந்த இருட்டு இராத்திரியில் தேவாலயத்துக்குப் போனார்கள்.

கதவு திறக்கப்பட்டது. கட்டடமுழுவதும் இருளால் நிறப்பப்பட்டிருந்தது. ஜனங்கள் நடுக்கத்தோடு உள்ளே சென்றார்கள். கின்னரப்பெட்டிதான் இந்தச் சம்பவத்திற்குக் காரணமாகையால், அது வைக்கப்பட்டிருக்குமிடத்தை போய்ப் பார்த்தால் எல்லாவற்றையுமறிந்துகொள்ளலாமென்று அங்குபோனார்கள். முந்



தின ராத்திரியில் கின்னரப் பெட்டியை வாசித்தவன், அதை மூட மறந்ததினால், அதின் தந்திகள் விளக்கின் குறைந்த வெளிச்சத்தினால் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

தூக்கங் கலைந்து நின்ற அம்மனுஷர்கள் துவக்கத்தில் ஒன்றையுங்காணாததினால், ஒரு ஆவியை கண்டதினால் உண்டாகும் பயத்தைவிட அதிக பயத்திலிருந்தார்கள். அவர்கள் இருட்டில் தேடிக்கொண்டிருந்தபோது, அதிக பரிதாபத்தோடு தன் கைகளை நீட்டின ஒரு உருவத்தைப் பார்த்தார்கள். தனக்கு எதிர்ப்பட்ட மனுஷர்களைப் பார்த்து, வந்தவர்களைப்பார்க்கிலும் அதிகம் நடுக்கமுற்றதாய், தன் வழியை தடவிக்கொண்டிருந்தது. உரத்த சத்தத்தோடு, கோவில் குட்டி "நீ யார்" என்று கேட்டபோது, அதிக நடுக்கத்தோடு தனக்கு உதவிசெய்யும்படியாய் தன் இருகரங்களையும் நீட்டிற்று. அது யாரென்று நினைக்கிறீர்கள்! அது ஒரு ஆவியல்ல. அது ஜோசப் ஸ்றிராங்கென்னும் குருட்டு வாலிபன். இப்போது அவனுக்கு பதினைந்து வயது. அவன் பிறவிக் குருடனாயிருந்தான். ஆகையால் கின்னரப் பெட்டி வைத்திருந்த இடத்தில் இரவில் இவ்விதமாய் ஒளித்திருந்தவன், வேறே யாராகிலுமாயிருந்தால் அவனைக் கோபியாமல் இருந்திருக்கமாட்டார்கள். ஆனால் இவன் பிறவிக்குருடனாயிருந்தபடியால் இவனைக் கடிந்துகொள்ள ஒருவனுக்கும் மனதில்லை. ஆயினும் இவன் அநேகம்பேரைத் தூக்கத்திலிருந்தெழுப்பி பயப்படச் செய்ததால் இவனுடைய குற்றம் பெரியதே. ஆகையால் தான் செய்த தப்பிதத்திற்காக ஆலயத்தை மேல் பார்க்கும் குருவினிடம் ஒப்புவிக்கப்பட்டான்.

இவர் பட்சமும் நீதியுமுடையவராகையால் நடுங்கிக்கொண்டிருந்த அந்த வாலிபனை பயமுறுத்தாமல், இச்சம்பவத்தின் ரகசியத்தை அறிய விரும்பினார். காரணமில்லாமல் இந்தப் பையன் அதை செய்திருக்கமாட்டான் என்று அவர் நிச்சயமாய் நம்பினார். அவர் அவனைப் பார்த்து: "ஜோசப்பே! நீ கின்னரப் பெட்டி வைத்திருக்கும் இடத்தில் நடுச்சாமத்தில் காணப்பட்டதாக அறிகிறேன். அங்கே எப்படிப்போனாய்" என்றார்.

வாலிபன். "சாயந்தர ஆராதனை முடிந்த பிற்பாடு அங்கே தாமதித்தேன்."

குரு. "உன்னை யாராகிலும் மறதியாய் உள்ளே விட்டு பூட்டிவிட்டார்களோ?"

வாலிபன். "இல்லை ஐயா. நானே அங்கே இருந்தேன்."

குரு. "பையனே உண்மையைச் சொல். நீ உண்மை பேசினால் ஒருவரும் உனக்குத் தீமை செய்யமாட்டார்கள்."

வாலிபன். "நான் கின்னரப் பெட்டியைத்தொட விரும்பினேன்."

குரு. "தொட என்று சொல்லுகிறாயே அதின் அர்த்தமென்ன?"

வாலிபன். "கின்னரப் பெட்டி வாசிப்பதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். ஆனால் அதின் சத்தம் எப்படி வரும் என்று அறிய விரும்பினேன்."

வாத்தியத்தின்மேல் அவ்வேழைப் பையனுக்கு எவ்வளவோ ஆசையும் ஆவலும் இருந்தது. வாத்தியத்தின் ஆச்சரிய தொனிகள் அவன் உள்ளத்தை ஊடுருவிச் சென்றதால் அவனைச் சும்மா இருக்க இடங்கொடுக்கவில்லை. உலகத்திலே சங்கீதம் விர்த்தி ஆகும்படி அவன் வாஞ்சை கொண்டான்.

மறுபடியும் குரு. கின்னரத்தை எப்படி வாசித்தாய்? உண்மையைச் சொல்.

வாலிபன். நான் ஒன்றும் செய்யவில்லை. குழாய்களைத் தொட்டுப் பார்த்தேன். அதிலுள்ள மெதுவான பாகங்கள் அசைகிறதெனக்கண்டு அவைகளைத் தொடவும் அவைகள் பெரிய சப்தத்தை உண்டாக்கின. இன்னும் அதிகமானவைகளைத் தொட்டேன். ஆச்சரியமாய் திடீரென்று பெரிய சப்தத்தை உண்டாக்கின. அதோடு அந்த தொனி மிகப் பரிதாபமுமாயிருந்தது. அதற்கப்புறம் ஒரு சப்தமும் பிறக்கவில்லை.

இதைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களுக்கு இன்ன காரியம் நடந்ததென்று இப்போ புலப்பட்டது. கின்னரப் பெட்டியில் காற்றுத்துருத்திகளில் தற்செயலாய் விடப்பட்டிருந்த கொஞ்சங் காற்று, கின்னரத்தின் வாசிப்புக் கருவிகளை (Keys) வாலிபன் தொடவே, அந்த சப்தத்தை உண்டாக்கின.

குரு. பையன்மேல் அதிக ஆச்சரியமுற்று, அவனை மிகப் பட்சத்தோடு பார்த்தார்.

கடைசியில் அவர் அவனைப்பார்த்து "நல்லது ஜோசப், நீ ஒருவருக்கும் தீமைசெய்ய நினைக்கவில்லை. ஆனால் நீ செய்த இக்காரியத்தினால் அநேகரைப் பயப்படுத்தியிருக்கிறாய். இனிமேல் ஒரு போதும் இப்படிச்செய்யாதே. உனக்கு இத்தனை வாஞ்சை இருக்கிறதால் சரியான சமயத்தில், ஒருவருக்கும் தடை உண்டாக்காத சமயத்தில், நீ போய் கின்னரத்தைத் தொடலாம். இதற்கு நான் பூரண உத்தரவு கொடுக்கிறேன்" என்றார்.

இதைக்கேட்ட ஜோசப் அவ்வளவு சந்தோஷத்தோடு போய், அன்றுமுதல் இராத்திரி நீங்கலாக எந்த மணி நேரத்திலும் போய்க் கின்னரத்தைத் தொட்டு வந்தான்.

அவன் கற்றிருந்த வேலை நெசவாயிருந்தாலும், தச்ச வேலையையும், கூடாரம், மரச்சாமான் முதலியவை பண்ணவும், தான் குருடனாயிருந்தும் கற்றுக்கொண்டான். ஆலயத்திலுள்ள கின்னரம் எவ்விதமாய் அமைக்கப்பட்டுள்ளது என்பதை நன்றாய் அறிந்த பிற்பாடு, ஒரு சிறு கின்னரத்தைச் செய்தான். அக்கின்னரம் மிக நேர்த்தியான, இனிய தொனிகளை பிறப்பித்தன. இது எல்லாருக்கும் ஆச்சரியத்தைப் பிறப்பித்தது. அதன்றி தான் கட்டின பாடல்களை அவ்வாத்தியத்தோடுகூடப் பாடுவான். அப்பாடல்கள் மிக வேடிக்கையாயும் விபரீதமாயுமிருந்தபோதிலும் அப்பாடல்கள் மூலமாய் அவன் கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவனைக் கேட்டார்.

அவனுக்கு இன்னம் அதிகமாய்ப் படிக்க இஷ்டமிருந்ததால் தானாகவே ஒரு ஜோடி உரப்பான சப்பாத்துக்களை செய்துகொண்டு கார்லைல் பட்டணத்திலிருந்து லண்டன் பட்டணத்துக்கு நடந்துபோய், அங்கேயிருந்த பேர்போன கீதவாத்தியக்காரனும் பாடகனுமான ஒருவனை சந்தித்தான். அவனைக் குறித்து ஜோசப் முன்னமே கேள்விப்பட்டிருந்தான். அவன் இவனை ஏற்றுக்கொண்டு, அவனோடு மிகப் பட்சமாயிருந்தான். அதன்றி லண்டனிலுள்ள அநேகர் இவனுக்கு சிநேகிதரானார்கள். அப்புறம் அவன் கார்லைலுக்குப் போனான்.

மறுபடியும் அவன் வேறொரு கின்னரத்தைப் பண்ணினான். அதினால் முழுவதும் குருடாயிருந்த ஒரு மனிதன்



என்ன ஆச்சரியமானதெல்லாம் செய்யக்கூடும் என்று தெளிவாக்கினான். அப்படி அவன் செய்த கின்னர வாத்தியங்களினாலும், பாட்டுகளினாலுமாத்திரமல்ல அவன் தன் சொந்த உபயோகத்திற்காகச் செய்திருந்த மரச்சாமான்களே அவனுடைய பெயரை மிகப் பிரஸ்தாபப்படுத்தியிருக்கும்.

GAMES WITH SLATE AND PENCIL.

## கற்பலகையில் பல்பத்தினால் வரைந்து விளையாடுதல்.

இரண்டு நேர் கோடுகள் முதலாவது கீறிக்கொண்டு அதன் நடுவே அதே மாதிரி வேறு இரண்டு கீறி வைத்துக்கொண்டால் இரட்டை சிலுவைமாதிரி இருக்கும். ஒருவன் O பூஜ்யம் தன் அடையாளமாகவும், எதிரி X குருசு தன் அடையாளமாகவும் வைத்துக்கொண்டு காலியான இடங்களுக்குள் ஒவ்வொருவராய் தங்கள் அடையாளங்களை போட்டு வரவும். யார் முதலாவதாக மூன்று அடையாளங்களை ஒரே வரியில் போடுகிறார்களோ அவர்கள்தான் கெலித்தவர். அது நேராயிருக்கலாம், அல்லது மூலைக்கு மூலை இருக்கலாம் அல்லது ஒரே பக்கமாயிருக்கலாம். இவ்வாட்டத்தில் ஒவ்வொருவனும் தன் எதிரி கெலிக்காதபடி அடைத்துக்கொள்ளப் பார்க்கவேண்டும்.

வேறொரு விளையாட்டு: ஒரு சதுரம் வரை. அப்புறம் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்துக்கு மத்தியிலே ஒரு கோடுபோட்டு, தலையிலிருந்து குழிக்கும் மத்தியாகவே வேறொரு கோடு வரைந்து, ஒரு மூலையிலிருந்து எதிர் மூலைக்கு வேறொரு கோடும்வரை. எல்லா வரிகளும் மத்தியில் சந்திக்கும். இருவரும் மூன்று தடவை விளையாடலாம். ஒருவன் எங்கேயாகிலும் புள்ளி போடலாம். ஆனால் அது மத்தியிலாகிலும் ஓரத்திலாகிலும் இருக்கவேண்டும். யார் முதலாவது மூன்று புள்ளிகளை ஒரே நேரில் நிறுத்துவார்களோ அவர்களுக்கே ஜெயம். இது ஒரு சாதாரண விளையாட்டாயிருந்தாலும் வெகு வேடிக்கையாயிருக்கும்.

## படம் வரைந்து விளையாடல்.

இதற்கு கற்பலகையாவது, காகிதமும் பென்சலுமாவது உபயோகிக்கலாம். பின் கூறியது நல்லது. ஒரு குறிப்பு வார்த்தைச் சொன்னவுடனே ஒவ்வொருவனும் எந்த சாயலிலாவது ஏதாவதொன்றை படபடவென்று வரைகிறான். அப்புறம் அவைகள் கைமாற்றப்படுகின்றன; ஒவ்வொருவனும் தான் வைத்திருக்கும் அக்கோடுகளை ஒரு படமாக மாற்றவேண்டும். அது ஒரு மிருகமாயிருக்கலாம் அல்லது வேறோர் படமாயிருக்கலாம். வேறோர்வகை எப்படியெனில் கோடுகளுக்கு பதிலாக 5 புள்ளிகள் போடவேண்டும். 1 புள்ளி கண்ணையும், 4 புள்ளிகள் மிருகத்தின் கால்களையும் அல்லது 2 புள்ளிகள் ஒரு மனிதனுடைய அல்லது குரங்கின் கால்களையும், 2 புள்ளிகள் கைகளையும் குறிக்கும். இந்த விளையாட்டுக்கு புத்திக்கூர்மையும் சுறுசுறுப்பும் அவசியம்.

CAN FLIES HEAR?

## ஈக்களுக்கு செவி கேட்குமா?

நாம் எவ்வளவு அதிகமாய் பற்பல மிருக ஜீவன்களின் புலன்களைக் குறித்துப் படிக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் கேள்வி புலன்தான் அதிகம் விசேஷமுள்ளது என்றும், அபிவிர்த்தியின் சரித்திரத்தில் அதிகம் பின்னால் சொல்லப்படுகிறதென்றும் அறிகிறோம். ஆகையால்தான் எந்த ஜெந்து பரிசம் (தொடுதல்), ரசம் (ருசித்தல்), ரூபம் (பார்வை) இவைகளை அதிகமாய் உடைத்தாயிருக்கிற அவைகள் முழுவதும் அல்லது கொஞ்சங்குறைய செவிடாயிருக்கிறதை நாம் பார்க்கிறோம். சில பூச்சிகள் மாத்திரந்தான் கேள்விப் புலனை உடைத்தா

யிருக்கிறது. ஆனால் அநேகம் பூச்சிகளுக்கு முக்கியமாய் ஈக்களுக்கு காதே கேளாது. எந்த விதமாய் தொனி உண்டாக்கக்கூடுமோ அவ்விதமாயெல்லாம் பண்ணியும் சில பூச்சிகள் தவிர மற்றொன்றும் சட்டை பண்ணவேயில்லை. எவ்பரி என்னும் பிரபு நம்முடைய காதுகளுக்கு எட்டாத அவ்வளவு உயர்ந்த தொனியை அவைகள் கேட்கலாமென்று எண்ணி அவைகளைப் பரீட்சித்தார். ஆனால் அவர் பிரயாசம் வீணாய்ப் போய்விட்டது.

ஒரு பிடில் வாத்தியத்தின் உயர்ந்த தந்தியில் சப்தம்பண்ண, அதற்கு ஒரு அங்குல தூரத்தில் பூக்களில் மகரந்தம் சாப்பிட்டுக்கொண்டிருந்த தேனீக்கள் அந்த சப்தத்தைக் கவனித்ததாக இல்லை. சாதாரணமாய் சொல்லப்போனால் ஈ யோடுகூட மற்றுள்ள பூச்சிகளெல்லாம் மிக ஆச்சரியமான புலன்களுடையவை. ஆனால் ஏகதேசம் எல்லா பூச்சிகளுக்கும், முக்கியமாய் தேனீ, எறும்பு, குளவி முதலியவைகளுக்கு காது ஒருபோதும் கேட்காது என்பதைக் கவனிக்கையில், மிக ஆச்சரியமன்றோ.

THE WORLDS WISDOM.

## உலகத்தின் ஞானம்.

ஒரு ஊரில் தெய்வ பக்திக்கும் நற்குணத்துக்கும் பேர்போனவனாயிருந்த ஒரு வயசாளி இருந்தார். அவர் எப்போதும் மிருக ஜீவன்களை பாதுகாப்பதில் மிகப் பிரீதியுள்ளவராயிருந்தார். யாராகிலும் மிருகங்களையாவது பறவைகளையாவது குரூரமாய் நடத்துவதைப் பார்த்தால் உடனே மிகத்தைரியமாய் அவர்களை அதட்டுவார். ஒரு நாள் ஒரு பையன் ஒரு அடைக்கலானைக் கல்லெறிந்து கொல்லும்படி பிரயாசப்படுவதைக் கண்டு: "குரூரமுள்ள பையனே, சிறிய பறவைகளை இவ்விதமாக இம்சைப்படுத்தி கொல்லும்படிக்காகவா தேவன் சிருஷ்டித்தார்?" என்று மகா கோபத்தோடு சொல்லிக்கொண்டு அந்த எய்யுங் கருவியை உடனே கொடுக்கும்படி கேட்டார். அவன் கொடுத்தவுடன் அதை வாங்கிக்கொண்டு தம்பாட்டில போனார்.

இது நடந்த சில வாரங்களுக்குள் அந்த நல்ல மனிதன் இறந்துபோனார். அவருடைய உடமைகளை சோதிக்கையில அவைகளுக்குள்ளே பட்சிகளைக் கொல்லும் கருவி ஒன்று காணப்பட்டது. அப்போ அவருடைய சத்துருக்கள் "இதோ இந்த பொல்லாத மாயக்காரனை பாருங்கள். அவன் பிரசங்கித்ததென்ன? இப்போ தன் கையிலேயே பட்சிகளைக்கொல்லுங் கருவியை வைத்திருக்கிறானே!" என்றார்கள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட மற்றுள்ளோரும் 'ஆம்' என்று சொல்லி தங்களுக்குத் தெரியாத விஷயத்தை தப்பாக எண்ணிக்கொண்டார்கள். இதுவே உலகத்தவரின் ஞானம்.

PUZZLE.

## ஒரு விடுகதை.

இங்கே ஒரு விடுகதையைச் சொல்லுகிறேன். அதை நீங்கள் விடுவிக்க விரும்புவீர்களென்றெண்ணுகிறேன்.

ஒரு ராஜா காட்டுக்கு அடிக்கடி வேட்டையாடச்செல்லுவார். அதற்காக கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கும். அப்பேர்ப்பட்ட கட்டடம் ஒன்றில் 9 அறைகள் இருந்தன. அவர் தம்மோடு 24 பேர்ச் சேவகர்களை காவற்காரராக கொண்டு போனார். அப்புறம் இரவில் நடு அறையில் தாம் படுத்துக்கொண்டு, காவற்காரரிடம் நீங்கள் எந்த விதமாய் ஒழுங்குபண்ணியாவது ஒரு பக்கத்துக்கு 9 பேராகத் தூங்கவேண்டும் என்றார்.

ஒவ்வொரு அறைக்கு 3 பேராக இருந்தார்கள். ராஜா தாம் ஒழுங்குபண்ணின காலத்துக்கு அதிகமாக இருக்க நேரிட்டது. அப்போ ராஜன் அவ்வீட்டின் ஒவ்வொரு பக்கத்திலும் 9 பேர் தூங்க வேண்டும் என்று கட்டளையிட்டார். அப்புறம் தான் நித்திரைக்குப் போகுமுன் சேவகர் தம் கட்டளைப்படி நித்திரை செய்கிறார்களா என்றும், அல்லது அருகேயிருந்த கிராமத்துக்கு போனார்களா, அதன்றி கிராமத்திலுள்ளவர் யாராகிலும் வந்திருக்கிறார்களா என்றும் சோதனை செய்யும்படியாகப் போனார். பார்க்கையில் ஒவ்வொரு பக்கத்திலும் 9 பேர் தூங்கினார்கள். ராஜா சந்தோஷத்தோடு நித்திரைக்குப் போனார்.

ஆனால் நிஜமாக நடந்ததென்னவெனில் அவர்களில் நாலுபேர் கிராமத்துக்கு போயிருந்தார்கள். அப்படி அவர்கள் போன போதிலும் உள்ளேயிருந்தவர் ஏதோ தந்திரமாக ஒவ்வொரு பக்கத்துக்கு ஒன்பது பேராக இருந்துகொண்டார்கள். அடுத்த நாள் இங்கிருந்தவர் ஒருவரும் போகவில்லை. ஆனால் கிராமத்திலுள்ள அவர்கள் சிநேகிதர் நால்வர் ராஜ சட்டத்துக்குவிரோதமாக இவர்களோடு தூங்கினார்கள். ஆனால் ராஜா இரவில் பார்க்கும்போது ஒவ்வொரு பக்கத்திலும் ஒன்பதுபேர்மாத்திரம் இருந்தனர். அடுத்த நாள் 8 பேர் வந்தார்கள். என்றாலும் 32 பேரும் ஏதோ ஒழுங்குபண்ணி ராஜாவை வஞ்சித்தார்கள் அடுத்த நாள் 12 சிநேகிதர் வந்தார்கள். அன்றும் ராஜா அவர்கள் தந்திரத்தை கண்டு பிடிக்கவில்லை. 5-ம் நாள் இரவில் கிராமத்திலுள்ள ஒருவரையும் வரவிடாமல் 6 சேவகர் கிராமத்துக்கு போய்விட்டார்கள். மற்ற 18 பேரும் ஒரு உபாயம் பண்ணி பக்கத்துக்கு 9 பேராக தூங்கினார்கள்.



நல்லது, இவ்விதமாக இந்த 5 இரவிலும் இம்மனிதர் எவ்விதமாக ராஜாவை வஞ்சித்திருக்கக்கூடும்? இதைக் கண்டு பிடிக்க வேண்டுமானால் ஒரு சதுரம் வரைந்து ஊடே இரண்டு வரி போட்டு அதை ஒன்பது சரிபங்காக பிரிக்கவேண்டும். பின் அவ்வெண்களை போட்டு ஒவ்வொரு பக்கத்துக்கு ஒன்பதாக ஒழுங்கு பண்ணப்பார்க்கலாம்.



இந்த விடுகதையை சரியாய் விடுவித்து அடுத்த மாதப்பத்திரிகையில் அனுப்புவோம். அதற்கு முன்னதாக யாராகிலும் விடுவித்தனுப்புவார்களாகில் மிக்கச் சந்தோஷம். அவர்கள் சரியாய் விடுவிப்பார்களானால் அவர்களுடைய அனுமதியோடு இப்பத்திரிகையில் அவர்கள் பெயரை பிரஸ்தாபிப்போம்.

NEWS AND NOTES.

## சமாச்சாரக் குறிப்புகள்.

இப்பத்திரிகையை வாசிப்போர் சிலர் வடக்கேயுள்ள சீயல்டா (Sealdah) விலிருந்து கல்குத்தா பட்டணத்திற்கு, கங்கா நதியைத்தாண்டி சொற்பகாலத்துள் பிரயாணஞ் செய்வார்கள். மேற்படியார் சாராகாட் (Sara Ghat) என்னுமிடத்தில். கங்காநதியின்மேல் கட்டப்படும் பாலத்தைக்குறித்து அறிய விரும்புவார்கள், கப்பல் மார்க்கமாய் பிரயாணஞ் செய்வோரும், ஆற்றின் கரையோரம் நின்று பார்ப்போரும், அப்பாலத்தைக் காணலாம். பாலத்தின் தூண்கள் 160 அடி ஆழம்வரை பாய்ச்சப்பட்டதாயும், உலகத்தில், இதுவரை போடப்பட்டிருக்கும் அஸ்திபாரங்களுள் அதிக ஆழமுடையதாயுமிருக்கிறது. இத்தூண்கள், கங்காநதி கரைபுரண்டு பெருவெள்ளமாய்ப் போகும்போதும், பாலமசைக்கக்கூடாதபடி, அவ்வளவு உறுதியாயிருக்கிறது.

இலங்கைத்தீவில், முதற்தடவையாய், சில வாரங்களுக்குமுன்னே, பிளேக்யென்னும் நோய் பிரவேசம்பெற்றது. இக்கொள்ளைநோயால் பீடிக்கப்பட்டவர்களென்று சந்தேகப்பட்டவர்களில், ஒரே ஒரு ஆளுக்குத்தான் அவ்வியாதியுண்டாயிற்றென்று ரூபகாரப்பட்டது. இதற்குமுன் பிளேக் வியாதி இத்தீவில் தோன்றினதில்லையாம். இனிமேல் இவ்வியாதி அங்கு வாராதபடி போதுமான ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. பெப்ரவரி மாசம் இரண்டாம்தேதியில், ஒரு ஆகாய கமனி ஒரு மயிலும் இன்னும் கொஞ்சந் தூரமும் உயரச்சென்றான் மற்றைய ஆகாய கமனிகள், இந்த தூரத்திற்குப் பாதிதான் போயிருக்கிறார்கள்.

முற்காலத்தில் நீலங்காய்ச்சுவது, இந்தியாவின் கைத்தொழில்களில் முக்கியமானது. சிலகாலமாக, இத்தொழில் க்ஷீணதசையடைந்திருக்கிறது. ஏனென்றால் கர்மானிய சாஸ்திரிகள் அதிக சொற்பகிரயத்திற்கு அவுரிச் செடியிலிருந்து செய்யாமல் வேறு வஸ்துக்களிலிருந்து நீலத்தை உண்டுபண்ணுகிறார்கள். இப்போது ஒரு ஆங்கிலேய சாஸ்திரி, அவுரிச் செடியிலிருந்து நீலங்காய்ச்சுந் தொழிலை மறுபடியும் ஆரம்பம்பண்ணலாமென்று சொல்லுகிறார். அவர், அவுரிச் செடியை ஒருவிதமாய்ப் பண்படுத்துவதாலும், நீலத்தை ஒருவகையாய்ச் செய்வதாலும், நீலத்தின் தன்மையையும், விலையையும் அதிகப்படுத்தலாமென்று சொல்லுகிறார். இதைச் செய்வதற்கு முதலாவது அதிகப்பணஞ்செலவுசெய்து, அந்த வகைகளையனுசரித்தால், பிற்பாடு, அக்கிரயத்தை சம்பாதித்துவிடலாமென்கிறார். வேறு வஸ்துக்களிலிருந்து நீலத்தை உண்டுபண்ண அதிகப்பணஞ் செலவுசெய்யப்பட்டது. சில காலத்துள் அப்பணமும் அதின் வட்டியும் வசூல் செய்யப்பட்டது. இவ்விதமாய்ச் செய்யப்பட்ட நீலத்தின் விலையை இன்னுமிறக்குவது கட்டிவாராததால், அவுரிச் செடியினின்று நீலங்காய்ச்சுந் தொழிலை மறுபடியும் ஆரம்பஞ்செய்வது அதிக லாபத்தையுண்டுபண்ணுமென்று ஆலோசனை சொல்லுகிறார்.

ஒன்பது வயதுள்ள ஒருபையன் இரண்டரைவயதுள்ள தன் தங்கையோடு இங்கிலாந்திலுள்ள ஒரு தெருவில் போய்க்கொண்டிருந்தான். தெருவில் ஜனநெருக்கம் அதிகம். இருவரும் மூன்று சாமான் வண்டிகளுக்கெதிரில் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்துக்கு போகப் பிரயாசப்பட்டார்கள். இந்த வண்டிகள் ஆட்களை ஏற்றிக்கொண்டு இவர்களுக்கு எதிரே மிக வேகமாய் வந்த ஒரு வண்டியை மறைத்துவிட்டன. இந்த வண்டி பையனுக்குவெகுசமீபத்தில்வந்தபோது தன் சிறிய சகோதரியை ஆபத்திலிருந்து தப்புவிக்கப் பிரயாசப்பட்டதில் வண்டி இவன்மேல் ஏறினது. வண்டியின் சக்கரம் இவன் இரு தொடைகள்மேல் ஏறினபோதிலும் எலும்புகள் ஒன்றும் நொறுக்கப்படவில்லை. இவன் சீக்கிரம் சொஸ்தப்பட்டு நடந்து திரிந்தான். மூர்ச்சை தெளிந்தபிற்பாடு அவன் முதலாவது பேசின வார்த்தைகள் யாதெனில்: "என் சிறிய சகோதரி எங்கே?" என்பதே.

இந்தியாவின் சிலபாகங்களில் இந்த வருஷத்தில் ஜனங்களுக்கு அதிக கஷ்டம் நேரிடும். அநேக இடங்களில் சொற்ப மழையினிமித்தமும் மழைத் தாழ்ச்சியினிமித்தமும் பஞ்சகாலத்துத் துன்பங்கள் நேரிட்டிருக்கின்றன. ஐக்கிய நாடுகளில் மழைபெய்யும்வரைக்கும் ஜனங்கள் கஷ்டமின்றி ஜீவிக்கவேண்டுமானால் சர்க்காரின் உதவி அவசியம். வேறு சில இடங்களில் தண்ணீர் கஷ்டம் நேரிட்டிருக்கிறது; கிணறுகளில் ஜலமே இல்லை. ஜனங்களும் மிருகாதிகளும் ஜலங்கிடையாததால் அதிகம் வருந்துவார்கள். தகுந்த காலத்தில் உதவிசெய்யக்கூடிய சர்க்கார் இருப்பது எவ்வளவு பெரிய பாக்கியம். என்றாலும் இதினால் உண்டாகும் துன்பங்களும் கஷ்டமும் அதிகமே.

Vol. XXVII. Registered No. M. 209 No. 12

JUNE, 1914

# மாதர் மித்திரி

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
4 AUG 1914
MADRAS

# Tamil Woman's Friend

## "MATHAR MITHIRI"

PUBLISHED BY THE

Woman's Foreign Missionary Society

Methodist Episcopal Church

U. S. A.

METHODIST PUBLISHING HOUSE
MOUNT ROAD, MADRAS

# மாதர் மித்திரி.

இது இந்து ஸ்திரீகளின் உபயோகத்தின் பொருட்டு சித்திரப் படங்களுடன் மாதந்தோறும் பிரசுரமாகும் பத்திரிகை. பிரதி ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு கையொப்பம் இரண்டு அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஒரு பிரதிக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி மூன்று அணா. ஒரு மேல்விலாசத்துக்கு அனுப்பப்படும் ஐந்து பிரதிகளுக்கு ஒரு வருஷத்திற்குத் தபாற் கூலி ஆறு அணா. கையொப்பப் பணமும் தபாற் கூலியும் முன்னதாக அனுப்பப்பட்டாலொழிய பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. கடிதங்கள், கையொப்பங்கள் அனுப்புவோர் சென்னை மவுண்ட் ரோட்டிலிருக்கும் மெதடிஸ்ட் பப்ளிஷிங் ஹவுஸில் "மாதர் மித்திரியைப்" பிரசுரிக்கும் ஏஜெண்டு அவர்களுக்கு அனுப்பவேண்டும்.

# THE WOMAN'S FRIEND

Is an Illustrated Tamil Monthly Magazine published for the benefit of Indian Women. Subscription for one year is 2 annas *in advance*. Postage for a single copy for one year is 3 annas *in advance*. Postage from 2 to 5 copies to one address is 6 annas *in advance*. Address all Communications and Subscriptions to Rev. W. L. KING, *Methodist Publishing House*, MOUNT ROAD, MADRAS.

## பொருள் அடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| கீர்த்தனை .... .... .... .... | .... 179 |
| பொதுவான அறிவை சோதிக்கும் பரீட்சைக் கேள்விகள் .... | .... 180 |
| ஓர் சிறு குருட்டுப்பெண்ணின் சரித்திரம் .... .... | .... 181 |
| சணல் கைத்தொழில் .... .... .... | .... 183 |
| நரியும், வெள்ளாடும், கிழங்குகளும் .... .... | .... 183 |
| கடந்த மாத விடுகதையின் விடுவிப்பு .... .... | .... 184 |
| குணப்பட்ட பிச்சைக்காரன் .... .... .... | .... 185 |
| இரண்டு விசித்திரமான கடிகாரங்கள் .... .... | .... 187 |
| வீட்டு ஈக்களும் வியாதியும் .... .... .... | .... 187 |
| பொம்மைகளைப்பற்றி .... .... .... | .... 189 |
| சமாச்சாரக் குறிப்புகள் .... .... .... | .... 191 |


# மாதர் மித்திரி.


புத். உஎ. ௧௯௧௪ ௵ - ஜூன் ௴. இல. ௧௨.
1914


## JUDGMENT.

இராகம், சௌராஷ்டிரம். திரிபுடைதாளம்.

**பல்லவி.**

வருவார், விழித்திருங்கள்;—இயேசுநாதர்
வருவார், விழித்திருங்கள்.

**அனுபல்லவி.**

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்,
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகு பலன் அளித்திட— வரு

**சரணங்கள்.**

1. பேரிகையால் அண்ட பித்திகளும் குலுங்க,
பேர் எக்காளத் தொனியால் பேய்க் கணங்கள், கலங்க,
தாரணியோர் மலங்க, தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந் திலங்க,— வரு

2. வானம் மடமடென்க, வையம் கிடுகிடென்க,
ஈனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க,
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க,
ஞான கானம் பாட நல்லோர் சபை தொடங்க,— வரு

3. துன்புற்றோர்க்கு ஜீவ இன்பக் கனிகள் ஊட்ட,
தொண்டு செய்ய அன்பர்க்கு அண்டர் முடிகள் சூட்ட,
அன்பற்றோரை நரக வன்புத் தீயில் வாட்ட,
அத்தனைச் சேர்ந்தோரை நித்ய கதியில் கூட்ட,— வரு

4. விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்,
மேலா மோக்க தலந்தோர் சால மகிழுதற்கும்,
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்,
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர்— வரு

## A GENERAL KNOWLEDGE TEST PAPER.

## பொதுவான அறிவை சோதிக்கும் பரீட்சைக் கேள்விகள்.

இங்கிலாந்து அமெரிக்கா தேசங்களிலே பொது அறிவைச் சோதிக்கும் பரீட்சை ஒன்றுக்கு சமயா சமயங்களில் பிள்ளைகளை அனுப்புவது வழக்கமாயிருக்கிறது. இதின் நோக்கம் பிள்ளைகள் பாடப் புஸ்தகங்களிலிருந்து எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்று சோதிக்கிறதற்கு அல்ல, தாங்களே எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்றும், தாங்கள் கண்டதையும் பார்த்ததையுங் குறித்து என்ன நினைக்கிறார்கள் என்றும், சாதாரண நடவடிக்கைகளில் கவனமாய் நடக்கிறார்களா என்றும், உதாரணமாக, ஏதாவது எழுதிய ஒரு காகிதத்திற்கு என்ன முத்திரை ஒட்டவேண்டும் என்றும், அல்லது ரெயில்வண்டி டிக்கட்டு எவ்வளவு விலையுள்ளது என்றும் அறிந்துகொள்வதற்குமே இந்தப்பரீட்சை வைத்திருக்கிறது. அவர்கள் கற்றுக்கொண்டதை அறிந்து, கைக்கொள்ளத்தக்க சக்தியைச்சோதிப்பதினால் தான் சாதாரண பரீட்சையைப் பார்க்கிலும் இது சிறந்தது. இப்படிப்பட்ட பரீட்சைக்கேள்விகள் சில இங்கிலாந்து தேசத்திலுள்ள பெண்பாடசாலை ஒன்றுக்கு அனுப்பப்பட்டது. அவைகளில் சிலவற்றை அடியில் சொல்லுகிறேன். இதை வாசிக்கிறவர்கள் ஒவ்வொருவரும் இவைகளில் சிலவற்றையாவது, அல்லது எல்லாக் கேள்விகளையாவது வாசித்து உத்தரவு அளிக்க நான் விரும்புகிறேன். இவைகளுக்கு பதில் சொல்ல முடியாவிட்டால், உத்தரவைக் கண்டுபிடிக்கவாவது முடியும்.

1. மண்பாத்திரத்தில் போட்ட உடனே ஏன் இரண்டொருவாரம் Bulbs(திரண்டமூலம்) இருட்டில் வைக்கப்படுகின்றன?

2. ஏன் சமுத்திர ஜலம் உப்பாயிருக்கிறது?

3. ஏன் கடலோரங்களில் மணலிருக்கிறது?

4. கிரகங்களுக்கும் அசையா நட்சத்திரங்களுக்கும், வால் நட்சத்திரத்திற்கும் எரி நட்சத்திரத்திற்கும் என்ன வித்தியாசம்?

5. ஒரு பந்தை ஆகாயத்தில் எறியும்போது ஏன் அது மறுபடியும் தரையில் விழுந்து போகிறது?

6. இடிக்கு முன் மின்னலை ஏன் காண்கிறோம்?

7. ஏன் வருஷத்தை மாதங்களாகப் பிரித்திருக்கிறது?

8. எங்கிருந்து பின் வருபவைகள் கிடைக்கின்றன?

Mace, Gelatine, Cornflour, தானியமாவு, Macaroni (கோதுமைமாற்செய்த பலகாரம்) கொய்னா.

9. பெர்லின், டாரான்டோ, ஹாங்காங், கார்க் இந்த இடங்களுக்கு தபால் செலவு எவ்வளவு செல்லும்?

10. நன்றாய் நடப்பவன் ஒருவன் ஒரு மணிநேரத்தில் எத்தனைமைல்நடப்பான்?

11. எத்தனை மணிநேர நித்திரை ஒரு ஸ்திரீக்கு சராசரி அவசியம்?

12. இங்கிலாந்து இராஜாவுக்கு எத்தனை பெண்கள்?

13. கால அளவு என்ன ?

14. Sphinx (ஸ்பிங்ஸ்) எங்கேபோய்ப் பார்ப்பாய்?

15. பின்வரும் தேசத்து அரசர்கள் ஒவ்வொருவருக்கும் என்ன பட்டப்பெயர்:—சீனா, பாரசீகம், ஜர்மானியா, துர்க்கி, அமெரிக்கா.



## THE STORY OF A LITTLE BLIND GIRL.

## ஓர் சிறு குருட்டுப்பெண்ணின் சரித்திரம்.

ஒரு சிறுபெண்ணைப்பற்றி உங்களுக்கு நான் சொல்லவேண்டும். ஒரு நாள் அதிக ஈரமாயும், மப்பும் மந்தாரமாயுமிருந்தது. அப்படிப்பட்டநாளில், அதிக அவசரமான வேலையுள்ளவர்கள் தவிர, மற்ற எவரும் வெளியில் போகவேமாட்டார்கள். எப்படியோ அன்று காலையில் நான் கட்டாயம் வெளியே போகவேண்டும் என்று நினைத்தேன். என்னுடனேவர வேதாகம ஸ்திரீயை தயாராயிரு என்று சொன்னவுடன் அவள் ஆச்சரியப்பட்டாள். கதவண்டை போனவுடன், நாங்களிருவரும் ஒருவரையொருவர் பார்த்து இப்பொழுது எங்கே போவோம் என்று கேட்டுக்கொண்டோம்.

நாங்கள் திரும்பி, கிழக்குப்பக்கத்து சிறுவாசல் மூலமாய் நடந்தோம். அந்த ஸ்திரீதன் மேஜோடுகளைசரியாய்சட்டாதபடியால், சில இடங்களில் ஆழமாயிருந்த சேற்றிலே அடிக்கடி விழுந்துபோயின. அநேகந்தரம் நாம் திரும்பிவிடலாம் என்றுசொல்லிக்கொண்டே போனேன், நாட்டுக்குள்போய் வியாதியான பிள்ளைகளைப் போய் சந்தித்தோம். நாங்கள் திரும்பும்போது, தன்னைச்சுற்றிலுமிருந்த மனிதர் கேட்கும் கேள்விகளுக்கு உத்தரவு சொல்லும் ஒரு சத்தத்தைக் கேட்டோம்.

அந்தச் சிறுபிள்ளை யார் என்று கேட்டபொழுது தங்கள் பெற்றோரால் தள்ளப்பட்ட ஒரு குருட்டுப்பிள்ளை என்று கேள்விப்பட்டேன். பிறகு அவள்பேரும் வயதும் என்னவென்றும், வீடு எங்கே என்றும் அவளை விசாரித்தேன். அவள் சிறியவளாயிருந்தபோதிலும் அதிக நுட்பமாயும், கெட்டிக்காரத்தனத்தோடும் உத்தரவுசொன்னமாதிரியில் அவள் ஆறுவயதுப்பெண்என்று நம்பவே முடியவில்லை. அவளைத்தூக்கி எடுத்தேன், அவளாலே நிற்கமுடியவில்லை.

சற்றுநேரம் என் மனதில் யோசித்து ஜெபம் செய்தபின், அந்த வேதாகம ஸ்திரீயைப்பார்த்து: அவளைத்தூக்கிக்கொண்டு வரச்சொன்னேன். என்னிடம்பேச விரும்புகிறவள்போல் என்னைப்பார்த்தாள். உடனே அவளைப்பார்த்து: “உன்னை தூக்கியெடுத்து, வீட்டிற்குக் கொண்டுபோகிறேன்” என்று சொன்னேன். அந்தப்பிள்ளையின் சரீரம் புழுப் புழுத்துபோனபடியால், வீட்டினுள்ளே கொண்டுபோகமுடியாமற்போய்விட்டது. உடனே நான் உள்ளேபோய், கொஞ்சம் வெந்நீர் கொண்டுவந்து, அந்தப்புண்களைக்கழுவி, துணிபோட்டுக்கட்டி, கம்பளி உடுப்புப் போட்டு, வீட்டிற்குள் கொண்டு வந்தேன்.

அவளை முதலில் பார்ப்பது மெத்த அகோரமாயிருந்தது. எங்களிடம் வந்தபிற்பாடு, சாப்பிட்டபின் தன்னைச்சுற்றிலும் தடவிப்பார்த்து ஏதாவது சோற்றுப்பருக்கை விழுந்திருக்கிறதா என்று பார்ப்பாள். அவள் முதலில் எங்களிடம் வந்தபோது எவ்வளவு நிறையுள்ளவளாயிருந்தாள் என்று உங்களுக்குச் சொன்னால் அவள் எவ்வளவு பட்டினியாயிருந்தாள் என்று நீங்களே அறிந்துகொள்ளுவீர்கள். ஆறு வயதுக்குப் பதின்மூன்று பவுண்தான். மூன்றுமாதத்திற்குப்பிறகு பள்ளிக்கூடம்போக ஆரம்பித்தபின் இருபத்தாறுபவுண் இருந்தாள். அந்தமாதிரி நிலைமையிலே, தன் பெற்றோரால் தள்ளப்பட்டு நாலுநாள்தரையிலே விழுந்து கிடந்தாள்.

நாளடைவிலே நான் அந்தப்பிள்ளையை தூக்கி எடுக்கவேண்டுமென்பது கடவுளுடைய சித்தமாயிருந்தது. தன் முழுசவரட்சணைக்கும் ஆண்டவர் பேரிலேதான் நம்பிக்கையைவைக்க வேண்டும் என்றும், தன்னை மரணத்தினின்றும், பட்டினியினின்றும் காப்பாற்றின கடவுள்பேரில் என்றும் நம்பிக்கைவைத்து, தான்பெரிய மனுஷியாகும் பரியந்தம் அந்த நம்பிக்கையில் நிலைத்திருக்கும்படியாக அவளுக்கு "Faith" என்று பேரிட்டார்கள். குருடருக்கென்று ஏற்பட்டிருக்கும் பள்ளிக்கூடத்தில் இப்போது சந்தோஷமாயிருக்கிறாள்.

இப்போது எல்லா இடங்களுக்கும் நடக்க அவளால் முடியும். தன்னைவிட்டுவிட்ட இடத்திலிருந்து வீட்டின் சுவரைத் தடவித்தடவி வழி கண்டுபிடித்துக்கொள்ள அவளால்முடியும். பள்ளிக்கூடத்தில் சேர்ந்து புஸ்தகங்களிலிருந்து படிக்க முடியாவிட்டாலும், மனப்பாடம் படிக்க ஆரம்பித்திருக்கிறாள். அவள் பெரியவளானபின் புஸ்தகத்திலிருந்து படித்து, சரியான பள்ளிக்கூட வேலையை ஆரம்பிப்பாள்.

ஒரு நாள் நான் வியாதியாயிருந்தேன். Faith என்பவள் எப்போதும் ஒருவேளைக்கு மூன்று கோப்பை சாப்பாடு சாப்பிடுகிறவள். அன்றையதினம் ஒரு கோப்பை சாப்பாடுதான் சாப்பிட்டாள். மற்றவர்கள் அவளை ஏன்கொஞ்சம்சாப்பிடுகிறாய் என்று கேட்டபோது, 'என் தாயார் வியாதியாயிருக்கிறார்கள், எனக்கு சாப்பாடு இறங்காது' என்றாள்.

இங்கு வந்தபிறகு வியாதியாயிருந்த ஒரு ஸ்திரீக்காக ஜெபம்செய்யக் கற்றுக் கொடுத்தேன். பிறகு நான் சொல்லிக்கொடாமலே யாராவது வியாதிப்பட்டார்கள் என்று கேள்விப்பட்டாலோ உடனே அவர்களுக்காக அவள் ஜெபஞ்செய்வாள். ஒருசமயம் வேதாகமஸ்திரீயும் கோயில் பியூனும் தங்களுக்கு உடுப்பு இல்லை, புதியது வாங்கவேண்டும் என்று பேசிக் கொண்டதை இவள் கேட்டுக்கொண்டிருந்தாள். அந்தஸ்திரீ தனக்குத் துணிவாங்கப் போய்க் கொண்டிருந்தபோது, கோவில் பியூன் அவளைப்பார்த்து தனக்குப்பணம் கிடைக்கும்போது துணி வாங்கிக்கொள்வேன் என்று சொன்னானாம். ஒருநாள் இராத்திரி Faith ஜெபம்பண்ணி முடிந்தபின், அவளைத்தூக்கிப் படுக்கைக்கு கொண்டுபோகும்போது, 'என் தாயே, நான் ஒன்று மறந்துபோனேன்,' என்று சொல்லிக்கொண்டு, உடனே முழங்காலூன்றி, "தயவுசெய்து, தேவனே, Mr. Uen என்பவனுக்குப் புதுத்துணிவாங்கப் பணம் கொடும்," என்று ஜெபம்செய்தாள். இவர்கள் பேசினதைக் கவனித்துக் கொண்டிருந்தாள் என்று இந்த இரண்டு பேரில் ஒருவருக்கும் தெரியாது. என்னை ஒரு பூப்போட்ட உடுப்பு வாங்கிக்கொள்ளச் சொன்னாள். சிறுக்காரர் உடுப்புகளைப் போல, ஆனால் 'பூப்போட்ட உடுப்பு வாங்க ஆண்டவர் எனக்கு பணம் கொடுக்கவில்லை. ஆகையால் சாதாரண உடுப்புத்தான் வாங்கவேண்டும்,' என்றேன். உடனே அவள் சொன்னதாவது: "நீங்கள் புது உடுப்பு வாங்கும்படி கர்த்தர் உங்களுக்கு அதிகபணம் கொடுக்கும்படி நான் ஜெபம் செய்கிறேன்" என்றாள். இவ்விதமாக தன்னிஷ்டமாகவே அவசியமானவைகளுக்கு அடிக்கடி ஜெபம் செய்வாள். அவள் ஜெபத்தைக் கேட்பது அதிக அருமையாயிருக்கும். சுவிசேஷத்தைப் பற்றியாவது, தேவனைப்பற்றியாவது இதற்குமுன் கேள்விப்பட்டதேஇல்லை. இவள் விசேஷித்த விதமாக புத்திக்கூர்மையுள்ள பிள்ளை.



THE JUTE INDUSTRY.

## சணல் கைத்தொழில்.

வங்காளத்திலுள்ள ஜனங்கள் சணல் உண்டாக்குவதிலும், அதை விற்பதற்கு பக்குவப்படுத்துவதிலும் அதிகப்பழக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தேசத்தில் மறுபாகங்களிலுள்ளவர்களுக்கு இதைப் பற்றி அதிகம் தெரியாது. 1828-ம் வருஷத்தில் முதல்முதல் சணல் இங்கிலாந்து தேசத்திற்கு அதிகக்கொஞ்சமாக அனுப்பப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்த வியாபாரம் அதிகரித்து, கடைசியாக இராஜதானியின் விசேஷித்த கைத்தொழில்களில் ஒன்றாக ஆகிவிட்டது. இதை ஏற்றுமதி செய்வதினால் இதினாலுண்டாகும் பணம் கோடாகோடி ரூபாயாகிறது. இது தவிர, இந்தியாவிலுள்ள யந்திர சாலைகளில் கோணிப்பைகள் செய்வதற்காகவும், கயிறுகள் பின்னுவதற்காகவும் அதிகமதிகமாக சணலை வாங்குகிறார்கள். இன்னும் அதிகம் தேசத்தின் பொது நன்மைக்காக தேசத்தில் உபயோகப்படுகிறது. பத்துமணங்கு நிறையுள்ள காய்ந்த சணல்நூல் அகப்பட்டால், அது நல்லவிளைச்சலாக எண்ணப்படுகிறது. நாலும் அறிந்துகொள்ளும்பிரகாரம், அந்தநிலத்திற்கு அது அதிகம் என்று எண்ணப்படுகின்றது. சணலைப்பண்படுத்தும்போது நாம் சமீபத்திலிருந்தால், சகிக்கூடாத துர்நாற்றம் உண்டாகிறது. சில இடங்களில், இதிலிருந்து அதிக லாபம் உண்டாகும் என்று எண்ணி, பயிரிடுபவர்கள் நெல்லுக்குப்பதில் சணலை பயிரிடுவார்கள். ஆனால், மேற்படிவிஷயத்தினால் அரிசியின் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

THE FOX, THE GOAT AND THE CARROTS.

## நரியும், வெள்ளாடும், கிழங்குகளும்.

ஒரு நரியும் வெள்ளாடும் பெரிய வீதியொன்றில் ஒன்றாய் போய்க்கொண்டிருந்தன. கொஞ்சதூரம்போனபின், வேலியோரமாய் ஒருபைகிடந்ததைக் கண்டன.

"அந்தப்பையில் என்ன இருக்கும்?" என்று வெள்ளாடு கேட்டதற்கு, "நான் பார்க்கிறேன்," என்று நரி சொல்லிக்கொண்டே, பல்லால் அந்தப்பையில் கட்டியிருந்த கயிற்றை ஒரு நிமிஷத்தில் கடித்துவிட்டது. பையினடியை கடித்து, அதைக் குலுக்கினபோது பையிலிருந்து நல்ல கிழங்குகள் விழுந்தன. "இந்தப் பையை நான் திறந்தபடியால் இந்தக்கிழங்குகள் எனக்குத்தான்" என்று நரி சொன்னது. "நீ அவைகளைத் தொடக்கூடாது. இல்லாவிட்டால், உன் எலும்புகள் உடைய என் கொம்புகளால் உன்னை தகர்த்துப் போடுவேன்," என வெள்ளாடு விடை பகர்ந்தது.

நரி உடனே ஆட்டின் கொம்பைப் பார்த்து, தன் பல்லைக் கடித்துக்கொண்டது. ஆடானது நரியைப் பார்த்து, "அப்பா! இப்படிப்பட்ட துஷ்டப்பையன்களோடு இருக்க முடியாது," என்றது. நரியானது, "அப்படிப்பட்ட மிருகத்தின் கொம்பிற்கு என் எலும்புகள் தாங்கா," என்றது. அந்தப்படியே அவைகள் இரண்டும் கிழங்குகள்மேல் ஏறிக்கொண்டு, ஒருவரையொருவர் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தது. சற்றுநேரம் சென்றபின், நரி ஆட்டைப்பார்த்து, "நாம் இதின்மேல் ஏறிக்கொண்டிருப்பதினால் பிரயோஜனம் என்ன? நம் இருவரில் யார் பலசாலிகள் என்று ஒரு கை

பார்க்கலாம். தூரத்திலே இரண்டு கற்குவியல்கள் இருக்கின்றன. நீ ஒன்றை எடுத்துக்கொள், நான் மற்றொன்றை எடுத்துக்கொள்ளுகிறேன். யார் முதலில் இந்த கற்குவியலை சாய்த்து விடுகிறார்களோ, அவர்களுக்குத்தான் இந்த கிழங்குகள்." நல்லது என்று இரண்டும் நினைத்து, தன் தன் குவியலண்டைபோயின.

ஆடு, தன் பின்னங்கால்களால் நின்றுகொண்டு, தன் கொம்பால் ஒரு கல்லை பூமியதிரும்படி தள்ளினது. அப்படியிருந்தும் கற்குவியல் அசையவில்லை. "நீ சரியாய் செய்யவில்லை, கல்லை எடுத்துக்கொண்டு நன்றாய் ஓடு," என்று நரி சொன்னது. அப்படியே ஆடு ஓடும்போது, தன் இரண்டு கொம்புகளும் கீழே விழுந்துவிட்டன. இதை நரிகண்டவுடன் தன் பின்னங்கால்களில் நின்றுகொண்டு, கூத்தாடிக்கொண்டு, "அருமை சிநேகிதனே! இந்தக்கிழங்குகள் எனக்குத்தான்," என்றது.

"நீ இன்னும் உன்னுடைய கற்குவியலைத் தள்ளாதபடியால், அவைகள் இன்னும் உன்னுடையவைகள் அல்ல, அவைகளைத்தொட்டால், என் தலையில் விடப்பட்டிருக்கும் தண்டுகளால் உன்னைக்குத்திவிடுவேன்," என் வெள்ளாடு சொன்னது.

நரி ஆட்டை உற்றுப்பார்த்து, "ஆட்டின் கொம்பின் தண்டு அதிகக் கூர்மையாயிருக்கிறது. ஒர்வேளை அதினால் என்னைக் குத்திவிட்டால், என்ன செய்கிறது?" என்று தன் மனதில் சொல்லிக்கொண்டே, "ஆகா, என் குவியலை நான் தள்ளிவிடுகிறேன்; அது எனக்கு லட்சியமில்லை" என்றது. அப்படியே, தன் முன்னங்கால்களால், குவியலைச் சுற்றிலும் பள்ளந்தோண்டினது. அப்படி செய்யும்போது, அவ்வளவு கற்களும் உருண்டு தன்மேல் விழுந்து, தன் பின்னங்கால்களில் ஒன்றை உடைத்துவிட்டது.

"குதித்து, கிழங்குகளின்மேல் ஏறி நில். அப்போது உனக்கு எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறேன்," என்று ஆடு சொன்னது.

"என் கால் அதிகம் வலிக்கிறது, என்னால் ஏறமுடியாது, நீயே அவைகளை எடுத்துக்கொள்" என்று நரி சொன்னது. நல்லது என்று சொல்லிக்கொண்டே, பையண்டை ஆடு ஓடிப்போனது. ஐயோ! அங்கே பையுமில்லை, கிழங்குகளுமில்லை. இவர்கள் சண்டை போட்டுக்கொண்டிருக்கையில் ஒரு சமுசாரி அந்தப்பக்கம் போனவன் அவைகள் இரண்டையும் தூக்கிக்கொண்டு போய்விட்டான்.

"ஐயோ! நாம் எவ்வளவு முட்டாள்கள். நாம் சமாதானமாய் நமது பங்கை பிரித்திருந்தால், நான் என்னுடைய கொம்பையும், நீ உன்னுடைய காலையும் பத்திரப்படுத்தியிருக்கலாம். நமக்கும் கிழங்குகள் அதிகமாய் கிடைத்திருந்திருக்கும்," என்று வெள்ளாடு சொன்னது.

---

## SOLUTION OF THE PUZZLE OF OUR LAST NUMBER.

## கடந்த மாத விடுகதையின் விடுவிப்பு.

முதலாவது முற்கூறியபடி சதுரங்கள் 5 வரைந்துகொண்டு ஒவ்வொரு சதுரத்தையும் ஊடே இரண்டு வரியினால் 9 வேறு சரிசமமான சதுரங்களாகப் பிரித்து, பின்வருமாறு எண்களை மாற்றிவைத்து பார்த்தால் தெளிவாக எல்லாம் தெரியும்.

| | | |
|---|---|---|
| 3 | 3 | 3 |
| 3 | | 3 |
| 3 | 3 | 3 |

அங்கிருந்த சேவகர் ஒவ்வொரு இரவிலும் கட்டளைப்படி அவருடைய அறையின் ஒவ்வொரு பக்கத்திலும் 9 பேராக படுத்துக்கொள்ள தந்திரமாய் ஒழுங்கு பண்ணினார்கள். அதைப் பின்வருமாறு காண்க.



முதலாம் இரவில் நாலுபேர் வெளியே போனபோதிலும் இருந்த 20 பேரும், ஒவ்வொரு மூலை அறையில் 4 பேரும், நடு அறைகளில் சேவகனுமாக படுத்தார்கள். அப்போ ராஜா எண்ணும்போது ஒவ்வொரு பக்கத்திலும் 9 பேர் இருந்தார்கள். அதைப்படத்தில் காண்க.

| | | |
|---|---|---|
| 4 | 1 | 4 |
| 1 | | 1 |
| 4 | 1 | 4 |

இரண்டாம் இரவில் கிராமத்திலுள்ளவர் 4 பேர் வந்ததால் 24 பேருக்கு பதிலாக 28 பேர் இருந்தார்கள். அப்போ அவர்கள் மூலை அறைகளில் 2 பேரும், நடு அறைகளில் 5 பேருமாகப் படுத்துக்கொண்டார்கள்.

| | | |
|---|---|---|
| 2 | 5 | 2 |
| 5 | | 5 |
| 2 | 5 | 2 |

மூன்றும் இரவில் 8 பேர் ஜாஸ்தியாய் வந்தனர். மொத்தம் 32 பேராயிருந்தாலும், மூலை அறைகளில் 1 சேவகனும் நடு அறைகளில் 7 பேருமாகத் தூங்கினார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 7 | 1 |
| 7 | | 7 |
| 1 | 7 | 1 |

நாலாம் இரவில் 12 மனிதர் அங்கு வந்தார்கள். அப்போ 36 பேர் இருந்தும், மூலை அறைகளை வெறுமையாயும், பக்கத்து அறைகளில் 9 பேராகவும் தூங்கினார்கள். கடைசியாக ஐந்தாம் இரவில் சேவகரில் 6 பேர் கிராமத்துக்கு போனார்கள். அப்போ 18 பேர் மாத்திரம் இருந்தும், சேவகர் பக்கத்து மத்திய அறைகளை வெறுமையாகவும், மூலை அறைகளில் எதிர் பக்கத்தில் நவ்வாலுபேரும், மற்ற பக்கத்தில் அவ்வைந்துபேருமாகத் தூங்கினார்கள். ஆகவே ராஜா கணக்கு பார்க்கையில் ஒவ்வொரு பக்கத்திலும் 9 பேர் இருந்தார்கள். ஆகவே 5 இரவிலும் ராஜா சேவகரால் ஏமாற்றப்பட்டார். நாம் கவனிக்கிற ஒரு விஷயம் யாதெனில், குறைவான ஆட்கள் இருக்கையில் மூலை அறைகளில் ஜாஸ்தி ஆட்களும், நடு அறைகளில் குறைவாயும், ஜாஸ்தி ஆட்கள் இருக்கையில், மூலை அறைகளில் குறைவும், நடு அறைகளில் ஜாஸ்தி ஆட்களும் வைக்கப்பட்டிருந்தனர்கள்.

| | | |
|---|---|---|
| | 9 | |
| 9 | | 9 |
| | 9 | |

| | | |
|---|---|---|
| 4 | 0 | 5 |
| 0 | 0 | 0 |
| 5 | 0 | 4 |

---

## A CHANGED BEGGAR.

## குணப்பட்ட பிச்சைக்காரன்.

சிலவருஷங்களுக்குமுன் லீ (Loa) என்னப்பட்ட ஒரு சீனக்காரன் பீக்கிங் பட்டணத்திலுள்ள ஆஸ்பத்திரியில் போய் சேர்ந்தான். இவன் பிச்சைக்காரனைப்போல் அலைந்து திரிகிற ஜீவியஞ்செய்யத் தெரிந்துகொண்ட ஒரு துலுக்கன். தன் கெட்ட பழக்கங்கள் தன் உடம்பை முழுவதும் கெடுத்துப்போட்டது. இவன் போய், தர்ம ஆஸ்பத்திரியாயிருந்ததினாலும், தான் காசு செலவழிக்க வேண்டியதா யில்லாதபடியாலும், அந்த ஆஸ்பத்திரியில் ஒரு வியாதியஸ்தனாய் போய் சேர்ந்தான். முற்றிலும் கேவலமாயும், ஒருபோதும் சுகமாகாததுபோலவும் காணப்பட்டான். இவன் அங்கிருந்தபோது "நல்ல விசேஷத்தைக் கேள்விப்பட்டு அதிலுள்ள சத்தியங்களை பற்றிப்பிடித்துக்கொண்டு அதிலிருந்து அவன் ஜீவியம் முழுவதும் மாறிப்போய்விட்டது. அதிலிருந்து அவன் மிகவும் நல்லவனா[illegible] விட்டான். சீன [illegible] அவன் மறுபடியும் பிறந்தவன் என்று அர்த்தங்கொண்டும் Chung Seng (சங் செங்) பேரை வைத்து ஞானஸ்நானங் கொடுத்தார்.

இவன் ஆஸ்பத்திரியிலிருந்து சுகப்படுமுன், Boxer என்னப்பட்ட ஜாதியார் அக்கினியால் சுட்டெரிப்போம் என்று பயப்படுத்தினபடியால், இவனை தெருவிலே விட்டுவிட்டார்கள். கிறிஸ்தவர்கள் என்றால் நாள்தோறும் பயம், எப்படியானாலும் இவன் தன் பேருக்கு ஏற்றாப்போல் நடந்தான். சத்தியத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டான். தன்னுடைய கோலையும் பிச்சைக்காரனுடைய கோப்பையையும் எடுத்துக்கொண்டு, பிச்சைக்காரனாகவே தெருத்தெருவாகப் போனான். ஆனால் இப்போது பிரசங்கியாகப் புறப்பட்டான். தன் மனம் போலவே கிறிஸ்துவே இரட்சகர் என்று தான் போன இடமெல்லாம் பிரசங்கித்தான். ஊரிலுண்டான பயம் அடங்கவே பரிதாபமான நிலைமையிலே வந்து சேர்ந்தான். அவன் காலை எடுத்துவிட்டார்கள். இவ்வளவு காலமாய் தான் சுகதேகி என்று காண்பித்துக்கொண்டிருந்தும், இப்போது மெய்யாகவே உதவியற்றவனாகி விட்டான். இந்த நிலைமையிலே கர்த்தருக்காக முழுமனதோடும் ஊழியஞ்செய்ய வேண்டும் என்று தீர்மானித்தான். வேதத்திலிருந்து வாக்கியங்களையும், ஞானப்பாட்டுகளையும் மனப்பாடம் பண்ணினான். கர்த்தருடைய வார்த்தையை வாசிக்கவும் கஷ்டத்தோடு படித்துக்கொண்டான். இங்குமங்கும் கூடியிருக்கும் ஜனங்களுக்கு நகர்ந்து, நகர்ந்துபோய் பிரசங்கித்தான்.

அவன் அவ்வளவு பிரயோஜனமாயிருந்தபடியினால், அவ்விடத்திலே புதிதாய் கிறிஸ்த[illegible]ம் ஆரம்பிக்கும்போது, அந்த மிஷனெரிக்கு உதவியாக [illegible] தெரிந்துகொண்டார்கள். அந்த நாட்டு ஜனங்கள் அவன்மேல் அதிக ஆசைப்பட்டு, தங்களுக்கு வந்து பிரசங்கிக்கவேண்டுமென்று ஒரு சக்கரவண்டியை அனுப்புவார்கள். தன்மேல் கடன் வராதபடி, கவலையாய் ஜீவித்து, தன் சம்பாத்தியத்தை எல்லாம் கொடுத்துவிட்டான். தன் சம்பாத்தியத்தில் பத்திலொரு பாகமாக வருஷத்திற்கொரு முறை மிஷன்சம்பந்தமாககோவில்வேலைக்குஅனுப்பிவிடுவான். பிறகு கொஞ்சம் தூரமான இடத்திற்கு வேலை செய்யும்படி அனுப்பப்பட்டான். ஆனால் முன்னிடத்திலுள்ள ஜனங்கள் அவன் அங்குவந்து வேலைசெய்யவேண்டுமென்று விரும்பினபடியாலே, மறுபடியும் பழைய இடம்போய், உழைத்து, பலவீனத்தால் எட்டு வருஷங்களுக்குமுன் மரித்துபோனான். அவன் இப்போது பிச்சைக்காரனல்ல, பராக்கிரமமுள்ள பரிசுத்தவான்.

ஒரு முறை ஒரு வழிப்போக்கன் இவனைப்பார்த்து, “நீ வேறு மார்க்கத்தில் வேலை செய்கிறாயே, அதற்கு உனக்கு சம்பளம் என்ன?” என்று கேட்டான்.

லீ அதற்கு பதிலாக, “சமாதானம்—இரண்டுபேருக்குள் இருக்கவேண்டிய போதுமான சமாதானமும், உங்களிருவருக்குள்ளிருக்கும் சமாதானத்திற்கதிகமும் என்னிடத்திலுண்டு,” என்று பதிலளித்தான். அந்த வழிப்போக்கன் இன்னும் விடாமல், “உனக்கு என்ன சம்பளம் அப்பா,” என்று கேட்டான். உடனே லீ அதற்குப் பதிலாக, “எனக்கு ஒரு அவுன்ஸ் வெள்ளியுமில்லை, ஒரு ஏக்கர் நிலமுமில்லை. வீட்டில் ஒரு அறையும், பெண்சாதி பிள்ளைகளுமில்லை. ஆனாலோ என் இருதயம் நிறைய சமாதானமுண்டு,” என்றான்.

குணப்பட்ட ஜீவியத்தின் வல்லமை அவ்வளவு அதிகமானதினால், மிகவும்



குணசாலியும் கல்வியில் தேர்ந்த ஒரு மனிதன், லீ மரணமடைந்தபின்சொல்லுகிறார். “ஒரு காலத்தில் இந்த முட்டாளையும் பாவியையும் அருவருப்பாக எண்ணினேன். கூட்டத்தில் நின்று அவன் பிரசங்கம் பண்ணுவதைக்கேட்ட பின்பும், அவன் பரிசுத்த ஜீவியத்தைப் பார்த்த பிறகும், நான் அவனுக்கு சமமல்ல என்று பகிரங்கமாய் அறிக்கையிடுகிறேன்” என்றார்.

சுவிசேஷம் தவிர வேறு எது துன்மார்க்கமும், சோம்பலும், அசுத்தமுமான பிச்சைக்காரனை தாழ்மையும் பக்தியுமுள்ள கிறிஸ்தவனாக மாற்றக்கூடும்? புதுப்பிறப்பின் அற்புதமே. நடக்கும்போதெல்லாம் அந்தப் பழைய அற்புதம் எப்போதும் புதிதாயிருக்கிறது. புதுப்பிறப்படைந்த லீக்கு உண்டான “இருதயம் நிறைந்த சமாதானம்,” எப்போதும் கிடைக்கும்.

---

## TWO CURIOUS CLOCKS.
## இரண்டு விசித்திரமான கடிகாரங்கள்.

உலகத்தில் மகா விசேஷித்த கடிகாரங்களில் ஒன்று மேற்குக் கோடியிலிருக்கும் சிறு அமெரிக்கா பட்டணத்திலுள்ள மணிகாட்டும் கடிகாரமே. அந்த தேசத்திலுள்ளஒரு பாகத்தில் Geysers என்று சொல்லப்படும் வெந்நீரூற்றுகள் இருக்கின்றன. ஒழுக்கான இடை வழியாக பூமியிலிருந்து குமிழ்குமிழாய் வெளியே தண்ணீர் வரும். இந்தக் கடிகாரத்தின் யந்திரத்திற்கு ஒரு முகமும், கைகளும், ஏற்றமரமும் உண்டு. இதை Geyser ஓடு சேர்த்திருப்பதினால் வித்தியாசப்படாமல் 38 செக்கண்டுக்கொருதரம் அதிகமான ஜலத்தை வெளியே கொட்டுகின்றது. ஒவ்வொரு முறையும், கடிகாரத்தின் ஏற்றமரத்தைத் தொடும்போது, 38 செக்கண்டுகள் தள்ளி வைக்கிறது. ஒரு போதும் செய்யப்படாத Perpetual motion என்று அழைக்கப்படுகிறதற்கு சமீபத்தில் ஒரு அங்கிலேயனால் கண்டுபிடிக்கப்பட்ட (Radium clock) வருகிறது. அதை ஒருவரும் தொடாவிட்டால் முப்பதாயிரம் வருஷம் ஓடிக்கொண்டேயிருக்கும் என்று சொல்லுகிறார்கள்.

---

## THE HOUSE FLY AND DISEASE.
## வீட்டு ஈக்களும் வியாதியும்.

சிலநாட்களுக்குமுன், இந்தியாவின் ஓர் பாகத்திலுள்ள சில கிராமங்களைச் சுற்றிப்பார்க்கப் போயிருந்தேன். அவ்வூர் ஜனங்களின் ஜீவியத்தை நான் கவனித்தபோது, எனக்கு அவர்கள்மேல் அதிகப்பிரியமுண்டாயிற்று. அவர்களில் காணப்பட்டஒருவிஷயம் எனக்கு அதிக சங்கடத்தை விளைவித்தது. அநேகம் பிள்ளைகள் அசங்கிய தோல் வியாதியாகிய சிரங்கினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார்கள். இது அவர்கட்குள், சாதாரணமாயிருந்தபடியால் இதை நிவிர்த்திசெய்ய யாதொரு முயற்சியுஞ் செய்யப்படவில்லை. இது. மிகவுமருவருக்கத்தக்க ஒரு வியாதியாயிருப்பதன்றி, இதனால் பீடிக்கப்பட்டிருப்போருக்கு அதிகத் துன்பத்தை விளைவிக்கக்கூடியது என்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. இந்த வியாதி பற்றியிருந்த குழந்தைகள் எவ்விதமேனும் தொந்தரவு செய்யாததினால், அதினின்று விடுதலை பெற்று, சுகமாயிருப்பதென்னவென்பதை அறியாதிருந்தார்களென்று நிச்ச

யிக்கலானேன். அது அசங்கிய வியாதியாயிருப்பதோடு அதிகக் கேட்டையும் உண்டுபண்ணுகிறதாய் இருந்தது. அங்கே அதிக ஈக்கூட்டங்களுண்டு. எங்கெங்கே அழுக்கும் புண்களுமுண்டோ அங்கங்கே திரட்திரளாயிவைகள் வந்து கூடும். இவைகளை தங்கள்மேல் வந்து உட்காராதபடி துரத்தக்கூடாதிருக்கும் குழந்தைகளின் முகங்கள் ஈக்களால் நிறைந்திருக்கும். கைகளிலும் முகத்திலும் புண்களால் நிறையப்பட்டு, பார்க்கிறதற்கு அதிக அருவருப்பாயிருந்த ஒரு சிறு குழந்தையை ஒரு பெரிய குழந்தை சுமந்துகொண்டிருந்தது. அப்புண்களில் ஈக்கள் குவியல் குவியலாய் மொய்த்துக்கொண்டிருந்தபடியால், அவைகளின் கீழிருந்த தோலைப்பார்க்கமுடியாமலிருந்தது. அக்குழந்தையின் அசௌக்கியம் ஒரு பக்கத்திலிருக்க, அது அழுது எந்தவிதமான தொந்தரவையும் கொடுக்காவிட்டாலும், ஈக்களினால் அதற்கு அதிக சங்கடமிருந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இதுதவிர, ஈக்களை புண்களில் உட்கார இடங்கொடுக்கக்கூடாதென்பதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு.

ஈக்களை நீ பார்க்கும்போது, அது சுத்தமுள்ள சிறிய ஜெந்துவென்று நினைப்பாய். பக்ஷிகள் தங்கள் மூக்கினால் இறகுகளைச் சுத்தம்பண்ணுகிறபோதும், பூனைகள் தங்கள் நாவினால் துடைத்துக்கொள்ளுகிறபோதும், ஈக்கள் செய்வதை அடிக்கடி பார்ப்பாய். ஆகையால் அவைகள் சுத்தியுள்ள ஜெந்துக்களென்று நினைக்கிறதற்கு இடமுண்டு. ஆனால் அவைகளைப் பூதக்கண்ணாடியில் பார்க்கும்போது, எதன்மேலுட்கார்ந்தாலும், ஒட்டிக்கொள்ளக்கூடிய கிளைகிளையாய் பிரிந்திருக்கும் ஓர்விதமான பாதங்களைக் காண்பாய். அவைகள் அழுக்குகளின் மேல் உட்காருமேயானால், அது, அவைகள் தங்கும்வெவெறந்த வஸ்துவின்மேலும் ஒட்டிக்கொள்ளும். அவைகள் வியாதியஸ்தன் மேலுட்காருமேயானால், அந்த வியாதியை மற்றவர்கட்கு வருவிப்பதோடு, நீ உண்ணும் ஆகாரத்திற்கும், குடிக்கும் பாலுக்குமளித்துவிடும்.

இவ்விதமாய்த்தான் வியாதி பரவுகிறது. நீங்கற்றதுபோற் காணப்படும். சாதாரண வீட்டு ஈக்களினால், பெரிய கொள்ளைநோய்கள் உண்டாகிறதென்று, வைத்தியர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். மேல்நாட்டார், ஈக்களை அழித்துப்போடும் ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள். அவைகள் பலுகி பெருகாதபடிக்கும், அது நேரிடும்போது அவைகள் விர்த்தியாகாத படிக்கும், அழித்துப்போட முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. எங்கே அழுக்குண்டோ அங்கே ஈக்கள் உண்டாகின்றன. ஆகையால், அவைகளின் தொந்தரவு உண்டாகாதபடி, வீடுகளில் குப்பை சேரவிடாதபடி கவனித்துக் கொள்ளவேண்டும். மனுஷர்களுடைய மலத்தையும் மிருகங்களின் சாணத்தையும்,புதைத்துப்போடவேண்டும். இல்லாவிடில், பத்திரமாய் மூடிவைக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால் அம்மலம், ஈக்களின் உற்பத்திக்கு உறைவிடமாகும். அவைகள் நாம் சாப்பிடும் ஆகாரத்திலும், குடிக்கும்பாலிலும் உட்காராதபடி முற்று முழுவதும் தடுப்பது கூடாதகாரியம். இவைகளின்மேல் உட்காருகையில், தங்கள் மூக்கை முக்கி, தங்கள் கால்களை அலம்பி படிந்திருக்கும் அழுக்கை அவைகளுக்குள்ளே விழும்படி செய்கின்றன. இப்படி அசுசிப் பட்டிருக்கு மாகாரங்களை உண்பது எவ்வளவு அருவருப்பு!



ஏதோ சில காரணத்தால், நான் போயிருந்த தேசத்தின் சில பாகங்களில்தான் விசேஷமாயுண்டு. பங்காளத்தின் சாதாரண வீட்டு ஈக்கள் அதிக சொற்பமாயிருந்தாலும் கடைப்பலகாரங்கள்மேல் ஏராளமாய் கூடியிருக்கும் வேறு ஜாதி ஈக்களைக்காணலாம். எல்லாவித ஈக்களும் வியாதியைபரவச்செய்யத்தக்கபாதங்களையுடையனவாயிருக்கின்றன. ஆகையால் கடைப்பலகாரங்களைச் சாப்பிடவே கூடாது. வியாதியஸ்தரோடுகலவாதிருக்கையில், சிலருக்கு வியாதி வருவது ஆச்சரியமாயிருக்கும். காரணமென்னவென்றால், கடைப் பண்டங்களை சாப்பிட்டதே. ஈக்கள் மொய்த்த பலகாரங்களை சாப்பிடுவதினால், வியாதி வந்தாலுஞ்சரி வராவிட்டாலுஞ் சரி அவைகளைச் சாப்பிடுவது அதிக அருவருப்பான காரியமே. தாங்கள் உண்ணும் ஆகாரத்தைகுறித்து அதிக ஜாக்கிரதையுடைய இந்து ஜனங்கள் தங்களுடைய ஆகாரங்கள் ஈக்களினால் தீட்டுப்படுத்தப்படுகின்றனவென்பதை அறிவார்களேயானால், அவைகளை ஒருக்காலும் புசிக்கவேமாட்டார்கள்.

---

## CHILDREN'S PAGE.

## பொம்மைகளைப்பற்றி.

பொம்மையை சிநேகிக்காத ஒரு சிறு பெண் எங்கேயாவது உண்டா? சிறுபெண், தன் பொம்மையை வைத்துக்கொண்டு அது உயிருள்ள சிறு பிள்ளையைப் போலவும், தான் அதன் தாயைப்போலவும் பாவித்து அதனோடு சந்தோஷமாயிருப்பதைநான் பலமுறையும் கண்டிருக்கிறேன். எல்லா ஊர்களிலும் அநேக பள்ளிக்கூடங்களில் பெண்கள் பொம்மை வாங்குவதற்காக வருஷமுழுமையும், வெகுமதி நாளுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு, நேர்த்தியான மற்ற பொருட்களை கொடுத்தாலும், பொம்மை கொடுக்காவிடில் திருப்தி அடையவேமாட்டார்கள்.

பொம்மையின்மேல் பிரியப்படுபவர் பிள்ளைகள் மாத்திரமல்ல, பொம்மைகளை வைத்துக்கொண்டு, தங்கள் பிள்ளைகள் சிநேகிக்கிறதுபோலவே, சிநேகிக்கிற கணக்கில்லாத பெரியோர்களையும் எனக்குத்தெரியும். ஒரு வருஷம் ஒரு பள்ளிக்கூடத்தில் எல்லா உபாத்தினிமார்களும், சாதாரணமாய் வெகுமதி தினத்தில் ஏதாவது பெற்றுக்கொள்ளும் வேத போதினிகளும் பொம்மைவேண்டுமென்று கேட்டார்கள்.

கொஞ்ச காலத்துக்கு முன் லண்டன் நகரில் அழகான பொம்மைகளை காட்சிக்காக வைத்திருந்தது. அதில் மூன்று பொம்மைகள் மேரி என்னும் ராணியால் உடுத்தப்பட்டிருந்தன. அந்த மேரி என்னும் அரசியை இந்தியாவின் ஜனங்கள் இரண்டுமுறை—ஒருமுறை இளவரசியாகவும், அடுத்தமுறை அரசியாகவும் கண்டிருக்கிறார்கள். இதைத்தவிர இங்கிலாந்தில் இன்னும் சில முக்கியமான துரைசானிகள் இந்த பொம்மைகாட்சிக்காக பொம்மைகட்கு உடுத்தியிருந்தார்கள். ஒரு நாள் நான் என் சிநேகிதியாகிய ஒரு துரைசானியை பார்க்கப் போயிருந்தேன். அவள் ஒரு பொம்மைக்கு உடுப்பு போட்டுக்கொண்டிருந்தாள். அது தனக்காக அல்ல. ஆனால் தன் சிநேகிதியாகிய ஒருசிறு பெண்ணுக்கு. அவள் அந்த பொம்மைக்கு வெள்ளைக்காரர்பிள்ளைகளைப்போல் நீண்ட வெள்ளை கவுனையும் இன்னும் அம்மாதிரியான உடுப்புகளையும் உடுத்தியிருந்தாள். இந்து தேசத்து பிள்ளைகட்கு அவர்களைப்போல அத்தனை உடுப்பு வேண்டிய அவசியமில்லை. முதல் முதல் செய்த

பொம்மை ஒரு பையனுடையதாகவும், அந்த பையன் ஒரு அரசனாகவிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த ராஜன் பிரான்சு தேசத்து ஆறுவது சார்லஸ். அவர் அந்த பொம்மையை ஒரு பெரிய பொருளாக எண்ணி அதிக சந்தோஷமாயிருந்தபடியால் மற்ற ராஜாக்களும் பொம்மைகளுக்காக உத்திரவுசெய்து இப்படியாக பொம்மை செய்யும் வேலை ஒரு பெரிய தொழிலாய்விட்டது. ஐரோப்பாவுக்கு வடமேற்கேயுள்ள ஒல்லாந்து தேசத்திலிருந்துதான் பொம்மைகள் எப்பொழுதும் வருகின்றன. முதலில் அவைகள் மரத்தில் செய்யப்பட்டு அதிகநாளைக்கு அப்படியே இருக்கும். கீழே போட்டாலும் உடையாது. ஆனால் பீங்கானில் செய்ய துவக்கினபோது வேறே மாதிரியாகிவிட்டது. அதை தரையில் போட்டு உடைந்துபோகிறபோது அநேக பிள்ளைகளுக்கு அதிக வருத்தமுண்டாகிறது.

நான் சிறு பெண்ணாயிருக்கையில் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வந்து என் பொம்மை வைத்திருக்கும் இடத்திற்குப் போனதாக எனக்கு ஞாபகமிருக்கிறது, அந்த பொம்மை எனக்கு அதிகபிரியமாயிருந்தது. நான் அதை சிநேகித்து என்னால் அதற்கு சரியானபடி உடுப்பு செய்ய முடியாமற் போனாலும், செய்ய பிரயாசைபடுவது வழக்கம். நான் கதவை திறக்க போனபோது வீட்டிலிருந்த ஒரு துரைசானி என்னை கையால் தடுத்துவிட்டாள். சீக்கிரத்தில் அதன் காரணமும் தெரிந்தது. என் சகோதரி நான் பள்ளிக்கூடத்திலிருந்தபோது என் பொம்மையை எடுத்து உடைத்துவிட்டாள். நான் அழுதேனோ என்னமோ ஞாபகமில்லை. ஆனால் எந்த சிறு பிள்ளையும் அழுவதுபோல நானும் அழுதிருக்கலாம்.

சிறுபிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் இனாம் வாங்கும்போது எந்தமாதிரி தனக்கு கிடைத்ததென்று அதிக கருத்தாய் கவனிக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு இனாம் கிடைத்ததற்காக சந்தோஷமாயும் நன்றியாயுமில்லாமல் மற்ற பிள்ளைகட்கு தன்னைவிட நேர்த்தியானது கிடைத்ததென்று நினைப்பது எனக்கு அதிக விசனமாயிருக்கிறது. எப்படியிருந்தாலும், உண்மையில் பிள்ளைகட்கு பொம்மை கொஞ்சங்கூட அழகாயிராவிட்டாலும் அதை வைத்துக்கொண்டு அதிக சந்தோஷமாயிருப்பார்கள். கந்தையால் சுற்றப்பட்ட ஒரு மரத்துண்டும் அநேக பிள்ளைகளுக்கு ஆனந்தமாயிருக்கும். எத்தனையோ நேர்த்தியான பொம்மைகளிருந்தாலும், பஞ்சு அடைத்து, துணியால் செய்த பொம்மை சில சமயங்களில் அவர்கட்கு அதிக அருமையாயிருக்கும்: ஏனென்றால் அந்த துணி பொம்மையை சேர்த்து பிடிக்கவும், தூக்கிக்கொள்ளவுமாகுமன்றி கீழே போட்டாலும் உடைந்துவிடுமென்ற பயமுமில்லை.

அநேக பிள்ளைகளுக்கு, பொம்மைகளுக்கு உடுப்புசெய்வதில்தான் அதிக சந்தோஷமுண்டாகிறது. அவர்களுக்கு சரியானபடி வெட்டவும் தைக்கவும் முடியாமற்போனாலும் அதை செய்வதே பிரியமாயிருக்கிறது. இவர்கள் செய்வதுபெரியோர் செய்வதுபோல் அவ்வளவு அழகாயிராதுதான். ஆனாலும் தானே செய்தால் செய்தவளுக்கு, அதினால் அதிக திருப்தி உண்டாகும். Anny என்கிற பிள்ளை ஏதாவது ஒரு துணியைக் கொண்டு உடுப்பு அல்லது தொப்பியை தன் பொம்மைக்கு செய்யும். அப்படி செய்வதில் அவள் நேரம் சந்தோஷமாய் கழிகிறது.



NEWS AND NOTES.

## சமாச்சாரக் குறிப்புகள்.

Miss Gertrude Benham அம்மாள் செய்த பிரயாணம் அதிக விசேஷித்தது. ஆப்பிரிக்காவின் மேற்கு பாகத்திலிருந்து அத்லாண்டிக்மகாசமுத்திரத்தில் ...ம் நைஜர் நதியின் மூலமாய், ஒரு வருஷத்திற்கு முன் பிரயாணம்பண்ண ஆரம்பித்தார்கள். பாதிதூரம் கால்நடையாலும், பாதிதூரம் கப்பல் மூலமாயும் ஆப்பிரிக்காக்கண்டத்தின் மேல்பாகத்திலிருந்து கிழக்கிலிருக்கும் யூகாண்டா என்னும் இடத்திற்கு வந்தார்கள். அவ்விடங்களிலுள்ள எரிமலைகளைப் போய்ப் பார்த்து வந்தபின் பெரிய ஏரிகளை கடந்து தெற்கே போனார்கள். அக்டோபர் மாதத்திலே Zambesi நதியண்டை வந்து, இந்துமகாசமுத்திரத்தைச் சேர்ந்தார்கள். அவர்களோடு போனவர்கள் ஒரு சமயற்காரனும், ஏழு கூலிக்காரருமே. வேறு எந்தவிதமான ஆயுதமும் தன்னிடத்திலில்லை. கூடப்போன கூலிக்காரர் மூலமாய் வந்த தொந்தரவு தவிர வேறு எந்தவிதமான தொந்தரவும் தனக்கு வழியில் நேரிடவில்லை என்று அந்த அம்மாள் எழுதுகிறார்கள். அவர்களுக்கு ஜுரம் வரவேயில்லை. எவ்வளவு நேரான வழியாய் பிரயாணம் செய்தாலும், அது மூவாயிர மைல் பிரயாணம். சரியான பாதைகளில்லாத நாகரீகமற்ற நாட்டின் மூலமாயும், துஷ்ட மிருகங்கள் நிறைந்த காட்டின் மூலமாயும் பிரயாணம் பண்ணுவதனால், அவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாயிருந்திருக்கும் என்று நாமே அறிந்து கொள்ளலாம்.

ஒரு இந்திய பத்திரிகையிலே Hon. Mr. Ramanbai Mahipatram Nilkanth கைம்பெண் விவாகசங்கத்திற்கு உயர்ந்த காரியதரிசியாக இவர் எழுதியிருக்கிறதாவது:— "Social Reform Hall"-இல் கடந்த ஜனுவரி மாதம் 28-ம் தேதி, சங்கத்தின் விருப்பத்தின்படியே அமதபாத் (Ahmedabad) என்னும் இடத்தில் விதவை மறுவிவாகம் நடத்தப்பட்டது. Kathiawad என்னும் இடத்தில் வசிப்பவனாகிய ஆத்வருதாவலை ஜகஜீவன் என்பவனின் குமாரத்தியாகிய இருபத்தோறுவயதுள்ள பாய்மணியை சீகஞ் என்னும் இடத்தில் வசிப்பவனாகிய இருபத்துமூன்று வயதுள்ள பகாட் சோமாஸ்வர கர்தார்லால் என்னும் பிள்ளைக்கு கலியாணஞ்செய்து கொடுத்தார்கள். இருதிறத்தாரும் பாவத்பிரிவாகிய சதோதர, நாகர் பிராமண குலத்தைச் சேர்ந்தவர்கள். பாய்மணியம்மாள் பதினோராம்வயதில் கைம்பெண்ணானாளாம்.

இராஜ சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும், தங்கள் ஆண்மக்கள் வீண்செலவு செய்யாதபடி பணத்தின் அருமையை அறிந்துகொள்ளவேண்டும் என்று அதிகம் விரும்புகிறார்கள். வேல்ஸ் பிரபு ஆஸ்போர்னிலிருந்தபோது தன் கைச்செலவுக்கு வாரத்திற்கு ஒருஷிலிங் கொடுக்கப்பட்டதாம். ஆல்பர்ட் பிரபு தான் படிக்கும் காலத்திலும் அதேபணம்தான் கொடுக்கப்பட்டது. இவர் கப்பலில்

உத்தியோகம் செய்யும்போது தான் சம்பாதிக்குமுன் அவர் கைச்செலவுக்கு இருந்தபணத்தைச் செலவுசெய்து போட்டாராம். ஈற்றன் பிரபுவாகிய என்றிக்கும், ஜியார்ஜ் பிரபுவுக்கும் வாரத்திற்குக் கைச்செலவு ஒரு ஷிலிங்குதான். இந்த ராஜகுடும்பப் பிரபுக்களுக்கு விடுமுறை சமயங்களில் மற்ற எந்தவிதமான இனாமைப்பார்க்கிலும், பணம் கிடைத்தால் அதிக அருமையாய் நினைத்துக்கொள்ளுவார்கள்.

உவேல்ஸ் தேசத்துவித்தியாசாலையில் போய்ப்படித்து நமது இந்தியமாணாக்கி வியக்கத்தக்க வெகுமதிபெற்றாளாம். இது இரண்டுவிஷயத்திற்காக விசேஷித்தது:- இவள் பத்தொன்பதுவயது பெண்தான். இந்தவெகுமதி சாதாரணமாய் வேல்ஸ் பாஷையில் ஒரு பிரபந்தம் எழுதுகிறவர்களுக்குத்தான் கொடுக்கப்படும். ஆங்கிலேயபாஷையில் எழுதி வெகுமானம் பெறுவது அதிக அபூர்வம். ஸ்திரீக்காவது," ஐரோப்பியனல்லாத மற்ற யாருக்காவது இந்த வெகுமானம் கொடுக்கப்பட்டது இதுதான் முதல்தரமாம். லக்னௌமசோரி இடங்களிலுள்ள டி. என். போனர்ஜீ என்பவரின் குமாரத்தியாகிய டாரத்திபோனர்ஜீதான் அந்தஅம்மாளின் பேர். மட்ரா என்னும் இடத்தில் மெத்தோடிஸ்டு மிசியோனில் வேலைபார்க்கும் போனர்ஜீ அம்மாளுடைய நெருங்கிய இனத்தாள் என்றும்சொல்லப்பட்டிருக்கிறது. பெற்ற இனாம் என்னவென்றால்ஓர் அழகிய ஓக்மரத்தால் செய்யப்பட்ட ஓர் நாற்காலி. எழுதக்குறிக்கப்பட்ட விஷயம், 16-ம் நூற்றாண்டிலிருந்த ஒருநூலாசிரியராகிய உவேல்ஸ் தேசத்து உவேய்ன் என்பவரைப்பற்றி இருநூற்று இருபதுவரியில் எழுதவேண்டியது. பரீட்சித்தவர்கள் அந்த அம்மாளுக்கு விசேஷித்த வரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள்.

பின்வரும் கதையை அந்த நகரத்தில் ஒரு பெரிய கோவிலைக் கட்டிக்கொண்டிருக்கும் சிலமனிதருக்கு லிவர்பூல் பிஷப் சொன்னார். அதாவது அலெக்சந்திரா சக்ரவர்த்தினி அந்த இடத்தைச் சந்தித்தார்களாம். கட்டடத்தின் மூலைக்கல்லைவைத்தவர் ஏழாவது எட்வர்ட் இராஜா. சுத்தியலையும் உளியையும் வைத்துக்கொண்டு வேலைசெய்யும் இடத்திலே, சக்கரவர்த்தினி வந்தபோது, அந்த மனிதர் கையிலிருந்து உளியையும் சம்மட்டியையும் தன் கையில் எடுத்து, கல்லின் ஒரு துண்டைப்பெயர்த்து, "இப்போது இந்தக்கோவிலைக் கட்டுவதற்கு நானும் உதவிசெய்தேன் என்றுசொல்லக்கூடும்," என்றார்களாம்.

தென்சீனாவிலுள்ள பூர்வீகக்குடிகளாகிய மையாஸ் (Mios) என்னப்பட்டவர்கள் பத்து வருஷத்திற்குமுன் சொல்லமுடியாத துஷ்டரும், துன்மார்க்கரும், குடிகாரருமாயிருந்தார்கள். கிறிஸ்தவர்களால்மிஷன் ஊழியம் அவர்கள்மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. குடிக்கும் மற்ற துர்வழக்கங்களுக்கு உபயோகிக்கிற பணத்தை தேவ ஊழியத்திற்காக செலவழிக்கிறார்கள் இது தங்களுக்கும் தங்கள்சரீர ஜீவியத்திற்கும் ஆத்தும ஜீவியத்திற்கும் அதிக நல்லது.

161186